1919



8-ம்பத்திக்கொ ர்ச்சி

பண்டாரத்தை நீக்கி விட்டு, இலைபோடும் வேலைக்கு புதிதாக பூசாரி திருமலை பண்டாரத்தை ஊர்க்காரர்கள் நியமித்தார்களாம். இதனால் நாச்சியாண்டிக்கு திருமலை மீது விரோதம் ஏற்பட்டு, இருடா "உன்னை தீர்த்துக் கட்டிவிடுகிறேன்" என்று எச்சரித்து வந்தாராம்.

ஊர் பெரியவர்களிடம் திருமலை பஞ்சாயத்து வைத்து நாச்சியாண்டியை ஊர்க்காரர்கள் கூப்பிட்டு கண்டித்தார்களாம்: இதனால் ஆத்திரமடைந்து தன்னை வெட்டி விட்டதாக திருமலை வாக்கு மூலம் கொடுத்து இருக்கிறார். நாச்சியாண்டியை போலீசார் தேடிவருகிறார்கள்:

பதில் சொல்கிறார்



பஞ்சாய
இளம்பெ

கள்ளக்கா
நடந்த

திருச்சி, ஜூலை. 7 — கள் காதலின் விளைவாக, இ பெண்ணை குத்திக்கொலை தார், பஞ்சாயத்து போ மெம்பர்! அவருக்கு தூ தண்டனை விதித்து, திரு பெரிய கோர்ட்டு நீதி தீர்ப்புக் கூறினார்!!

திருச்சி மாவட்டம் தாலுகாவில் உள்ள ந கிராமத்தில் இந்த படு நடந்தது.

இந்த கொலை பற்றி கோ கூறப்பட்டதாவது:—

கள்ளக் காதல்

புலிவலத்தை அடுத்த நடு கிராமத்தைச் சேர்ந்தவர் பூவான். அவருடைய 2-வது ம இளம்பெண் மூக்காயி (வயது

முத்தியம்பாளையம் பஞ் யத்து போர்டு மெம் பெரியசாமி (வயது32),

மனைவியை அரிவாள
வெட்டினர்

ஆசாமிக்கு ஜெயி

மதுரை, ஜூலை. மனைவியை அரிவாள வெட்டி படுகாயப் படு ஆசாமிக்கு கடுங்காவல் டனை கொடுக்கப்பட்டது

போலீஸ் உத்தரவு

சாத்தூரை அடுத்தசி பாறை கிராமத்தைச் தவர் வேலுச்சாமி ச

பருக்கு

றவர்!!

துண்டனை
த்தூரில் கைது
அவர் மீது
வழக்கை ஆரம்பத்

தில் ...
விசாரித்து
(செசன்ஸ்)
அனுப்...
திருச்சி
நீதிபதி
விசாரித்
தூக்கு
தீர்ப்புக்

ாவில் பூ

் வெட்ட

யை போலீஸ்

, ஜூலை. 7—
கை பொங்கிக்
த பூசாரி
வாள் வெட்டு
இது சம்பந்த
ாமியை போலீ
...
கூறப்படுவதா

ரில் பெரிய
கோவில் பூசாரி
ற் திருமலை
வங் கோவிலில்
பொங்கிக

வெட்டு

பின்புறமாக
ப்பட்டு நாச்சி

பாண்...
கொடு...
கழுத்தி...
ஓடு...
திரும...
கள்
கி ரனு
கொண்...
கள். ஆ...
போலீசா...
வாக்கு...
பதிவு...

ஊ ...
லை ...

லக்ஷ்மி

க்கு!

ப்-மாஜிஸ்திரேட்டு
யசாமியை பெரிய
ர்ட்டு விசாரணைக்கு

பெரிய கோர்ட்டு
எஸ். ராமசாமி
பெரியசாமிக்கு
ட்ஸ விதித்து
ஞர்.

க்கு

டுகிறது!!

ரம் என்பவர்
சதக் என்று
டடி விட்டு
ழ விழுந்தார்
இருந்தவர்
ல் போட்டு
ஸ்பத்திரியில்
ச்சேர்த்தார்
ரியில்சிரனார்
திருமலையிடம்
ாங்கி வழக்கு

க

லை போடும்
நச்சி

(ாக்க)



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சபாண்டவர் வனவாசம்.

இஃது

குயப்பேட்டை

வீ. இராஜூமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

பி. நா. கி. கடைகாரியம்,

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1919. [அணா-8.



ரிங்வோரங் கியூர் என்னும்
படை சங்காரன்

ஐயா, உம்முடைய தேகத்தில எந்த இடத்திலாவது மேகப்படைகள் மேக காரகப்படைகள் அழுக்குப்படைகள் சொறிப்படைகள் வண்ணான் துணி கட்டுவதினாலுண்டாகும் ஒட்டுப்படைகள் கக்கூஸ்படையென்னும் அரையிலுண்டாகும் தினவுப்படைகள் இடுப்பிலுண்டாகும் தடிப்புப்படைகள் ஆகிய எவ்வித படைகள் இருந்தாலும் எமது (படை சங்காரன்) என்னும் ஔஷதத்தில் போதுமானதை எடுத்து படையுள்ளயிடத்தை நன்றாய்சொரிந்து தடவிவிட்டு மூன்றுமணிநேரம் பொருத்து சோப்பு அல்லது சீக்காய்போட்டுதேய்த்து அலம்பிவிடவும். இதுபோல இரண்டு மூன்றுவேளை மேற்சொன்னபடி செய்தால் நல்ல குணத்தைக் காணலாம். இந்த மருந்தினால் அனேக ஜனங்கள் சுகமடைந்திருகிறார்கள்.

ஒரு புட்டியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா தபால்ஸ்டாம்ப் அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

பஞ்சபாண்டவர் வனவாசம்.

விநாயகர் தோத்திரம்.

ஐந்துகரத்தோனே அரனார்திருமகனே
ஆறுமுகற்குமூத்தவனே ஆனைமுகப்பிள்ளையரே
தொந்திவிநாயகரே தொப்பைக்கணபதியே
பானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
மூலமுதலேநீர் முன்னடக்கவேணுமையா.

சரஸ்வதிதோத்திரம்.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவரமருள்வாய் மறையவனார்தேவியரே
இந்தக்கதைசொல்வதற்கு என்கருத்தில்வாருமம்மா
தப்புகளில்லாமல் தாயேநீவாக்கருள்வாய்
பஞ்சவர்கள் தன்கதைக்கு பாரதியேமுன்னிருந்து
குற்றமதுவாராமல் கொண்டணைத்துக்காருமம்மா

கதையின் வரலாறு.

முதலாவது சூரியவனம்.

காரானைக்கண்ணே கணபதியேமுன்னடவாய்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதிரப்பெருமான்
வனவாசம்போனபின்பு மகாராசனென்னசெய்வான்
அம்மான்சகுனியை அருகாகத்தானழைத்து
மாமன்சகுனியின் மதிமுகத்தைத்தான்பார்த்து
மாநாகங்கொண்டதொரு மகாராசனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போ யஞ்சாறுமாதமுண்டு
செத்தாரோபிழைத்தாரோ சேதிதெரியவில்லை
வனம்போனபஞ்சவர்கள் மாண்டரெனவரியேன்
அம்மான்சகுனியை அரவத்துசன்கேட்கையிலே



தூருவாசமகாரிஷிக்கு பஞ்சபாண்டவர் போசனமளித்தல்.

மாமன் சகுனியுந்தான் மருமகனுக்கேதுரைப்பான்
தூதரைபோகவிட்டு தொலைதூரமேதேடில்
வனமாய்வனங்களிலே வனவாசஞ்செய்கிறதும்
செத்ததுவும்பிழைத்ததுவும் சேதிதெரியுமென்றார்
என்றதுகேட்டவுடன் எழுந்தான திரியோதனும்
அங்கிருந்த தூதர்களை அரசுமன்னன்தானழைத்து
ஐவர்வனம்போய் அனேகநாளாச்சுது
எந்தவனத்திலிருக்கிறாரென்றறிந்து
ஐவர்கண்காணுத அதிசிக்கிரமவாரும்
காற்றாய்ப்பறந்து சடுதியேவாருமென்றான்
தாம்பூலம்வாங்கித் தான்வந்தார் தூதுவர்கள்
கோட்டைகடந்தார்கள் கொத்தளமுந்தான்கடந்தார்
வேங்கையடர்ந்தவனம் வெண்களாகாய்த்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
ஒருநாரைக்கிருநாரை உயர்ந்தகொம்பில்தானிருக்கும்
கருநாரைக்கிரைதேடுங் கதலிவனங்கடந்து
சூரியவனந்தனிலே போய்ச்சேர்ந்தார் தூதுவர்கள்
பரணசாலைக்குள்ளிருக்கும் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்குமிடமறிந்து ஏகிகடந்தார்கள்
வனமாய்வனங்கடந்து வாரார்களம்பலத்தே
திரியோதிரானிருக்குஞ் சிங்காதனத்தின்முன்பாய்
சாஷ்டாங்கமாகவேதான் சரணமிட்டார் தூதுவர்கள்
மகாராசர்மெச்சுகின்ற மன்னவரேநீர்கேளும்
சூரியவனத்திலவர் சுகமாயிருக்கிறார்கள்
பரணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமென்றார்
அவ்வார்த்தைகேட்டு அரசமன்னனேதுசொல்வான்
மாமாசகுனி மன்னவரேநீர்கேளும்
எந்தவிதம்பண்ணாலும் இறவாமல்பஞ்சவர்கள்
தப்பிப்பிழைத்து யிருக்கிறார் தாரணியில்
வனவாசந்தீர்ந்து வந்தார்களாமானால்
பங்குள்ளபிரகாரம் பாதிராச்சியங்கேட்பாரே
வாராமல்பஞ்சவரை வனத்திலேகொல்லுகைக்கு
ஆலோசனைசொல்லுமையா அம்மானெனவுரைத்தான்
மாமன்சகுனி மருமகனுக்கேதுரைப்பான்
செல்வமருகோனே திரியோதிரா அஞ்சாதே
ஐவரைக்கொல்லவென்றால் ஆலோசனைசொல்லுகிறேன்
தேவலோகத்திலிருக்குஞ் சினமுற்றதுருவாசர்
அவரை-வருந்தித்தபசுபண்ணால் வந்திடுவாரிப்பொழுதே

வந்தபொழுதில் வருந்திச்சரண்சொல்லி
அடிசில்சமைத்து அமுதுபடைத்தீரானால்
போசனமிட்டு புகழ்வேந்தர்பொற்பதத்தில்
சரணமடைந்திட்டால் சந்தோஷப்பட்டிடுவார்
துருவாசர்தன்மகிமை சொல்லிமுடியாது
தேவராலாகாது ஜெயிக்கமுடியாது
ஆராலுமாகாது அந்தரிஷியைச்செயிக்க
அப்படிக்கொத்தவரை அழைத்துநீரன்னமிட்டால்
சந்தோஷப்பட்டிடுவார் தபசில்பெரியவரும்
ஐவரைக்கொல்லுதற்கு அவரைமனுக்கேட்டால்
நல்லதென்றுசொன்னால் இராச்சியமுன்னுதடா
யாராலேயாகும் ஐவரைக்கொல்லவென்றால்
என்றுசொல்லக்கேட்டு இராசன் திரியோதிரன்
உள்ளங்குளிர்ந்து உடனேகத்தானெழுந்தார்
அங்கொருவர்தானறியா தரவக்கொடியோநடந்தான்
முத்துமிதியடியைத் தொட்டுநடந்தசைந்தான்
பூங்காவனம்புகுந்து புதுகங்கைநீராடி
ஸ்நானங்கள்செய்து செபதபமுந்தான்முடித்து
நினைத்துசிவனை நெற்றியில்வெண்ணீரணிந்து
அரகராவென்று அள்ளியிட்டான்வெண்ணீரு
சலங்களைக்கொண்டு நிலங்களைசுத்திபண்ணி
தெற்பாசனம்போட்டு திரியோதிராஜன்
துருவாசமகாரிஷியை அருகுவரத்தானினைந்து
கண்ணிரண்டுமூடிக் கருத்தில்நினைத்தானே
அருந்தவசுபண்ணானே அரவக்கொடியோனும்
அப்போதுஅந்தரிஷி யறிந்துஞானதிருஷ்டியினால்
சர்ப்பக்கொடியோன் தபசுநிலையறிந்து
சந்தோஷமாகி தான்வருவாரந்தரிஷி
சடையுஞ்சடைமுடியுந் தம்பிரானைப்போலே
கையில்மண்டலமுங் காஷாம்பரமணிந்து
தெண்டுகமண்டலமும் திருநீற்றுக்கோபியுடன்
வருகிறாரந்தரிஷி வானுலகந்தான்கடந்து
வனமாய்வனங்கடந்து வாழ்மலையுந்தான்கடந்து
திரியோதிரன்தபசு நிலைசேரவந்தரிஷி
கண்டவுடன்மன்னன் கடுகியேதானெழுந்து
முக்காலுமன்னன் முடிவணங்கிதெண்டனிட்டு
ஆண்டவரேஐயாவே அடியேன்சரணமென்றான்
சிறந்ததுருவாசரிஷி சித்தமகிழ்ந்தேகுளிர்ந்து
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
மனதில்நினைத்ததெல்லாம் மன்னாவுரையுமென்றார்
அஞ்சிப்பயந்தவனும் அரசுமன்னனேதுசொல்வான்

அமுதுபடைக்கவென்று அநேகநாளென்மனதில்
எண்ணியிருந்தேன்காண இதுவேகருமமல்ல
என்றுமகாரிஷியே வருவீரமுதுசெய்வீர்
வருந்தியழைத்துவந்தான் மாளிகைவாசலிலே
பட்டடைமனைபோட்டு வந்திருமென்றுசொல்லி
பக்குச்சலங்கொடுத்தான் கட்டமுநர்கோமானும்
சல்லாளைப்புலிக்கேபோட்டுத் தண்ணீருந்தான்தெளித்தான்
முக்கனிப்பாற்சக்கரையும் முன்படைத்தான்திரியோதிரன்
பட்டுவர்க்கமுடனே காவலனுந்தான்படைத்தான்
ஒன்றுமுன்றுமென்று உபசாரனைபண்ணலுற்றான்
அத்தனைபோசனமும் அருந்தினாரந்தரிஷி
உண்டுபசித்தாராம் உள்ளங்குளிர்ந்தாரம்
கையலம்பிக்கொண்டவர் கனிவாயுஞ்சுத்திபண்ணி
சிங்காதனத்திலே சேர்ந்தாரேயந்தரிஷி
மன்னமுடிவேந்தன் திரியோதிராஜன்
பொற்றம்பாளத்திலே புட்பமுஞ்சந்தனமும்
தங்கத்தாம்பாளத்தில் தாம்பூலந்தான்கொடுத்து
மெத்தப்பணிந்தானே மேன்மைதுருவாசரிஷி
கற்பக்கொழுப்படைத்த சதிமன்னனைப்பார்த்து
உனக்கேதுமனதில் இஷ்டமெல்லாங்கேட்டுவிடு
மனதிலேயோசித்துவொரு வரங்கேளுந்தாரேனென்றார்
என்றுமகாமுனிக்கு யேதுரைப்பான்திரியோதிரன்
எதுவரந்தருவீரென்றுரைத்தான்திரியோதிரன்
அப்போதுமாமுனியும் அவ்வார்த்தைதனைக்கேட்டுச்சொல்வார்
நீகோருமவரமெல்லாம் கொடுப்பனேதாரேனென்றார்
அப்போதிரியோதிரனை ஆணமுகனேதுசொல்வான்
அங்காலமிப்போதிலே பஞ்சவர்களைவருண்டு
அவர்வனவாசம் ஆரணியமபோனார்கள்
காமியவனத்திலேதான் இருக்கிறார்கள்பஞ்சவர்கள்
ஐவரைக்கொல்லவென்று அந்தமனதாகி
உம்மைவருந்திநேன் உண்மையுள்ளமாமுனியே
பஞ்சவரைக்கொல்லவென்று பரவசமாய்ச்சொல்லுமென்றான்
எந்தவகையாலும் இறக்கவகைபண்ணுகிறேன்
பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
துருவாசமகாரிஷியுந் சொல்லுகிறார்வாய்திறந்து
எந்நாளுமுண்மைசெய்த ராஜாக்கள்பஞ்சவர்கள்
எப்படிக்கொல்வேனே ராஜாக்கள்பஞ்சவரை
திரியனதுகேட்டு செப்புவான்வாய்திறந்து
ஆரணியந்தனிலே ஐவருக்குஞ்சென்று
போஜனங்கேட்டாலே புகழ்வேந்தர்பஞ்சவரை
ஐவருக்குப்போஜனங்க ளங்கேகிடையாது

வெந்தசோறுண்டு விதமறியார்பஞ்சவர்கள்
போசனமில்லையென்றால் பொட்டெனவேசாபமிட்டு
கல்லாகமண்ணாகக் காவலரைச்செய்துவிட்டு
கடுகிவந்துசேதிசொல்லும் கனத்தரிஷியாரே
போய்வாருமென்று பொருந்தவேதெண்டனிட்டார்
துருவாசமாரிஷியுஞ் சுருக்காகவேதானடந்து
தெண்டுகமண்டலமுஞ் செம்புலித்தோலாசனமும்
கடுகிநடந்தாரே காடுஞ்செடிநோக்கி
அஸ்தினாபுரந்தாண்டி ஆறுஞ்சுனைதாண்டி.
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சில்லென்றபூத்த செடியும்வனாந்திரமும்
கடுகவருகிறார் கனத்தரிஷியவரும்
ஏழுலகையாண்ட வெம்பெருமாளிதையறிந்தார்
அடியளந்தமாயனார் ஆதிமூலமேதுசெய்தார்
நம்பினவரைக்கும நாராயணரெழுந்து
காவலர்கள்பஞ்சவர்க்கு கனமோசம்வந்ததென்று
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வருகுதென்று
செல்வத்திரவியங்கள் சிரழிந்துபோகுதென்று
தோளிற்செபமாலை சோரவிடநாளாச்சே
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
என்றும்பகையாளி ஏறபட்டான்பஞ்சவர்க்கு
இங்கேயிருந்தோமென்றால் இறந்திடுவார்பஞ்சவர்கள்
நம்பினோமென்றவரை நாமல்லோகாக்கவேணும்
என்றுஎழுந்தாரே யெம்பெருமாள்மாயவரும்
துவாரகாபுரிதாண்டி அழாய்மவுளிசான்வாறார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சிறந்ததுருவாசருடன் சேர்ந்தாரெம்பெருமான்
ஆலிங்கனம்பண்ணினார் ஆயர்பெருமானும்
இந்தவனத்துக்கு யேதுவகையாய்ப்போறீர்
எங்கேநீபோறீர்காண் என்றார்பெருமாளும்
மாரிஷிதுருவாசர் வாய்திறந்தேதுசொல்வார்
மாயனபெருமானே வந்ததென்னயிவ்வனத்தே
பரவேட்டையாகவே பாரவனங்கள்வந்தேன்
வனசாரியாகவே வந்தேன்காணிவ்வனத்தே
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தரிஷியேதுசொல்வார்
பஞ்சவர்கள்தாமிருக்கும் பாரவனங்களிலே
ஐவரிருக்குமந்த அடவியிலேபோய்ச்சேர்ந்து
புண்ணியவானைவரையும் போசனங்கேட்கவந்தேன்
என்றுசொல்லக்கேட்டு எம்பெருமானானவரும்
நாமும்வருகிறோம் ராசாக்களைப்பார்க்க
கூடநடந்தாரே கோபாலசுவாமியவர்

திருவருணாகிலை இருண்டவனந்தாண்டி
நல்லவனந்திகருர் நால்கிலவனந்தாண்டி
செந்தாய்புளிசடி சிந்தும்வனந்தாண்டி
பாதிரிமூலை பருத்தவனந்தாண்டி
[illegible] யிலிருக்கும்
[illegible] தாண்டி
[illegible] வருநாளிலே [illegible] செய்தார்
[illegible] கண்டவுடன் [illegible] துசொல்வார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
இந்தபலாயிலைதான் எதுக்குதவுமென்றார்
அவ்வார்த்தைகேட்டல்லோ அரியரிஷியேதுசொல்வார்
இந்தபலாயிலையி லிலியபோசனங்களுண்டால்
பலாயிலையிற்போசனங்கள் பண்ணவர்க்குகிட்டாமே
அமரருக்கு அற்புதங்காண் ஆர்க்குங்கிடையாது
நல்லோருக்குங்கிட்டாது ஸ்ரீராமாவென்றுசொன்னார்
உத்திதங்கள் தான்கேட்டு வுவந்துநடக்கையிலே
அந்தவனங்கடந்து அடுத்தவனம்போகையிலே
காமதேனுப்பாலை கருங்கல்லுபாறையிலே
கறந்துஇருக்கிறதைக் கண்டார்பெருமாளும்
மாயன்பெருமாளும் வார்த்தையவர்கேதுரைப்பார்
மெத்தப்பெரியவரே வேணதவஞ்செய்தவரே
தாபதவத்திற்சிறந்த் தருவாசமாமுனியே
காமதேனுவின்பாலும் காய்ந்துக்கருமோதான்
இதுஎதுக்குதவுங்காணென்றார்பெருமாளும்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமுனியேதுசொல்வார்
தேவலோகந்தனிலே தேவருக்குங்கிட்டாது
இதுஎடுத்தாப்புசித்தாலே சவ்வாருக்கற்புதங்காண்
என்றுசொன்னவார்த்தைதன்னை எம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமவர் சுவாமிநடந்தாரே
அடுத்தவனந்தனிலே அவர்கள்போகையிலே
தாமரைத்தடாகத்தை சுயிகண்டேதுசொல்வார்
ஐயாபெரியவரே அமராக்கதிதானவரே
இந்தஜலந்தானெதுக்குதவுமென்றார்
அருவாசமாரிஷியுஞ் சொல்லுகின்றார்பொட்டெனவே
தாமரைப்பொய்கையிலே ஸ்நானங்கள்செய்தாலும்
தபங்கள்ஜெபங்கள்பண்ணி தாகந்தீர்க்குண்டாலும்
சிவனேயவனுக்குஞ் செப்பமுடியாது
என்றுசொன்னவார்த்தை யெம்பெருமாள்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுமெப்பேர் சாமிநடந்தாராம்
திருவருணாகிலை ஏகிவழிநடந்தார்.

சூரியவனந்தனிலே சேர்ந்தாரிருவருமாய்
பர்ணசாலைமேலிருந்த பஞ்சவர்கள்கண்டுவிட்டார்
மாயன்பெருமாளும் மாமுனியானவரும்
வருகிறாரென்றுமந்த மகாராசர்தானெழுந்து
திடுக்கிட்டுதான்பதைத்துச் சீக்கிரமாய்தானெழுந்து
எதிர்கொண்டுஓடிவந்து இரங்கியேதெண்டனிட்டார்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டார்
கடிகிமுடிகியே காட்டுத்தழையொடித்து
ஐந்தடுக்குமெத்தையதாய் ஆசனம்போட்டார்கள்
இட்டசிங்காதனத்தில் ஏறியிருவருமாய்
பச்சிலைமெத்தையிலே பதியக்கொலுவிருந்தார்
தக்கப்புகழுடைய தருமரவர்கூறுவார்
திரியோதிரன்செய்த சேதிகளைக்கேட்டீரோ
நாடோடிருந்தவென்னை ராஜமன்னன் தானழைத்து
விருந்தருந்தவாருமென்று விருந்தோலைதானனுப்பி
வருந்தியென்னையழைத்து வஞ்சனைகள்பண்ணினானே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
வாரவழிதனிலே வசிகளைத்தான்புதைத்தான்
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
வசநாபிதண்ணீர்பந்தல் வழியில்வைத்தான்மாபாவி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
பொற்குழிவெட்டியே பொற்சிங்காதனங்களிட்டு
கொல்லநினைத்தானே குடிகேடன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
எண்ணையிட்டுக்கொள்ளுமென்று எங்களையுந்தானழைத்து
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
நீரிற்கழுநாட்டி நீராடிவாருமென்றான்
குளத்தில்வசிநாட்டிக் கொப்பெனவேபோங்களென்றான்
அதுக்கும்பிழைத்தோமே ஆயருடபுண்ணியத்தால்
உண்ணுகிறசாதத்திலே ஒருக்காலேநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரிலே கொலைக்காரன்நஞ்சையிட்டான்
கொல்லநினைத்தானே குடிகேடன்சத்ராதி
அதுக்கும்பிழைத்தோமே ஆண்டவனேயுன்னருளால்
அரசர்சபைநடுவே அம்பலத்தார்தங்கள்முன்னே
சொக்கட்டான்போட்டான்காண் சோழிவிளையாடி
பகடசாலைபோட்டு பந்தயங்கள்பேசினான்
நாடுகளுஞ்சீமைகளும் ராச்சியமுந்தான்பறித்தான்
தூயதொருசீமைகளும் துரைத்தனமுந்தான்பறித்தான்
பருத்தவிலங்குமிட்டு பெருங்கிடங்கிலேயடைத்தான்

மாற்றுரைமுடியாத கல்லைக்கிடங்கிலிட்டான்
தள்ளியிழுத்துவந்து தாள்விலங்குபோட்டுவிட்டான்
அரசர்சபைதனிலே அம்பலத்தார்தங்கள்முன்னே
அரண்மனையிலிருந்தபெண்ணை அம்பலத்தில்கொண்டுவந்து
பாஞ்சாலனபெற்றபெண்ணை பாவையழகியரை
அரசர்சபைதனிலே அம்பலத்தில்யேற்றிவைத்தான்
சொல்லாதுஞ்சொல்லியல்லோ துகிலுரிந்தான்மாபாவி
மானவரிசையில்லாமல் வம்பாகப்பேசினனே
பாரவனவாசம் பன்னிரண்டுவருடம்வரை
ஆரணியப்போயிருந்து அப்பாலொருவருடம்
அக்கியாதவாசம் யார்க்குந்தெரியாமல்
ஊரில்உருமாறி யொளித்திருந்துவந்தாக்கால்
நாடுதிரிந்துவந்தால் காசிநகர்தாரேனென்றான்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரேனென்றான்
பாரவனவாசம் பரதேசம்வந்துவிட்டோம்
எங்கள்-பொழுதுந்தொலையுமோ பூமியரசாளுவமோ
என்றுதெளியுமோ எக்காலம்சென்றிடுமோ
நாங்கள்சுகமாக ராச்சியத்தையாளுவமோ
உம்முடையதிருவுள்ளம் எம்படியோநாமறியோம்
பாதம்சரணமென்று பணிந்தாரே தருமராயர்
மாயன்பெருமாளும் வார்த்தையவரேதுசொல்வார்
தலைவிதியெழுதினதை தள்ளிவைப்பாரொருவருண்டோ
வரும்வினைவந்தாக்கால் மடியேந்தவேண்டாமோ
அயனெழுதியதில் எவ்வளவுங்குறையாது
என்று-பிரியவசனமதை பெருமாளுரைத்தாரே
திக்குப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
தூர்த்தரிஷியாரும் யேதுவகையாகவந்தார்
என்றுமவர்கேட்கவேதுசொல்வார்மாயவரும்
வந்தவருத்தத்தை மாயவரும்கேளுமென்றார்
என்றுசொல்லக்கேட்டு இயலானதர்மலிங்கம்
துருவாசமாமுனிக்குத் தெண்டன்சமர்ப்பித்து
சொல்லுவார்வாய்திறந்து சொற்பெரியதர்மலிங்கம்
அடியேனைத்தேடியே ஆண்டவரேவந்ததென்ன
கமலப்பதம்நோந்திடவே காலநடையாய்வந்தீரே
செந்தாமரைப்பாதம் செம்புண்ணாய்வந்ததுவே
தேடிவந்தகாரியத்தைச் செப்புமென்றார்மாமுனியே
துருவாசமாமுனியும் சொல்லுகிறார்வாய்திறந்து
குருகுலவங்கிஷத்தில் குந்தியார்புத்திரரே
போசனங்கேட்கவந்தேன் புகழ்பெரியதர்மரேநான்
தேவர்க்குமற்புதமாய் சிவனார்க்கும்பிரீதியாக
இப்போதுபோசனங்க ளிட்டாலேயல்லாது

கல்லாய்ச்சபிப்பேனென்றார் கனத்தரிஷியவரும்
மெத்தப்பயந்தாரே வில்வேந்தர் தருமராஜர்
ஆயரைப்பார்த்துபல்லை அங்கசிசாரயிட்டார்
மடிந்துவிழுங்காலம் வந்துதேன அனசெய்வோம்
என்றுபுலம்புகையில் எம்பெருமானேதுசொல்வார்
வீமாமதகரியே வேல்வேந்தாவாருமென்றார்
பருத்தவனங்களிலே பலாயிலைபேறித்து
கருங்கல்லுமேலாகக் காமதேனுபாலிருக்கும்
காராம்பசும்பாலைக் கடுகியேபோய்த்தெளித்து
தாமரைப்பொய்கையிலே ஜலங்கொண்டுவாருமென்றார்
என்றுசொல்லமாயன் எழுந்துநடந்தான்வீமன்
கடிகிமுடிகியே காற்றாய்ப்பறந்துவந்து
காமதேனின்பாலையவன் கடுகியேபார்த்தெடுத்து
பருத்தவனங்களிலே பலாயிலைதான்பரித்து
தாமரைப்பொய்கையிலே சலங்கொண்டோடிவந்தான்
துருவாசமாமுனியே சுவாமியெழுந்திரென்றார்
கைக்குச்சலங்கொடுத்து கடுகவே தருமராயர்
வட்டமணைபோட்டு வந்திருஞ்சுவாமியென்று
பலாயிலைபோசனங்கள் பாங்காய்ப்படைத்தார்கள்
உபசாரணைபண்ணியே உண்ணுமையா சுவாமியென்றார்
போசனத்தைதமாமுனியும் புசித்தபிறகாக
ஆயாசந்தீர்ந்தாரே அந்தரிஷிபாரும்
கையலம்பிக்கொண்டாராம் கடுகிமகிழ்ந்தாராம்
தாம்பூலம்வாங்கிச் சந்தோஷமுடனணிந்து
ஐவரைக்கொல்லவந்த அந்தத்துருவாசரிஷி
தேவர்களருந்துகிற திவ்வியமாபோசனங்கள்
போதப்படைத்தார்கள் புகழ்வேந்தர்பஞ்சவர்கள்
இப்படிக்கொத்தவரை எப்படிகொன்றிடலாம்
என்றுமனமகிழ்ந்து இராசாக்களைவாழ்த்தினார்
ஐவர்பஞ்சபாண்டவரை அந்தரிஷிவாழ்த்தினார்
ஐவரையும்வாழ்த்தி ஆயரைத்தெண்டனிட்டு
இருங்களிருங்களென்று எழுந்துநடந்தாரே
கடிகிமுடிகியே கரியமலைதான்தாண்டி
சூரியவனந்தாண்டி சுருக்காய்வருகிறாராம்
காடுகள்தாண்டியே கரியமலைதானதாண்டி
அஸ்திநபுரத்தை அடுத்தாராமந்தரிஷி
திரியோதனனிருக்குந் திருச்சபைதன்னில்வந்தார்
திரியோதனராசன் தெண்டனிட்டான்மாமுனியை
அடிபணிந்துதெண்டனிட்டு ஐபாசரணவென்றான்
சிங்காசனம்போட்டு சீராகவீற்றிருந்தார்
ஆசனத்தின்மேலாக அந்தமுனிவீற்றிருந்தான்

தாமுடிவேந்தன் திரியோதிரன்கேட்பான்
இவரையுங்கொன்று அதம்பண்ணிப்போட்டீரோ
கல்லாய்ச்சபித்தீரோ கடுகியேவந்தீரோ
என்றுசொல்லிக்கேட்டானே இயலானராசதுரை
துருவாசமாமுனிக்குத் தோசிமொழிகொள்ளாமல்
கோபமிகக்கொண்டு கொப்பெனவேயேதுசொல்வார்
இவரையுங்கொல்லென்று அனுப்பினாய்மன்னவனே
இவர்போலுபசாரனை ஆரொருவர்செய்ததில்லை
தேவர்கள்தானருந்தும் திவ்யமாபோசனங்கள்
போதப்படைத்தார் பொன்னடியைத்தான்வணங்கி
சரணமடைந்தார்கள் சந்தோஷமாகிவந்தேன்
இவரையுங்கொல்லவென்று அனுப்பினாய்பாதகனே
உன்னுடையவங்கிஷத்தில் ஒன்றும்விளங்காது
நுவருடையபூலே அனர்த்தமாய்ப்போகவென்று
சாபங்கொடுத்தாரே சமர்த்தான்மாமுனியும்
செப்பிநடந்தாரே தெய்வலோகந்தனிலே
துருவாசமாமுனியுந் தெய்வலோகம்போனபின்பு
அப்போதிரியோதிரன் அநேகவிசனமதாய்
என்றுதானெண்ணியெண்ணி இருந்தானே திரியோதிரன்
இவருக்காகவே ஆயிருக்கும்போது
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பெருமான்
தாயமேதவுங்கிருக்குந் துருவாசமாமுனியை
ஆரவக்கொடியோனும் அனுப்பினானுமைக்கொல்ல
திரியோதிரன்சொற்படிக்குச் சிருக்குதுருவாசமுனி
உம்மைக்கொல்லமனதாகி கோபித்துவந்தாரே
அதுநீதிக்குங்களைநான் ஆதரிக்க இங்குவந்தேன்
அல்லாதேபோமானால் அநீதமாய்மாண்டிடுவீர்
என்றுரைக்கமாயவரும் எதுரைப்பார்தருமருமே
உம்மைநம்பியல்லோ உயிர்கொண்டுவாழுகிறோம்
நீரேதுணையல்லால் வேறுதுணையுமுண்டோ
நம்பினபேர்களையே ரட்சிக்குந்தேவனல்லோ
அடியாரைக்காக்கின்ற ஆதிபரம்பொருளே
கஜமுகனைக்காக்கின்ற எம்பெருமாளாண்டவரே
பன்னிரண்டுதன்வருஷம் பாரவனந்திரியுமட்டும்
வாதுவினைவருமோ வெம்பெருமாள்காணறியேன்
இன்னமென்னவருஞ்சனமோ எம்பெருமாள்காணறியேன்
வரும்வினையாவும் மாயவரே துணையாகும்
அரக்குமாமாளிகையில் இவரைக்காத்தீரே
அபயமென்றதிரௌபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
உண்மையிதையறிவார் உலகளந்தமாயவரே



பாம்பாகசபிக்கப்பட்டிருந்த இராமரிஷி பாண்டவர்களை எடுத்
துவிழுங்கஸ்ரீகிருஷ்ணபகவான் எலியாக நுழைந்துவிடுதலைசெய்தது

சரணஞ்சரணமென்று தாள்பணிந்தார்பஞ்சவர்கள்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்பஞ்சவர்கள்
மாயன்பெருமாளும் மனதுமிகக்களித்து
நேசமேல்பட்சம அதிகப்பிரியமுமாய்
சந்தோஷப்பட்டுசுவாமி தன்னுடமனங்குளிர்ந்து
மாயனபெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
இந்தவனந்தாண்டி இனியவனமேபோங்களென்றார்
மற்றொருவனத்திலேதான் மன்னவரேபோங்களென்றான்
அந்தவனந்தனிலே இவரும்போய்வாசம்பண்ணுர்
தெற்குமேற்குகிழக்கு யோசனதூரஞ்சென்றாலும்
வடக்குதிசையிலேதான் மன்னவரேபோகவேண்டாம்
ஏதுவினைவந்தாலும் என்னைநினைத்திடுங்கள்
என்றுமவர்சொல்லி எம்பெருமாள்தானெழுந்தார்
பட்டமாங்கருடனேறி மாயவருமபோய்நடந்தார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
அழகானதுவாரகைக்கு ஆண்டவரும்போய்நடந்தார்

முதலாவது சூரியவனம்-முற்றிற்று.

உ-வது, ராமரிஷிவனம்.

இரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
ராமரிஷிவனத்தில் நடந்தாரேபஞ்சவர்கள்
சோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகாணகத்தில்
முன்னேமுசட்டையும் முடண்விரித்துதுவளை
பண்ணேடலையும் பறட்டைபுளிகரணையும்
தின்றுதிரிகிறார்கள் தேசாந்திரிபோலே
ராமரிஷிவனத்தில் நடந்தார்கள்பஞ்சவர்கள்
ஐந்துபேர்க்குப்பர்ணசாலை அவ்வனத்திலுண்டுபண்ணுர்
ஏழுபேர்க்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணுர்
பர்ணசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்தவனத்திலேயவர் வனவாசம்செய்தார்கள
தபசில்பெரியவரும் தம்பிரானுனவரும்
[illegible]ங்கள்பண்ணிலே சாதங்கறியிடுவேன்
போசனங்களிட்டுமல்லோ புட்டங்கள்தான்கொடுப்பேன்
தாவிகாஷாம்பரமும் கைமணியுந்தான்கொடுப்பான்
புஸ்தகோசனமும் பொருந்தவேதான்கொடுப்பேன
சரணமடைந்து சாமிப்போய்வாருமென்பான்
தாதர்பெரியவர்கள் தப்பெடுத்துவந்தாலும்
அரிராமவென்றுசொல்லி அனந்தம்பேர்வந்தாலும்

சாயாராமாவென்றசத்தம் ராமரிஷிகேட்டாலும்
அரிகரியென்றசத்தம் அங்கரிஷிகேட்டாலும்
கோவிந்தாவென்றசத்தம் குருமுனிதான்கேட்டாலும்
கோபித்துகண்சிவந்து கொப்பெனவேதானெழுந்து
சீறிவரும்புலிபோல சில்லென்றேதானெழுந்து
கையிற்றடியெடுத்து கடுங்கோபமானே
வாரியெடுத்துமவன் வல்லுயிரைக்கொள்ளக்கொள்வான்
அப்படியாகவே அனேகநாளிருக்கும்போது
மாயன்பெருமாளும் வார்த்தையதுவறிந்து
தள்ளாடுங்கிழவனைப்போல் தானேவடிவெடுத்து
பாந்தமுகம்நிரைந்த பழுத்தமரம்போலே
தாதவடிவாக சாமிவருவாராம்
ராமரிஷிதானிருக்கும் நல்லவனந்தனிலே
அந்தரிஷியிருக்கும் ஆச்சிரமமுட்புகுந்து
ஹரிவோம்ஹரிஓமென்று அடித்தாராந்தப்பதனை
சாரங்கபாணியென்று சங்குதனைத்தானூதினார்
அந்தசத்தந்தான்கேட்டு அரிபரிஷிதானெழுந்து
கோபித்துக்கண்சிவந்து கொப்பெனவேதடியெடுத்து
ஆனையின்மேலேதான் ஆண்சிங்கம்புகுந்தாப்போல்
தாதனொருவனையும் தடியாலடிக்கலுற்றான்
மாறியடித்தானே மதம்பெரியராமரிஷி
அந்தவடிபட்டுக்கொண்டு அரிகரிராமாவென்றார்
மறுகாலொருதரமும் மாறினன்ராமரிஷி
அவ்வடியும்பட்டுக்கொண்டு அரிகரிராமாவென்றார்
அவன்-மாறியடித்தானே மாயனென்றறியாமல்
சுழட்டியடித்தானே சுவாமியென்றறியாமல்
அவ்வடியும்பட்டவுடன் அரிராமர்கோபமாகி
கண்கள்சிவந்துமல்லோ காந்தாளந்தாமெழும்பி
ஆகாயமாகவே வளர்ந்தாரே ஆபரங்கே
விஸ்வரூபமாகவே வேதன்னார்தான்வளர்ந்தார்
கண்டானேராமரிஷி காலைத்தடுமாறி
அகத்தொடையுங்காலும் அதிரவிடவிட்டனை
மெத்தப்பயந்து விழுந்தானடிபணிந்தான்
சுவாமிசரணமென்று தாள்பணிந்தான்ராமரிஷி
முக்காலுந்தெண்டனிட்டு முடிவணங்கிபோற்றிசெய்தான்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
போஜனங்கள்பேர்றெதும் போதப்பணியுறதும்
மயேஸ்வராடியார்க்கு வணங்குவதேயல்லாது
எந்தனடியாரை இகழ்ச்சியாய்பேசாதும்
மாறியடித்துமே வாயத்தம்பண்ணுறதும்

சக்கரதரன் பண்டுறைதனும் ஆருமோராமரிஷி
ஆசாரியர்கள் அவர்க்கங்கள் தேடிக்கொண்டார்
இவ்வார்த்தைதனைக்கேட்டுமே இபலானைராமரிஷி
மெத்தபயமாகி விச்சுனைத்தான் பணிந்து
கைகட்டிவாய்புதைத்து கடிதியேயேதுசொல்வான்
சிவன்பாதம் அடியேனறிந்திருப்பேன்
உண்ணாமடையபாதம் ஒருக்காலும்நானறியேன்
தேடிபுக்காறுமல் தேவரீருன்பாதம்
கண்டவரியுமைக்காண அநேகநாள் தவமிருந்தேன்
கோடிக்தவமிருந்தும் கொழுந்தனைக்கண்டதில்லை
இக்கையிறுதேதான் ஆயர்வுமைக்காண
உம்முடையவடியவளை உடதாசினம்பண்ணுறதும்
நிக்கவிதமாக இருந்தேன்நெடுநாளாய்
பல்லவேபகன்றதின்று எம்பெருமானும்மாலே
உன்பாதமதைக்கண்டபோதே பாவங்கள்போக்கிவிட்டேன்
அஞ்சிப்பாத்தவனும் ஆசாரம்பண்ணினன்
சாபாமேபுவன்னாருமே கரியமாலேதுசெயதார்
அக்கதைகள்செய்ததனுல் அனேகபாவமுந்தனுக்கு
சாபம்பிடியுமென்றார் சௌரிப்பெருமானும்
ஆராயிரவருஷமட்டும் அரவமாய்ப்போகவென்றார்
தாராழுக்கன்மலைப்பாம்பாய்ச் சாபமிட்டாரெம்பெருமான்
அப்போதுராமரிஷி ஆயரையேதுகேட்பார்
எம்பெருமானிச்சாப மெப்போதுதீருமென்றார்
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
நூவர்பஞ்சபாண்டவர்கள் அடவியிலேதான்வருவார்
மன்னர்பஞ்சபாண்டவர்கள் மாவனந்தான்வருவார்
ஜுமர்தம்பிரால்வர்களைத் தாமெடுத்துவிழுங்கிடுவீர்
வெற்றிமதபாலை வீமனருச்சுனனை
நகுலசகாதேவ ராசாக்கள்நால்வரையும்
எடுத்துவிழுங்கியே இருக்கின்றவேளையிலே
அருச்சுனனில்லாதுன் அங்கம்தளர்ந்துவிடும்
அந்தசமயத்தில் அங்கேநான்வந்திருப்பேன்
நான்வந்திருந்து நற்காட்சிதாரேனென்றார்
அப்போதுராமரிஷி ஆயரிடசாபத்தால்
அந்தமர்சாபத்தால் அப்பாம்புவுண்டாச்சு
அநேககாலப்பாம்பு அவ்வனத்திலேயிருந்து
அதுவரியார்பஞ்சவர்கள் அவ்வனத்திலேயிருப்பார்
இராமரிஷிவனத்தில் இராசாக்கள்தானிருந்தார்
பர்ணசாலைபுண்பண்ணி பஞ்சவர்களங்கிருந்தார்
காயும்பழமுங் கந்தமூலங்களுண்டு
தருமர்தேதான் அவித்திருந்தபோது

தெற்குமேற்குகிழக்கு தேடிக்கனிபறிப்பார்
வடக்குதிசைநோக்கி மன்னவர்கள்போவதில்லை
அவ்வனத்திலேயொருநாள் அடங்காதவீமனேன்
மெத்தவசங்காரமுடன் வீமனுமங்கேகேளினவாய்
கடுகியெழுந்திருந்தான் கனிகள்பறிக்கவென்று
வடக்குதிசைதனிலே மாயவன்போகாதேயென்றார்
காயுங்கனியுமங்கே கடுகியேகிட்டாதோ
வேண்டியராட்சதர்கள் வேதமுனிகளுண்டோ
அவ்விடத்திலேதிசயங்க ளெல்லாமறிவோமென்று
கடிகியெழுந்திருந்தான் கட்டழகன்வீமனவன்
சல்லடங்கள்போட்டுமெல்லோ தட்டுவரிந்துகட்டி
தட்டுவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
கையிலேகதையெடுத்து கடுகியேதானடந்தான்
வடக்குதிசைநோக்கி வாரான்மதகரியான்
காயுங்கனியுமங்கே கடுகப்பழுத்திருக்கும்
அவ்விடத்திலேகனியும் அனேகம்பழுத்திருக்கும்
அருநெல்லிசிறுநெல்லி அழகானதமரத்தைகளும
கொச்சிதமரத்தையுடன் குடகுபலாப்பழமும்
மாங்கனியுந்தேங்கனியும் வண்ணப்பலாப்பழமும்
மட்டில்லாப்பழங்களெல்லாம் வனத்திற்சொரிந்திருக்கும்
அளவில்லாக்கனிகளெல்லாம் அவ்வனத்திற்தானிருக்கும்
கண்டானேவீமனவன் கண்களிக்குளிர்ந்தான்
அங்கேகனிகள் அனேகம்பழுத்திருக்க
மெத்தகனிகளிங்கே வேணதெல்லாந்தானிருக்க
கண்டுபிழைப்பார்களென் றல்லோவுலகளந்தார்
தின்றுபிழைப்பார்களென் றுதிருமாலும்
வடக்குதிசைபோகாதே யென்றுரைமாயவனும்
சாமிபெருமாளவர் சதிதனைக்கண்டோமே
வன்றுமையிலெண்ணி ஏகிடந்தானே
என்றதுமெண்ணினன் இயலானைவீமனவன்
அந்தவனத்திலேயவனுள்நுழைந்து
மரத்தின்மேலேறினான் மதவீமாசனவன்
உச்சிற்கனிபறித்து வுகந்துபுசித்தான்காண்
காயுங்கனிபறித்து கடுகவேதான்புசித்தான்
ஏராளத்தின்றுமே வயிராரத்தான்புசித்தான்
அண்ணனுக்குந்தம்பியர்க்கும் அனேகங்கனிபறிக்க
அருநெல்லிசிறுநெல்லி அழகாந்தமரத்தையுடன்
சேப்பலாக்கனியும் துய்யவிளாங்கனியும்
இலந்தைக்கனிபாருங் கிள்ளியொருபழம்பறிப்பான்
செடிகளைப்பாரும் சிவந்தபழம்பறிப்பான்
அங்கேகனிகளனேகம்பழுத்ததிலே

அடுக்குபுதரிலேதா னரவமெழுந்திருந்து
சரிக்கவனத்திலேதான் சர்ப்பமெழுந்திருந்து
மதவீமராசனவை மலைப்பாம்புகண்டதுகாண்
தாராமுக்கன்மலைப்பாம்பு சந்தோஷமாகவேதான்
மனதுமிகக்குளிர்ந்து மதகரியானருகில்வந்து
வாயைத்திறந்துமங்கை மதவீமனையெடுத்து
விழுங்கவெழுந்திற்று இபமானவீமனைத்தான்
பாம்பென்றுபார்த்ததில்லை பாரமதவீமன்
தாக்கொண்டதூரமட்டுஞ் சடுதியெனவேதானடந்தான்
விசைகொண்டதூரமட்டும் வீசிநடந்தானே
வழியுந்தெரியாமல் வந்தயிடங்காணாமல்
பாதைதெரியாமல் பாம்பென்றறியாமல்
பெருங்குடல்மேல்சார்ந்துகொண்டான் பெருமாநிகர்வீமன்
அடுக்குடல்மேல்சார்ந்துகொண்டான் அந்தமதவீமன்
பாம்பென்றறிந்தானே பாரமுடிவேந்தன்
சர்ப்பமென்றறிந்தானே சமர்த்துள்ளவீமனவன்
என்றதுவென்னி இருந்துவிசாரமிட்டான்
அண்ணனைத்தம்பியரை அல்லவரைநான்பிரிந்து
கூடப்பிறந்தவரை கொற்றவரைநான்பிரிந்து
ஒக்கப்பிறந்தவரை உடற்பிறப்பைநான்பிரிந்து
பாரும்விதியின்றோ வந்தேனறியாமல்
ஆனைவிறலேதான் ஆயுர்போகாதேயென்றார்
அறியாமல்வந்ததினு லகப்பட்டேனென்னசெய்வேன்
தாயன்சொற்கேளாமல் வந்துவிட்டேனிவ்வனத்தில்
அண்ணர்குருமாரயர் அழுதுபுலம்புவரே
தம்பியரைத்தேடியிவர் தானேபுலம்புவரே
அறியாமல்வந்தே னண்டவரேயென்னசெய்வேன்
ஆயரேகோவிந்தா ஆதிமூலம்வந்தருளும்
மாயரேகோவிந்தா மகாதேவர்காத்தருளும்
என்றுபுலம்பி யிருந்தானேவீமனவன்
தக்கபுரமுடைய தருமாவரென்னசெய்வார்
அருச்சுனன்கலிபதித்து அண்ணரண்டைவந்தபின்பு
வப்பிறந்ததருமராயர் மதிகலங்கியேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைக்கணிபறிக்க
மதவீமன்போயுமல்லோ மன்றுகெடும்போதாச்சு
போனவிடத்திலே புதுமையொன்றுநானறியேன்
மதவீமன்போனசெய்தி வார்த்தையொன்றுநானறியேன்
அண்ணனைத்தேடியே அழைத்தோடிவாராயோ
ஓடியழைத்துமே ஒருகொடியில்வாராயோ
கண்டுஅழைத்துமே கடுகெனவேவாராயோ
அப்போதுஅருச்சுனரும் ஆனைமுகனேதுசொல்வான்

அப்படியேபோய்வாரேன் அடிபோன்சரணமென்றன்
சரணம்சரணமென்று சாய்த்தான் திருமுடியை
முக்கால்வலம்வந்து மூவிரொருகால்தெண்டனிட்டான்
போகவிடைதாருமென்ன போர்விஜயன்தெண்டனிட்டான்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் விஜயப்பெருமாளும்
ஜல்லடங்கள்தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பில்லைசமுதாடு பிருவெடுத்தலொட்டியாணம்
பட்டுதட்டிகட்டியல்லோ பாலாவுந்தான்சொருகி
அம்புவில்லுந்தானெடுத்து அருச்சுனன்வாரானே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
சில்லென்றகாடும் செடிமலைதான்தாண்டி
காலடியைத்தேடியல்லோ கடுகியேதான்வருவான்
பாரவனங்களிலே பார்த்திபனும்வாரானே
அவ்வனத்திலேகனிகள் அனேகம்பழுத்திருக்கும்
கண்டானே அர்ச்சுனனும் காவலனுமேதுசொல்வான்
காலடியைக்கண்டோமே காவலனைக்காணோமே
எங்கிலுங்காணோமே இயலானவீமனைத்தான்
கூவியழைப்போமாவென்றல்லோகொற்றவனும்
அண்ணரேவீமாவென்று அழைத்தானேவல்விஜயன்
கூவியழைக்கவுமே குரல்கேட்டுவீமனுக்கு
அருச்சுனன்தேடி அழைக்கிறானென்றுசொல்லி
மாலைமுடியான் மதவீமனேதுசொல்வான்
காளையருச்சுனரே கடுங்காளை தூரநில்லும்
அருகேநீவாராதே அருச்சுனா தூரநில்லும்
கிட்டநீவாராதே எட்டநில்லுஅருச்சுனரே
இங்கேநீவாராதே இறந்திடுவாய்தம்பியரே
தூரநில்லும்அருச்சுனரே சேரவந்தால்மோசமடா
ஏதோபெரும்பாம்பு என்னைவிழுங்கிற்றதுகாண்
அரவத்தின்வாயிலேதா னகப்பட்டுக்கொண்டேனப்பா
இனிபிழைப்பேனென்றுநீ எண்ணாதே தம்பியரே
தப்பிப்பிழைப்பேனென்று தம்பிநீயெண்ணாதே
மற்றும்பிழைப்பேனென்று மன்னவரேயெண்ணாதே
ஆயாசமாகாதே அண்ணருடன்சொல்லுமப்பா
மனவருத்தங்கொள்ளாதே மன்னருக்குச்சொல்லுமப்பா
தக்கபுகழுடைய தருமர்தானண்ணரவர்
கபடுதெரியாதார் கள்ளமொன்றுந்தானறியார்
வெளுத்ததைப்பாலென்பார் வெள்ளத்தைநீரென்பார்
பொய்சொல்லான்புண்ணியவான் புகழ்வேந்தரண்ணருக்கு
சிந்தைகலங்காமல் தேறுதலைசொல்லுமப்பா

மனதுகலங்காதே வார்த்தைகளைசொல்லுமப்பா
வனவாசத்திற்கல்லவோ வையகத்தேபோனபின்பு
சேனைபரிவாரம் துரியோதனன்பாளையத்தை
சென்றட்டமாட்டிவைத்து சேனைகளைக்கொன்றழித்து
கர்ணன்சகுனியையுங் கண்டதுண்டமாகவெட்டி
துரியோதனன்முதலாய்ச் சேர்ந்ததம்பிநூற்றுவரை
மற்றும்படைகளெல்லாம் மண்ணோடேசாய்ந்துவெட்டி
அண்ணருக்குப்பட்டங்கட்டி அரசாண்டிருங்களப்பா
தருமருக்குப்பட்டங்கட்டி தரணியையாண்டிருங்கள்
எப்போதும்போல இராச்சியத்தையாண்டிடுங்கள்
பெற்றாள்வயிறுதனில் இட்டேன்பெருநெருப்பை
குந்தியம்மாள்தன்வயிற்றில் கொடியதணல்வைத்தேனே
எழுத்துப்படியல்லாமல் எவரால்விலக்கவசம்
தலையிலெழுத்துதான் தவறாதுதம்பியரே
அன்றெழுதுங்கர்த்தனவன் அழித்தெழுதப்போறதில்லை
விதிவசத்தையாராலும் வெல்லக்கூடாது
இனிப்பிழைப்பேனென்றுநீ எண்ணாதேதம்பியரே
கிட்டநீயாருமே எட்டநில்லுந்தம்பியரே
போய்வாருமென்றானே போர்க்கடங்காவீமனவன்
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனன்துயரமிட்டு
கண்ணீரைச்சோரவிட்டு காளையருச்சுனனார்
மெத்தச்சலித்துமே விசாரம்பெரிதாகி
அண்ணாவேஎன்வீமா அடியேனொருவார்த்தை
பாம்பின்வயிற்றிலேநீர் பார்வேந்தாமாண்டதுவும்
அரவத்தின்வயிற்றிலேநீர் ஆனைமுகாமாண்டதுவும்
அண்ணன்தருமருடன் அடியேனொருவார்த்தை
உரைத்தேனேயானாக்கால் உள்ளமிகப்பதறி
துள்ளிப்பதைத்துயிரை துடிதுடித்துவிட்டிடுவார்
எப்படிக்குநானுரைப்பேன் என்னுடையஅண்ணாவே
போகமனம்வருமோ போர்வேந்தஅண்ணாவே
உன்னைவிட்டுநான்பிரிந்து வுயிருந்தரிப்பேனோ
இப்பெரியபாம்புதனை இட்சணத்தில்கொன்றிடுவேன்
வயிற்றைக்கிழித்திடுவேன் வந்துவிடுமண்ணாவே
என்றெழுந்தானே எழில்சேரருச்சுனனும்
வளைத்துநாணிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அம்புறாத்தூணியிலே அஸ்திரமெடுக்கையிலே
பாரமலைப்பாம்பு பார்த்ததுவருச்சுனனை
காரமலைப்பாம்பு கண்டதருச்சுனனை
அங்கேமலைப்பாம்பு ஆவலுடன்ஓடிவந்து
அருச்சுனனைத்தான்பார்த்து அருகில்வந்துவாய்திறந்து
வாள்விஜயனைப்பார்த்து வாயைத்திறந்துவைத்து

எடுத்துவிழுங்கியது இயலானவருச்சுனரை
பார்த்தனெனுமருச்சுனரைப் பாம்புவிழுங்கியது
எடுத்துவிழுங்கியது எப்பம்விட்டுதானிருக்கும்
அப்போதுவில்வளைத்த அருச்சுனனுமேதுசொல்வான்
அரவத்தின் தன்வயற்றில் அருச்சுனனும்விழுந்தான்
அண்ணாவேயண்ணாவே அடியேனும்வந்துவிட்டேன்
உந்தனுடனாக வந்துவிட்டேனண்ணாவே
நானுமிங்கேவந்துவிட்டேன் நலம்பெரிய அண்ணாவே
அண்ணன் தர்மராயருக்கு ஆர்போயுரைப்பார்கள்
எழுத்துப்படியல்லோ இருவருக்குமொன்றுச்சு
எனசெய்வேனென்செய்வே னென்றுபுலம்புகையில்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
வில்விஜயாவேந்தன் விதித்தவிதிப்படியோ
என்றுஇருவருமா இருந்துபுலம்புகிறார்
அநேகநெடும்பொழுது ஆனபிறகாக
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தம்பிநகுலாநீ தாமழுடியானே
வெற்றிமதயானை வீமனைத்தான்தேடி
போனதோரருச்சுனரை பின்னேவரக்காணேனே
இன்னம்வரக்காணேன் ஏதோதான்றயானறியேன்
ஆரோடேசண்டைகள் ஆமாதுசெய்கிறாரோ
இக்காட்டில்ராட்சதர்கள் எத்தனையோகோடியுண்டு
எவரோடேசண்டைக ளிடுகிறாரென்றறியேன்
காணவுபோனோரு கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போனோரு பார்மன்னரிருவர்களை
தேடியழைத்து சீர்நகுலாவருவீரோ
பார்த்துஅழைத்து பரிநகுலாவருவீரோ
என்றேவுரைத்துமவர் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தான்நகுலனுமே
பட்டுதட்டிஒட்டியாணம் பசும்பொன்னாற்சமுதாடு
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
சல்லடங்கள்போட்டல்லவோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
தன்னாயுதங்களைத் தானெடுத்துச்சீர்நகுலன்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
செங்காய்புலிகரடி சிறும்வனந்தாண்டி
காலடியைப்பார்த்துமல்லோ கடுகியேதேடிவாரான்
அக்கானகந்தனிலே ஆராய்ந்துதேடினபின்
அண்ணாவேயென்வீமா அருச்சுனாவென்றழைத்தான்

உவியழைத்தானே கோனைநகுலனுமே
அழைத்தகுரல்கேட்டது அருச்சுனற்கும்வீமருக்கும்
வெற்றிமதயானை வீமனுமேதுசொல்வான்
அறுசமுருமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
தம்பிநகுலா நீ தாமமுடியானே
அண்ணனையுள்ளனையும் அரவம்விழுங்கினது
பல்லப்பாம்புக்கிரையானோ மன்னவனே தம்பியரே
விட்டநீவாராதே எட்டிநில்லுவென்பிறப்பே
அண்ணருக்குச்சொல்லும் அரவம்விழுங்கினதாய்
அந்திறபுரத்துக்கு அண்ணைவக்கூட்டிப்போய்
திரௌபதியுடனே செய்திகள்சொன்னாலும்
அருச்சுனனைவீமனை அரவம்விழுங்கிற்றென்றால்
மெத்தமகிழ்ந்திடுவார் விஷநாகங்கொண்டவனும்
தருமர்புரமுள்ளதெல்லாம் தருமனையாளுமென்பான்
காட்டுபோனும்போலேநீங்க ளிராச்சியத்தையாண்டிருங்கள்
நாங்கள் - இனிபிழைப்போமென்றா ரண்ணரேதம்பியரே
பேர்க்காணும்நகுலா நீ புத்தியுள்ளகண்மணியே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனுமே
அண்ணாவநீர்கேளும் அரவத்தைகொல்லுகிறேன்
வெட்டியெறிகிறேன் வெளிப்படுங்களண்ணர்களே
உங்களைவிட்டெனக்குப் போகமனம்வருமோ
விட்டுப்பிரியவே வேறுமனம்வருமோ
அண்ணாருடவயிற்றில் அனலைச்சொரிவேனே
திருவன்போய்சொன்னாலே சீவனைவிட்டிடுவார்
பாஞ்சாலிப்பாவே மதிகெடுவந்துவிடும்
போகமனம்வருமோ புண்ணியரேயெங்களுக்கு
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேதுசொல்வான்
நீ - தலையிலெழுதினதை தள்ளிவைக்கப்போமோ
நீ - ஏட்டிலெழுதினதை யெடுத்தறியப்போமோ
வரும்வினைகள்வந்தாலே மடியவேதவேண்டாமோ
ஆயனெழுத்தளவு ஆகையில்மாண்டுவிட்டோம்
இனிநாம்பிழைப்போமென் றென்னாதேதம்பியரே
மற்றும்பிழைப்போமென்று மன்னவரேயெண்ணாதே
போடாநகுலாவென்று புகன்றானருச்சுனனும்
செப்புமொழிகேட்டு சீராய்நகுலனுமே
இப்பாம்பைவெட்டி யெறிகிறேனிப்போது
பாம்புதனைக்கொல்வேனென்று பட்டாவுருவிநின்றான்
பார்த்து அப்பாம்பு பாரமுடிமன்னவனை
கண்திறந்துபார்த்து சகமலைப்பாம்பு
வாயைத்திறந்தவனை வாரிவிழுங்கினது
பாம்பின்வயிற்றிலேதான் பரிநகுலன்போய்விழுந்தான்

அன்றுவேளையென்னையும் அரவம்விழுங்கிறதென்றான்
என்னையுங்கூட எடுத்துவிழுங்கிறதென்றான்
உங்களுடனாக ஒருவனாய்ச்சேர்ந்துவிட்டேன்
மூவருக்குஞாதிமுகசாயமுடைக்கத்தேபெண்ணைச்செய்வோம்
அண்ணனைத்தம்பியரை ஆனவனைக்காவிட்டோம்
என்றுபுலம்பியே இருக்கிறதுவேளையிலே
வில்லாளிபார்த்தனுமே வீமனைத்தேடிச்சொல்வான்
வல்லவர்த்தனையேகாமல் இருவருந்தம்பியரே
வைத்துவிட்டுத்தனியே வல்லினைப்பக்கமாவோரா
என்றுமவர்சொல்லி யிருக்கவிசாரமிட்டார்
இப்படிக்காகவேதா னிருக்கிறதுவேளையிலே
அவ்வேகசாஸ்திசென்றதின்பு அழகானதர்மனிக்கும்
மெத்தவிசாரப்பட்டு வெகுவாய்மனங்கலங்கி
சகாதேவனைப்பார்த்து தருமருரைக்கலுற்றார்
வீமனைவிபரிக்கப்போய் வெகுநேரமாச்சுதப்பா
அழைத்தேதோடிவாருமென்று அருச்சுனனைப்போகவிட்டேன்
அருச்சுனன்தேடப்போய் அனேகநேரம்போதாச்சே
போனதோரருச்சுனனும் பின்புவரக்காணேனே
நகுலனைப்போகவிட்டு நாளுமவர்பாருமென்றேன்
காணாநகுலனுமே கவிழ்வரக்காணேனே
செத்தாரிறந்தாரோ செய்திதெரியவில்லை
மாண்டாரோயாரறிவார் மனவேதனையென்னசெய்வேன்
ஆரோடேசண்டை அமர்துசெய்கிறாரோ
வயிரோடேசண்டை ஏடாகூடமுண்டோடா
அவர்களைப்பார்த்துநீ யழைத்தோடிவாருமையா
ஓடியழைத்துநீ ஒருகொடிவாருமையா
கண்டழைத்துநீ கடுகெனவேவாருமையா
அண்ணருங்கேட்டு அழைத்துவாருமையா
அப்போதுசகாதேவன் ஆனைமுகன்தானெழுந்து
சல்லடக்கவிட்டுமேல்லோ கட்டிவரிந்துகட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுற்றிவிட்டு
கச்சைவரிந்துகட்டி கருப்புக்கைச்சுற்றிவிட்டு
ஆயுதந்தானெடுத்து அடவிப்படக்கவுற்றான்
காவடையைத்தேடியே கடிதிடக்கவுற்றான்
காடுசெடியுங் கணக்கமிதான்தாண்டி
ஆறுகுளமு மதிகளைத்தாண்டி
கல்லென்றகாடுஞ் செடியப்பவளைத்தாண்டி
தேடியேவாராமே திசைதோறுக்காளுக்குநிக
வக்கெல்குருத்தேடுகுனே திரிபவிடமாராய்ந்து
கன்றுவேசண்டசிலை காலைகளாற்று

பா..விட்டக்களில்லே பாரமுஷாரசக்கரே
சேவலேவாதுமையன் திசைக்காற்கோக்கிர் றனிட்டான்
.........பனிமே ஆதிமூலவங்தருளே
அன்றமைகவிமா அருச்சுனமேசேர்க்குல
.........யிவறைபுதாமேவ வொர்றமன்னவிரியனும்
...மைறுக்குதல் வெட்டதுறவகிறும்
ஏன்காணாசுகாமேஷவா எங்குவந்தீர் தம்பியரே
அரசையிழுந்தினை அ ஆனைமுனாமுனையும்
நாரிலிலுத்தம்பியரே சேரவேவாராதே
எட்டலிலுத்தம்பியரே கிட்டவேவாராதே
அரசனிழுந்தினசாய் அண்ணாருக்குச்செதிசெய்தும்
...முடியபாதிக அண்ணன வைக்கூடிப்போய்
அவ்விருபுரேரு அடைவடனே போய்ச்சேரும்
வீமருக்கண்ணரை மிக்ககுலனையும்
அர்ச்சுனவர்றவைரயுஞ் அரசையிழுந்தனாய்
நீயொதிரவடனே செப்பிடுசொன்னாலே
சகுனிஆமவான் சர்ப்பக்கொடிபோனும்
செர்ப்பகிற்றியோன் விஷநாகங்கொண்டவனும்
...புருஷனையன்னே சர்ப்பக்கொடிபோன்கெடியபான்
சீமைதருவானே சிறந்ததுரைத்தனமும்
பூமிதருவானே பொன்னுக்கபோதனும்
அண்ணருமத்தமே அவ்வைமையாளருக்கள்
போங்களுத்தம்பியரே புகழ்பெரியராசனவ
என்று...அந்த இருக்கின்றவேளையிலே
இவர்தனதுநான்கேட்டு இராசகாதகன்
அவனை...கேட்டு ஆமடூசோனதுசொல்வான்
மக்களுறகேட்டு மறுவார்த்தைதோதுசொல்வார்
போயுமிப்புமென்றுசொல்லி புண்ணியரேசொல்வார்கள்
புகழ்பெரியண்ணருக்குப் போய்காலுமைசேகாலச்
சொன்னவேனையபமில்லை சொர்க்கபதிசேர்ந்திடுவார்
இவ்வார்த்தைதானகேட்டு இன்னமிருப்பாரோ
முவணைபதிகொடுத்த முடிசூட்டிடலாமோ
அவர்செத்துப்படுத்திடுவார் சிவலோகஞ்சேர்த்திடுவார்
மண்டுமடித்திடுவார் வைகுந்தஞ்சேர்த்திடுவார்
சென்றுபான்சொன்னுவே சிவன்விடுவாரே
அமுதபுமுப்போலே துள்ளிவிழுவாரே
அம்புசமன்போலே அலறிவிழுவாரே
சாத்துமிடவாரே தர்மவிராசனுடனும்
போகத்துணியாரே பொறுமையுள்ள தர்மவிராசன்
எப்படித்துப்போயுமிப்போன் எந்...ண்ணர்க்கே

என்றுசகாதேவன் ஏக்கிப்புலம்புறான்
அடியற்றமரம்போலே பதறிப்புரண்டழுதான்
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலைபருவதமே செத்துமடிந்தீரோ
உங்களைப்பறிகொடுத்து ஒருத்தனாய்ப்போனேனே
அண்ணர்களேயென்றுசொல்லி அலறிப்புலம்பிறான்
அழுதகுரல்கேட்டு [illegible]
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போமோ
எட்டிலெழுதினதை எடுத்தெறியப்போமோ
ஈசனெழுதியதில் எள்ளளவுந்தப்பாது
சொல்லாதேதம்பிநீ சுருக்காயெழுந்திரென்றார்
பேசாதேதம்பிநீ போய்பிழைப்புண்டாகுமினி
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான் சகாதேவன்
உங்களைப்-பார்த்துநடக்கவேதான் பாக்கியம்வருமோ
கண்டுநடக்கவேதான் காலமினிவருமோ
பொருந்துநடக்கவேதான் போகமினிவருமோ
இப்பாம்பைக்கொன்றிடுவேன் இப்பொழுதுதானே
பாம்புகளைக்கொல்லுகிறேன் பாருமென்றுவாளெடுத்தான்
என்றுஉருவினான் இளையசகாதேவன்
கத்தியுருவையிலே கண்டதுவப்பாம்பு
கண்டதுமலைப்பாம்பு கணத்தூக்காமலே
வாயைத்திறந்து வாரிவிழுங்கினது
எடுத்துவிழுங்கினது இளையசகாதேவனையும்
அப்போசகாதேவன் ஆறுமுகனென்றான்
என்னையும்விழுங்கினது என்றுடையஅண்ணரே
உங்களுடனாக ஒருவனாய்விட்டேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அறமுகனேதுசொல்வார்
என்வார்த்தைதள்ளி இருந்தீரோதம்பியரே
நால்வருக்குமேரெழுத்து நான்முகனெழுதிவைத்தான்
அண்ணர்தர்மராசாவை அலைவருத்தவிட்டோமே
ஆட்டிதுரோபதையை அரிவையரைக்கைவிட்டோம்,
என்றுபுலம்பியேதானிருந்தார்கள்நால்வருமே
அநேகநெடுநேரமானபிறகாக
தக்கபுகழ்பெரிய தருமராவேதுசொல்வார்
அன்னமேசொர்னமே அமிர்தப்பசுங்கிளியே
தேனேவடமயிலே தித்திக்குந்தெள்ளமுதே
கன்னல்மொழியாளே கற்கண்டேசர்க்கரையே
சாந்துகழுத்தியரே சந்தனப்பூமேனியரே
கோர்வைக்கழுத்தியரே குங்குமப்பூமேனியரே
குங்குமமொத்ததொரு கொம்பேரிடையாளே
நெருப்பிற்பிறந்தபெண்ணே நீலவண்ணன்தங்கையரே

பெரியோரைப் பகைத்தாலே கண்மணியே கேளாய்
பொய்யுரைத்தேனோ அறியேன் புகழைமறந்தேனறியேன்
செய்நன்றிமறந்தேனோ சேதிபோன்றதானறியேன்
[illegible] பரமனைத்தானறியேன்
[illegible] காடைத்திரிந்துவிட்டோம்
[illegible] எழுந்தார் ஒருமாய்
காடுதனைப்பார்த்துமே சென்றிடுவாரவர்கள்
தேடியலைவாரவர்கள் பிராணதாகத்தில்
[illegible] அருகாமருக்கனலே
[illegible] தம்பிசகாதேவனெனக்
[illegible] குரல்கேட்டுத்தம்பியற்கு
அண்ணன்குரல்கேட்க அர்ச்சுனனேதுசொல்வான்
[illegible] அன்றோ இடைவின்றுமென்பிறப்பே
[illegible] தாகின்றுமென்பிறப்பே
அருகேவாராதே அன்றோவுதாகித்தும்
பாம்புவிழுங்கினது பாரவனக்கனிலே
இத்தேவனைப்பாம்பு எடுத்துவிழுங்கினது
[illegible] மெழுந்துவைத்தான்
[illegible] அழுதபடி [illegible]
இனிமேல் [illegible] பொறுமதே அன்றோவே
[illegible] தாமசிக்கல்
தண்ணீர்புலம்புகிறார் கொண்டொதுக்கமல்
வெற்றிமுடையான் வீமகதரியே
எழுபிராயத்தில் இடும்பனைக்கொன்றுயே
பத்துபிராயத்தில் பகாசுரனைக்கொன்றுயே
அரக்குமாளிகையில் வரையுந்தீயெடுத்தாய்
[illegible] தீயெடுத்தாய் அரக்கபாண்டவனே
பாம்புக்கிரையாக இருந்தீரோ [illegible]
எழுபதினாயிரம் [illegible] யானைபலமுள்ளோனே பெற்று
[illegible]
[illegible]
சக்கரமிருப்பதாச சாயதா [illegible] பூமியிலே
குன்றுமிருப்புத்தக் கொள்ளொன்றுதானே
[illegible]
இருப்பானதும் [illegible] விழுமோ தானே
தீமுதுமுண்டாயிருந்தை திண்ணத்தையறியேன்
அச்சப்பருவதமே அறிவில்லெனநினைத்தேன்
அச்சாப்பருவதமும் அறியுங்காளக்கனே
கற்பகத்தருவே கல்க்கமில்லெனநினைத்தேன்
கற்பகத்தருவுங் கரையுங்காளக்கனே
[illegible] இப்பாம்புக்கிரையாகும்

நாலார்கடுந்திரளார் நூறுபேர்மன்னர்களை
கொல்லுவேனென்றுசொன்ன கொடியசபதமெல்லாம்
மறந்தாயோ தப்பிநீ மலைப்பாம்புக்கிறையாக
என்னைமறந்தாநீ யிறந்துவிட்டு யமனண்டோ
என்றுபுலம்புகிறார் இபவானை நமருமே
மாரடித்துக்கொண்டாடு பண்மேல்விழுந்தலறி
களைத்துவிழுந்தார் கட்டழகர்மூர்ச்சையானார்
அப்போது அகோரபாம்பும் ஆனந்தமேயதுசெய்தான்
பச்சைக்கமுகுபோலே [illegible] நமருக்குவீசலுற்றான்
காட்டுத்தவழும் [illegible] கொடியைவீசலுற்றான்
வீசினார் தருமருக்கு விடாயகள் மிகத்தெளிய
வீசக்களைதெளிந்து வேந்தர்புலம்புகிறார்
அப்பாடா அப்பாடா ஆரமுதத்தம்பியரே
காளை அருச்சுனா கடுங்கோர்ச்சேவகனே
[illegible] கொடியைமாய்விட்டாய்
[illegible] பூமுடியை
அழகிய [illegible] அருச்சுனா [illegible]ரே
நீபடியுஞ்சாரியமும் நின்னை [illegible] காணறியேன்
இடும்பமான இபவான அருச்சுனரே
என்னைமறந்தீரோ இப்பாம்புக்கிறையாக
உங்களை [illegible] ருங்குவேனோ
கூடமடிந்திடுவேன் கொற்றவரே உங்களுடன்
நானுமடிந்திடுவேன் ராசாக்களை வங்களுடன்
அங்குமுருகு [illegible] ஆசிக்கவைகுந்தயா
[illegible] யுதப்பா
ராவுக்குள்ளே இருந்து [illegible] த்திதடா
[illegible] வெளிக்காயெரியுதடா
[illegible]
உங்களைப்பிரிந்து [illegible] பேனோ
நானுமடிந்திடுவேன் ராசர்களாவுங்களுடன்
[illegible] புகிறாரே
[illegible] புலம்புகிறாரே
[illegible] தர்மலிங்கம்
[illegible] கிடக்கார்
[illegible] விழுங்குமென்றே
[illegible] துக்கங்க
[illegible] குந்து
பக்கத்திலேவந்தாலும் பார்த்துமேபோய்விடுது
தக்கபுகழுடைய தருமர்வருமைப்பார்
சமர்த்துள்ளமலைப்பாம்பு தம்பியனைவிழுங்கிவிட்டாய்
என்னைவிழுங்குமென்று எதிரேநான்வந்தாலும்

[illegible]ங்கபாவம்செய்தேனோ என்னைவிலக்கிவிட்டாய்
[illegible]துப்பாவிதான் இருந்தாலுமாகாது
[illegible]வென்று தருமர் அழுதுபுலப்புகிறார்
[illegible]யென்று கூவிப்புலப்புகிறார்
[illegible] [illegible]பதையுங்கூறுவான்
[illegible] அழுதாளதர்மரே நீர்
[illegible] மனதிலிளையுமிப்போ
[illegible]தெரியுமென்றான்
[illegible]க்கு அந்தமினைவுவந்து
[illegible]கேட்டு அழுகாள தருமலிங்கம்
[illegible]வருந்திப்புலப்புகிறார்
[illegible]பெருமானே வந்தருளவேண்டுமையா
[illegible] ஆதிமூலம்வாருமையா
[illegible]கொண்ட பாரளந்தாரெம்பெருமாள்
[illegible]கொண்ட மாயவரேநின்சரணம்
[illegible]கொண்ட கோபாலாநின்சரணம்
[illegible] கல்லைப்பெண்ணாக்கிவைத்தாய்
[illegible] திரிகலைவென்றீரே
[illegible]வாசமிலே ஐவரையுங்காத்தீரே
[illegible] முகில்வண்ணாகாத்தீரே
[illegible] இராவணனைச்சங்கரித்தீர்
இலங்கையழித்தீரே இராட்சதரைவென்றீரே
[illegible] ஐவரையுங்காத்தீரே
[illegible]க்கு அட்சயத்திலேகொடுத்தீர்
[illegible]பிரான் தானறிவார்
[illegible]துக்குதெய்வமல்லோ
[illegible]போரோமையா
[illegible]போரோமையா
உன்னை[illegible] உந்தனுக்குத்தப்போரோமையா
இந்த[illegible] இந்நாளுமாண்டுவிட்டோம்
[illegible] சூரியவாள் தப்பாது
[illegible]ரம்பங்கொண்டறுக்காது
[illegible] மனத்துயரந்தீருமையா
[illegible]வென்று அழுதுபுலம்புகிறார்
[illegible]பதையாளேதுசொல்வாள்
[illegible] அபயனுக்குதவிசெய்யும்
பஞ்ச[illegible] மனமிழந்தேன் பூமிமிழந்தேன்
[illegible] தலைவிரிக்கநாளாச்சே
[illegible] அறிவிக்கவென்றிருந்தேன்
[illegible]மன்னவிழந்தாளாச்சே
[illegible]

கோரைக்கழுத்தி குலைக்கழுத்தியானேனே
செல்வத்திருமேனிதானுஞ் சிறுமிப்போனேனே
ஐவருக்கு மிட்டபேரே அந்தமிடமாகாச்சே
மக்கிப்பயிர்போலே தாமேபோமன்னவரே
என்றுரைத்திட்டபோ திம்மேக்கொண்டாளே
அபயத்துவிட்டுமெல்ல அழுதாளே திரௌபதையும்
மார்பிலடித்தனளே மறிதலைக்குமாளமுண்டமேல
அப்போ தயாவனரும் ஆதிமூலக்காரனீந்தார்
அழுதகுரல்கேட்டு ஆயன்பெருமாளும்
செல்வதிரவியங்கள் சிதறிக்குப்போருதே
பெட்டியிலேபூஷணம் பெருகுமருவியதே
தோளிற்செபமாலை தெளவிழ்க்குப்போருதே
கையிற்செபமாலை கவிழ்ந்துவீழ்ந்துபோருதே
வருந்திப்புலம்புகின்ற மனத்துயரந்தீர்க்கவென்று
அழுதுபுலம்புகிற அத்துயரந்தீர்க்கவென்று
மழைகள்தன் துயரம் தீர்க்கவென்றெம்பெருமான்
வாரார்பெருமாளும் வட்டமாங்கருடனேறி
துவாரகாபுரியைவிட்டு சுவாமிவருகாரே
காடுஞ்செடியுங் கரியமலைதான்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைபூத்தவனம்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
சிலவெனறகாடுஞ் செடியும்வனந்தாண்டி
மூங்கிலடர்ந்திருக்கும் முள்ளிவனந்தாண்டி
சூரியன்தன்வலத்தைச் சுருக்காகத்தான்தாண்டி
இராமரிவிவனத்தில் இராமரும்வந்துவிட்டார்
மாயன்வருமேனதை வழியிலேதானபார்த்து
தருமருந்திரௌபதையுந் தாமெதிரேவோடிவந்தார்
தருமருந்திரௌபதையுங் காணவிட்டார்மாயவனை
முக்கால்வலம்வந்து முடிவணங்கிக்கொண்டுவிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துக்கொண்டுவிட்டார்
அறுகால்வலம்வந்து அடிவணங்கிக்கொண்டுவிட்டார்
சிங்காசனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருக்க
ஆசனமும்போட்டார்கள் அரிராமர்தாமிருக்க
இட்டசிங்காதனத்தில் எம்பெருமான்வீற்றிருந்தார்
மாயனபெருமாளும் வாய்திறந்தே சொல்லுவார்
அடியாள்திரௌபதையும் ஆதிமூலமேதுசெய்தாள்
அழுதகுரல்கேட்டு அவசரமாய்வந்தவனே
வேண்டியழைத்த வகையதனைச்சொல்லுமென்றார்
வருந்திப்பினியழைத்த வகைதனைச்சொல்லுமென்றார்
வீமார்ச்சுனர்கள் வேந்தர்க்கிளைக்கென்றார்

தம்பிமார்நால்வர்களும் தார்வேந்தரெல்லோரேயென்றார்
அறுதப்பார்புவிதன்னில் ஆரணங்கு துரோபதையும்
பரக்கமுநீக்க வெகுக்கியக்கொடுவினைநூர்
தப்பாமலுடைய தருமராஜர் சொன்னார்
தம்பிமாரைவரையும் சாபமிட்டுமே துறந்தார்
எக்கேபமுறுத்ததை யெனக்கருள்வாய் நீயென்றார்
அரவுறுக்கன்மலைப்பாம்பு தானாய்விழுக வந்திறைஞான்
அப்பேரப்பாறிக்கொடுத்து தப்பேர் துழைந்திலே
அக்கையப்பாறிகொடுத்து மண்மேலிருப்பீரே
நாங்கம்பொறுக்குமோ ஆதிராமாவென்ன பெரியவன்
துராசதுமென்பே ரென்னியவைத்தருங்கொப்பேர
எனவைர்த்தமென்பே னினியாரைத்தருவிருமனமேன
நாவைவிதலுந்தான் ஆண்டவரேயுமைய துதிக்க
இவ்வார்த்தைதான்கேட்டு எம்பெருமானுரைசொன்னார்
எழுந்துவிதிதன்னை எவராலும்வெல்லமுடியும்
அதிலிமொழிதனைத் தன்னிவைப்பேறுமோ
ஆட்டையொழிதனை வித்திரையப்பேராமோ
அன்றெழுதுங்காந்தால் அழித்தெழுதப்போமோ இக்கோ
இட்டபடியொழிய எவ்வளவுங்குறையாது
வருமபினைவந்தாலே மடிபேர்த்துவேண்டாமோ
ஆகிலப்போருக்கு ஆயிரக்குகர்த்தருண்டோ
சொல்லவேயாகுமா இவர்களைத்தாவெழுப்ப
நாமுனேதாரும் இயலானதர்மலிங்கம்
இவ்வார்த்தைதான்கேட்டு மதுசொல்வார் தருமலிங்கம்
தன்றோயாகவே தான் தேர்ச்சுழித்துவிட்டோர்
உடபடுமேயாகாத பெரான் றமிலிவ்வையத்தில்
எக்காறுமதுசொல் என்றிருக்கீதன்மாயவரே
தம்பிமார்தான்பிழைக்க சாமிகேள்பாரும்
உடற்பிறப்புதான்பிழைக்க உம்பர்பிரான்கண்பாரும்
என்பிறப்புதான்பிழைக்க எம்பெருமான்காத்தருளும்
காண்பாரிவ்வேளையெனக் கண்ணையுந்தெண்டனிட்டார்
புண்ணியமாய்ப்போகுதென்று பெருமானைத்தெண்டனிட்டார்
அப்போது துரோபதையாளாரணங்கேயதுசெய்தாள்
முந்தாணியேந்திநின்றாள் முருகுகுழலாள் துரோபதையும்
மங்கிலியப்பிச்சையல்லோ மாயாவெனக்கருளும்
வாடாதமங்கிலியம் வல்லாயெனக்கருளும்
என்றவள்சொல்லி இளங்கொடியாள் துரோபதையும்
மாயனுடபாதத்தை வணங்கிதொழுதுநின்றாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எம்பெருமான்மனமிரங்கி
அந்தமொருகிருஷ்ணன் ஆயிருக்கையிலே
பின்னையெல்லிபோலே கவாபிவடித்துக்கொண்டார்

மலைப்பாம்புதன்செவியில் மாயவரும்போய்நுழைந்தார்
அருச்சனன்விற்காண்டீபனை அறுத்தாரே மாயவரும்
விற்காண்டீபதானதமே வில்பிர்க்குவாய்கிழித்து
தருமன்சகாதேவன் நல்விசயன்வீமனுமே
ராசரிஷியுடனே நன்றாய்வெளிப்பட்டார்கள்
ஐவருமாகவேதான் பாம்பில்வெளியானோர்
மாயன்பெருமாளை வந்துநமஸ்கரித்தார்
தக்கபுகழுடைய தருமருக்குத்தெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தினைமகிழ்ந்து மன்னன்தருமராருமே
மனதுகுளிர்ந்தாரே மகாராசர்தர்மலிங்கம்
துரோபதைதாயியுஞ் சிந்தைதமிகக்குளிர்ந்தாள்
மலர்ந்தசெந்தாமரைப்போல் மனதுமிகக்குளிர்ந்தார்
அலர்ந்தசெந்தாமரைப்போல் அகமிகவேகுளிர்ந்தார்
ராமரிஷியாருக்கு நற்காட்சிதந்தாராம்
மாயன்பெருமாளும் வார்த்தைகளங்கேதுசொல்வார்
இந்தவனந்தாண்டி இனிபவனம்போங்களென்றார்
அப்போது தர்மலிங்கம் ஆயனைப்பார்த்துரைப்பார்
இக்கரிஷியாரு மிங்குமேவந்ததென்ன
அக்கதைபத்தியும் வாய்திறந்துசொல்லுமென்றார்
அப்போது மாயவரும் அருளாளரேதுசொல்வார்
பண்டொருநன்னடியார் வந்தால்வணங்குவர்காண்
என்னடியார்வந்தால் இகழ்ச்சிசெய்பன்னறுது
ஏ- ரகடங்கள்பண்ணி எட்டயடிக்கிறது
இப்படியாகவே இருந்தார்வெகுகாலம்
அப்போதுநானொருநாள் அங்கேவடிவெடுத்தேன்
காசடிவெசித்து தப்பவொட்டிபிட்சையென்றேன்
அரிகரிராமாவென்று ஐயாவேபிட்சையென்றேன்
அப்போதுராமரிஷி ஆலசமாயோடிவந்து
என்னையடித்தாரே இபலானராமரிஷி
அடிபட்டுக்கொண்டொரு ஆக்ருஷமானதிறல்
நான்-பட்ட அடியாலே இட்டேன்பெருஞ்சாபம்
அப்போதுராமரிஷி ஆபரேயென்றறிந்து
வல்லாளன்ராமரிஷி வாய்திறந்தேதுசொல்வான்
என்சாபமெப்போது தொலையுமையாசுவாமியென்றான்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளாரணியம்வந்தாக்கால்
நாலுபேரையெடுத்து நன்றாய்விழுங்கிடுவாய்
அப்போதுன்சாபம் அடைவுடனேதீர்த்திடுவேன்
என்றுமவர்க்குரைத்து என்பதிக்குப்போய்நடந்தேன்
அப்போதிட்டசாபமது இப்போதொலைந்தது
நீங்களிந்தவனத்தைவிட்டு இனிபவனம்போங்களென்று

அப்போதெம்பெருமாள் ஸ்ரீராமர்தானெழுந்தார்
ராமரிஷிநாதருக்கும் கங்கை துரோபதைக்கும்
எம்பெருமாள்மாயவர்க்கும் எல்லோருந்தெண்டனிட்டார்
பஞ்சவர்களைவரையும் பாஞ்சாலிதன்னையுமே
மாயன்பெருமாளும் மனங்குளிரவாழ்த்தியபின்
மத்தவனந்தனிலே இடாதுவந்தாலும்
இடாதுவந்தாலே என்னைநினையுங்கள்
என்றுமவருரைத்து எம்பெருமாள் போகலுற்றார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
காட்டுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையு மதிகவனந்தாண்டி
வேங்கைபடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
வேங்குபெருத்தவனம் கொன்றைநகளாப்பூத்தவனம்
வனமாயவனந்தாண்டி வந்துவிட்டார்மாயவரும்
துளபமணிமார்பன் துவாரகைபோய்ச்சேர்ந்தார்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே
மாயனார்போனபின்பு மகாராஜர்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரு மயிலனையாள் துரோபதையும்
அந்தவனத்தி லனேகநாள்சென்றபின்பு
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மூன்றும்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு

இரண்டாவது இராமரிஷிவனம்-முற்றிற்று

௩-வது, முருக்கமகாரிஷிவனம்.

அவ்வனத்தைவிட்டு அப்பாலேபோகலுற்றார்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைசாமானத்தின்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
கன்னிவைத்தசீமாடு வனமேகுடித்தனமாம்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிவேந்தர்பஞ்சவர்கள்
அந்தவனந்திலேதான் அவ்வோருமிருந்தார்கள்
ஓரடுக்குப்பர்ணசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குப்பர்ணசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஆறடுக்குப்பர்ணசாலை ஆனைமுகருண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
பர்ணசாலைமேலேயல்லோ பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
தென்னமுடிவேந்தன் துரியோதனனே சொல்வான்
சகலர்நிறைந்திருக்குஞ் சர்ப்பக்கொடியோனும்



ஜேசயித்தவன் துரோபதையை எடுத்து தேர்மீது கொண்டுபோகுதல்



சபைந்தலைவனை பாண்டவர்கள் அவமானஞ்செய்தது.

ஆர்காணும்ராசர்களே அழகானமன்னர்களே
முத்துக்கிரீடம் முடிசூடுமன்னர்களே
வச்சிரக்கிரீடந் தரித்ததொருமன்னர்களே
மாணிக்கக்கிரீடந் தரித்ததொருமந்திரிகளே
அத்தண்டபேரையுமே அவைவரையுந்தான்பார்த்து
மாகாகங்கொண்டதொரு மகாராஜனே துரைப்பான்
ஐவர்வனவாசம்போய் அநேகநெடுநாளாச்சே
மூன்றும்வருஷமது மொழியலாம்பஞ்சவர்க்கு
அவர்-எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைதெரியவில்லை
ஆரடாதூதுவரே அருகிருக்குமல்லர்களே
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருமே
வீரப்புலிபோலே வேந்தர்களைவருமே
எந்தவனத்திலிருக்கிறாரென்றறிந்து
ஐவரும்மைப்பாராமதே அறிந்தோடிவாருமென்றான்
காவலர்களும்மையவர் காணுமேவாருமென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்திருந்தார்தூதுவர்கள்
ஒற்றுவொருவனை தேடிஞன்காணகத்தே
காடுஞ்செடியுங் கரியமலைதான்தாண்டி
ஆறுங்குளமுமல்லோ அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
வனமாய்வனந்தாண்டி வாரார்கள்தூதுவர்கள்
சூரியன்தன்வனத்தே சுருக்காய்நடந்துவாரார்
ராமரிஷிவனத்தே நடந்தாகலமாக
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்போய்நுழைந்தார்
அந்தவனத்திலே ஐவரையுங்கண்டார்கள்
பர்ணசாலைமேலைப் பஞ்சவரைக்கண்டார்கள்
அவருமறியாமல் ஆணழகர்திரும்பிவந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதாண்டிவந்தார்
அஸ்தினபுரநாடி ஆணழகர்திரும்பிவந்தார்
தென்னமுடிவேந்தன் துரியோதனன்முன்னேவந்தார்
ஆண்டவரேஐயாவே அடியேன்சரணமென்றார்
தென்னமுடிவேந்தன் துரியோதனனேதுசொல்வான்
போனீரேதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றார்
காணிபோரண்டனவன் கடிகியேயேதுசொல்வான்
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னரைக்கண்டுவந்தோம்
பர்ணசாலைமேலேயல்லோ பஞ்சவரைக்கண்டோமையா
அவ்வார்த்தைகேட்டானே அரவக்கொடியோனும்
௬ சிந்தைகலங்கியல்லோ நிற்கிறேட்டுமெய்மறந்து

மனதுந்திடுக்கிட்டு வாய்திறந்தேதுசொல்வான்
இப்பெரியசபைதனிலே இருக்கின்றராஜர்களே
அப்பலத்தினிலே வீற்றிருக்கும் அரசமுடிமன்னர்களே
இத்தண்டராஜர்களே இயலானமந்திரிகளே
சதுரங்கத்துரைகளே கனத்தமுடிமன்னர்களே
ஆனவையுள்ளதுரைகளே எல்லவருங்கேட்டிருங்கள்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பைங்கிளியாள் துரோபதைமேல்
தொழுதுவழுதி துரோபதைமேலெந்தனுக்கு
ஆசைபெருகுதல் அணைந்து துரோபதைமேல்
நினைக்கநினைக்கவேதான் நெஞ்சமுருகுது
ஆசையாலென்மேலே ஆதரவுபாய்மேலே
சித்ததாபமேலே சிவன்பதைக்குதுகாண்
கிளியாள்மேலாசையல்லோ காமவிடாய்கொள்ளுதுகாண்
வனிதையவள்மேலாசையல்லோ மறக்கவில்லையெந்தனுக்கு
அவளாசைதன்னாலே பவனிவரவழைத்து
வணங்குவாயென்றுசொல்லி வார்த்தைபலபேசினேன்
இணங்குவாயென்று எத்தனையோசொன்னேன்காண்
வணக்கமற்றுப்போனாளே மாதுகருங்குழலாள்
இணக்கமற்றுப்போனாளே ஏலப்பசுங்கிளியாள்
வந்திருந்தசபைதனில் வார்த்தைகள்பேசினேன்காண்
வாருமிருமென்றேன் மடிமேலேயேறுமென்றேன்
பார்போற்றுமாதேயென்று மருவிமுத்தங்காருமென்றேன்
தோளோடேதோளணைத்து சேர்த்துமுத்தந்தாருமென்றேன்
வாருமிந்துரோபதையே வலதுதொடையேறுமென்றேன்
அவ்வளவுமெத்தப்பேச்சுகளும் அகந்தைகளும்பண்ணினாளே
அகந்தைதன்பண்ணுகிறாள் ஆகடியஞ்சொல்லுகிறாள்
ஆனதால்துரோபதையை அடித்துநானோட்டிவிட்டேன்
அரண்மனைக்குள்ளிருக்கு ஆசைமெத்தத்தோணுகுது
மயிலவளைப்பக்கநினைக்கு மனதுமெத்தத்தோணுகுது
அவளையிழுத்துக்கொண்டுவர வல்லவர்க்குஞ்சொல்லுகிறேன்
துரோபதையைக்கொண்டுவர துரைகளுண்டோசொல்லுமென்றான்
பாஞ்சாலன்பெண்ணை பாவைதுரோபதையை
கிளறிபிடித்துக்கொண்டுவர துரைகளுண்டோசொல்லுமென்றான்
கொண்டுவருமவர்க்கு கோடிதனந்தருவேன்
அழைத்துவருமவர்க்கு ஆனைசேனைநான்தருவேன்
சீமையும்பூமியும் தரைத்தனங்கள்நான்கொடுப்பேன்
ஐவர்தேவியவள் ஆரணங்கைக்கொண்டுவந்தால்
துரோபதையைக்கொண்டுவந்து தூங்குமஞ்சமேத்திவைத்தால்
பாவையவளைக்கொண்டுவந்து படுக்கைமஞ்சமேத்திவைத்தால்
தன்னுடையபெருமும் பரிசுகளுமாகினாய்

சீமைகளும்பூமிகளும் செல்வமும்நான் தருவேன்
வல்லாண்மைக்காரருண்டோ மந்திரியெழுந்திருங்கள்
போரதுரைகளுண்டோ புண்ணியசேனைகளே
பிடியுங்கள் தாம்பூலம் பேர்பெரியராசர்களே
என்றுசொல்லத்தான்கேட்டு இயலானராசர்கள்
அனைவோரும்பேசாம லஞ்சிப்பயந்திருந்தார்
சிந்துதேசாதிபதி தீரன்மகன்சயிந்தவனும்
சொல்லுவான்வாய்திறந்து துரைகளிருந்திருக்க
மைத்துனரேநீர்கேளும் மகாராசபூபதியே
தோராவடிவழகி துரோபதைநாயகியை
பத்துநாட்குள்ளாகப் பைங்கிளியைக்கொண்டுவாரேன்
எட்டுநாட்குள்ளாக இளங்கொடியைக்கொண்டுவாரேன்
ஐவரறியாமல் ஆரணங்கைக்கொண்டுவாரேன்
மன்னரறியாமல் மயிலணையைக்கொண்டுவாரேன்
தாம்பூலந்தான்பிடித்தான் தாமமுடியானும்
அந்தமொழிகேட்டு அரவக்கொடியோனும்
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே வேந்தன் துரியோதனனும்
உள்ளங்குளிர்ந்துசிலிர்த் துடம்பெங்கும்பூரித்தான்
அள்ளியேதாம்பூலம் ஆணழகன்கைக்கொடுத்தான்
போட்டிருந்தஆபரணம் பொட்டெனவேதான்கொடுத்தான்
இட்டிருந்தபூஷணங்கள் இஷ்டமுடன்தான்கொடுத்தான்
பொன்னிழைத்தபட்டாடை போர்த்தானேமேலாக
போய்வாருமென்றுசொல்லி புகழ்வேந்தன் தானுரைத்தான்
வெகுமானம்பெற்றுமல்லோ விடைபெற்றுமன்னவனும்
பயணம்பயணம் பயணபேரியடியுமென்றான்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
ஆனையின்மேல்சண்டாவும் அழகுநிசான்பிடியுமென்று
ஆனையின்பேரிகையை அடியுமென்றான் ஓசையுடன்
குதிரையின்மேல்டங்காவும் கொடிமுரசுசீலைகளும்
பாஞ்சசன்யம்சேவகத்தம் பலவாத்தியமுழங்க
சச்சரிகைவீராணம் தாக்கிமுரசறைய
அக்ரோணிசேனை அடங்கலும்பயணமென்றான்
அமரதரும்சமரதரும் அர்த்தரக்தகானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் காஸ்மீரக்கன்னடரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
சட்டைகழற்றாத சாலவருணவரும்
போட்டசட்டைவாங்காத பொந்திலியமன்னவரும்
இட்டசட்டைவாங்காத எழிலானமன்னவரும்
குப்பாயம்வாங்காத குச்சிலியமன்னவரும்
ஆனையுறசுரிமை அசுவற்றவன்னியரும்

வெள்ளைத்துடிக்காரர் வெணவெட்சங்கோடியுண்டு
மகுடமுடிதரித்த மன்னவர்களானவரும்
பட்டணத்தரசர்களும் பார்மகுடவர்த்தனரும்
அத்தனைபெயருடனே ஆனைமுகன்பயணமானான்
சேனடிக்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தாக்கிவைக்குங்கால்களுக்கு தத்திப்பூச்சல்லடமாம்
குத்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
பண்டிமிதிக்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சல்லடங்கள் தான்போட்டு தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பட்டுதட்டிகட்டிபல்லோ பாங்கெடுத்துதான்சொருகி
முத்திறுமாலை முகத்தழகாய்கட்டினனே
இட்டதிருநாமம் எரிகின்றசூரியன்போல்
பொன்னிழைத்தபட்டாடை போர்த்தானேமேலாக
அம்புவில்லுங்கைப்பிடித்து ஆனைமுகன்வெளியானான்
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்வென்றாவேறினான்
ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடையை
பக்கத்தில்வெண்சாமரை பட்டுக்குடைகவிய
இருபக்கம்வெண்சாமரை இரத்தினக்குடைகவிய
முத்துக்கொடைகவிய முடிமன்னர்தான்சூழ
மேளதாளம்முழங்க வேந்தர்களும்பயணமிட்டார்
வாறான்சயித்தவனும் மச்சாதம்குலுங்க
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
ஆயிரத்தெருதாண்டி அங்காடிதான்தாண்டி
கடைப்புங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
ப[illegible]லாத்தெருதாண்டி பார்மன்னன்வாறானே
செந்தூளெழும்புகுது தெருவெல்லாங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வாறான்சயித்தவனும் மச்சாதங்குலுங்க
அப்போசயித்தவனும் ஆலோசனைகள்பண்ணி
துரோபதையைக்கொண்டுவரத் துரிதமுடன்போறோமே
போறவிடந்தனிலே புதுமைகளைகாமரியோம்
வழியிற்சகுனங்கள் ஆகுதுமன்னனுக்கு
தருமதேவதையேநீ சாட்சிசொல்லவேண்டுமென்றார்
அப்போசகுனங்கள் ஆகுதுமன்னனுக்கு
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதுமன்னனுக்கு
வாயசம்யிடமாச்சு வலியனும்வலமாச்சு
தாடைவலமாச்சு கள்ளரெதிர்பட்டார்கள்
சாரைகுறுக்காச்சு சயித்தவன்மேற்பல்லிசொல்லும்
குத்திப்பிடியுமென்று கோட்டானும்ஓலமிடும்

வெட்டுவெட்டுமென்றுசொல்லி வேடரெதிருனூர்கள்
ஓரியலரிடவே ஓர்பார்ப்பானெதிருனுன்
பச்சைமறத்திலே பதுங்கியிருந்தபல்லியது
பட்டமறமேறி பளபளென்றுசொல்லிடுமாம்
எட்டுசொல்லாந்தையது திட்டெனவேமறணமென்று
நெருப்பெடுத்தோர்கிழவி நின்றிழவுதான்கொடுத்தாள்
இந்தச்சகுணமெல்லாம் இறுசனும்கண்டானே
நினையாத்துயறமெல்லாம் நினைத்துமனமிறங்கி
எண்ணுனுமெண்ணி இருந்துவிசனமிட்டான்
இச்சகுணந்தன்னுலே இறந்துவிடப்போறேமோ
வந்தபயணமினி வழிதிரும்பப்போறேமோ
திரும்பிரேமாலுல் சிரிப்பார்கள்றுசாக்கள்
என்னைமதிபார்கள் எளிதஞ்செய்வார்கள்
வந்துதிரும்பிவிட்டால் மதியான்திரியோதிரன்
அன்றெழுதுங்கர்த்தனவன் அழித்தெழுதப்போறுனே
ஈசனெழுத்தலவோ எவ்வளவுங்குலையாது
வரும்வினைகள்வந்தாலே மடியேந்தவேண்டாமோ
உள்ளபடிக்கு ஒருநாளுங்குறையாது
என்றுமனதிலெண்ணி இறுசனும்போய்நடந்தான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகுளந்தாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
புலிகள்காடிகளும் பெருத்தவனந்தாண்டி
சூரியன்தவவனத்தில் சேர்ந்தானேசயிந்தவனும்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்தமொருமற்றொருநாள்
காலையில்பயணமாகி கடுகவழிநடந்தான்
குமரிவழிவனத்தில் நடந்தார்கள்சேனையெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அடுத்தமொருமற்றநாள்
அந்தவனந்தனிலே அத்தண்டகனம்நிறுத்தி
உத்தண்டமன்னவனும் ஒருத்தனுந்தேர்ஏறி
முருக்கமகாரிவழிவனத்தில் முடுகிநடந்தானே
சயிந்தவனும்பர்ணசாலைதேடிவாறுனே
ஆரதம்நிறுத்தி துரோபதையாள்முன்னேவந்தான்
பர்ணசாலைதனிலே பத்தினியாள்வீற்றிருந்தாள்
சக்தியுமாகவேதா னுதமியாள்வீற்றிருந்தாள்
அப்பசயிந்தவனும் பர்னசாலைமுன்னேவந்தான்
அப்போதுபாஞ்சாலி ஆரணங்குதுரோபதையும்
கண்டாள்சயிந்தவனைக் கட்டழகிதுரோபதையும்
அண்ணனைக்கண்டு அலறியேஓடிவந்தாள்
தமயனைக்கண்டாளே தாவெழுந்துசறணமிட்டாள்

பட்டமதனைபோட்டு மணித்தடுக்குதான்போட்டாள்
இருயிருமென்றுசொல்லி இளங்கொடியாள்வருந்திடவே
அப்போசயிந்தவனும் ஆனமுகன்தானெழுந்து
பட்டமதனைமேலே வந்திருந்தான்சயிந்தவனும்
தோருவடிவழகி துரோபதையாளேதுசெய்தாள்
இந்தவனத்தில் ஏதுக்காய்வந்தீர்கள்
வனசாரிவந்தீரோ மகாதவசாய்வந்தீரோ
அன்றேவேவந்த அதிசயத்தைசொல்லுமென்றான்
பாலமொழியோளும் வாய்திறந்தேதுசொலவாள்
ஐவருந்நீயுமாக ஆரணியம்வந்தீர்கள்
வனவாசம்வந்தீரென்று மண்டலத்திற்போச்சு
பார்க்கும்படியாகப் பைங்கிளியேவந்ததேனே
உங்களுடசீமைமையும் உலகத்தைவிட்டுவிட்டு
வனவாசம்வந்ததேதாரு வகையென்ன தங்கையரே
இந்தேசபரதேசம் ஏன்வந்தீர் தங்கையரே
ஒன்றும்பொளியாமல் உரையுங்காண்டங்கையரே
அப்போதுரோபதையா ளாரணக்குதான்கேட்டு
தோருவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அன்றேவேநாங்கள்வந்த அதிசயத்தைநீர்கேளும்
பரதேசம்வந்தோமெங்கள் பரிதாபங்கேளுமென்றார்
தருமபுரத்தைதயல்லோ தரணியையாண்டிருந்தோம்
ஐவரையுங்கொல்லவென்று அரசன்துரியோதனனும்
பஞ்சவரைக்கொல்லவென்று பாவிதுரியோதனனும்
விருக்கருந்துமென்றுசொல்லி வேந்தரைக்கொல்லவென
பொன்குமானுக்கு பூநூற்கலியாணமென்று
பூநூற்கலியாணம் பொருத்தசந்தப்பிப்போகுதென்று
உண்மைவரத்தருமருக்கு ஓலையெழுதிவிட்டான்
மெய்யானும்ஓலையென்று வேந்தர்மனதிலெண்ணி
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அஸ்தினபுரம்நாடி
வாரவழிதனிலே மன்னவரைக்கொல்லவென்று
வசநாபிதண்ணீர்பந்தல் மன்னவர்க்குப்போடுமென்றான்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
நடக்கும்வழிதனிலே நச்சுமுள்ளைநாட்டினான்
வைசிராமுகாச்சி ஒருகோடிநாட்டினான்
கூரம்புகத்திகளுங் குறுக்கேபுதைத்துவைத்தான்
கெடிமுள்ளுகத்திகளுங் குறுக்கேபுதைத்துவைத்தான்
தண்ணீர்குடித்துமே சாவார்களென்றுசொல்லி
பாரவசிதனையே பருவதம்போல்நாட்டிவைத்தான்
கொல்லவினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அதுத்தப்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்.

தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
மாளிகைவாசலிலே வந்தபிறகாக
பொய்க்குழியைவெட்டியல்லோ போதமனிதர்வைத்தான்
பொய்ச்சிங்காதனங்களிட்டு புகழ்வேந்தர்பஞ்சவரைக்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
அங்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
எண்ணெயிட்டுக்கொள்ளுமென வண்ணையிட்டழைத்தானே
மல்லர்களைவிட்டு வகைதெறிந்துபோடுமென்றான்
அதுக்கும்பிழைத்தார்கள் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
பவளத்திருக்குளத்திற் பாரவசிகாட்டினானே
நீரிற்கழுகாட்டி நீர்மூடன்குளியுமென்றான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தார்கள் சுவாமியுடபுண்ணியத்தால்
உண்கிறசோற்றிலேதான் ஒருக்காலெநஞ்சையிட்டான்
குடிக்கிறதண்ணீரில் கொலைக்காரன்நஞ்சையிட்டான்
சோழிவிளையாடி சொக்கட்டான்சூதாடி
ஆடாதசூதாடி அரவக்கொடிவேந்தன்
சீமைதுரைத்தனங்கள் தேசமுழுதும்பரித்தான்
நாடுபரித்தான் நகரெல்லாந்தான்பரித்தான்
ஆணிப்பொன்தேரும் அணிபணிசிங்காதனமும்
அத்தனையுந்தான்கெலித்து ஆஸ்தானந்தான்கெலித்தான்
ஐவரையுங்கெலித்தான் ஆஸ்தானந்தான்கெலித்தான்
ஐவரையுங்காவலாக அரையிலமைத்துவிட்டான்
பாரவிலங்குகொண்டு பருவிலங்குபூட்டினானே
ஏழுலட்சம்பெருவிலங்கு எடுத்துவந்துபூட்டினானே
காற்றுநுழையாத கல்லறைத்தன்னிடங்கில்
தள்ளியேகொண்டுவந்து தடிவீரர்காவல்வைத்தான்
சுத்திநவரங்கம் தாதுவரைக்காவல்வைத்தான்
அறையிலிருக்கவென்னை அம்பலத்தில்தள்ளிவைத்தான்
மூலையிலிருந்தவென்னை முற்றத்தில்தள்ளிவைத்தான்
ஒருவர்மயிர்பிடிக்க ஒன்பதுபேர்துகிலுரிய
இருவர்மயிர்பிடிக்க இருபதுபேர்பின்னிழுக்க
பாவிமயிர்பிடிக்க பத்துபேர்துகிலுரிய
ஆடம்பலத்தே அரசர்சபைநடுவே
போம்பலத்தே பெரியோர்சபைநடுவே
அரசர்சபையிலே ஆடையைத்துகிலுரித்தான்
வாய்வரிசையில்லாமல் வம்பாட்டம்பண்ணினானே
வாடிபோடியென்றேசி வலதுதுடையேறுமென்றான்
துஷ்டத்தனங்கள்பண்ணும் துரியோதிரன்பாவி
ஆகடியம்பேசினானே அம்பலவர்தன்சபையில்

பாரவனவாசம் பரதேசம்மூட்டிவிட்டான்
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரியுமென்றான்
மறைவாயொருவருஷம் வந்திருமென்றுசொன்னான்
பதின்மூன்றாஞ்சென்றபின்பு பட்டணத்தேவந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரேனென்றான்
வந்துவிட்டோமண்ணாவே வனமேகுடித்தனமாய்
கூடைதனிலே குடிவாழ்க்கைகானகத்தில்
மன்னிவைத்தமோடு வனமேகுடியிருப்பாய்
வேடரைப்போலாகவேதான் வில்லியரைப்போலாக
கள்ளக்குறவரைப்போல் காட்டிலிருக்கின்றோம்
எங்கள்குறைதீர எக்காலஞ்சென்றிடுமோ
நாங்கள்சுகமாக ராச்சியத்தை ஆள்வோமோ
பஞ்சவர்கள்சுகமாகப் பாருலகமாள்வோமோ
நீ-அறியாதுபோலாக அண்ணாவேகேட்கவந்தீர்
தெரியாதுபோலாக கேட்கவந்தீரண்ணாவே
ஒன்றுமறியீரோ உத்தமரேஅண்ணாவே
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்மன்னவனும்
பகுதிபணம்வாங்கப் போயிருந்தேன்பைங்கிளியே
சேனைத்திரளுடனே சென்றிருந்தேன்வெகுதூரம்
போனபிறகாக புதுமைபிறந்ததுகாண்
காற்றுவிசேஷமாகக் கேட்கவந்தேன்தங்கையரே
நான்-அறிந்தேனேயாமாகில் அவகேடுவாராது
அன்றிருந்தேனேயாமானால் அம்பலமுமேற்றுவரோ
துகிலுரியப்பார்ப்பேனோ துரோபதைநாயகியே
என்தன்மனம்பொறுத்து இருப்பேனோதங்கையரே
நான்-வந்தபிறகிந்த வயணமறிந்தேன்காண்
மனது தெரியாமல் வந்தேனுனைக்காணச்
சிந்தைமனங்கலங்கித் தேடிவந்தேன்தங்கையரே
உன்வார்த்தைகேட்டபின்பு உள்ளமுருகுதம்மா
நீ-சொன்னபடியாலேயென் சிந்தைகலங்குதம்மா
நீ-பத்தினியாளென்றுசொல்லி சற்றுமறிவானோ
உத்தமியாளென்றுசொல்லி ஊதாரியறிவானோ
காமாட்சியென்கிறதை கழுசிறையனறிவானோ
ஏதுமறியாமல் இகழ்ச்சிகள்பண்ணினனே
ஒன்றுமறியாமல் உதாசினங்கள்பண்ணிவிட்டான்
அவன்-வாழ்வுங்குலைந்துவிடும் மகிழ்ச்சியடங்கிவிடும்
செல்வமடங்கிவிடும் செருக்குக்குலைந்துவிடும்
பொறுத்திருவேயம்மா பொல்லாங்குவாராதில்லை
அவனுக்கேநாசகாலம் ஆரும்பொறுத்திரம்மா
அஞ்சாதேதங்கையரே ஆபாசங்கொள்ளாதே
நீ-ஆபாசப்படுவதெல்லா மவனுக்கேகேடுவரும்

பொருத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்
ஏதுக்குமஞ்சாதே என்பிறப்பேதங்கையரே
பாரப்புலிபோலே பஞ்சவர்களெங்கேயம்மா
வீரப்புலியதுபோல் வீரர்களெங்கேயம்மா
மைத்துனமாரைவர்களும் மகாராஜரெங்கேயம்மா
ஐவரையுங்காணவென்று ஆவலாய்வந்தேனம்மா
அவர்-போனவிடமறியேன் போயிருக்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
பார்க்கமனதாகிப் பைங்கிளியேவந்தேனம்மா
காணமனதாகிக் கானகத்தேவந்தேனம்மா
இந்நேரமாச்சுதே இராசர்களைக்காணமம்மா
தனியாகவுன்னைவிட்டுத் தருமரெங்கேபோனாரோ
ஒண்டியாகவுன்னைவிட்டு வுத்தமர்களெங்கேபோனார்
இன்றுநான்காண்பதற்கு இல்லாமற்போச்சுதம்மா
இன்னமொருவேளை யிவர்களைநான்காணுகிறேன்
அவ-ராணாய்ப்பிறந்தவர்க ளலைந்தாலுங்குற்றமில்லை
நீர்பெண்ணாய்ப்பிறந்தவள்தான் பின்தொடரநீதியுண்டோ
ஐவருடனேநீ அழுதுதிரிவானேன்
அழுதுதிரிவானேன் அல்லற்படுவானேன்
என-மாளிகைவாசலுக்கு வாரீரோதங்கையரே
பாரவனந்திரிந்து பஞ்சவர்கள்வாரமட்டும்
எந்தனதுமாளிகைக்கு வாரீரோதங்கையரே
அரண்மனைக்குத்தனைநா னழைத்துமேபோகவந்தேன்
வெம்பிவிடாய்த்தநீ வெயிலிலேதிரிவானேன்
வாரீரோதங்கையரே மாளிகைக்குகொண்டுபோறேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குமேதுசொல்வாள்
ஐவரையும்விட்டுவிட்டு வரும்வழோஅண்ணாவே
விட்டுப்பிரியவேதான் வேந்தேமனம்வருமோ
அண்ணாவேநீர்கேளும் ஆனலொருவார்த்தை
நான்-வரவேணுமென்று மனதிலுமக்கிருந்தால்
வனம்போனபஞ்சவர்கள் வருகிறபோதாச்சு
ஐவர்வரும்வேளை ஆச்சுது அண்ணாவே
ஐவரைகேட்டுநீ அழைத்துப்போமண்ணாவென்றாள்
பஞ்சவரைக்கேளுமண்ணா பாரவனந்தலைத்துவாரேன்
இவ்வார்த்தைதான்கேட்டு இடும்பன்சயிந்தவனும்
எண்ணதுமெண்ணியல்லோ இருந்துவிசாரமிட்டார்
ஐவர்வந்தால்மோசமல்லோ ஆகாதுகாரியங்கள்
என்றுசயிந்தவனும் எண்ணினான்தன்மனதில்
காவலர்கள்வந்தாலே காரியங்களாகாது
கையிலிருந்தவொரு கத்தியைத்தாழ்வைத்தான்

சபிக்கவெழுந்தானே கட்டழகன்சயிந்தவனும்
ஐவர்வந்தால்சேதிசொல் ஹஸ்தினபுரம்போறேன்
இட்டுவென்னைபோகவென்றே இன்னேரம்பார்த்திருந்தேன்
ஐவரையுங்காணேனம்மா ஆரணங்குதுரோபதை
இன்னமொருவேளைவந்து இட்டுக்கொண்டுபோறேனம்மா
ஐவருக்குச்சொல்லி அழைத்துக்கொண்டுபோறேனம்மா
போகவிடைதாரும் போய்வாரேன்தங்கையரே
என்றுமவன்கேட்க ஏதுசொல்வாள் துரோபதையும்
அப்படியேபோய்வாரும் அண்ணாவேயென்றுசொன்னாள்
விடைபெற்றுசயிந்தவனும் வேந்தனெழுந்திருந்து
பர்ணசாலைவிட்டிறங்கிப் பார்வேந்தன்போகலுற்றான்
கடுசநடந்தானே கட்டழகன்சயிந்தவனும்
அழகுரதமேறி அக்கானகந்தாண்டி
அவன்-பச்சரதமேறி வாரானேமன்னவனும்
போறானேசயிந்தவனும் பொன்னின்ரதமேறி
அனேகதூரம்போனபின்பு ஆரணங்குதுரோபதையாள்
சத்துருவைக்கண்டாளே கட்டழகிபாஞ்சாலி
வைத்துமறந்தானே மன்னவனும்ஆயுதத்தை
இங்கேவைத்துதான்மறந்தானென்றுமவளெழுந்து
சத்திரத்தையெடுத்துக் கடுகிநடந்தாளே
அண்ணாசயிந்தவனே அனேகதூரம்போகாதே
நில்லுங்காணண்ணாவே நெடுந்தூரம்போகாதே
என்று-கூட நடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
அப்போசயிந்தவனும் அழும்புநினைவுகொண்டு
அறியாதுபோலே நடந்தானே ஆணழகன்
கூடநடந்தாளே கொம்பனையாள்துரோபதையும்
சேரநடந்தாளே தேன்மொழியாள்துரோபதையும்
அண்ணாவேஅண்ணாவென்று அக்கணமேகூச்சலிட்டாள்
அழும்பன்சயிந்தவனுக் கப்போதான்கேட்டதுபோல்
திரும்பியவன்பார்த்து தேரைநிறுத்தினானே
அவள்-நெடுந்தூரம்வந்தபின்பு நிறுத்தினான்தன்ரதத்தை
அப்போதுரோபதையும் அருங்கிளியாளேதுசொல்வாள்
அண்ணாவேஎன்சாமி அனேகதூரம்வந்துவிட்டாய்
ஆயுதத்தைமறந்து அனேகதூரம்வந்துவிட்டாய்
இக்காருமென்றாளே ஏலக்கருங்குழலாள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டியேதாருமென்றான் இருந்தபடிசயிந்தவனும்
அப்போதுரோபதையாள் ஆரணங்குஏதுசெய்தாள்
ஒருபடியேறியல்லோ உத்தரியாளிந்தாவென்றாள்
அப்போசயிந்தவனும் ஆணழகனேதுசொல்வான்
எட்டவில்லைதங்கையென்றான் இன்னங்கொடுப்பதற்கு

மற்றுமொருபடியே மயிலனையாளே திருமேனி
அப்போதுயெட்டவில்லை யென்றானை ஆணழகன்
மூன்றாம்படியேறி மொய்குழலாள் நின்றுகொண்டு
ஆயுதமிந்தாவென்றாள் ஆரணங்குதுரோபதையும்
சயிந்தவனுந்தான் பார்த்து சந்தோஷமாகியல்லோ
நாம்வந்தகொருகாரியங்கள் வசபட்டதென்றுசொல்லி
மெத்தெனமகிழ்ந்து மெல்லியரைக்கொண்டுபோக
அவளேறினபோதேயல்லோ ஏகவிட்டான் தன்ரதத்தை
காற்றாய்ப்பறந்ததுகாண் கட்டழகன் தன்ரதமும்
போகுதேயந்தரமாய்ப் பொல்லாதகானகத்தில்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அண்ணசயிந்தவனே அழிநினைவுதேடிவிட்டாய்
ஐவர்களுந்தானறிந்தால் அனர்த்தம்வருமுந்தனுக்கு
பஞ்சவர்களறிந்தாலே பழுதல்லோவுன்குடிக்கு
நிறுத்தும்ரதத்தையென்றாள் நிறுத்தானேபாதகனும்
அப்போதுதுரோபதையாள் ஆரணங்குமனங்கலங்கி
சிந்தைகலங்கியவள் திடுக்கிட்டுமெய்மறந்து
மாதுமனஞ்சலித்து மயிலனையாளேதுசொல்வாள்
அப்போதுதுரோபதையாள் ஆரணங்குமனங்கலங்கி
ஐவர்பஞ்சபாண்டவரே அபயமபயமென்றாள்
ஆகாயவாணியம்மா அல்லவரும்பார்த்திருங்கள்
ஐயன்பிடாரியாரே அந்தரதேவதைகளே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
காளிகளேகூளிகளே கானகத்துப்பட்சிகளே
இந்தவனத்தி லிருக்குமிருகங்களே
பாருங்கள்பாருங்கள் பாவியிவன்செய்கிறதை
எல்லாரும்பாருங்கள் இவனுடையதுற்குணத்தை
என்னைச்சிறைபிடிக்க இழுத்துக்கொண்டுபோறானே
பஞ்சவர்க்குத்தானுரையும் ஆகாயவாணியம்மா
ஐவருக்குந்தானுரையும் ஆகாயவாணியம்மா
நாய்க்குக்கிடைக்குமோ நல்லமுழுதேங்காயும்
செரிப்பேனோஉந்தனுக்கு சேருபந்துநான்தருவேன்
உனக்-காவனென்றுபாராதே அடிப்பனேமுறத்தாலே
என்றுதுரோபதையு மிளங்கொடியாளேதுசெய்தாள்
ஐபாகிவனேயென்று அழுதுபுலம்புகிறாள்
மாயவரேசுவாமியென்று மாதுபுலம்புகிறாள்
அப்போதுபஞ்சவர்கள் அரன்பூசைதான்முடித்து
அரிபூசைசிவபூசை எல்லாமவர்முடித்து
நடந்தார்கள்பஞ்சவர்கள் ஞாயிருதித்தாய்போல்
வாரார்கள்பஞ்சவர்கள் வடக்கெழுந்தசூரியன்போல்
பாஞ்சாலிதன்னருகே பஞ்சவர்கள்வந்தார்கள்

கண்டேதான் துரோபதையை ஆரணங்கைக்காணாமல்
காணாமல்பஞ்சவர்கள் கலங்கினார்நேரம்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாமதகரியே வில்வேந்தாவென்பிறப்பே
செருப்பிற்பிறந்தவனே நீலவர்ணன்தங்கையமே
அக்கினியில்வந்துதித்த அபிஷேகபத்தினியை
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பைங்கிளியைக்காணேனே
அழகில்மிகுந்தபெண்ணை ஆரணங்கைக்காணேனே
ஆரெடுத்துப்போனாரோ அறியேனே தம்பியரே
யாரெடுத்துப்போனாரோ ஏதுமறியேனே
பார்த்துவா தம்பியென்றார் பாரமதகரியை
என்றதுகேட்டு எழுந்தார்கள் தம்பியர்கள்
கட்டிவரிந்துகட்டித் தாமரைப்பூசுங்கிவிட்டு
ஆயுதங்கள் தானெடுத்து அடவடனே போய்நடந்தார்
தெற்குத்திசையிலே தேர்விஜயன்தேடிவாரான்
வடக்குதிசைநோக்கி வாரான்சகாதேவன்
மேற்குதிசையிலேதான் நகுலனுந்தேடிவாரான்
கிழக்குதிசைநோக்கி வீமனுந்தேடிவாரான்
அந்தவனந்தனிலே ஆராய்ந்துவாரபோது
தேரடியைக்கண்டுமல்லோ திரும்பினவீமனவன்
காற்றுவேகமாகவேதான் கடுகிவந்தான்வீமனவன்
எட்டிபோய்த்தான்பிடித்தான் இயலானரதத்தையவன்
வீமனைக்கண்டாளே மெல்லிநல்லாள் துரோபதையும்
அழுதகண்ணைத்தான் துடைத்தாள் ஆபசமுகந்தாள்
கைவிசிறுத்தான் துரோபதைக்கு கடுசயிறக்கிவிட்டான்
கண்விழிபிடிவிழுந்தான் காமாசயிந்தவனும்
பார்த்துபிடிவிழுந்தானே பாவிசயிந்தவனும்
சிந்தைகலங்கியவன் திடுக்கிட்டுமெய்மறந்து
மூர்ச்சையாய்விழுந்தானே மூடமன்னன்சயிந்தவனும்
ஒருகையால்ரதந்தூக்கி உதிரடித்தான்மண்மேலே
அவனுடையதேர்சட்டமும் அழகுகுதிரைகளும்
சட்டஞ்சட்டமாகவேதான் தவிடுபொடியாச்சுதங்கே
தேருமுறிந்ததுகாண் சேர்பித்தான்மண்மேலே
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
ஏதடிபெண்ணேநீ இளங்கொடியே துரோபதையே
வந்தவபுணமென்ன வகையாகச்சொல்லென்றான்
அப்போது துரோபதையாள் ஆரணங்குதான்பார்த்து
அஞ்சிப்பயந்துமவள் அருங்கிளியாளேதுசொல்வாள்
வந்தானேசயிந்தவனும் வாருமிருமென்றுசொல்லி
நான்-வனவாசம்வந்ததொரு வபணங்கள்கேட்டதையிலே

சொன்னேன்வயணமெல்லாம் சூதாகத்தான்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயுதத்தைக்கீழேவைத்தான்
மறந்துவிட்டானென்று மன்னவரோநானெண்ணி
ஆயுதத்தைதானெடுத்து அண்ணாவென்றோடிவந்தேன்
எட்டிக்கொடுமென்றான் ஏறினேன்தேர்மேலே
ஏறினபோதே எகிரவிட்டான் தன்ரதத்தை
இவ்வளவுசேதியென்று இளங்கொடியாள் துரோபதையும்
இவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரவீமனவன்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
காடுசெடிபிடுங்கி கடுகியேயோடிவந்தான்
மூர்ச்சைதெளிந்தானே முடிமன்னன்சயிந்தவனும்
காட்டுக்கொடியாலே கட்டினான்சயிந்தவனை
அப்போமதவீமன் ஆங்காரங்கொண்டவனும்
தன்காலில்கட்டிக்கொண்டு தானடந்தான்வீமனுமே
பர்ணசாலைதன்னருகே பாவிதனைக்கொண்டுவந்தான்
தருமருக்குமுன்னாலே தள்ளிக்கொண்டுவந்தானே
கண்டாரே தர்மராசர் காளைசயிந்தவனை
வாருங்காண்மைத்துனரே வந்தீரெனைத்தேடி
தேடியேவந்ததென்ன சீரானகானகத்தில்
வந்தவயணமெல்லாம் வாய்திறந்துசொல்லுமென்றார்
தர்மராவர்கேட்கையிலே தூர்வேந்தன்வாய்திறந்து
மாடா சிசயிந்தவனும் வார்த்தைகளேதுசொல்வான்
உங்களை-பார்க்கபிரியமுடன் வந்தேனேபஞ்சவரே
காணமனதாகி வந்தேனேகாவலரே
வந்தவிடந்தனிலே உன்னைநான்காணவில்லை
தங்கையரைக்கண்டேனே தங்கள்வயணமெல்லாம்
விபரமாய்ச்சொல்லுமென மெல்லியரைத்தான்கேட்டேன்
அப்போதுரோபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
வனவாசம்வந்தொரு வயணமெல்லாந்தானுரைத்தாள்
துரியோதிரனுரைத்த சேதிதனைதானுரைத்தாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தேன்.
இருமிருமென்றுசொல்லி யேகிவழிநடந்தேன்
வச்சிராயுதத்தை வைத்துமறந்துவிட்டேன்
கையிலெடுத்துக்கொண்டு கடுகவந்தாள்தங்கையரும்
எட்டிக்கொடுமென்றேன் இயலானதங்கையரை
அவ்வளவில்வீமன்வந்து அடித்தானேகெதையாலே
இடுப்பிலேகயிறுகட்டி இழுத்துவந்தான்தங்கள்முன்னே
இவ்வார்த்தைசொல்லி இளைத்தாப்போலேயழுதான்
சாயம்புமன்னவரும் தருமரதுகேட்டு
மெத்தமனமுருகி வேந்தரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து

கனிகள்பறித்துக்கொண்டு கடுகியேவாருமென்றார்
அந்தச்சொல்தான்கேட்டு அனைவருங்கோபமுற்றார்
குருகுலசாதேவ ராசர்க்கள்கோபமுற்று
கண்கள்சிவந்துமவர் காந்தாளக்கோபமுற்று
நெற்றிவிழிசிவக்க நீலவிழிபொறிபறக்க
உச்சிமயிர்துடிக்க உத்தமர்களேதுசொல்வார்
அண்ணாவேநீர்சொன்னதும் அடியேனொருவார்த்தை
துரோபதையைக்கொண்டுபோக வந்ததொருதேர்சியற்கு
பாவையவளைக்கொண்டுபோக வந்ததொருபாதகற்கு
போசனமும்போடுவாரோ புகழ்பெரியஅண்ணாவே
தக்கினைகள்பண்ணி அனுப்புவேனில்லையென்றார்
பொல்லாதபாதகனை போகவிடலாகாது
என்றுமவர்சொல்லி எல்லவருமோர்முகமாய்
ஆனந்தமார்பரெல்லாம் அண்ணருடன்கோபமிட்டார்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
கோபித்தகோபமெல்லாம் குளிர்ந்தமழையாச்சு
வெறுத்ததைப்பாலென்பார் வெள்ளத்தைதண்ணீரென்பார்
கபடறியார்சூதறியார் கள்ளமொன்றுந்தாமறியார்
பொய்சொல்லா தருமரவர் புண்ணியரேது சொல்வார்
கோபித்துக்கொண்டாக்கா லாகாதுகேளுறவரே
ஆக்காரகோபமது ஆருக்குமாகாது
ஆனவமுண்டானால் அழிந்துவிடுங்காலமப்பா
பொறுத்தவர்பூமியாள்வார் பொங்கினவர்காடாள்வார்
மனக்குறைவையாதே வந்தவர்க்குபசியாற்றும்
கனிகள்பறித்துமே கடுகியேவாருமென்றார்
எனக்கெதிர்பேசவேண்டாம் எழுந்துநடவுமென்றார்
அவ்விரத்தைகேட்டு அண்ணரடிவணங்கி
அஞ்சிபயந்திருந்தார் அழகான தம்பியர்கள்
காட்டிற்புறந்தேடி கனிகள்பறித்துவந்து
கொண்டுவந்துவைத்தார்கள் கொப்பன அண்ணரண்டை
வாங்கியே தருமரவர் மைத்துனபுசியுமென்றார்
மனதிற்பயமுடனே வாங்கிப்புசித்தானும்
கனிகள்புசித்துமவன் கைபூசிக்கொண்டானும்
போய்வாரேனென்றுமே பொட்டெனசரணமிட்டான்
தக்கபுகழ்பெரிய தருமரவரேதுசொல்வார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
மைத்துனர்தன் னுடனே மன்னர்களோநீங்களும்போய்
வழிகூட்டியனுப்பிவைத்து வாருங்கள்தம்பியென்றார்
அப்படியேநல்லதென்று அழகான தம்பியர்கள்
வெற்றிமதயானை வீமனவர்தானெழுந்து

அண்ணருடைய படிக்கு அழைத்துவந்தான் சயிந்தவனை
சென்றாரிருவருமாய் சிலதூரமானபின்பு
போர்வீமனேதுசெய்தான் போரவழிகளிலே
ஐந்துகுடுமிவைத்தான் அப்பாலேதலைசிறைத்தான்
மீசைசிரைத்தானே மின்போடிபண்ணினனே
தாடிசிறைத்தானே தலைபோடிபண்ணினனே
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்தழகாபொட்டுமிட்டான்
செம்புள்ளிகரும்புள்ளி சேர்ந்தழகாபொட்டுமிட்டான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழ்பெரிய தருமாவரோதுசொல்வார்
அர்ச்சுனதம்பியரே அண்ணனைக்காணேமே
மைத்துனனைக்கூட்டிப்போய் வழிவிட்டுவாருமென்றேன்
போய்வெகுநேரமாச்சு புருஷவீரன்வீமனைத்தான்
வீமனைத்தேடிநீ விரைவில்வந்துசேருமென்றார்
எங்காணோ வீமனைத்தான் கண்டழைத்துவாருமென்றார்
அப்படிசொல்லுகின்ற அருச்சுனனுமெழுந்தான்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுருக்கிவிட்டு
வில்லெடுத்துக்கைபிடித்து விரைவுடனேபோய்நடந்தான்
அண்ணனைத்தேடிவந்தான் அருச்சுனராசதுரை
வீமனைப்பார்த்தாரே விசயனருச்சுனனும்
கண்டானேசயிந்தவனைக் கோலமாயிருந்து
பார்த்தானேசயிந்தவனைப் பலசாதுப்புரிந்து
வீமனைத்தான்பார்த்து விசயனுமேதுசொல்வான்
ஏனைமரியாதை செய்தீரென்னன்றனே
மட்டையடிபொட்டையிட்டால் பாதகங்கள்வேண்டாமோ
இருவிருமன்றுமென்று பதிட்டந்தானே
காலைத்திசேர்ந்தெழுந்து கழுத்தைகொண்டுதான்பிடித்து
பக்கழுத்தைகொண்டுவந்து பக்கமேபோற்றினனே
இப்படியாகவேதா னிவரிருக்கும்வேளையிலே
தக்கபுகழுடைய தருமராசர்பார்த்து
தருமராசதானையுத்து நேசரைத்தேடுமென்றார்
பாமசந்திரப்போனவர்கள் வந்துசேரவில்லை
கண்டழைத்துவாருமையா காண்டிருயர்சனே
நாமழுடியான் நகுலனதுகேட்டு
அருணருடனையா அழைத்தோடிவாருமென்று
கட்டிவரிந்துகட்டி தாபரைப்பூச்சுருக்கிவிட்டு
ஆயுதங்கைபிடித்து அடவியிலேபோய்புகுந்து
பார்த்தவரைத்தேடிப் பார்குதலைநெருங்கிவந்து
வாசலெல்லாந்தேடிக் கண்டானே அண்ணர்களை
கண்டான்சயிந்தவனைக் கண்காட்டிப்பானதென்றாம்
பார்த்தான்சயிந்தவனைப் பரிகாசித்தானென்று

சந்தோஷப்பட்டானே சபிந்தவனைக்கண்டவுடன்
வீமனுந்தகரியே வில்லிசைந்துமன்னர்களே
முன்னாண்டுகுடுமிவிட்டு மொட்டையடித்தீரே
என்னதுபகாரம் மென்னசெய்வேன்மைத்துனற்கு
தானிலேபடுத்துவந்து சரியானவுண்டைவைத்து.
தன்மேலேவுண்டைவைத்து தனியினைக்குயேற்றிவைத்தான்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
அதேசமயம்பொழுது ஆனபிறகாக
தருமராவெழுந்து தம்பியைத்தானழைத்து
அவர்களும்போனாரே முடிமன்னராசாக்கள்
இனம்வாக்காமோன் என்னமோதானறியேன்
சேடியழைத்துநீ சித்திரத்தில்வாருமென்றார்
தாமுடியானும் சகாதேவன்தான்கேட்டு
அப்படியேதான்போ யழைத்துமேவாரேனென்றான்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆனமுகன்போகலுற்றான்
அப்போ துரோபதையும் ஆனந்ததானெழுந்து
தருமருக்கெதிரில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
எங்கேபோய்வாரேன் ராஜர்களைத்தேடவென்றாள்
தருமனுங்கேட்டு தயாரமேலதுசொல்வார்
அப்படியேபோய்வாரும் ஆரணங்குதுரோபதையே
சித்திரத்தில்வாருமென்று செலவுதந்தார்தருமலிங்கம்
கடந்தெதாடர்ந்தானே கொம்பனையாள்துரோபதையும்
இருவருமாகவே யிசைந்துவழிநடந்தார்
அண்ணர்களைத்தேடிப் பின்னே ஆனமுகன்வந்துவிட்டான்
காவதத்தில்நடந்து கண்டானே அண்ணர்களை
செந்தாமரைக்கண்டு வரிசையெல்லாந்தான்பார்த்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
சந்தோஷப்பட்டு சர்வாங்கம்பூரித்து
பரியானதுவென்ன மைத்துனற்குசெய்வேன்தான்
கருணைதுயின்மேலிருந்தவனைக் கடுகயிறக்கிவிட்டான்
முன்னும்பின்னுமா முகந்தெரியவேற்றினான்
சருக்கமாலைகொண்டுவந்து இலங்கழுத்திலேபோட்டான்
இந்தவரிசையெல்லாம் வித்தைதகன்காட்சியெனை
மன்னவர்கள்தன்னருகே வந்துநின்றாள்பாஞ்சாலி
அண்ணரைக்கண்டாளே ஆனந்தமானாளே
தம்பியைக்கண்டாளே சந்தோஷமானாளே
தாமுடிவீமனே நீர் தலைபோடிபண்ணீரே
வான்விறுபஅர்ச்சுனரே வாகன்ங்கள்தந்தீரே
காணுதுவலகீர் கருப்புள்ளிபோட்டீரே
முன்னுநாற்சகாதேவா முன்னுகவைத்தீரே

எருக்கமாலைகொண்டுவந்து இவர்கழுத்திற்போட்டீரே
என்னமரியாதை அண்ணருக்குநான்செய்வேன்
பாஞ்சாலன்பெற்ற பைங்கிளியுமேதுசொல்வாள்
வானத்தருந்ததியாள் மாசுபடாபதத்தினியாள்
ஐவருக்குந்தேவியாகி அழியாதபத்தினியாள்
கற்புடையபத்தினியைக் காற்பதுமெய்யானால்
இக்கழுதையைத்தொட்டவர்கள் கடுகோடவாமல்
அரவக்கொடியோன்பார்க்க அம்பலைப்போபளவும்
ஏறினகழுதை யிறங்காமலிருக்கவென்று
கட்டவிழ்க்கவந்தவொரு காவலர்களெல்லோரும்
ஓட்டிக்கொண்டுபோகவென்று உத்தமியுஞ்சாபமிட்டாள்
என்-வங்கிஷத்தார்தொட்டால் வனக்கழுதைவிட்டிறங்க
காட்டுக்கழுதையிது கடுகெனவேதானிறங்க
மற்றவர்கள்தொட்டாலே வலித்துக்கொண்டோடவென்று
இப்படிக்குசொல்லியல்லோ யிட்டாள்பெருஞ்சாபம்
சாபங்கொடுத்தாளே தருமர்பெருந்தேவியவள்
இப்படியாகச்சொல்லி இருந்தாளே துரோபதையும்
அடித்துத்துரத்தினன் அந்தசயிந்தவனை
துரியனுக்குச்சொல்லுமென்று துரத்தினர்சயிந்தவனை
வருகுதேஇக்கழுதை வனமாய்வனந்தாண்டி
தான்விட்டுவந்தவொரு தன்னுடையசேனைபண்டை
வந்துகலந்தானே வனக்கழுதைதன்னுடனே
கண்டாரேசேனையர்கள் கண்களிரண்டுங்கொள்ளாமல்
பார்த்தாரேசயிந்தவனைப் பார்வையிரண்டுங்கொள்ளாமல்
இதுஎன்னஅதிசயங்க ளெவர்செய்தகோலமென்ன
கட்டையவிழ்க்கவென்று காவலர்களோடிவந்து
தொட்டுவலிக்கவேதான் ஓட்டிக்கொண்டுபோனார்கள்
ஓட்டிக்கொண்டசேனையுடன் உத்தமனும்போய்நடந்தான்
அக்ரோணிசேனையுடன் ஆனைமுகன்போகலுற்றான்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி யதிகவனந்தான்தாண்டி
அஸ்தினபுரமதனில் அடுத்ததுஅக்கழுதை
கடையுங்கடைத்தெருவிற் கழுதைவருகையிலே
கழுதையைத்தொட்டவர்கள் கடுகிப்பேகூடவாரார்
பட்டணத்திலெல்லவரும் பரிவாகப்பார்த்தார்கள்
என்னவதிசயங்க ளென்பார்களெல்லோரும்
மாடத்தில்மண்டபத்தில் வந்தேறிப்பார்த்தார்கள்
கோபுரத்திலேறிநின்று குலுங்கநகைப்போரும்
சொல்லிச்சிறிப்போரும் சீச்சீச்சீயென்போருங்
இவனுக்குயிக்கழுதை ஏதென்றுசொல்வோரும்

சாமத்துரோகியிவன் சதிசெய்தானென்பாரும்
இப்படியாக இவர்களுஞ்சொல்லையிலே
பற்றுமொருவன்வந்து வாய்திறந்தேதுசொல்வான்
போனானேகானகத்தில் போர்மன்னராசாண்டை
ருவரில்லாவேளையிலே ஆரணங்கைக்கொண்டுசென்றான்
அப்போதுதுரோபதையும் அபயமபயமென்றாள்
அபயக்குரல்கேட்டு ஐவர்களுமோடிவந்தார்
வெற்றிமதயானை வீமனவன்தான்கேட்டு
மயிலனையைக்கொண்டுபோக வந்ததொருபாவிதன்னை
விட்டலாகாதென்றுசொல்லி வீமன்மனதிலெண்ணி
அடையாளம்பண்ணி யனுப்பினான் திரியனண்டை
என்றுமவர்கள்சொல்லி இருக்கின்றவேளையிலே
அந்தத்தெருதாண்டி அப்பாலேபோரானே
மாடத்தேதாண்டி மன்னவர்வீதிவிட்டு
துரியோதனனிருக்கும் சிம்மாதனத்தருகே
வந்தது அக்கழுதை மகாராஜன்முன்னாலே
அம்பலத்தார்கண்டார்கள் ஆச்சரியப்பட்டார்கள்
துரியோதனன்கண்டு சிந்தைமனங்கலங்கி
உள்ளங்கலங்கியல்லோ ஓடிவந்தான்சயிந்தனண்டை
இறங்கென்றுகைகொடுத்தா னிழுத்துக்கொண்டோடுகுது
ஐயையோதெய்வமிந்த அனியாயம்நானறியேன்
தன்னையிழுத்துக்கொண்டு ஓடுகுதயிக்கழுதை
கூவியலறுகின்றான் கொப்பெனவேதிரியோதரன்
அபயமிட்டுச்சுற்றுகிறா னம்பலத்தார்தங்கள்முன்னே
அங்கேயிருந்தவர்கள் அனைவோருந்தான்பார்த்து
கலுக்கென்றுசிரித்தார் கட்டழகரெல்லோரும்
சிரித்ததைத்தான்பார்த்து திரியனுடன்சொல்லுகிறார்
சிரிக்கவுடலெடுத்தோம் சீயென்னப்பேரெடுத்தோம்
என்றுமவர்கள்பேசி யிவனருகிலோடிவந்து
தம்பிமாரெல்லோரும் தமயனுக்குகைகொடுத்தார்
அந்தகண்டபேர்களையும் அக்கழுதைவலித்தோடும்
அப்போதுயெல்லோரும் அலறுகிறார்கூச்சலிட்டு
ஐயையோதெய்வமென்று அல்லவரும்புலம்புகையில்
அங்கிருந்தராசாக்க ளானதொருமந்திரிகளை
பார்த்துமவர்கடுங்கிப் பதுங்குவார்துரைகளெல்லாம்
இப்படியாகவே இவர்படும்பாடதனை
தூயகுலத்துதித்த துரோணாவரோடிவந்து
காசிவனநாடாளும் கர்ணனைக்கண்காட்டி
சர்ப்பக்கொடியோனுடை தம்பிமாரானவரும்
சாயாம்புமேனி சயிந்தவரானவரும்

மற்றுஞ்சிலமன்னரும் மகுடமுடிராசர்களும்
இன்னுஞ்சிலசேனைகளும் எல்லோருமொன்றாக
காட்டுக்கழுதையுடன் கலந்துமவரோடுகிறார்
நான்-கண்டுசெயமாயிருக்க காரியங்களல்லவென்றார்
பார்த்திருப்போமென்றால் பரிதாபந்தோணுதையா
இதுக்கொருயோசனைகள் இயம்புங்காண்மன்னவரே
அப்போதுகர்னருமே ஆணமுகர்யேதுசொல்வார்
துரோபதையைச்சொன்னதொரு தோஷமிதுகாணும்
பத்தினியைப்பேசினதோர் பாவமிதுகாணும்
என்றுசொல்விகர்ணருமே யாவரையுந்தான்பார்த்து
அப்போதுகர்ணருமே அனைவரையுந்தான்பார்த்து
குதுங்கநகைத்துக் கொப்பெனவேவோடிவந்து
பாரளந்தமாயன் திருப் பாதமனதிலெண்ணி
பெருமாள்துணையென்று பிடித்தானே தன்னகையில்
கடுகியிழுத்தானே கர்ணமகாராசன்
கழுதையைத்தட்டி கடிசயிறக்குமென்றார்
அத்தனைடபேர்களுமே அல்லவருமகைனைவிட்டார்
அப்போதுசயிந்தவனும் அங்கேயிறங்கிவிட்டான்
திரியோதிரன்முதலாய்ச் சேனையெல்லாம்வந்தார்கள்
அவரவர்களாசனத்தி லனைவோருமிருந்தார்
அம்பலவாசலிலே அழைத்துவந்தார்சயிந்தவனை
தென்னமுடிவேந்தன திரியோதிராசன்
மைத்துனரைத்தான்பார்த்து மகாராசனேதுசொல்வான்
கோதைதுரோபதையைக் கொண்டுவரப்போனீரே
மட்டையடிமொட்டையிட்டு வாகனத்தின்மேலேற்றி
அனுப்பினவரார்காணும் ஆணமுகாசொல்லுமென்றான்
அவன்-பேசப்பலனிழந்து பின்வேந்தனேதுசொல்வான்
போனதும்வந்ததுவும் புதுமைநடந்ததும்
அங்கேநடந்ததொரு ஆச்சரியந்தானுரைத்தான்
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
அவ்வார்த்தைதான்கேட்டு அறவேமனஞ்சலித்தான்
வரிசிந்துராஜனுமே மைத்துனற்கேதுசொல்வான்
வெற்றிமதயானை வீமனைக்கொல்லவென்று
பரமனைநோக்கியே பாரதவசுபண்ணி
வீமனைக்கொல்லவென்று வேணவரம்பெற்றுவாரேன்
என்றுநடந்தானே இயலாணசயிந்தவனும்
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையுமங்கே அதிகவனந்தாண்டி
மாமுனிகள்தபசுபண்ணும் மாயமலைமேலே
தானுந்தபசுபண்ணுன் தாமமுடிமன்னனும்

ஆதிசிவனைப்பூசை அடிபணிந்து நாளிருந்து
அருந்தபசுபண்ணினனே அரசுசயிந்தவனும்
அப்போபரமசிவன் அவனுக்கெதிரில்வந்து
என்னவரம்வேணுமென்று எந்தனைக்கேட்டருளென்றார்
அப்போசயிந்தவனும் அதிகவரம்கேட்டான்
கேட்டவரங்களெல்லாம் கிருபையாய்த்தான்கொடுத்தார்
ஆதிசிவன்கையிலே அதிகவரம்பெறுபெற்றான்
எமனைக்கொல்லிவென்று வெனவரங்கள்பெற்றான்
சேனைகொன்றமாலையும் கேட்டுமேபெறுபெற்றான்
வரங்களதுபெறுபெற்று வாராசேனசயிந்தவனும்
அஸ்தினபுரத்தே ஆனைமுகன்போகவென்று
மகாதபசுபண்ணிதாரு மாமலையைவிட்டிறங்கி
நடந்தானே சயிந்தவனும் காடுதிக்குத்தானதிர
கரடிசெடிதான்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகுளங்குன்றுமே அதிகவனந்தாண்டி
வேம்புசையடர்ந்தவனம் வெள்ளளாய்க்காய்த்தவனம்
தெங்குபெருத்தவனம் கொன்றைதளாய்ப்பூத்தவனம்
நாங்குசெடிர்த்தவனம் முல்லைமல்லிபூத்தவனம்
கரும்புலிகேடி இருக்கும்வனந்தாண்டி
மலைப்பாம்புகூடியிருக்கும் பல்லவனந்தாண்டி
இருளர்குடியிருக்கும் இருண்டவனந்தாண்டி
வன்னார்குடியிருக்கும் கனத்தவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி விளாத்தோப்புந்தான்தாண்டி
வடமாய்வனந்தாண்டி வந்துவிட்டானத்திபுரம்
அத்திபுரத்தே ஆனைமுகன்போய்ச்சேர்ந்தான்
பெண்ணையுடையவன் துரியோதனனிருக்கும்
சபையிற்செம்பாதனத்தில் சயிந்தவனும்வந்தானே
மாளிகை [illegible] தான்பார்த்து
அரவக்கொடியோனும் அவனைத்தான்பார்த்து
வரவேணுமென்றுசொல்லி கைகொடுத்துத்தான்தழுவி
ஆடம்பல்லக்கிலே அருகிருக்கச்செய்தாரே
சயிந்தவனார்வீற்றிருக்கத் தங்காசனம்போடும்
பவள்பணிசெய்திருந்தார் எல்லவருந்தான்கேட்டு
சொல்லப்பெற்றேனென்றுமவர் கருக்காலெழுந்திருந்து
கூறப்பெற்றேனென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து
சேவிக்கவெடுத்துவந்தார் சிம்மாதனமுமிட்டார்
நம்பெரியபேரன் அத்தனைத்தான்பார்த்து
வந்ததேனோசொல்லும் என்மைத்துனரே
இட்டமுடனந்தச் சயிந்தவன்பேசென்றான்
அப்போதுசயிந்தவன் அரசனுக்குச்சொல்வான்

காலகங்கள்போனீரோ கர்த்தாவைகாணீரும்
கர்த்தாவைகண்டீரோ கனத்தவரம்பெற்றீரோ
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்பெற்றீரோ
பஞ்சவரைக்கொல்லுதற்கு பலத்தவரம்பெற்றீரோ
எந்தன்மனங்குளிர எனக்கறியச்சொல்லுமென்றான்
அப்போசயிந்தவனும் ஆனமுகனேதுசொல்வான்
போனதுவும்வந்ததுவும் புனிதரைக்கண்டதுவும்
ஐவரையுங்கொல்லவென்று ஆனவரம்பெற்றதுவும்
நாலிரண்டுவார்த்தைகளாய் நடத்தினான்சயிந்தவனும்
கேட்டுமனமகிழ்ந்தான் கீர்த்திபெற்றீரென்றுசொல்லி
வெற்றிபெற்றீரென்று வேந்தன்மகிழ்ந்திருந்தான்
இப்படியாக இவரிருக்குமவேளையிலே
மூன்றுவதுவருஷம் முடிந்ததுமன்னவர்க்கு
மூன்றுவது முருக்கமகாரிஷிவனம்-முற்றிற்று.

௪-வது, காளமகாரிஷிவனம்.

நான்காம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
முருக்கமகாரிஷிவனத்தை முடிமன்னர்தான்தாண்டி
குடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோடிவைத்தசீமாடு குடைதலைமேலே
மன்னிவைத்தசீமாடு வனவாசங்குடித்தனமாய்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுங்கடந்தாண்டி அப்பாலேபோகலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடிகிலவந்தார்பஞ்சவர்கள்
அவ்வனத்திற்போய்ச்சேர்ந்தார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
பச்சைத்தழையொடித்து பர்னசாலையுண்டுபண்ணார்
ஈரடுக்குபர்னசாலை உண்டுபண்ணார்பஞ்சவர்கள்
மூன்றடுக்குபர்னசாலை முடிமன்னருண்டுபண்ணார்
ஐந்தடுக்குபர்னசாலை ஆனமுகருண்டுபண்ணார்
பர்னசாலைமேலேயல்லோ பஞ்சவர்குடித்தனமாய்
மாதுதுரோபதையும் மன்னர்பஞ்சபாண்டவரும்
காயுங்கனியுந்தின்று காலங்கழிக்கிறார்கள்
அவ்வனத்திற்பஞ்சவர்கள் அவரிருக்கும்வேளையிலே
மாறுகங்கொண்டதொரு மகாராசனேதுசெய்தான்
அரவக்கொடியோனும் அங்கவனேதுசொல்வான்
சபைகள்நிறைந்திருக்குஞ் சர்ப்பக்கொடியோனும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ வார்த்தைதெரியவில்லை



காமகாரிஷியினால் அனுப்பின வேதாளம் ஐவரைத் தேடிவர
ஐவர் இரந்திரத்தினால் வேதாளம் ரிஷியைக்கொன்றது.

காந்தவனத்தி லிருக்கிறாரென் றறியேன்
காளிபெரண்டாநீ கடுகவேதானேகி
ஐவரையுந்தேடி அவரிருக்குந்தாவரித்து
தேடியேநீபார்த்துத் திரும்பிவந்துசேருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருகிருந்ததூதுவர்கள்
சொல்லப்பெற்றோமென்று சுருக்காயெழுந்தார்கள்
கூறப்பெற்றோமென்று கும்பிட்டவரெழுந்து
அஸ்தினாபுரிதாண்டி ஆரணியந்தேடிவந்தார்
காடுமலைகளிலுங் கடுகவேதேடிவாரார்
தினகரன்வனந்தனிலே தேடினார்பஞ்சவரை
அங்கிலுங்காணாமல் அப்பாலேதேடிவாரார்
ராமரிஷிவனத்தில் நலமாகத்தேடிவாரார்
அங்கிலுங்காணாமல் அப்பாலேதேடிவாரார்
முருக்கமகாரிஷிவனத்தே முடிமன்னர்தேடிவாரார்
அங்கெங்குங்காணவில்லை ஐவர்பஞ்சபாண்டவரை
காளமகாரிஷிவனத்தே கடுகியேவந்தார்கள்
காளமகாரிஷிவனத்திற் காவலர்கள்பஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டார்கள்
இருக்கிறாரென்றறிந்து வெகுவழிநடந்தார்
காடுஞ்செடிதாண்டி கடுகியேவாரார்கள்
ஆறுஞ்சுனைதாண்டி அவசரமாயோடிவந்தார்
மகாராஜன்வீற்றிருக்கும் மண்டபத்தருகில்வந்தார்
துரியோதனனிருக்கும் சிம்மாதனமுன்னேவந்து
அரசனெதிரில்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டுதுரியோதனன் கட்டழகனேதுசொல்வான்
பார்த்துதுரியோதனன் பாரமன்னனேதுசொல்வான்
போனீரோதூதுவரே புதுமையென்னசொல்லுமென்றான்
ஐவரைத்தேடியே ஆரணியம்போனோமே
காளமகாரிஷிவனத்திற் கண்டோமேபஞ்சவரை
பர்ணசாலைமேலாகப் பஞ்சவரைக்கண்டோமே
என்றுசொல்லத்தான்கேட்டு எரிநாகங்கொண்டவனும்
கண்கள்சிவந்தானே காந்தளப்பட்டவனும்
மாமாவைத்தானழைத்து மாதாவனேதுசொல்வான்
இன்னமுமபஞ்சவர்க ளிருக்கிறார்கானகத்தில்
மானமற்பஞ்சவர்கள் வனமேதிரிகிறார்கள்
தப்பிப்பிழைத்தாலே தாரணியையாள்வாரே
பங்குள்ளபிரகாரம் பாதிகொடுஆள்வாரே
எந்தவிதமானாலும் இறக்கவகைபார்க்கவேணும்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆலோசனைசொல்லுமென்றான்
மாமாவேயென்தனுக்கு வார்த்தையுரையுமென்றான்
[illegible]

சாமத்துரோகியவன் சகுனியெடுத்துரைப்பான்
சொல்லுக்குப்பல்லி குடிக்கிச்சகுனியல்லோ
அரியனைத்தான்கெடுக்கச் சொல்லுகிறான்யோசனைகள்
அப்பாமருமகனே ஐவரையுங்கொல்லுமென்றான்
கொடுங்குணகாளகரிஷியை நோக்கித்தவம்பண்ணினாலே
அருந்தபசுபண்ணினாலே அந்தமுனிவந்திடுவார்
ஐவரைக்கொல்லவென்று ஆவலாய்மனதுகேட்டால்
நன்றென்றுசொன்னாலே நாடெல்லாமுன்னுடைப்பா
தபசில்பெரியவர்காண் சாபிக்கொடுப்பவர்காண்
வரத்திற்பெரியவர்காண் மகாதேவர்கொடுப்பவர்
அவராலேயாகுமப்பா ஐவரைக்கொல்வதற்கு
என்றேசொன்னமட்டும் உத்தமரேபாருமென்றான்
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தான் துரியோதனன்
சபையோரையுடனெழுந்து ஒருவனுமாய்ப்போனானே
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனையுமல்லோ அரியவனந்தாண்டி
ஆலயந்தன்னிலே அரவக்கொடியோனும்
காத்திருந்துமவன் மகாதபசுபண்ணுகிறான்
காளமகாமுனியைக் கருதிமனதிலெண்ணி
அருந்தபசுபண்ணினானே அரவக்கொடியோனும்
வேணதபசுபண்ணுறான் வேந்தரைக்கொல்லவென்று
பாவிதபசுபண்ணுறான் பஞ்சவரைக்கொல்லவென்று
இப்படியாய்த்தவமிருந்தான் எரிதாகம்கொண்டவனும்
அப்போமகாமுனியும் அதிர்ந்தார்தவநிலையை
சடையுஞ்சடைமுடியும் தம்பிரான்போலாக
இருண்டபசடையழகும் ஈஸ்வரனைப்போலாக
தாவிப்பெருவடியும் கையிற்கமண்டலமும்
துரியோதனனருகே சோலைதனையிலே
கண்டு துரியோதனனும் கடுகவெழுந்திருந்து
பார்த்து துரியோதனனும் பதறிவெழுந்திருந்து
முத்துமுடிவேந்தன் முனிக்கெதிரேஓடிவந்து
சுத்திவலம்வந்து தொழுதிறைஞ்சிதெண்டனிட்டான்
முக்காலவலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்காலவலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன்கோமானும்
வாய்பொத்திநின்றானே மன்னன்துரியோதனன்
காளமகாமுனியுங் கண்டுமனங்குளிர்ந்தார்
சிந்தைமனங்குளிர்ந்து தேகங்கள்பூரித்து
சந்தோஷமானாரே சாபிபெரியவரும்
மெத்தமகிழ்ந்தவரும் வேந்தனைப்பார்த்துரைப்பார்
துர்க்காளும்ராசாவே அரசர்பெருங்கோமானே

அப்போசயிந்தவனும் ஆனைமுகமன்னன்
இட்டதொருசிம்மாதனம் ஏறியவன்வீற்றிருந்தான்
ஏதுக்காய்வந்தாய்நீ இங்குதவம்பண்ணுகிறாய்
என்னநினைத்தாய்நீ ஏதுகருமமென்றார்
மனதில்நினைத்ததெல்லாம் மன்னவனே சொல்லுமென்றார்
வேண்டும்வரங்கொடுப்பேன் வேந்தனே சொல்லுமென்றார்
அப்போதிரியோதிரன் ஆனைமுகன்தான்பார்த்து
சர்ப்பக்கொடியோனும் அங்கேமனமகிழ்ந்து
ஆண்டவரேநீர்கேளும் அடியேனோர்விண்ணப்பம்
என்சாமியே ஞானமையா எந்தனுடவிண்ணப்பம்
அஸ்தினாபுரமாண்ட அரவக்கொடியோனன்
திக்கரசையாண்டதொரு துரியோதிரனென்பார்
எந்தன்மனக்குறையால் வந்தேனுமைக்காண
கண்டேன்களிகூர்ந்தேன் கவலையைச்சொல்லுகிறேன்
பண்டும்பகையாளி பாதிநாள்தாயாதி
என்னும்பகையாளியிருக்கிறார்சத்ராதி
எந்தன்பகையாவர் இயலானபஞ்சவர்கள்
இப்போதுதங்கள்வனத் திருக்கிறார்பஞ்சவர்கள்
ஐவரையுங்கொல்ல அதிகமனமெந்தனுக்கு
ஐவரையுங்கொன்றால் ஆளுவேன்ராச்சியத்தை
அவர்களைக்கொல்லுதற்கு அடியேனாலாகாது
உம்மாலேயாகுமென்று உம்மைநினைத்தழைத்தேன்
ஆகையாலெந்தனுக்கு அதிகவரந்தாருமென்றான்
நீ-வந்தபொழுதெந்தன் மனங்குளிர்ந்ததாண்டவரே
இந்தவரமெனக்கு ஈந்திவீர்கர்த்தாவே
கொல்லவரமெனக்குக் கொடுத்தருளவேணுமையா
என்று-பாதம்பணிந்தானே பாம்புக்கொடியோனும்
அந்தமகாமுனியும் அவர்மனதுதான்குளிர்ந்து
காளமகாமுனியும் கடுகமனமகிழ்ந்து.
சந்தோஷப்பட்டாரே சரீரங்கள்பூரித்தார்
மெத்தமகிழ்ந்தாரே வேந்தரந்தமாமுனியும்
மனதுக்கிசைந்தபடி மன்னவனே செய்கிறேனன்
சித்தத்துக்கேற்றபடி செய்வேநீ அஞ்சாதே
ஐவரையுங்கொன்றுநான் அதம்பண்ணிப்போடுகிறேன்
பஞ்சவரைக்கொன்று பாருலகையாளவைப்பேன்
ஐவர்தனக்காக ஆதிசிவன்வந்தாலும்
பஞ்சவரைக்காக்கப் பாரளந்தார்வந்தாலும்
நான்குமுகம்படைத்த நற்பிரமன்வந்தாலும்
வெற்றிமயிலேறும் வேலவர்தான்வந்தாலும்
தேவர்க்கதிபதியாம் தேவேந்திரன்வந்தாலும்
இவர்களைக்காப்போமென்று எமனவன்வந்தாலும்

சந்ததித்தாலும் இறக்கவகைபண்ணுகிறேன்
என்றுவரங்கொடுத்தார் எரிநாகங்கொண்டவர்க்கு
அப்போதுரியோதிரன் ஆனந்தமானானே
சந்தோஷப்பட்டானே சர்ப்பக்கொடியோனும்
மெத்தமகிழ்ந்தானே விஷநாகங்கொண்டவனும்
மனதுமிகப்பூரித்து மாநாகன்போய்நடந்தான்
காளமகாமுனியும் கடுகவனத்தில்வந்தார்

காளமகாமுனி ஐவரைக்கொல்லநினைத்தது.

அப்போதுமாமுனியும் ஆலோசனைகள்பண்ணி
வேதாளந்தான்பிறக்க வேள்விதனைவளர்த்தானே
அக்கினிக்குண்டம்வெட்டி அனலைவளர்த்தானே
பாதாளக்குழியைவெட்டி பகவானைமூட்டினானே
மந்திரத்தாலேயல்லோ வாவென்றார்வேதாளத்தை
ஆயன்பெருமானும் அவ்வயணந்தானறிந்தார்
ஏழுலகமாளுகின்ற எம்பெருமானென்னசொல்வார்
பாவிகொடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
பகரும்பகையாளி பாதிநாள்தாயாதி
என்னும்பகையாளி எற்பட்டான்சத்ராதி
சந்ததிக்கிளையும் இறக்கவகைபண்ணுகிறான்
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்வரலாச்சே
செல்வத்திரவியங்கள் சீரழிந்துபோகுதே
தோளிற்பூமாலை தொண்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகுதே
தம்பிஐவர்பஞ்சவர்கள் ராஜாக்கள்மாளுகின்றார்
நம்பினபேர்களைத்தான் நாமல்லோகார்க்கவேணும்
கைமோசம்வந்ததென்று கரியமால்தானினைந்து

எம்பெருமாள் பஞ்சவரைக்காப்பதற்கு எமபுரம்போனது.

அப்போதுவெம்பெருமா னாயரெழுந்திருந்து
வட்டமாங்கருடனேறி வருகிறார்மாயவரும்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சுனைதாண்டி அதிகவனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
இளமானைப்போலே மிசைந்துவருங்காவேரி
வடமலைரங்கர் வனங்களெல்லாந்தாண்டி
எமபுரந்தேடியே எம்பெருமானோடிவந்தார்

எமனுக்கெதிராக எம்பெருமாள் வந்துநின்றார்
எமதர்மராஜனவன் எம்பெருமாளைக்கண்டு
கரியமாலைப்பார்த்து கடுகவெழுந்திருந்து
மாயன்பெருமாளை வந்துநமஸ்கரித்தான்
எமபடாளோடி எடுத்துவந்தார்சிம்மாதனம்
இட்டதோராசனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
அப்போதுயெம்பெருமாள் அரிராமர்தானெழுந்து
சிம்மாதனமேறி ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
வேர்க்கவிருவிருக்க வேந்தரவர்வீற்றிருந்தார்
அப்போதுஎமனவன் ஆயரைப்பார்த்துரைப்பான்
எங்குவந்தீர்மாயவரே எனக்கரியச்சொல்லுமென்றார்
எதுவகையாக எம்பெருமாளிங்குவந்தீர்
வந்தகருமத்தை வாய்திறந்துசொல்லுமென்றான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
உன்னுடையமைந்தனல்லோ உரிமையுள்ளதன்மருமே
ஐவர்பஞ்சபாண்டவர் அநீதமாய்மாளுகிறார்
இறந்துவிடநாளாச்சு இயலானபஞ்சவர்கள்
மாண்டுவிடநாளாச்சு மகாராஜமன்னவர்கள்
செத்துவிடநாளாச்சு சிரானபஞ்சவர்கள்
பாவிகெடுத்தானே படுபாவிதிரியோதிரன்
நொடிக்குள்காளமாமுனியை நோக்கித்தபசுபண்ண
அந்தமகாமுனி வந்துயெதிரில்நின்றார்
கண்டுதிரியோதிரன் கடுகசரணம்பண்ணி
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகன்நின்றானே
அப்போதுமாமுனியும் அதிகமனமகிழ்ந்து
காளமகாமுனியும் கண்டுமனமகிழ்ந்து
என்னவரம்வேண்டும் எந்தனைக்கேளுமென்றார்
அப்போதிரியோதிரன் ஆணழகனேதுசொல்வான்
ஐவரையுங்கொல்லுதற்கு ஆனவரம்வேண்டுமென்றான்
பஞ்சவரைக்கொல்லுதற்குப் பலத்தவரம்வேண்டுமென்றான்
உம்முடையகையாலே உத்தமரைக்கொல்லுமென்றான்
அந்தமுனிகேட்டு அப்படியேநல்லதென்று
வாக்குவரங்கொடுத்து வந்தானேயந்தமுனி
ஆழக்குழிவெட்டி அக்கினியைமூட்டிவைத்தான்
வேதாளமுண்டுபண்ணி மிக்கவனல்மூட்டிவைத்தான்
அக்கினிகுழியிலே ஆங்காரவேதாளம்
பிறக்கும்படியாகப் பெருத்தவேள்விபண்ணுகிறான்
அதுபிறந்தாமானால் ஐவர்பிழையார்கள்
தோளிற்பூமாலை தொட்டழிந்துபோகுதே
கையிற்செபமாலை கனங்குலைந்துபோகுதே
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகுதே

காப்பின பஞ்சவர்கள் ராசாக்கள்மாளுகிறார்
ஆனைபோதும்மை அழைக்கவேயிங்குவந்தேன்
வேதாளம்பிறந்தாலே வேந்தரைக்கொன்றுவிடும்
மாண்டுமடிவார்கள் மகாராஜர்பஞ்சவர்கள்
செத்துமடிவாரே சீரானபஞ்சவர்கள்
என்றுரைத்தார்மாயன் எமனுடனே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயருக்கேதுரைப்பான்
அவர்பஞ்சபாண்டவர்கள் அவர்காலவுள்ளமட்டும்
உம்மையேநம்பியல்லோ உயிர்கொண்டுலாவுகிறார்
காக்கக்கடனுனக்கு கரியமாலென்றுசொன்னார்
அப்போதுமாயவனார் அறவேமனமகிழ்ந்து
பாலவனார்தான்கேட்டு மனதுபெரிதுகந்து
உடனேவருவீரோ கொப்பெனவேபோகவென்றார்
ஆயருரைகேட்டு அப்படியேவாரேனென்றார்

எம்பெருமானும் எமதர்மராஜனும் பஞ்சவரைக்காக்கவருதல்.

மாயவரும்யமனுமே வருகிறார்வனந்தனிலே
எமபுரந்தனைவிட்டுமல்லோ இருவருமாய்வாறார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுகளைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இருவருமாய்வந்தார்கள்
காலமகாமுனிவரிட கானகத்தில்வந்தார்கள்
எமன்கிடாமேலே எம்பெருமாள்கெருடன்மேலே
அந்தவனத்திலே வந்தாரிருவர்களும்
வந்துயிறங்கினார் மகாமுனிவர்தன்வனத்தில்

எம்பெருமாள் தடாகம் உண்டுபண்ணல்.

ஆயர்பெருமானும் அங்கெனவேயேதுசெய்தார்
மாயமாய்ப்பொய்கையொன்று மாயவருண்டுபண்ணார்
அகலங்களமாய் ஆறுயோசனைசாதம்
பத்துயோசனைதூரம் பாரளந்தாருண்டுபண்ணார்
தாமரைப்பொய்கைதனை சாமியவருண்டுபண்ணார்
அலர்தாமரைப்பொய்கை அங்கனமேயுண்டுபண்ணார்
அல்லியுடனே தாமரையும் ஆம்பலுமுண்டாச்சு
அழகானபொய்கையிலே அதிசயமென்னவென்றால்
அல்லியும்கொட்டியுமே அதில்நெருங்கவுண்டாச்சு
அந்தரத்தாமரை அக்குளத்திலுண்டாச்சு
நாணலுங்கோரையுமே நடுவேயதிலுண்டாச்சு
அக்குளத்துக்கரைமேலே அழகானபூமரங்கள்
மல்லிகைமுல்லையுமே மாதளையுமுண்டாச்சு
நல்லதொருபூமலரும் சிற்றம்பையுண்டாச்சு
கொன்றைகுருக்கத்தி கொங்குமுல்லையுமுண்டாச்சு
அந்தமலர்ந்தாரை அ[illegible]

ஆலஞ்செடிமுளைத்து அரசுமேயுண்டாச்சு
வேப்புமாசுமங்கே வேணதுமுண்டாச்சு
பாளைமணம்வீசும் பன்னீருபூக்கும்
வன்னவன்னபூமரங்கள் மாவிருக்ஷமுண்டாச்சு
கமுகுகுலைசொரியும் கஸ்தூரிமணமவீசும்
வேரிற்பலாப்பழங்கள் வெடித்துவிழுந்திருக்கும்
மாம்பழமெங்கும் வனத்திற்பழுத்திருக்கும்
பார்த்தவிடங்களெல்லாம் பழங்கள்பரிமளிக்கும்
கண்டயிடங்களெல்லாம் கனிகள்மணம்வீசும்
இப்படியாய்வண்டுபண்ணூர் எம்பெருமாள்மாயவரும்
காலாகாலங்களிலே கட்டினகுளம்போல
ஆயன்பெருமா ளதிசயமாயுண்டுபண்ணூர்

எமனும்பெருமாளும் வேறுவடிவுகொண்டது.

எமதர்மராசனவ ரென்னவடிவெடுத்தார்
எமபுரத்தையாளுகிற எமன்குயிலாளூர்
எம்பெருமாள்மாயவனு ரென்னவடிவானூர்
புள்ளிமான்குட்டியைப்போல் பொன்மான்வடிவெடுத்தார்
அந்தநல்லபொன்மானி னதிசயத்தைசொல்லுகிறேன்
தங்கமுறுக்கியே தரையில்கவிழ்த்தாப்போல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டாற்போல்
மேகத்திலேயெழும்பும் மின்னலதுபோல
ஆரத்திலேயெழும்பும் சோதியதுபோலே
காட்டிலொள்செனறகுட்டி யேந்துங்குழந்தையைப்போல்
மானகுட்டிபோலாக மாபவனூர்வடிவெடுத்தார்
பஞ்சவர்கள்தானிருக்கும் பர்னசாலைதேடிவாரார்
முனறடிக்குப்பர்னசாலை எதிராகவந்துநின்றூர்
நடந்துவிளையாடி ராசாத்திமுன்னேவந்து
துள்ளிக்குதித்ததங்கே துரோபதைமுன்னாலே

தருமரை துரோபதைமான்பிடித்துத்
தாச்சொன்னது.

கண்டாளேபாஞ்சாலி கானகத்துமானதுவை
மானழகைபார்த்தாளே மயிலனையாள்துரோபதையும்
கண்டுமனமகிழ்ந்து கட்டழகிதுரோபதையும்
பார்த்துமனங்குளிர்ந்தாள் பஞ்சவர்கள்தேவியவள்
மான்பிடிக்கவேண்டுமென்று மனதில்நினைத்தேதாமே
ஆர்பிடித்துத்தருவார்க ளழகானயிம்மானை
தருமரைக்கேட்போமென்று தானெழுந்துவோடிவந்தாள்
தருமருக்கே சாஷ்டாங்கதெண்டனிட்டாள்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
வணங்கியபின் சிரித்தாள் மாது துரோபதையும்

தக்கபுகழ்பெரிய தருமாவரே துசொல்வார்
வணங்குமுடியானே மங்கைதுரோபதையே
எதுக்குப்பெண்ணே நீ என்னைவந்துதெண்டனிட்டாய்
பிள்ளைக்குத்தெண்டனிட்டாய் பிள்ளைகளைப்பெற்றிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
தெண்டனிட்டகாரியத்தை தெரியவுரையுமென்றார்
என்றுமவர்கேட்க ஏதுசொல்வாள் துரோபதையும்
இந்தா ஒருமானைவந் தெதிரிலேவருகிறதே
தங்கமுருக்கியே தலையில்கவிழ்த்ததுபோல்
மேகத்துமின்னலைப்போல் மானுமதுதானுகுது
சூரியசந்திரனைப்போல் தோணுகுதுயெந்தனுக்கு
சித்திரமாகவே உருகுதேயெந்தனுக்கு
அதிசயமாய்தோணுகுது அந்தமானெந்தனுக்கு
மானெனக்குவேணுமையா வனத்தில்விளையாட
விளையாடவெந்தனுக்கு வேணும்பிடித்துத்தாரும்
மானைப்பிடித்துதருவீரென்று மன்னவரேதெண்டனிட்டேன்
எத்தனித்தாலும் எனக்காகப்பிடியுமென்றார்
பிடியுமபிடியுமென்று பின்னொருக்கால்தெண்டனிட்டாள்
மான்பிடித்துத்தாருமென மற்றொருக்கால்தெண்டனிட்டாள்
அப்போதருமலிங்கம் ஆணழகர்தான்கேட்டு
தக்கபுகழ்பெரிய தருமராவரேதுசொல்வார்
ஆர்வளர்த்தமானோயிது அறியேனிளமயிலே
எவர்வளர்த்தமானோயிது யேதுமறியேனே
இந்தவனத்திலிருக்கும்பெரியவர்கள்
தவத்திற்பெரியவர்கள சன்னியாசியானவர்கள்
மாதிரிற்பெரியவர்கள் மகாரிஷியானவர்கள்
யோகத்திற்றனிருக்கும் யோக்கியமுள்ளவர்கள்
ஆர்வளர்த்தமானோயிது அறியேனிளமயிலே
எவர்வளர்த்தமானோயிது ஏதுமறியேனே
மனிதர்வளர்த்ததினால் வந்ததாகம்மருகே
அல்லாதேயாமானல் அருகில்வந்துநிற்காது
வளர்த்தமானானதினால் வந்துவிளையாடுகுது
மானைப்பிடித்தாலே வகைமோசம்வந்துவிடும்
பெண்புத்திகேட்டுமோசம் போனவர்கள்மெத்தவுண்டு
பெண்ணாலேகெட்டவர்கள் பூமியிலேமெத்தவுண்டு
ஆணாலேகெட்டவர்கள் ஆருமில்லைவையகத்தில்
ஸ்ரீராமர்பட்டதொரு சேதிபோலாகுமிது
அரிராமர்பட்டதொரு அலைச்சல்போலாகுமிது
ஆகையாற்பெண்மயிலே அம்மானைப்பிடியென்றாய்
அதுகேட்டுதுரோபதையாள் ஆரணங்கேதுசொல்வாள்

அந்தக்கதையெனக்கு ஆண்டவரேசொல்லுமென்றாள்
மாயவனார்பட்டதொரு வரலாற்றைச்சொல்லுமென்றாள்
எம்பெருமாள்பட்டதொரு இடுக்கங்கள்சொல்லுமையா

தருமர் துரோபதைக்கு மான்பிடிக்கலாகாதென்று
ஸ்ரீராமர் கதையைச்சொன்னது.

அப்போது தர்மலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
ஆனாற்கேள்பெண்ணே அவர்கதையைச்சொல்லுகிறேன்
ராமருலட்சுமணரும் நற்சீதைதன்னுடனே
கைகேசிசொற்படிக்கி கானகத்தேபோயிருந்தார்
தென்னிலங்கைராவணனும் சீதையழகுகண்டான்
சூர்ப்பநகைசொல்லாலே துள்ளிபதைபதைத்து
இலங்கையைவிட்டுமவன் ஏகிநடந்தானே
சீதையைசிறையெடுக்க தென்னிலங்கைவிட்டுவந்தான்
கண்டானேயவர்களைக் கானகத்தில்ராவணனும்
ஜானகியைக்கொண்டுபோகச் சமயமில்லையென்றவனும்
உற்றுநினைத்தானே யொருகோடிபுத்திகளை
இருந்துநினைத்தானே யெண்ணமற்றசிந்தையிலே
ஆலோசனைபுரிந்து அந்தப்படுபாவி
மாரீசனையழைத்து மானாகச்செய்துவிட்டு
போய்நில்லுசீதையிடம் பொன்மானேயென்றுரைக்க
பொன்மானதுகேட்டுப் போகமாட்டேனென்றுசொல்லும்
மாட்டேனென்றசொல்லை மாபாவிதான்கேட்டு
அவ்வளவிலம்மானை யடித்தான்பிரம்பாலே
அடிபட்டுஓடுகுது அந்தவனந்தனிலே
மாளவனுப்பிவைத்தான் மாரீசப்பொன்மானை
சீதையிருக்குமிடந் தேடியேஓடிவந்து
மயிலன்னாள்முன்னேவந்து மானும்விளையாடும்
கண்டாளேசீதையரும் கானகத்துமானதுவை
ஸ்ரீராமர்முன்னேவந்து தேவியருமேதுசொல்வாள்
மானழைக்கண்டேனதைத் தான்பிடித்துதாருமென்றாள்
மான்பிடித்துத்தாருமென மலரடியைத்தெண்டனிட
ஸ்ரீராமர்தான்கேட்டுச் சிந்தைமனங்கலங்கி
மான்வந்தமாயமெல்லாம் மாயவனார்தாமறிந்து
மானல்லபெண்ணேயிது மாயமானென்றுசொன்னார்
அதைவென்றாற்கேளாமல் அநேகந்துயரமுற்றாள்
துயரமுற்றாளென்றுசொல்லி சுவாமிமனதிலெண்ணி
ராமரும்லட்சுமணரை நலமாகத்தானழைத்து
மான்பிடித்துநான்வருவேன் வாரமட்டுந்தம்பியரே
சீதையருகாகத் திறமாயிருப்பாயென
இளையபெருமாளும் இவ்வார்த்தைதான்கேட்டு
அப்படியேகாத்திடுவேன் அண்ணாவேபோவென்றான்

அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமர்போகலுற்றார்
அம்புவில்லுங்கைபிடித்து அவ்வனத்தினூடாக
மானைத்துரத்தியே மாயவனூர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் உன்னுடன்வேசமதாய்
பத்துதலையொளித்து பத்திரண்டுகைமறைத்து
செவ்வொளிமறைத்து ராவணன்பேர்மறைத்து
தூக்கமிலாப்போலேயல்லோ சண்டாளன்வாரானே
பண்டாரம்போலேயல்லோ படுபாவிவாரானே
சாமியைக்காண்டி வந்தானேபர்ணசாலை
இருவிருக்குசாலை யிலனறிந்தானப்போது
சீதையைப்பிடித்தானே மாபாவிசண்டாளன்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
மான்பிடிக்கப்போனதொரு மாயவனுமேதுசெய்தார்
அந்தமான்தன்கையில் அகப்படாததன்மையினால்
கையிலுள்ளவில்வளைத்துக் கணைகளைத்தான்தொடுத்தார்
அம்புகளைத்தொடுத்து அம்மானையெய்தாரே
ராட்சதமான்விழுந்து லட்சுமணாவென்றலற
அந்தமொழிகேட்டு அழகானசீதையரும்
மான்கையிலுங்களண்ணர் மடிந்தாரெனவுரைத்தாள்
இளையபெருமாளும் எழுந்துநடந்தாரே
ராமரைத்தேடியே லட்சுமணர்போனபின்பு
தென்னிலங்கைராவணனும் சீதையருகில்வந்து
பிச்சையென்றுகேட்கையிலே அச்சமில்லாதள்ளிவந்தாள்
கூசாமல்ராவணனுங் கொண்டுசென்றான்தென்னிலங்கை
சீதைசிறைபோனபின்பு திருமாலவர்பார்த்து
கல்லந்தேடென்றுசொல்லியல்லோ நடந்தாரிருவருமாய்
சவரியைக்கண்டுமல்லோ சந்தோஷம்பண்ணுரே
அனுமாரைக்கண்டுமே அவர்களுறவாகி
அனுமாருளாலே அங்கதனுஞ்சுக்கிரீவனும்
மெத்தவுறவானார் வேந்தரிருவர்களும்
வாலியைக்கொன்றபின்பு வானரவீரருக்குள்
சுக்கிரீவனுக்குபட்டஞ் சூட்டிக்கடல்தனிலே
வாராவதிகட்டியல்லோ வந்தார்கள்தென்னிலங்கை
ராவணன்கும்பகர்ணன் ராட்சத இந்திரசித்தன்
மூலபலச்சேனை முடித்துராமர்கையால்
சேனைகளைக்கொன்றல்லோ சீதைசிறைமீட்டு
புட்பகமேறி புண்ணியர்கள்வந்தாரே
அயோத்தியாபுரியதனில் அரிராமர்வந்துவிட்டார்
சீதாசமேதராக சிம்மாதனமேறி
தம்பிமார்மூவர்களுந் தானுங்கொலுவிருந்தார்
நீதிதவறாமல் நெறிப்படியேயாண்டிருந்தார்

ஐம்பத்தாறுதேசமதை ஆண்டாரேஒருகுடைக்கீழ்
அந்தகதையாரும் ஆரணக்கேசீர்கேளும்
சீதையம்மாள்பட்டதொரு சேதியிதுயாரும்
மானைப்பிடிக்கவே மாட்டேனெனவுரைத்தார்

மானைப்பிடித்துத் தாவென்று துரோபதை
யம்மாள் பிணங்கினது.

தக்கபுகழுடைய தருமரிவையுரைக்க
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னநடை துரோபதையும்
ஏதேதுசொன்னாலும் இரங்காமனதுடையாள்
வரும்விதியறியாளே மாதுகருங்குழலும்
எந்தவிதத்தாலும் இந்தமான்வேணுமென்றாள்
மானெனக்குவேணுமென்று மாதுபிணங்கிநின்றாள்
அறவேமனஞ்சலித்து அங்கேதுயமிட்டாள்
தக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
சாயாம்புமேனியனார் தானுமங்கேயுரைப்பார்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்து
வீமாமதகரியே வில்வேந்தே இப்போது
மான்குட்டிவேணுமென்று மாதுபிணங்கினதால்
குட்டிமானைப்பிடித்துக் கொப்பனவேவாருமையா
காட்டுமானைப்பிடித்துக் கடுகெனவேவாருமையா
ஓடிப்பிடித்துநீ ஒருநொடியில்வாருமென்றார்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
தேடியேவந்தாலே சீரானபொய்கையண்டை
தாமரைப்பொய்கை தடாகத்தைக்கண்டாயே
தாகவிடாய்தீர்க்க தமயாலண்டைபோய்தெள்ள
தண்ணீர்தடாகத்திலே இறங்கினான்தார்வேந்தன்
அந்தரமாய்மாயவரும் அங்கொருவரேதுசொல்வார்
ஆடாதம்பியடோ அவ்விசலமுண்கிறவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தகுளமென்னுதடா இந்தநீரென்னுதடா
இந்தகுளத்திலே இறங்கிசலமுண்ணாதே
இவ்வார்த்தைதான்கேட்டு இபலவான்வீமனவன்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
அந்தரமாய்ப்பேசுவது ஆரென்றுதெரியவில்லை
அந்தரதேவதையோ ஆகாசதுர்க்கைகளோ
மந்திரதேவதையோ வந்தெல்லைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னும்பூச்சிகளோ
ஆரென்றுகாணறியேன் அறியவுரையுங்கள்
வெற்றிமதயானை வீமனவன்கேட்கவே
அந்தசமயத்தில் ஆபாலரேதுசொல்வார்

சோலையிடையதிலே போயிருந்தாலுமிப்பேன்
தங்குமிடையதிலே சஞ்சரிக்குந்தாலுமிப்பேன்
மாமலைக்கோபுரமேறிருந்து வானமெல்லாம் நடந்தாலுமிப்பேன்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] கண்ணன் [illegible] பித்து

கொல்லுகிறது.

இதுதான்சமயமென்று கண்ணன் திருமாலும்
மனதிலிருந்தவரும் மாயைப்பழுவெடுத்தார்
மாயைப்பழு வெடுத்து மாநகரின்மேலேறினோ
[illegible]
[illegible]
[illegible]
அந்தமுனிவர்கேட்டபோன் அறுகானவீமனுமே

வீமன் மானைப்பிடிக்கப்போகிறது.

அண்ணருரைகேட்டு ஆங்காரவீமனவன்
இதுபோதுமென்று எழுந்தானே வீமனவன்
கல்லடைப்போட்டு கட்டிவரிந்துகட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
ஆயுதங்கைபிடித்து ஆனைநடைபோகலுற்றான்
மானைத்தொடர்ந்தானே மதவீமராசனும்
துள்ளிப்பாய்ந்துபாய்ந்து அருகாய்வருவானாம்
வீமனைக்கண்டவுடன் வெகுகட்டப்பாராம்
அப்போமதவீமன் ஆங்காரங்கொண்டவனும்
மானைப்பிடிக்க மாயனோர்பின்தொடர்ந்தான்
எட்டிப்பிடிக்க எதிரில்வருவானாம்
பதுங்கிவருவானும் பாராமதவீமன்
ஐம்பதிங்காதவழி ஆனைகூடாரந்தான்கடந்தார்
கண்ணுக்குத்தெரியாமல் கடுகவேமறைந்துவிட்டார்
தேடித்திரிந்தானே சிரானகானகத்தில்
நான்போவமென்றுசொல்லுறான் இப்படியாவீமனவன்
அண்ணல்தருமருக்கும் ஆரணங்குதுரோபதைக்கும்
என்னவென்றுசொல்வேன் வீக்கவதிசயத்தை
இந்தவிதமாய்வந்தேன் இப்படிக்கானேனே

ஆரானாலுந்தனக்கேன் அப்புறத்தேபோகவென்றார்
அப்போதுவீமனவன் அவ்வார்த்தைக்கேதலைப்பார்
தாகவிடாய்க்கொண்டு தண்ணீர்குடிக்கவந்தால்
தண்ணீர்குடியாதே யென்றுசொற்றவரோ
தடாகமிருக்கையிலே தண்ணீர்களைதிராமல்
குடியாமற்போவேனோ கொற்றவரேசொல்லுமென்றான்
தண்ணீர்குடிக்கவென்றால் தாரணியிற்பயிர்களுக்குள்
வாடாதபயிருமேது வருத்தமானபாரோது
அதிசயமானவார்த்தை அறிந்தாலுரையுமென்றார்
அப்போதுவீமனவன் அவ்வயணமறியாமல்
தெரியாமல்வீமனவன் தீர்த்தம்புசித்துவிட்டான்
தாகக்களையாலே தண்ணீர்குடித்துவிட்டான்
காளையந்தவீமனுக்கு கண்ணைச்சொருகுதே
தலையைச்சுழற்றுதே தாமமுடியானுக்கு
உடம்புபரக்குதே உத்தண்டவீமனுக்கு
மரத்தடியிற்பள்ளிகொண்டான் மாமுடியானும்
மறந்துபடுத்தானே மதகிரிவீமனவன்
தன்னைமறந்துமல்லோ தார்வேந்தன்பள்ளிகொண்டான்
மாயன்பெருமாளும் வார்த்தைகளைதுசொல்வார்
காலனையெச்சரித்து கடுகவுயிர்வாங்குமென்றார்
எமனைத்தானழைத்து யிவனுயிரைவாங்குமென்றார்
அப்போதுஎமனவன் அவசரமாய்ஓடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினானே
சூலத்தால்குத்தியே துடிக்கவுயிர்வாங்கினானே
குளத்தங்கரையோரம் குளிர்ந்தநிழல்தனிலே
பொய்கைக்கரையோரம் போர்மன்னன்மாண்டுவிட்டான்
மாண்டுபடுத்தானே மதவீமன்குளத்தங்கரையில்
செத்துமடிந்தானே சேனவீமனுமே
இப்படியாகவே இவனிருக்கும்வேளையிலே

மான்பிடிக்கப்போன வீமனைக்காணோமென்று
தருமராசர் புலம்புகிறது.

தக்கபுகழுடைய தருமராவர்பார்த்து
சாயாம்புமன்னர் தருமராவரேதுசொல்வார்
மான்பிடிக்கப்போனதொரு மன்னவனைக்காணேனே
இன்னேரமாச்சுதே இன்னம்வரக்காணேனே
மானைபிடிக்கையிலே வளர்ந்தவர்கள்கண்டாரோ
ஆர்கண்டெதிர்த்தாரோ அமாதுசெய்கிறாரோ
எவர்கொன்றுபோட்டாரோ ஏதுமறியேனே
மன்னுக்கிகல்லாக்கி மாமரமாக்கிவிட்டாரோ

எங்காக்கிருள்ராக்கிக் கானகத்திற்போட்டாரோ
செத்துமடிந்தானே சிவன்பாதஞ்சேர்ந்தானே
மாண்டுமடிந்தானே வைகுந்தஞ்சேர்ந்தானே
காணவும்போமோதான் கட்டழகன் தம்பியரை
பார்க்கவும்போமோதான் பாரமதகரியை
காணாமல்தம்பியரைக் கலங்குதே தேகமெல்லாம்
பாராமல்தம்பியரைப் பதைக்குதேயென்மனது
காளையருச்சுனரே கடுகவேபோய்வாரும்
பார்த்துவா அர்ச்சுனரே பாரமதவீமனை நீ
தேடியழைத்து நீ சீக்கிரத்தில்வாருமென்றார்
காளையந்தவீமனை நீ கண்டழைத்துவாருமென்றார்
என்றுமவர்சொல்லி யிருந்தாரொருவிதமாய்

அர்ச்சுனமகாராசன் தருமர்சொல்லைக்கேட்டு வீமனைத் தேடிப்போனது.

ஆண்மைதருமன்னன் அர்ச்சுனராஜதுரை
தருமருரைகேட்டுத் தாமெழுந்தார்விஜயன்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
குத்திவிடுங்கால்களுக்குக் குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
நீண்டிடுங்கால்களுக்கு நெறிஞ்சிப்பூச்சல்லடமாம்
பின்னழகதாடு பிருவெடுத்தஒட்டியாணம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
பாங்குசொருகினானே பார்த்தனிடப்புறத்தே
கத்திசொருகினானே காலைவலப்புறத்தே
சிங்காணிவில்லெடுத்து சிறுநாணிதான்பூட்டி
அண்ணருடபாதம் அடிவணங்கித்தெண்டனிட்டு
போகவிடைதாருமென்றான் போர்விஜயக்கோமானும்
மிக்கபுகழுடைய தருமரவர்பார்த்து
சோழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
காளையருச்சுனரே கட்டழகா நீர்கேளும்
வனத்திலுட்புகுந்து மன்னவனை நீதேடி
கண்டழைத்துவீமனை நீ கடுகவேவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தாரே விஜயபெருமாளும்
வீரமையர்ச்சுனனும் வனமாய்வனந்தாண்டி
கானகத்திலுட்புகுந்து காளையரைத்தேடுகிறான்
எங்கெங்குந்தேடினான் இனியவிடமாராய்ந்தான்
அந்தவனந்தனிலே அண்ணரைக்காணாமல்
மற்றுமொருவனத்தில் மாவிஜயன்தேடுகிறான்

இன்னமொருவனத்தில் இளவிஜயன்தேடுகிறான்
அண்ணனைத்தேடி யனேகதூரம்வாரானே
காட்டிலேதேடியல்லோ கடுகியேவாரானே
ஆறுமுகமன்னன் அருச்சுனராசருக்கு
தண்ணீர்கவனங்கள் தாகவிடாய்கொள்ளுகுது
நாவுவரட்டுகுது நல்விஜயன் அருச்சுனற்கு
மெத்தகளைத்தானே வேர்வைகள்சிந்திடவே
அப்போதருச்சுனனும் ஆறுமுகமேதுசொல்வான்
இந்தவனத்திலே எங்குஜலங்கிட்டவில்லே
தண்ணீர்களையாலே தாகவிடாயானதினால்
தண்ணீர்தண்ணீரென்று தவித்துபுலம்புகிறான்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

மாயவனார் அருச்சுனராசனை விஷநீர்குடிப்பித்துக் கொல்லுகிறது.

எம்பெருமாள்மாயவரும் எதுசெய்தாரந்நேரம்
மயிலுங்குயிலுமாக வனத்திலேகூவுகிறார்
அருச்சுனன்காதிற்கேட்க அவ்வனத்திற்கூவுகிறார்
அந்தக்குரலோசை அருச்சுனனுந்தான்கேட்டு
கூவுங்குரல்கேட்பான் கோபாலர்மைத்துனனும்
அவ்வோசைதான்கேட்டு அருச்சுனனுமேதுசொல்வான்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுமவன்சொல்லி எங்கிடக்கலுற்றான்
அந்தவிடம்போகவென்று ஆராய்ந்துதேடிவந்தான்
குயிலிருக்குமிடந்தனிலே கொற்றவனும்வந்தானே
மயிலிருக்குமிடந்தனிலே மன்னவனும்வந்துநின்று
உற்றுற்றுப்பார்த்தானே ஒளிபிறந்தகண்ணாலே
பார்த்தவிடங்களெல்லாம் பச்செென்றுதானிருக்கும்
கண்டவிடங்களெல்லாம் கமகமென்றுபூமணக்கும்
தாமரைப்பொய்கைகளுஞ் சாலைகளுஞ்சோலைகளும்
ஆலவிருட்சத்தின்கீழ் அண்ணர்பள்ளிகொண்டதுவும்
வெறறிமதயானை வீமனைக்கண்டானே
கண்டுமனமகிழ்ந்தான் காளையருச்சுனனும்
பார்த்துமனமகிழ்ந்தான் பார்த்திபனருச்சுனனும்
உற்றுற்றுப்பார்த்தானே உள்ளங்குளிர்ந்தானே
நின்றனைநாழி நினைத்தானேகோடிபுத்தி
அண்ணர்தருமருமே அங்கேமனஞ்சலித்து
வீமனைக்காணாமல் மெத்தமனஞ்சலித்து
தம்பியைக்காணாமல் தவித்துபுலம்புகையில்
அங்கேதருமரையர் ஆபாசப்பட்டிருந்த
இந்தமதவீமன் இப்படிதான்துறந்ேத

மாளும்பிழையாமல் மரத்தடியில் தூங்குறானே
தண்ணீர்குடித்துமல்லோ தாகமுந்தீர்ந்தபின்பு
அண்ணனைத்தானெழுப்பி அழைத்துநாம்போவோமென
தாமரைப்பொய்கையிலே இறங்கினான் தார்வேந்தன்
அப்போதுமாயவரும் அருச்சுனனைத்தான்பார்த்து
ஆயர்பெருமாளும் அந்தநதிமேதுசொல்வார்
ஆடாவென்குளத்தில் அள்ளிஜலமுண்கிறவன்
எவனடாவென்குளத்தில் எடுத்துஜலமுண்கிறவன்
இந்தக்குளமென்னுதடா இந்தநதியென்னுதடா
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்காதேயென்குளத்தில்
அள்ளிஜலமுண்ணா அதிசயஞ்சொல்லுமென்றார்
தாகந்தணியவென்றால் சந்தேகஞ்சொல்லுமென்றார்
அப்போதருச்சுனனும் அவ்வார்த்தைதக்கேதுரைப்பான்
என்ன அதிசயமோ எந்தனுக்குச்சொல்லுமென்றான்
ஆம்பெருமான்மாயவரும் ஏதுசொல்வாரர்ச்சுனற்கு
வாடாப்பயிருமேது வையகத்தில்பாரமேது
இவ்வார்த்தைசொன்னால் இறங்கிஜலமுண்ணுமென்றான்
ஆறைலமுகுமன்னன் அர்ச்சுனராசதுரை
அவ்வார்த்தைதான்கேட்டருச்சுனனுமேதுசொல்வான்
ஆர்காணும்பேசுறது அந்தநதியிலேயிருந்து
எவர்காணும்பேசுறது எங்கேயோதெரியவில்லை
வேண்டிவிடாய்த்துநான் வேர்வைமிகவொழுக
தண்ணீர்விடாயாகித் தாகத்துக்குண்ணவந்தால்
வேண்டாமெனமறித்துத் தீண்டாதெனவுரைத்தார்
எதிரிட்டுவந்தாலே இருதுண்டாயபோட்டிடுவேன்
கண்டித்துப்போட்டிடுவேன் கண்ணில்தெரியடாநீ
எதிரேவெதிர்க்கவேணும் என்சண்டைபார்க்கவேணும்
சரியாகநின்றல்லோ சண்டைபண்ணிபார்க்கவேணும்
என்றதுபேசியே இறங்கிஜலங்குடித்தான்
தாகவிடாய்தீர்ந் தண்ணீர்குடித்தானே
தண்ணீர்குடித்தவுடன் தலைசுழற்றுகுது
அப்போதுமயக்கமல்லோ அதிகமயக்கமாகும்
சஞ்சாமயக்கம் கணமயக்கமாகுது
அபினிமயக்கமல்லோ அலைச்சுழற்றுகுது
தள்ளாடிவாரானே தாமமுடியாதலும்

ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
எண்ணுதுமெண்ணுகிருன் இந்திரன்குமாரனுமே
நினையாதுநினைக்கிருர் நீலவர்ணமைத்துனரும்
ஆருேதெரியாது அந்தரத்திற்பேசிஞர்கள்
எவரோதெரியாது எந்தனுடன்சொன்னுரே
தண்ணீர்குடியாதேயென்று சமர்த்துகள்பேசிஞரே
தீர்த்தங்குடியாதேயென்று வார்த்தைகள்சொன்னுரோ
அவ்வார்த்தைதள்ளிஞ னள்ளியேதீர்த்தமுண்டேன்
சொன்னசொல்தனைமறுத்துச் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
உண்டபொழுதே உடம்பைபிரட்டுதையோ
தலையைசுழற்றுதையோ தருமருக்காருரைப்பார்
அண்ணருக்கும்தம்பியற்கும் ஆரணங்குதுரோபதைக்கும்
இந்தவிசேஷமதை எவர்கள்போய்சொல்லுவார்கள்
செத்தவிசேஷமல்லோ சேதிபோய்சொல்வாரார்
மாண்டவிசேஷமதை மறுவார்த்தைசொல்வாரார்
என்றுமவன்சொல்லி ஏகவழிநடந்தான்
தள்ளாடித்தத்தளித்து தானேநடந்துவந்து
அண்ணருகாக அருச்சுனன்வந்துநின்ருன்
வீமருகாக விஜயனும்வந்துநின்ருன்
கண்ணுறக்கம்போலவே கடுகிவந்துபடுத்தானே
எம்பெருமாள்மாயவரும் இதுதான்சமயமென்று
காலனையெச்சரித்தார் கரியமால்பொட்டெனவே
அருச்சுனன்தன்னுயிரை அதிவிரைவாய்வாங்குமென்ருர்
அப்போதுயேமனவர் அதிகவேகமாகவந்து
சூலங்கொண்டுகுத்தியே பாசங்கொண்டுகட்டிஞனே
பதைக்கவுயிர்மாய்த்தான் பார்த்தீபனருச்சுனனை
இப்படியாக இவன்மாண்டிருக்கையிலே
தக்கபுகழுடைய தருமருடசேதிசொல்வோம்

வீமனைத்தேடப்போன அருச்சுனனும் வீமனும் இன்னம்
வந்துசேரவில்லையென்று தருமர்புலம்புகிறது.

அருச்சுனன்போனபின்பு அழகானதருமரவர்
மனதுகலங்கியே மன்னவருமேதுசொல்வார்
கானகத்திற்போனவர்கள் கடுகவந்துசேரவில்லை
இந்நேரமாச்சுதே யின்னம்வரக்காணேனே
நாமத்தழகா நகுலாநீவாருமென்ருர்
தக்கபுகழுடைய தருமரழைக்கவேதான்

சாயமுடியான் கருடனுமோடிவந்து
அண்ணரெதிரேவந்து அடிவணங்கிதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கட்டழகனேதுசொல்வான்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றான்
அழைத்தகாரியத்தை கீரண்ணுவேசொல்லுமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகன்தர்மலிங்கம்
கண்ணீர்ததும்பிடவே கட்டழகரேதுசொல்வார்
வீமனைத்தேடியே வில்விஜயன்போனானே
மான்பிடிக்கப்போனதொரு மகவீமனைக்காணேன்
தேடியேபோனதொரு தேர்விஜயனைக்காணேன்
போனவிடமறியேன் போய்ப்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
ஆரோடேசண்டை அமராதுசெய்கிறாரோ
யாரோடேசண்டை எதிர்த்துபோர்செய்கிறாரோ
பகைவளர்த்தவர்கள் வந்துவதைசெய்தாரோ
கண்ணிவைத்தாரோ கண்டதுண்டமாக்கினாரோ
செத்ததுவும்யிருப்பதுவும் சேதிதெரியவில்லை
மாண்டதுவும்பிழைத்ததுவும் வார்த்தைதெரியவில்லை
சந்தனமிருபுயத்தை சரியவெட்டிப்போட்டாரோ
குங்குமமிருபுயத்தை குலையவெட்டிப்போட்டாரோ
மலையேபருவதமே வாழ்மலையேகுஞ்சரமே
காணவும்போறேனே காவலர்கள் தம்பியரை
பார்க்கவும்போறேனே பாவியென்கண்ணாலே
இன்னமொருவேளை யினிக்காணப்போறேனே
இருவரையுந்தேடியே யிட்டுவருவாயே
போரீரோதம்பியரே புத்தியுள்ளகண்மணியே
அண்ணருரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
அஞ்சிப்புலம்பாதே ஆயாசமாகாதே
ஆரோடேசண்டை அமராதுசெய்தாலும்
யாரோடேசண்டை எதிர்த்துபோராடினாலும்
சண்டையதுஜெயித்துச் சடுதியில்கொண்டுவாரேன்
அமராதுநான்ஜெயித்து அவர்களைக்கொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இப்போதேயாராய்ந்து
கூடியழைத்து ஒருநொடியில்வாரேனென்றான்
தேடியழைத்து சீக்கிரத்தில்வாரேனென்றான்

நகுலன் தருமராஜர்சொற்படிக்கு வீமனையும் அருச்சுனனையும் தேடிப்போனது.

கடுகவெழுந்தானே கட்டழகன்சீர்நகுலன்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்தியப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பாங்கெடுத்துசொருகினானே மன்னனிடப்புறத்தே
ஆயுதத்தைதானெடுத்து அண்ணருக்குதெண்டனிட்டு
போகவிடைதாருமெனப் போர்மன்னன்கைதொழுதான்
தக்சபுகழுடைய தருமர்மனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
நாமமுடியானே நகுலாயென்கண்மணியே
போனவனைத்தேடி பொறுமையுடன்நீபார்த்து
சென்றவனைத்தேடி சீக்கிரமாராய்ந்து
அண்ணர்களைப்பார்த்து அழைத்துநீவாருமென்றார்
அப்படியேநல்லதென்று அவசரமாய்வாறானே
காடுசெடி தாண்டி கரியமலைதான் தாண்டி
குளத்திலிறங்கினானே கொப்பனவேநகுலனவன்
மாயன்பெருமாளும் மலைராமர்தான்பார்த்து
அந்தரமாய்நின்று ஆயரவரேதுசொல்வார்
ஆரடாதம்பியரே அள்ளிசலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிசலமுண்ணாதே
தண்ணீர்குடியாதே தாமரைப்பொய்கையிலே
குளத்தைவிட்டிப்புறம்வா கொற்றவாவென்றுசொன்னார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நகுலனவன்
ஆரோதெரியாது அந்தரமாய்பேசுகிறீர்
எவரோதெரியாது எங்கேயோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
சொன்னசொல்கேட்குது சொரூபந்தெரியவில்லை
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதுர்க்கைகளோ ஐயனபிடாரிகளோ
ஆரோதெரியவில்லை அருகில்வந்துபேசுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமாளும்
எங்கள்குளத்திலேநீ இறங்கிசலமுண்ணவென்றால்
வையகத்திலதிசயமும் வருத்தமானபாரங்களும்
வாடாபயரின் வர்ணமுறைத்தாயானால்

சகாதேவன் தர்மர்சொல்லைக்கேட்டு தமையன்மார் மூவரையுந் தேடிக்கொண்டுபோனது.

எல்லடங்கலிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
கட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பண்டிபிடிகைகால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
கண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
ஆர்க்கிலைக்குங்கால்களுக்கு அத்தியப்பூச்சல்லடமாம்
குந்திங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
கட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
கத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
அண்ணரைத்தெண்டனிட்டு ஆணழகனேதுசொல்வான்
போகவிடைதாருமென்றான் போர்விசயன்தம்பியவன்
தங்கபுகழுடைய தருமரவர்பார்த்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
அப்பாசகாதேவா அறிவுள்ளகண்மணியே
அண்ணன்மார்போனதொரு அடவிதனிற்சென்று
நாலயந்தமவர்களைக் கண்டழைத்துநீர்வாரும்
அண்ணர்களைக்கண்டு அழைத்தோடிவாருமென்றார்
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தானே வேந்தன்சகாதேவன்
அண்ணனைத்தேடியே அதிவிரைவாய்போய்நடந்தான்
தமையர்களைத்தேடியே தார்வேந்தன்போகலுற்றான்
ஓட்டிநடந்தான் எழிலானசூரியன்போல்
தேடிவருகிறானே சீரானகானகத்தில்
எங்கெங்குந்தேடியே இனியவிடமாராய்ந்து
கடுகவருகையிலே காலுமடைத்திடுது
நாவுவறட்டுகுது நல்லசலங்கிட்டாமல்
மெத்தக்களையாச்சு வேந்தன்சகாதேவனுக்கு
அப்போசகாதேவன் ஆணழகனேதுசொல்வான்
அண்ணர்களைத்தேடி அனேகதூரம்வந்தோம்
தண்ணீர்களையாலே தாகமெடுக்குதையோ
எங்கெங்கேபார்த்தாலும் இனிசலங்கிட்டவில்லை
அண்ணனையுங்காணோமே ஆரணியந்தன்னிலேதான்
என்றுமவன்சொல்லி யிருக்கின்றவேளையிலே

எம்பெருமாள் சகாதேவமகாராசனை விஷத்தண்ணீர் குடிப்பித்துக் கொல்லுகிறது.

அப்போதுஎம்பெருமாள் ஆயரவரேதுசெய்தார்
வந்தசகாதேவனையும் வல்லுயிரைவாங்கவென்று
எமனும்பெருமாளும் ஏறினார்மரமேலே
மயிலும்குயிலும் வனத்திலேகூவுகுது
இந்தக்குரல்கேட்டு இளையசகாதேவன்
முன்னேபெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தானே இளையசகாதேவன்
தாமரைப்பொய்கைகளும் தண்ணீர்தடாகமுடன்
பூவளமும்சோலைகளும் புதுமைகளைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
நான்செய்தபுண்ணியத்தால் நல்லசலங்கிடைத்ததென்று
அங்கேநடந்து அவசரமாய்வாரபோது
மன்னரந்தமூவர்களும் மரத்தடியிற்படுத்திருந்தார்
தமையர்தமைக்கண்டு சந்தோஷமானானே
அப்போதொருவார்த்தை ஆனைமுகனேதுசொல்வான்
அண்ணர்தருமரங்கே அழுதுபுலம்பியேதான்
தம்பியரைக்காணாமல் தயங்கியவரிருக்க
ஆரணங்குதுரோபதையா ளங்கேபுலம்பிநிற்க
என்னநினைவுகொண்டு இங்கேபடுத்தார்கள்
பச்சைமரத்தின்கீழ் மன்னர்படுத்தாரோ
இந்தமரத்தடியில் இவர்படுத்தகாரியமேன்
குளிர்ந்தநிழலென்று கோமான்படுத்தாரோ
மலர்ந்தமரமென்று மன்னர்படுத்தாரோ
தாகத்துக்குண்டபின்பு தமையர்தனையெழுப்பி
அண்ணர்களையெழுப்பி அழைத்துநாம்போவோமென்று
தாமரைபொய்கையண்டை தார்வேந்தன்வந்துநின்று
அந்தகுளத்திலே அள்ளிஜலமுண்ணப்போனான்
அந்தச்சமயத்தில் ஆயரவர்பார்த்து
அந்தரமாய்நின்றலவோ ஆயரவரேதுசொல்வார்
ஆடாதம்பிநீ அக்குளத்திலிறங்கினவன்
எவனடாதம்பிநீ என்குலத்திலிறங்கினவன்
தண்ணீர்குடியாதே தாகவிடாய்தீராதே
இந்தநீரென்னுதடா இந்தக்குளமென்னுதடா
சாலைபூஞ்சோலையும் தாமரைப்பொய்கைகளும்

இறங்கினாலுமென்றும் இல்லையென்றால்போய்நடவும்
சொன்னாலேநீர்குடியும் சொல்லாமற்போனாலே
தண்ணீர்குடியாதே தாமமுடியானே
குளத்திலடிவையாதே கொற்றம்போர்மன்னவனே
என்றதோர்சொற்கேட்டு ஏதுசொல்வான்சீர்நகுலன்
நீர்கேட்டவார்த்தைக்கு நான்கேட்குந்தன்மையென்ன
நீயில்லைநீர்தரா நின்றுதான்பேசாது
என்னெதிரில்வந்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
என்றுசிலவார்த்தை நின்றுமவன்பேசினானே
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயர்பெருமானும்
மறுவார்த்தைசொல்லாமல் மாயவரும்தானிருந்தார்
அப்போநகுலனுமே ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கியே கொப்பெனவேநகுலனவன்
தாகந்தெளியவே தண்ணீருந்தான்புசித்தான்
தாகந்தெளிந்தானே தருமர்தம்பியானவனும்
தண்ணீர்புசித்தவுடன் தானுமாறாய்விழுந்து
தலையைச்சுழட்டுது தார்வேந்தராசனுக்கு
உடம்புபறக்குதே உத்தண்டவீரனுக்கு
என்னதுமென்னுகிறான் இயலானநகுலனுமே
ஆரோதெரியாது அந்தரமாய்ச்சொன்னார்கள்
அவ்வார்த்தைகேளாமல் அள்ளியேநீர்த்தமுண்டேன்
சொன்னசொற்கேளாமல் சுருக்காகத்தீர்த்தமுண்டேன்
கண்ணுந்தெரியவில்லை காரணமுந்தோணவில்லை
நிலமுந்தெரியவில்லை நினைவுமறக்குதே
அறியாதுநான்புசித்தே னென்றல்லோ ஆணழகன்
அண்ணர்க்குந்தம்பியர்க்கு மாரணங்குதுரோபதைக்கும்
அந்தவனந்தாண்டி ஆர்தான்போய்ச்சொல்வார்கள்
இந்தவிசேஷமதை எவர்போயுரைப்பார்கள்
தருமரிதையறிந்தால் சற்றும்பொறுக்காதே
அண்ணாவுந்தம்பியரும் அழுதுபுலம்புவார்கள்
இங்கேயுயிர்வாங்கி யிவர்களிருக்கையிலே
அங்கேநகுலனுமே அண்ணாண்டைமாண்டானே
மாண்டானேசீர்நகுலன் வசநாபிநீரையுண்டு
செத்தானேநகுலனுமே சீரானகானகத்தில்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே

வீமனையும் அர்ச்சுனனையும் அழைக்கப்போன நகுலனையும்
காணேனென்று தருமர்புலம்புகிறது.

அப்போதுமன்னவரும் ஆணழகனேதுசொல்வார்
சகாதேவனையழைத்து தருமரவரேதுசொல்வார்
அப்பாசகாதேவா அதிசயத்தைநீர்கேளும்
மான்பிடிக்கப்போனதொரு மதவீமராசனையும்
வீமனையுங்காணவென்று வில்விஜயராசாவும்
தேடியேபோனனே தேர்விஜயனர்ச்சுனனும்
நல்விஜயனைத்தேட நகுலனும்போய்நடந்தான்
மூவர்களும்போனாரே முடிவேந்தராசாக்கள்
ஒருவரையுங்காணேன் உத்தரவுதானறிய
மான்பிடிக்கபோனவர்கள் வந்தின்னஞ்சேரவில்லை
தேடியேபோனவர்கள் திரும்பிவந்துசேரவில்லை
தம்பிசகாதேவா தாமமுடியானே
தேடியேபோருமோ சேதிவந்துசொல்வாயோ
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
மாண்டார்பிழைத்தாரோ மறுவார்த்தைதனறியேன்
மானைப்பிடிக்கையிலே மான்வளர்த்தார்கண்டாரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைபண்ணாரோ
சத்தரிஷிகளோ சந்யாசியானவரோ
சத்தரிஷிபவர்கள் சபித்துமேபோட்டாரோ
காணவும்போறேனோ கட்டழகர்தம்பியரை
பார்க்கவும்போறேனோ பாவியென்கண்ணாலே
இன்னமொருக்கால் இங்கேவந்துசேர்வாரோ
இளையசகாதேவா இட்டிங்கேவாராயோ
காளைசகாதேவா கண்டழைத்துவாரூமோ
பாரமுடிமன்னர்களைப் பார்த்துமேநீயழைத்து
வருவாயோதம்பியரே வார்த்தைகள்சொல்லுமென்றார்
அப்போசகாதேவன் அண்ணரைத்தெண்டனிட்டு
தாமமுடியான் சகாதேவனேதுசொல்வான்
அஞ்சாதிரண்ணாவே அழைத்தோடிவாரேனென்றான்
காளையர்தமூவரையும் கண்டழைத்துவாரேனென்றான்
பார்த்தழைத்துவாரேனென்றான் பாரமுடிமன்னர்களைப்
என்றுயெழுந்தானே இளையசகாதேவன்

இத்தனையுமென்னுடா இறங்கிசலமுண்ணுதே
இறங்கினவனுக்கு இடறுகளவந்துவிடும்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
அந்தரத்தில்நின்றுகொண்டு ஆர்காணும்பேசுறவன்
மரத்திலிருந்துகொண்டு சொல்கிறவனுர்காணும்
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதூர்க்கைகளோ ஐயன்பிடாரிகளோ
பேய்பிசாசுகளோ பிணந்தின்னுங்கழுகுகளோ
ஆரோதெரியாது அதட்டிக்கேட்கிறவர்
எவரோதெரியாதுஎந்தனைக்கேட்கிறவர்
மறுமொருக்கால்தான் வாய்திறந்துபேசுங்கள்
இன்னமொருக்கால்தான் எதிரில்வந்துசொல்லுங்கள்
என்றதுசொற்கேட்டு எம்பெருமானேதுசொல்வார்
தண்ணீர்குடிக்கவென்றால் தரணியில்புதுமைசொல்லும்
காட்டப்பயிருமெது வருத்தமானபாரமெது
அந்தவதிசயங்க ளறிந்தா லுரையுமென்றார்
அறிந்தீர்சொன்னுலே அள்ளியேதீர்த்தமுண்ணும்
சொல்லுவாயாமானுல் சுருக்காகத்தீர்த்தமுண்ணும்
இல்லாமல்போனுலே யிப்பாலேவந்துவிடும்
தாமமுடியான் சகாதேவராசனவன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சகாதேவன்
ஆரோதெரியாது அந்தரத்தில்மிரட்டுகிறீர்
எவரோதெரியாது என்னைமிரட்டுகிறீர்
அருகாகவந்தாலே அடிதெரிந்துபோட்டிடுவேன்
சரியாயிருக்கவேணும் சண்டைபண்ணிபார்க்கவேணும்
மறைவாயிருந்துகொண்டுவாதாடநீதியுண்டோ
என்றுமவனுரைக்க எம்பெருமான்தான்கேட்டு
ஒன்றுமேசொல்லாமல் உலகளந்தார்வீற்றிருந்தார்
மறுவார்த்தைபேசாமல் மாயவருந்தானிருந்தார்
அப்போசகாதேவன் ஆனந்தமாகவேதான்
குளத்திலிறங்கினுனே கொப்பெனவேதீர்த்தமுண்டான்
அள்ளியேதீர்த்தமுண்டான் ஆவல்தெளிந்திடவே
தண்ணீர்குடித்தானே தாமமுடியானும்
அள்ளிஜலமுண்டபின்பு ஆனந்தமாரபனுக்கு
தண்ணீர்குடித்தவுடன் தலையைச்சுழற்றுகுது
உடம்புபறக்குது உள்ளங்குலையுது
நாவுகுளறுகுது.தாமமுடியானுக்கு
கண்ணைமறக்குது நாவேந்தராசனுக்கு
ஆரோதெரியாது எந்தனுக்குச்சொன்னுர்கள்
எவரோதெரியாது எந்தனுக்குசொன்னவர்கள்

தண்ணீர்குடியாதேயென்று சத்தம்பிறந்ததங்கே
அவர்சொல்லைக்கேளாமல் அள்ளிநான்தீர்த்தமுண்டேன்
சொன்னசொல்கேளாமல் சுருக்காகதீர்த்தமுண்டேன்
தெரியாமல்நீர்குடித்தேன் சிந்தைகலங்குது
அரியாமல்நீர்குடித்தேன் அங்கம்பிரட்டுகுது
என்றுநடந்தானே இளையசகாதேவன்
அண்ணமார்தன்னருகே ஆணழகன்வந்துநின்று
அப்போசகாதேவன் ஆலோசனைபண்ணி
தம்பிகளைக்காணோமென்று தருமரிங்கேவந்தாக்கால்
வசநாபிதண்ணீருண்டு மாண்டிடுவார்தப்பாது
என்றுமனதிலெண்ணி எழுதுகிறான்மரத்தடியில்
அண்ணாவேமரத்தடியில் அதிசயமானவார்த்தை
இந்தகுளத்திலே எவர்தாகமுண்டானும்
வசநாபிதண்ணீரது குடித்தால்மடிந்திடுவார்
அண்ணாவேயிக்குளத்தி லள்ளிநீர்குடியாதே
நாங்களிதைக்குடித்து நாலுபேருமடிகமேதாம்
செத்துமடிந்துவிட்டோம சிவலோகஞ்சேர்ந்துவிட்டோம்
மாண்டுமடிந்துவிட்டோம் வைகுந்தஞ்சேர்ந்துவிட்டோம்
என்றுமவன்சொல்லி எழுதினான்மண்மேலே
தலையைசுழற்றுகையில் தானும்படுத்துக்கொண்டான்
அந்தசமய மறிந்தாரே யெம்பெருமாள்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
காலனையெச்சரித்து கடுகவுயிர்வாங்குமென்றார்
ஏமனையெச்சரித்து யிவனுயிரைவாங்குமென்றார்
எம்பெருமாள்சொற்கேட்டு ஏமனவனோடிவந்து
சூலத்தால்குத்தியே பாசத்தால்கட்டினானே
மாண்டுமடிந்தானே மன்னன்சகாதேவன்
செத்துமடிந்தானே சீரானகானகத்தில்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே

ஆரணியத்தில் எம்பெருமாள் சூதினாலே வீமன் அருச்சுனன்
காளமகாரிஷி யாகத்திலுண்டாகிய வேதாளம்
ஐந்துபேரையுங் கொல்லவருவது.

அந்தசமயத்தில் ஆங்காரமாகவேதான்
காளமகாரிஷியுங் கருதித்தபசுபண்ணி
அக்கினிகுழியிலே ஆங்காரவேதாளம்
உண்டாகிவந்ததங்கே உலகந்திடுக்கிடவே
கருத்தநிறமுடனே கைதனிலேவாளுடனே
பெருத்தமுகமுடனே பெருந்தொப்பைதன்னுடனே

செவந்தமயிரும் சிவடிந்தவாயதும்
கண்ணைப்பார்த்தாலே கருங்குன்றுபோலிருக்கும்
கைகளோ நாதவழி கால்கள் வெருதாம்
அகண்டபுஜங்களது ஓர்தாந்துக்காதவழி
பல்லுகளைப்பார்த்தாலே பன்னமரம்போலிருக்கும்
மூக்குதுளைப்பார்த்தாலே முதலைவளைப்போலிருக்கும்
இப்படியாகவே யிருக்கும்பக்குவேதாளம்
பொல்லாதவேதாளம் பிறந்தது அக்கினியில்
காளமகரிஷியருகே கடிதவந்துதெண்டனிட்டான்
என்னையழைத்ததுதானே துவகையாக
ஆரைநான்கொல்லுறது அடுத்துப்போர்செய்கிறது
யாரைப்போய்கொல்கிறது எந்தனுக்குசொல்லுமையா
வந்தகள்பறைக்குது காளமகாமுனியே
வயிறுபசிக்குது மாமுனியேசொல்லுமையா
அப்போதுமாமுனியும் அதுசொல்லத்தான்கேட்டு
காளமகாமுனியும் கடுகவெடுத்துரைப்பார்
அக்கினியில்வந்துதித்த ஆங்காரவேதாளம்
நான்சொல்லக்கேளும் ராஜர்களைவருண்டு
இந்தவனத்திலே இருக்கிறார்பஞ்சவர்கள்
சீறப்புலிபோலே வேந்தர்களைவருண்டு
பாரப்புலிபோலே பஞ்சவர்களைவருண்டு
ஐவரையுங்கொன்றுதின்று அரைநொடியில்வாருமென்றார்
வேதாளந்தான்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
அவ்வளவுபோதுமென்று ஆக்ராயித்துப்பர்கடித்து
அங்கேயென்றுசொல்லி எழும்பியேகொக்கரித்து
கொக்கரித்துவேதாளம் குமாளமாய்வருகுது
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துவருகையிலே
செந்தாமரைப்பொய்கையண்டை செத்திருக்கக்கண்டது
தாமரைச்சோலையின்கீழ் மாண்டிருக்கக்கண்டது
இறந்தவரல்லாமல் பின்னமொருவரில்லை
செத்தவரில்லாமல் மற்றுமொருவரில்லை
எங்கேமடிந்தாரோ எவ்விடத்திற்செத்தாரோ
மாண்டபிணந்தின்ன மாமுனிபோகச்சொன்னார்
எத்தனைநாளைக்குமுன்னே செத்தபிணமிதுவோ
செத்தபிணத்தையோநான் சென்றுபுசிக்கிறது
நாறும்பிணமெடுத்து நானோபுசிக்கிறது
மாண்டபிணத்தையோநான் வயிறாவுண்பேனோ
என்றுமேசொல்லி யெழுந்ததுவேதாளம்
அங்கேதிரும்பி அகோரகோபத்துடனே
மகாவேகத்துடனே வருகுதுவேதாளம்

காளமகாரிஷியருகே கடுகவந்துவுக்கிரமுடன்
எடுத்துமகாமுனியை இரண்டாய்கிழித்தது
வாரியெடுத்துமல்லோ வயிற்றைக்கிழித்தது
நெஞ்சைப்பிளந்து நெருப்புத்தணலெழும்ப
மாமுனியைக்கொன்றபின்பு மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷமாகியல்லோ வேதாளந்தானடக்க
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோச்சுது
மனதுமிகக்குளிர்ந்து மற்றோர்வனந்தனிலே
போயதுபிழைத்திருக்கும் பொல்லாதவேதாளம்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

தருமராசர் தம்பிமார்நாலுபேரையுங் காணோமென்று
துரோபதையுடன்சொல்லி புலம்புகிறது.

வேதாளம்போனபின்பு வேந்தர்தருமரவர்
சாயாம்புமன்னவனூர் தருமரவரேதுசொல்வார்
பாஞ்சாலன்பெண்ணே பைங்கிளியேதுரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நீலவர்னன்தங்கையரே
அனலிற்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
ஐவரைமாலையிட்ட ஆதிபராஞ்சுடரே
தோராவடிவழகி துரோபதையேநீர்கேளும்
மான்பிடிக்கப்போனதொரு மதவீமனைக்காணோம்
வீமனைத்தேடிப்போன நகுலன்வரக்காணோம்
மூவரையுந்தேடிப்போன சகாதேவனைக்காணோம்
நால்வரையுங்காணோமே நாயகமேயென்னசெய்வோம்
செத்தார்பிழைத்தாரோ சேதிதெரியவில்லை
ஆரோடேசண்டை அமரதுசெய்கிறாரோ
எவரோடேசண்டை எப்படிபோர்செய்கிறாரோ
மானைவளர்த்தவர்கள் வந்துவதைபண்ணுரோ
எந்தத்தபோதனர்கள் எவர்கள்கொன்றுபோட்டாரோ
தபசிற்பெரியவர்கள் சபித்தாரோதானறியேன்
வரத்திற்பெரியவர்கள் வதைசெய்துபோட்டாரோ
போனவிடமறியேன் போர்செய்ததாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
தேடியேபோவோம்வா தேவியேயென்றழைத்தார்
ஆரணங்குதுரோபதையாளப்படியேநல்லதென்றாள்

தருமரும் துரோபதையும் வீமன் அருச்சுனன்
நகுலன் சகாதேவன் இவர்கள் நாலுபே
ரையுந் தேடிக்கொண்டுபோனது.

துரோபதையுந்தருமருந் துள்ளியெழுந்திருந்து
தேடிப்புறப்பட்டார்கள் சீரானகானகத்தில்

கூவிப்புலம்பியே கொப்பெனவேவாறார்கள்
அழுதுபுலம்பியே அந்தவனந்தேடிவாரார்
இருண்டவனங்களெல்லாம் எங்கெங்குந்தேடினாரே
தம்பியரைக்காணாமல் தயங்கினார்தருமராங்கே
பாராமல்தம்பிமாரைப் பதைத்துப்புலம்பினார்கள்
தக்கபுகழுடைய தருமராங்கேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேபாஞ்சாலி
இந்தவனத்திலே எங்கெங்குந்தேடினோமே
காளையந்தரல்வரையும் காட்டிலேகாணவில்லை
இந்தவனந்தாண்டி இனியவனம்போவோமென்று
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோய்நடந்தார்
தேடியேவாரார்கள் சீரானவனந்தனிலே
தருமருக்குந்துரோபதைக்குந் தாகமெடுக்குது
நாவுவறட்டிருக்குது நாமமுடியார்க்கு
ஆரணங்குதுரோபதைக்கு அதிகதாகமுண்டாச்சு
தண்ணீர்கவனமுந் தாகவிடாயாச்சுது
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
என்செய்வோம்பெண்ணேநாம் எங்குசலம்கிட்டாது
மன்னவரைக்காணேன் மாதரசேயென்னசெய்வேன்
தம்பிகளைக்காணோமே தாகவிடாய்கொள்கிறதே
என்னசெய்வேனென்றுசொல்லி இளைத்துப்புலம்புகையில்
அந்தசமயத்திலே அரிராமரேதுசெய்தார்
மயிலுங்குயிலுமிங்கே மரத்தின்மேலேறியே
வனத்திற்குயிலு மயில்களுங்கூவுகுது
அந்தக்குரல்கேட்டார் ஆணழகர்தருமலிங்கம்
கூவுங்குரல்கேட்டுக் கொப்பெனவேஏதுசொல்வார்
முன்னோர்பெரியவர்கள் சொன்னமுறைப்படியே
குளிர்ந்தவிடந்தனிலே குயிலுமயிலிருக்கும்
என்றுநடந்தாரே இளந்தோப்புத்தன்னருகே
தாமரைப்பொய்கையண்டை தம்பிமார்தானிருந்தார்
பள்ளிகொண்டிருக்கிறதைப் பார்த்தாரேதருமலிங்கம்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதையேகண்டாயோ
தம்பிமார்பள்ளிகொண்ட தயிரியத்தைப்பார்த்தாயோ!
மாளும்பிடியாமல் வந்துசேதிசொல்லாமல்
குளிர்ந்தநிழலருகே கூசாமற்பள்ளிகொண்டார்
தண்ணீர்குடித்துநாம் தாகவிடாய்தீர்ந்தபின்பு
தம்பிமாரைத்தானெழுப்பி தையலரேபோவோமென்றார்
என்றுமவருரைத்து இளந்தோப்பிற்போய்புகுந்து
தாமரைப்பொய்கையிலே இறங்கினார்தருமரவர்
அப்போதுமாயவரும் அரிராமர்தான்பார்த்து

அந்தரமாய்நின்றுக்கொண்டு ஆயரங்கேதுசொல்வார்
ஆரடாதம்பிநீ அக்குளத்திலிறங்கினவன்
எவனடாதம்பிநீ இறங்கிஜலமுண்கிறவன்
சாலையுஞ்சோலையுந் தாமரைப்பொய்கைகளும்
இத்தனையுமென்னுதடா இறங்கிசலமுண்ணுதே
என்றசத்தங்கேட்டுவே ஏதுசொல்வார்தருமரவர்
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுரது
அந்தரதேவதையோ சந்திரசூரியரோ
ஆகாசதுர்க்கைகளோ ஐபன்பிடாரிகளோ
வானுலகதேவர்களோ வந்தென்னைக்கேட்கிறது
பேயோபிசாசுகளோ பிணந்தின்னும்ராட்சதரோ
ஆரோதெரியாது அந்தரமாய்ப்பேசுகிறீர்
எவரென்றுநானறியேன் எங்கையோபேசுகிறீர்
வார்த்தைகள்கேட்குது வயணந்தெரியவில்லை
உத்தாவுகேட்குது உருவந்தெரியவில்லை
பேச்சுகள்கேட்குது பேருந்தெரியவில்லை
தாகவிடாயாகத் தண்ணீர்குடிக்கவந்தேன்
நாவுவரட்டுகுது நடுங்குதுதேகமெங்கும்
உள்நாக்குவரட்டுகுது உத்தருவுதாருமையா
உத்தரவுதந்தாலே உண்ணுகிறேன் தீர்த்தமிங்கே
வார்த்தையுரைத்தாலே வாரிசலமுண்ணுகிறேன்

எம்பெருமாள் தருமர்தம்பி நாலுபேரையும்
அதிசயங்கேட்டதற்கு யாருஞ்சொல்ல
வில்லை தருமர் சொல்லுகிறது.

என்றுரைக்கதர்மலிங்கம் ஏதுசொல்வார்மாயவனுர்
இப்பூமிதன்னிலே என்ன அதிசயங்கள்
அதிசயத்தைசொன்னீரானு லள்ளியேதீர்த்தமுண்ணும்
இல்லாமற்போனாலே இப்பாலேவக்துவிடும்
சொல்லாமற்போனீரானல் சுருக்காய்நடவுமென்றார்
என்றசொல்தான்கேட்டு ஏதுசொல்வார்தருமலிங்கம்
மனிதர்பிறக்கிறதும் மனிதரிறக்கிறதும்
இதுவேஅதிசயங்கள் இனியொன்றுமில்லையென்றார்
அவ்வயணங்கேட்டு அரிராமரென்னசொல்வார்
இதுவேஅதிசயங்காண் இனியொன்றுமில்லையோதான்
இன்னமொருவார்த்தை வுண்மையுரையுமென்றார்
வையகத்துமாந்தருக்கு வருத்தங்களாவதுகாண்
ஏதுவருத்தமென்றார் இனிபிறந்தபேர்களுக்கு
அப்போதருமரவர் ஆயருரைகேட்டு
சாயாம்புமன்னவனுர் தருமரங்கேதுசொல்வார்
பத்துமாதஞ்சுமந்து பாலகனையுண்டாக்கி

மூன்றுநாள் சுமந்த முருகுகுழலாள் தன்றனக்கே
பெற்றெடுத்த தாயார்க்குப் பெரியசுமையொழிய
மற்றொரு சுமையுமில்லை வையகத்துமாந்தர்க்கும்
இவ்வண்ணங்கேட்டு ஏதுசொல்வார்மாயவனார்
இன்னமொருவார்த்தை யியம்புவேன்சொல்லுமென்றார்
வையகந்தனிலே வாடாப்பயிர்சொல்லும்
என்றைக்கும்வாடாத இனியபயிர்சொல்லுமென்றார்
ஆயிழையுரைக்க அவ்வார்த்தைதான்கேட்டு
சாயாம்புயன்னவனார் தருமரங்கேதுசொல்வார்
வாடாதிருக்குங்காண் வளருமருகம்புல்
அந்தச்சொல்தானுரைத்தார் அங்கெனவேமாயவற்கு
இவ்வண்ணங்கேட்டுமே எம்பெருமாளென்னசொல்வார்
சந்தோஷமாச்சுது தாகந்தெளியுமென்றார்
உத்தரவுதந்தாரே உலகளந்தாரெம்பெருமாள்
தக்கபுகழுடைய தருமரவர்கேட்டு
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தாகந்தெளிவதற்கு தண்ணீர்குடித்தார்கள்
அள்ளிப்புசித்தார்கள் ஆவல்தெளிந்திடவே
தருமருந்திரௌபதையுந் தாகத்துக்குண்டார்கள்
தாகந்தெளிந்தபின்பு தம்பிமாரண்டைவந்தார்

தருமர்வந்து தம்பிமார்களை எழுப்ப நாலுபேரும் இறந்துவிட்டாரென்றறிந்துப்புலம்புகிறது.

நாலுபேரண்டைவந்து நடுவேயிருந்துகொண்டு
தங்கிவனப்படுத்திருந்த தலைமாட்டிலெழுதியதோர்
வாசகத்தைப்படித்தாரே மன்னர்தருமலிங்கம்
என்னவென்றெழுதியிருந்ததென்றால்வாசகத்தை
காவலருபாலகரே நச்சுப்பொய்கைதீர்த்தமுண்டு
விஷநீரையுண்டல்லோ வேந்தர்மடிந்துவிட்டோம்
மாண்டுமடிந்துவிட்டோம் நீங்கள்வந்தாலுண்ணவே
தாகத்துக்குண்ணாதே தப்பிப்பிழையுமென்று
இவ்வண்ணமாகவே எழுதியிருக்குது
பார்த்துப்படித்துப் பயந்தாரே தருமராயர்
செத்துமடிந்தார்கள் சீரானதம்பியர்கள்
மாண்டுமடிந்தார்களென்று மன்னர்புலம்புகிறார்
என்னசொல்லிப்புலம்புகிறார் இருண்டவனந்தனிலே
பலமேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலேபருவதமே செத்துமடிந்தீரோ
நீலமலையே நிலத்திற்சாய்ந்தீரோ
சஞ்சலமதானுக்கு கலக்கமில்லையென்றிருந்தேன்
அக்கினியானதனைக் கரையானரித்ததுவோ

இரும்பான தூணுக்கு யென்னகுறையென்றிருந்தேன்
இரும்பான தூணுமே இற்றுவிழுந்ததோ
வச்சிரத்தூணுக்கு வாட்டமில்லையென்றிருந்தேன்
வச்சிரத்தூணல்லவோ மண்ணோடுருத்துது
செம்பருந்துவந்தென்னைச் சிறகர்லடித்துதோ
குஞ்சைபறிகொடுத்த கோழிபோலானேனே
ரெக்கைபறிகொடுத்த டேகைபோலானேனே
கையறுந்தஆனையைப்போல் கலங்கினேன்தம்பியரே
ஓடுகிறமானுக்கு ஒருகாலொடிந்தாப்போல்
உள்ளங்குலைந்து உருகிறேன்தம்பியரே
என்னைத்தவிக்கவிட்டு எங்கேமறந்தீர்கள
ஐயையோதெய்வமே அலையவிட்டுப்பார்த்தீர்களோ

தருமர் வீமனைப்பார்த்து புலம்புகிறது.

தக்கபுகழுடைய தருமரெழுந்திருந்து
வீமனருகில்வந்து வேந்தர்புலம்புகிறார்
வெற்றிமதயானை வீமாமதகரியே
கட்டிக்கரும்பேயென் கண்மணியேயெங்கொளித்தாய்
நூலார்கடுந்திரளார் நூற்றொருமன்னரையும்
கொல்லுகிறேனென்றுநீ கொடியசபதமிட்டாய்
அவ்வார்த்தைதான்மறந்து அப்பாநீயெங்கொளித்தாய்
வச்சிரமுடியேநீ மண்ணோடேசாய்ந்தாயோ
தங்கமுடியேநீ தரையில்கவிழ்ந்தாயோ
தாபமறந்தாயோ தமயனைநீமறந்து
எங்கேயொளித்தாயோ எண்ணுடுபோனாயோ
என்னையலையவிட்டு எங்கேநீபோயொளித்தாய்
என்றுபுலம்பி இளைத்துமண்ணில்மூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர்தருமலிங்கம்

தருமராஜர் களைதெளிந்து எழுந்திருந்து அர்ச்சுனனைப் பார்த்துப் புலம்புகிறது.

அன்றுவொருநாழி சென்றபிறகாக
தோராவடிவழகி துரோபதையாளோடிவந்து
களைத்த தருமருக்கு கடுகமூர்ச்சைதெளியவென்று
காட்டில்தழையொடித்து கடுகவேவோடிவந்து
பச்சைதழையொடித்து பைங்கிளியாளவீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்து
மன்னவென்றுசொல்லி எடுத்துப்புலம்புகிறார்
ஆணழகுமன்னா அர்ச்சுனாயென்பிறப்பே
என்னைத்தனியவிட்டு எங்கேநீபோயொளித்தாய்
மீசைமுறுக்கழகா விழியிற்கறுப்பழகா
நாளிமேலநட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
தோளில்துளசிமாலை தொட்புளில்வயிர்தகலசம்

பல்லிசைபாசலினே பாதத்தில்செந்தாமரைப்பூ
முழங்கிலேமச்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
இடுப்புக்கால்விருது பொம்மை வலதுகால்வீரதண்டை
இடதுகால்விருதுகுலவிருது சத்ராதிபேர்விருது
எதிர்த்தவன் தன்விருதும் எதிராளிமுகவிருதும்
முத்தனைவிருதுகளை எடுத்துநீபூட்டிக்கொண்டு
கட்டியெதிர்த்தாலே கலங்குமேசேனையெல்லாம்
சத்துராதிகளை செயிக்கும் தனஞ்சயரேயர்ச்சுனரே
எதிரிகளை செயிக்கும் என்பிறப்பேயர்ச்சுனரே
என்னைப்பிரிந்துநீ இறந்துமடிந்தாயோ
அழகையெழுதினவர் ஆயுளையெழுதாரோ
வடிவமெழுதினவர் வயதையெழுதாரோ
பெற்றுமே குந்தியம்மாள் பிரபலமாய்காணவென்று
பெற்றாள்வயற்றிலே நீ பெருநெருப்பையிட்டாயோ
என்னைத்தனிக்கவிட்டு இறந்துவிடஞாயமுண்டோ
என்றுசொல்லிதருமரவரேங்கிமனந்தளர்ந்து
அழுதுபுலம்பியே அங்கனே மூர்ச்சையானார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர் தர்மலிங்கம்

தருமராசர் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து
நகுலனைப்பார்த்துப் புலம்புகிறது.

களைத்த தருமரையே கண்டதுரோபதையாள்
துள்ளியெழுந்திருந்து துரிதமுடனோடிவந்து
காட்டில்தழையொடித்துக் கடுகெனவேயோடிவந்தாள்
தருமருக்காகத் தையலரும்வந்துநின்று
பச்சைதழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
காட்டுத்தழையொடித்துக் கடுகெனவேவீசினாளே
மற்றுமொருநாழி யுற்றபிறகாக
வீசக்களைதெளிந்து வேந்தரெழுந்திருந்து
மூர்ச்சைதெளிந்து முன்னின்றுபுலம்புகிறார்
அப்பாநகுலாவென் னறிவுள்ளகண்மணியே
மலையேபருவதமே வாழ்மலையேகுஞ்சரமே
நீமடியுங்காரியங்கள் நிண்ணயத்தையானறியேன்
மாண்டுவிடுவீரென்றுநான் மனதில்நினைத்ததில்லை
செத்துமடிவீரென்று சற்றுமறிகிலனே
என்னை நீகைவிட்டு இறந்துவிடஞாயமுண்டோ
நீங்கள்போலறியாமல் பூரித்துநானிருந்தேன்
சாவதறியாமல் சந்தோஷமாயிருந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
ஆவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகங்களாகுதய்யா

12

கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகமாகுதப்பா
கூடப்பிறந்தீர்களே கூட்டுப்பாலுண்டீர்களே
ஒக்கப்பிறந்தீர்களே ஒருஸ்தனபாலுண்டீர்களே
காட்டுக்குள்கையைவிட்டு கைலாசம்போனீரோ
தங்கத்தரிக்கயில்லை தரையில்கால்பாவவில்லை
நிற்கத்தரிக்கவில்லை நிலத்திறகால்பாவவில்லை
உங்களைநான்பிரிந்து ஒருநாழிதங்குவேனோ
கூடமடிவேன்காண் சொற்றவரேயுங்களுடன்
ஒக்கமடிவேனே உங்களுடனாக
அலண்டுபிரண்டழுதார் அடித்துகொண்டார்தலைமேலே
முட்டிகொண்டார்பூமியிலே மோதிகொண்டாரப்போது
மார்கொண்டகண்ணீரை வழித்தெறிந்தார்மண்மேலே
துடித்துபதைத்தலறித் துள்ளிபுரண்டழுதார்
களைத்துவிழுந்தாரே கட்டழகர்தர்மலிங்கம்
மூர்ச்சையாய்விழுந்தாரே முடிமன்னராசாவும்

தருமராசா மூர்ச்சைதெளிந்து சகாதேவனைப்
பார்த்து புலம்புகிறது.

தோருவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
களைத்ததருமருக்கு களைகள்தெளியவென்று
காட்டில்தழையொடித்து கட்டழகிவீசலுற்றாள்
பச்சைதழையொடித்து பைங்கிளியாள்வீசலுற்றாள்
வீசக்களைதெளிந்து வேந்தெழுந்திருந்தார்
மூர்ச்சைதெளிந்தெழுந்து மோதிபுலம்புகிறார்
சாஸ்திரக்கொடிவேந்தனே சகாதேவராசாவே
முன்னேவருங்காரியத்தை முதலறிந்துசொல்வாயே
இனிநடக்குங்காரியத்தை எந்தனுக்குநீயுரைப்பாய்
அப்படியேகொத்தொரு அறிவுள்ளகண்மணியே
உன்னைப்பறிகொடுத்து உலகத்தில்வாழ்வேனோ
பனிரெண்டுதன்வருஷம் பாரவனந்தீர்ந்தபின்பு
அக்ஞாதவருஷமதுவுங்கழித்தபின்பு
பாரவனந்தீர்ந்து பட்டணம்போய்ச்சேர்ந்தால்
குந்தியம்மாளோடிவந்து குழந்தைகளெங்கேயென்றால்
மைந்தர்களெங்கேயென்று மாதாவுங்கேட்டாலே
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்தாயாற்கு
கட்டிக்கரும்பேயென் கண்மணியேயெங்கொளித்தாய்
முடித்தமுடியானாலும் முத்துமுடியாகுமோதான்
தங்குமுடியானாலும் உங்கள்முடியாகுமோதான்

தருமானாலும்பேர் தம்பியரையும் நினைத்துப்புலம்ப அப்போது
துரோபதை தன்புருஷர்களைப்பார்த்துப் புலம்புகிறது.

தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
மாலையிட்டமன்னவர்கள் மாண்டுவிட்டநீதியுண்டோ

ராவிசட்டுப்பிராசாக்கள் தரையில்விழுதாளாச்சு
பங்கிலியுறமன்றி மனமுறண்டுமென்று நந்தேன்
உடைத்துப்பெண்டுகள் ஒருவனுக்குகைகொடுப்பார்
ஐவன்-ஐவருக்குங்கைகொடுத்து அப்படலத்தாக்காளானேன்
செல்வத்தலையிலே செப்போடெழுதினதும்
அலைந்தபடித்துவரம் அமைத்தாரோபிரமதேவன்
ஆரைக்கழுத்தி ஆரைக்கழுத்திடபோனேனோ
நோரைக்கழுத்தி குளைக்கழுத்திடபோனேனோ
தந்தக்கழுத்தி தலைவிரிக்கனாளாச்சே
மல்லிகைச்சாலையிலே மயிர்விரிக்கனாளாச்சே
குங்குமச்சாலையிலே குழல்விரிக்கனாளாச்சே
தாயபோலெதய்வமே அனியாயஞ்செய்தீர்களே
பார்த்திருக்குமென்னைப் பாதவிக்கவிட்டீர்களே
கண்டிருக்குமென்னை கலங்கவைத்தீர்களே
நீதான்சார்த்தாசக்கள் சோர்ந்துவிடக்காரணமோ
மார்சார்த்தாசக்கள் மடிந்துவிடக்காரியமேன்
கட்டிலேமடிந்தலோ கையைவிட்டுநின்றீர்கள்
அடவியிலேதான்மடிந்து அலையவிட்டுப்பார்க்கிறீர்களோ
சூரியனைசாட்சிவைத்து தெருவில்லைகளைவிட்டீர்களோ
சந்திரனைசாட்சிவைத்து சாகத்துணிந்தீர்களோ
சந்திலேகைவிட்டு சமர்த்தாய்படுத்தீர்களோ
மஞ்சளிழந்து மணமிழந்து பூவிழந்து
தாலிசரடிழந்து தரணியில்நிற்பேனோ
மஞ்சள்சரடிழந்து மண்மேலிருப்பேனோ
கூடமடிவேன்காண் கொற்றவரேயுங்களுடன்
ஒக்கமடிவேன்காண் உத்தமரேஉங்களுடன்
நானுமடிவேன்காண் நாகர்களேஉங்களுடன்
அலண்டுபிரண்டழுது அடித்துக்கொண்டாள்மார்மேலே
எங்கேபோவானம்பிடித்ததுவென்றிருந்தேன்
தப்பாமல்வானமல்லோ தலையிலிடிந்ததே
என்றுபுலம்பியே இளங்கொடியாள்கண்ணழுதாள்
கோவென்றசத்தம் குமுறிப்புலம்புகிறாள்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
சாயம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
தேறாவடிவழகி துரோபதையேநீர்கேளும்
வசநாபிதன்னைதின்று மாண்டாரோதம்பியரே
காழம்புதீத்தாயே நல்லவிஷத்தண்ணீரை
இறவாமல்நாமு யிருப்பதென்னகாரணங்கள்
மாண்டதொருதம்பியர்கள் மன்னவர்கள்தன்னுடனே
நாமுமடிக்காக்கால் நன்றல்லதென்றெண்ணுகிறேன்
கூடமடிந்தாலே குணமென்றுயெண்ணுகிறேன்

ஒக்கமடிந்தாலே ஒருமிக்கத்தீர்ந்துவிடும்
கதிரைபத்துலெக்கலாங் காவேரிநீந்திடலாம்
விதியைத்துலெக்கவல்லோ வேறுவகையறியோம்
என்னசெய்வோமென்றுசொல்லி ஏங்கிபுலம்புகிறார்

தருமர்மனதரிய எம்பெருமாள் ஒட்டனாகவும் ஏமன் ஒட்டச்சியாகவும்வந்து பிணத்தையிழுக்கிறது.

ஏமனும்பெருமாளும் இருவருமாகவேதான்
தருமர்மனவரிய சாமிவடிவெடுத்தார்
எம்பெருமாள்மேகவண்ண ரென்னவடிவானார்
இருவருமாகவே இவர்களண்டையோடிவந்தார்
தருமரைத்தான்பார்த்து சாமியவருரைப்பார்
ஆரையாயிங்கே அழுதுபுலம்புவது
இந்தகுளத்திலே யெவர்தாகமுண்டாலும்
வசநாபித்தண்ணீரில் மாண்டுமடிந்தாலும்
எங்களையல்லாமல் எவரெடுக்கலாகாது
எடுத்துப்புதைக்கிறது எங்களுக்குத்தாரமையா
நாங்களெடுக்கும்படி ராசாவின்கட்டளைதான்
என்றுமேயெம்பெருமாள் இழுத்துப்போனார்வீமனையும்
இளவிசயனர்ச்சுனனை இழுத்துப்போனாள்ஒட்டச்சியும்

எம்பெருமாளும் ஏமனும் சவத்தை யெடுத்துக்கொண்டுபோக தருமராசா பரிதாபப்பட்டு தன்சவத்தை வாங்குகிறது.

சவத்தையவரிழுக்க தருமரவர்பார்த்து
கண்டாரேதருமரவர் கடுகவயிறெரிந்து
பார்த்துமனங்கலங்கிப் பதைத்துபுலம்பியவர்
ஒட்டர்களருகில்வந்து வுத்தமருமேதுசொல்வார்
ஆரையாஒட்டர்களே ஐயாவேநீர்கேளும்
அண்ணன்தம்பிநாங்களிங்கே அருகாகவந்திருக்க
தமயனெனநானும் தனதாகவந்திருக்க
பூமிகளைவெட்டிப் புதைக்கும்வயணமென்ன
எங்கள்பிணத்தைநீங்கள் இழுக்காதீர்விட்டுவிடும்
தரையிலிழுக்காதே தர்மமாய்ப்போகுதையா
பூமியிலிழுக்காதே புண்ணியமாய்ப்போகுதையா
கோடிசரணமையா கும்பிடுவேன்விட்டுவிடும்
ஆயிரஞ்சரணங்காண் அடிபணிந்தேன்விட்டுவிடும்
மூவாயிரஞ்சரணம் முடிசாய்த்தேன்விட்டுவிடும்
என்றுவருந்தினரே இபலானதர்மலிங்கம்
ஏமனும்ராமனும் இருவருந்தான்பார்த்து
பெருமாள்மனமிரங்கிப் பிரியமுடனாக
வீமனைத்தாழவிட்டார் வேந்தர்பெருமாளும்
தக்கபுகழுடைய தருமரவரோடிவந்து
வீமனையெடுத்துவந்து மெத்தெனவேதான்வளர்த்தி

வீமருகாக வேந்தருவீற்றிருந்தார்
தாராவடிவழகி துரோபதையாளேது சொல்வாள்
ஒட்டச்சிபாதத்திலே உத்தமியாள் தான்விழுந்து
தாயேஒட்டச்சியுன் தருமமாய்ப்போகுதம்மா
ஐவரை மாலையிட்ட மன்மதண்டி வலியாதே பூமியிலே
இந்த ஐவகத்தைபாண்டவரை வலியாமேதாயாரே
பிள்ளையாண்டவர்கள் புரட்டாதேமாதாவே
அங்கப்பொறுக்கவில்லை ஆச்சிநீவலியாதே
ஆயிரந்தெண்டனம்மா அடிபணிந்தேனுந்தனுக்கு
நூறாயிரஞ்சரணம் முடிவணங்கிதெண்டனிட்டாள்
கோடிசரணமம்மா கும்பிட்டேன் வந்துவிடும்
என்றுவருந்தினளே இளங்கொடியாள் துரோபதையும்
ஏமனும்பெருமாளும் இருவருந்தான்கேட்டு
பரிதாபந்தாளாமல் பார்த்தனைவிட்டார்கள்
தாராவடிவழகி துரோபதையுமோடிவந்து
இளங்கொடியாளர்க்கனரை எடுத்துவளர்த்திடவே
ஒட்டனும்ஒட்டச்சியும் உத்தாரமென்னசொல்வார்
எடுத்துப்புதையுமென்று ஏகிநடந்தார்கள்
தாராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
இன்றெல்லாமிங்கிருந்து ஏகிநடந்தார்கள்
நம்மாலேயாவது ராசாவேயொன்றுமில்லை
மாயன்பெருமாளை மனதில்நினைத்தழுதால்
வருந்தியழைத்தாலே வருவார்காணெம்பெருமாள்
மாயன்வந்தபிற்பாடு வயணந்தெரியுமென்றாள்

தருமராஜர் தன்தம்பிமார் பிழைப்பதற்காக எம்பெருமானை நினைத்துபுலம்புகிறது.

சாயம்பூமன்னவரும் தருமரவரென்னசொல்வார்
அடியளந்தபரமரே ஆதிமூலம்வாருமென்று
எல்லையளந்தசாமி யெம்பெருமாள்மேகவண்ணா
கல்லான அகலிகையை நல்லபெண்ணாக்கிவைத்தாய்
மூலமென்னுங்குஞ்சரத்தை காத்தமுகில்வண்ணா
ஆலிலைமேல்பள்ளிகொண்ட அரிராமாவாருமையா
மச்சவடிவுகொண்ட அச்சுதரேயிச்சகத்தில்
கூர்மவடிவுகொண்டு பாதாளம்போய்வந்தீர்
சிங்கமாயிரணியனைப் பங்கஞ்செய்துமார்பிளந்தீர்
ராமர்வடிவுகொண்டு ராவணனைச்சங்கரித்தீர்
அரக்குமாமாளிகையில் ஐவரையுங்காத்தீரே
அம்பலத்தில்துரோபதைக்கு அட்சயத்துகில்கொடுத்தீர்
மண்டலங்கள்தானறியமாளாத்துகில்கொடுத்தீர்
பகையாளிவாசலிலே பட்சம்வைத்துக்காத்தீரே
எதிராளிமுன்றலே எங்களைக்காத்தீரே

உன்மகிமையாரறிவார் உம்பர்பிரான்தானறிவார்
நீரே துணையல்லாமல் வேறேதுணையுமில்லை
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகங்களாகுது
கண்டமுகங்களெல்லாம் கடுத்தமுகங்களாகுது
ஏழையழுதகண்ணீர் கூறியவாள்தைக்கிலையோ
நானுமழுதகண்ணீ ரம்பங்கொண்டறுக்கிலையோ
என்றுபுலம்புகிறார் இயலானதருமரவர்
தருமருடனே தவிக்கிறாள் துரோபதையும்
கூடப்புலம்புகிறாள் கொம்பனையாள் துரோபதையும்
இப்படியாக விருக்கின்றவேளையிலே

தருமருந்துரோபதையும் வருந்துகிறதை எமனும்பெருமாளும் கேட்டு சந்தோஷித்து இவர்களிருவரும் வருவது.

எமனும்மாயவரும் இருவருந்தான்கேட்டு
சந்தோஷப்பட்டாரே சாமிபெருமாளும்
எமன்கடாமேலே எம்பெருமாள் கருடன்மேலே
இருவருமாகவே எழுந்தருளிவந்தார்கள்
தருமரிடத்திலே இருவரும்வந்துநின்றார்
தருமருந்துரோபதையும் சாமியைக்கண்டவுடன்
சரணமடைந்தாரே சாமிபெருமாளை
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டார்
இருவரையுந்தெண்டனிட்டு இட்டார்சிம்மாதனத்தில்
சிம்மாதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இருமிருமென்றுசொல்லி இருவரையுந்தெண்டனிட்டார்
எமனும்மாயவரும் இருந்தார்சிங்காதனத்தில்
வண்ணசிங்காதனத்தில் வந்திருந்தாரிருவருமாய்
அடியளந்தமாயவரும் ஆண்டவருமென்னசொல்வார்
என்னவகையாக எனையழைத்தீர் தருமலிங்கம்
அழுதுபுலம்புவதேன் ஆயாசமாகுவதேன்
என்னபுதுமை எனக்கறியச்சொல்லுமென்றார்
அப்போது தருமலிங்கம் ஆயருக்கேதுசொல்வார்
சாயாம்புமன்னவனார் தருமரெடுத்துரைப்பார்
மான்பிடிக்கவந்தவர்கள் மாயவரே தம்பியர்கள்
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்குடித்தார்கள்
விஷநீரைத்தான்குடித்து வேந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
தம்பியரைத்தேடியே தையலும்நான்வாறேன்
அழுதுபுலம்பிவந்து அண்ணரைக்கண்டோமே
தட்டியெழுப்பினேன் செத்துமடிந்திருந்தார்

கண்டுவயிறெரிந்து பதைத்துப்புலம்பினேன்
கண்டுவயிறெரிந்து கார்வண்ணர்புலம்புகையில்
கண்டுதெரியாத இராட்சதனைப்போல்ஒட்டனவன்
ஆடுதெரியாது ஆங்காரமுள்ள ஒட்டன்
ஒட்டன்பன்னிவிட்டவன் ஒட்டச்சிகூடவந்தாள்
இரக்கத்திலே எவரெவர்மாண்டாலும்
அடித்துபுதைக்கிறது இங்கேயவர்க்குத்தரவாம்
சீமருக்கனவை வெகுதூரங்கொண்டுபோனார்
தம்பிமாரிருவரையுந் தானிழுத்துப்போனார்கள்
அண்ணனைப்பதைத்துக் கதறிப்புலம்பினும்
பார்த்துமனந்தாளாமல் பற்றிவயிறெரிந்தோம்
பாதத்தின்மேல்விழுந்து பதுலட்சந்தெண்டனிட்டோம்
கட்டிவிடசொல்லி வெகுகோடிதெண்டனிட்டோம்
நாங்கள்பரிதாபம் பார்த்துமனமிரங்கி
அடித்துப்புதையென்றுசொல்லி இந்தவழிதான்கடந்தார்
அவர்கள்போனபிற்பாடு ஆண்டவனையுமேநினைந்தேன்
தம்பிமாரைவிட்டு தரிக்கமனங்கூடவில்லை
என்னசெய்வேனென்றுதா னேங்கிப்புலம்புகிறார்
தருமர்புலம்புவதை சாமியவர்பார்த்து
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
தருமர்முகம்பார்த்து சாமியுமேதுசொல்வார்
என்னசெய்வோம்தருமரே எழுத்துப்படியிவ்வளவு
அந்தெழுத்துங்கர்த்தனவன் அழித்தெழுதப்போவதில்லை
சதியைத்தொலைக்கலாங் காவேரிசேர்ந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வெல்லவகையறியோம்
பிரமனெழுத்திற்றுப் பிசகுகள்வாருந்த
மாண்டாரெழுந்தாலே வையகங்கள்கொள்ளுமோ
செத்தாரெழுந்தாலே செகமெல்லாங்கொள்ளுமோ
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டாலும்
ஆண்டாண்டுதோறு அழுதுபுரண்டாலும்
மாண்டார்வருவாரென்று மனதில்நினையாதே
செத்தார்வருவாரென்று சித்தத்திலெண்ணாதே
தம்பியரையெடுத்து தகனங்கள்செய்யுமென்றார்
இவ்வசனமாகவே எம்பெருமாள்சொல்லவுமே
தருமர்மனதறிய சாமியுரைக்கவுமே

எம்பெருமாள் செத்தவரைதகனஞ்செய்யவென்று தருமர்
மனமறியச்சொன்னார் அதுகேட்டு தருமருந்
துரோபதையும்புலம்பி சுவாமியை
மடிபிச்சை கேட்டது.

எம்பெருமாள்மாயனும் இப்படித்தானுரைக்க
சாமியுரைகேட்டு தருமர்மிகத்தளர்ந்து

சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
மெத்தமனதுநொந்து வேந்தர்புலம்புகிறார்
அடித்தமயில்போல அழுதுபுலம்புகிறார்
பச்சைபுழுவெடுத்து பெருநெருப்பிற்போட்டாப்போல்
துடித்தபுழுபோல துள்ளிப்புலம்புகிறார்
உன்னையேநம்பி உயிர்கொண்டுலாவுகிறேன்
நம்பியிருந்தவென்னை நட்டாற்றில்விட்டுவிட்டாய்
இப்படிநீகையைவிட்டால் எப்படிநான்பிழைப்பேன்
ஆற்றங்கரையருகில் ஆலமரம்போலானேன்
குளத்தங்கரையருகில் கோடாலிக்காம்பானேன்
நட்டாற்றிலேமுளைத்த நாணலுங்கோரையானேன்
உள்ளங்கைநெல்லிக்கனி உருகுலைந்துபோகுதே
கையில்செபமாலை கணங்குலைந்துபோனேனே
இனியிந்தபூமியிலே இருக்கவுமாகாது
என்னையுங்கொன்றுவிட்டு எம்பெருமாள் தகனஞ்செய்யும்
நால்வருடனாக நம்மைத்தகனஞ்செய்யும்
என்றுபுலம்பினார் இயலானதர்மலிங்கம்
நகில்வளர்த்தபத்தினியாள் துரோபதையேதுசொல்வாள்
தமையனருகில்வந்து தையலருமேதுசொல்வாள்
அண்ணனருகேவந்து அழுதுபுலம்புகிறாள்
மங்கிலியப்பிச்சையது மாயவரேதாராயோ
மூநதாணிபிச்சையது முகுந்தரேதாராயோ
மன்றுமடியேந்தினாள் இளங்கொடியாள் துரோபதையும்

தருமருந்துரோபதையும் புலம்புவதை எம்பெருமாள் பார்த்து மனமிரங்கி இங்கேயிருந்து வேறேயொரு சோகியாகவும் வந்து நாலுபேரையுமெழுப்புகிறது.

தருமருந்துரோபதையுந் தானழுததைப்பார்த்து
கரியமால்மனமகிழ்ந்து கடுகநினைவுகொண்டு
இவர்களுக்குமுன்னாலே இருந்தாரேமாயவரும்
எம்பெருமாள்மாயவரும் என்னவடிவெடுத்தார்
வேறேயுருவாக விஷ்ணுவடிவெடுத்தார்
மலையாளசோகியைப்போல் வாறாரேமாயவரும்
கைதனிலேமருந்துபையுங் காவியுடுப்புகளும்
தோளிலேசோளியுடன் தொங்குகிறதாடிகளும்
கையில்செபமாலை கமண்டலந்தன்னுடனே
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
நானூறும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனைப்போல்
தோலும்நரம்புகளுந் தொங்குங்கிழவனைப்போல்
முள்ளுந்தடுத்தாலே முப்பதிடம்விழுவார்
நாணல்தடுத்தாலே நாற்பதிடம்விழுவார்
அறுகம்புல்தடுத்தால் ஐம்பதிடம்விழுவார்

தள்ளாடித்தத்தளித்து தடிக்கோலையூன்றிக்கொண்டு
பஞ்சாட்சரமோதி பதைக்கவழியாக
வெளிவாவென்றுசொல்லி சீக்கிரமாய்வந்தாரே
ஆரவாரவென்றலவோ அந்தவழியாகவந்தார்
தருமாருகில்வந்து அருமைஜோகியேதுசொல்வார்
அத்திபுரத்திற்கு சத்திபோரேனிதுவழியாய்
ஆரோயிருவர்கள் அழுதுபுலம்பினார்கள்
ஏதுக்கழுதார்கள் என்றறியஓடிவந்தேன்
அழுதவயணமென்ன ஐயாவேசொல்லுமென்றார்
புலம்பியழுவதென்ன புதுமைகளைச்சொல்லுமென்றார்
அப்போதருமலிங்கம் ஆணழகரேதுசொல்வார்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அப்போதெடுத்துரைப்பார
பாண்டிக்கவந்தவர்கள் வனத்திலேதம்பியர்கள்
தாகதாபிதண்ணீருண்டு மாண்டாரேதம்பியர்கள்
கடிநீரைத்தான்புசித்து வேந்தர்மடிந்தார்கள்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தஞ்சேர்ந்தார்கள்
ஒப்பிட்டவாளை யுறையுருவிவிட்டாப்போல்
தப்பிப்பிழையாமல் சதிசெய்துமாண்டுவிட்டார்
என்றுசொல்லிதருமலிங்கம் ஏங்கிப்புலம்பினார்
மாயவடிவெடுத்த மலைஜோகியேதுசெய்தார்
இறந்தவொருநாலுபேரும் என்னவேணுமுந்தனுக்கு
மாண்டவொருமன்னவர்கள் மன்னருக்கென்னவேணும்
உண்மையைச்சொல்லுமென்றே வுத்தமரைக்கேட்கலுமே
தக்கபுகழுடைய தருமரெடுத்துரைப்பார்
இறந்தவர்நாலுபேரும் எந்தனுக்குத்தம்பியர்கள்
மல்லிகையாள் துரோபதைக்கு மாலையிட்டமன்னவர்கள்
எங்களைத்தனியாய்விட்டு இறந்துமடிந்தார்கள்
என்றுமவருரைத்து ஏங்கிப்புலம்புகிறார்
மாயவடிவெடுத்த மலைஜோகியென்னசொல்வார்
இறந்தவர்நாலுபேரில் எவர்வேணுமுந்தனுக்கு
செத்தவரிலொருவரைநான் சீக்கிரமெழுப்பித்தாரேன்
எவர்வேணுமுந்தனுக்கு இப்போதேசொல்லுமென்றார்
ஆமானால்சொல்லிவிடும் அல்லவென்றால்நான்போரேன்
தக்கபுகழுடைய தருமரவர்கேட்டு
மலைஜோகிசொன்னதற்கு மன்னரெடுத்துரைப்பார்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்தாயார்குந்தியம்மாள் ஈன்றெடுத்தமூவர்களில்
இருவரிறந்தார்கள் இருக்கிறேனொருவன்
மறுதாயார்மக்கள்தனில் நகுலனையெழுப்புமென்றார்

தக்கபுகழுடைய தருமருரைக்கவுமே
மாயமாய்வந்தொரு யமராஜா தான்கேட்டு
தருமர்நினைவறிந்து சந்தோஷப்பட்டாரே
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
தேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உண்ணுமயல்பூரித்து உடம்பெல்லாம்பூட்டுவிட்டு
பரியமால்வுளமகிழ்ந்து காலனையெச்சரித்து
நால்வருயிரையுமே நமனுமேவிட்டிடென்றார்

விஷநீர்குடித்து இறந்துபோனநாலுபேரும்
பெருமாளால் எழுந்திருந்தது.

எம்பெருமாள் தானுரைக்கயேமனவர்கேட்டு
அப்படியேநல்லதென்று அந்தயெமனாரும்
பிடித்தவுயிரைவிட்டுப் போகவெழுந்திரென்றார்
தூங்கியெழுந்ததுபோற் பாங்காயெழுந்தார்கள்
துணிவியெழுந்தாரே துரைகளவர்நாலுபேரும்
மாயன்பெருமாளை வணங்கியேதெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முழுவணங்கித்தெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை கண்டுமனமகிழ்ந்து
வாழ்த்தியெடுத்தவரும் மார்போடேகொண்டணைத்து
சந்தோஷமாகத் தானிருந்தார்பெருமானும்
தக்கபுகழுடைய தருமரெடுக்கணைத்து
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துத்தெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமரடிபணிந்து
வாழிவீர்வளர்ந்திடுவீர் வாழ்ந்திருப்பீரென்னுடனே
நிற்பீர்நிலைதரிப்பீர் நீடூழிவாழ்ந்திருப்பீர்
கல்பதித்த தூணதுபோல் கலங்காமல்வாழ்ந்திடுவீர்
என்னைப்பெறுவீர் செகத்தார்முடியறிவீர்
மைந்தர்களைப்பெற்றெடுத்து மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவீர்
போருக்குப்போயிடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
ஆல்போலவேதழைத்து அருகுபோலவேரோடி
மூங்கில்போலேந்நாளும் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்களென்றுசொல்லி மனங்குளிரவாழ்த்தினார்
இருமிருமென்றுசொன்னார் இனிதாகத்தம்பிமாரை
அண்ணருரையாலே அழகாகவீற்றிருந்தார்
மாயருரையாலே மகிழ்ச்சியாய்வீற்றிருந்தார்
தம்பிமாரைக்கண்டல்லோ சந்தோஷப்பட்டாரே
சோராவடிவழகு தம்பியதையுங்காண்பார்த்து
புருஷர்களைப்பார்த்து பூரித்தாளுத்தமியும்
கணவரைக்கண்டல்லோ கட்டழகியமனங்குளிர்ந்து
இப்படியாக இவரிருக்கும்வனையிலே

எம்பெருமான் துரியோதனன் கூறும் காளமகாரிஷி
செய்யும் யாகம் வேதாளம்மையும் தான் இவர்
களைக்காப்பாற்றினதும் பஞ்சவர்களுக்
குச் சொல்லுகிறது.

மாயன்பெருமானும் வார்த்தையைக் கேட்டுச்சொல்வார்
துரியோதனன்செய்த சேதியெல்லாமசொல்லுறார்
காளமகாரிஷியைக் கடுகியேவருந்தியவன்
கொல்ல அனுப்பினான் கொப்பெனவேயுங்களைத்தான்
காளமகாரிஷியுங் கடுகிவனத்தனிலே
அக்கினிக்குழியருகே அனைத்தபடிபண்ணி
வேதாளமுன்பெண்ணி வேந்தருங்களைக்கொல்ல
ஆமைப்பொய்கையொன்று தண்ணீருமுண்டுபண்ணேன்
யானுகவத்தலவே வரவழைத்தேனுங்களைத்தான்
அந்தமாய்நான்போகி அனைவரையுங்கொன்றுவிட்டு
ஓட்டினைப்போலேவந்து உங்களைவலித்திழுத்தேன
பின்னையலங்கண்டேன் இராசாவேயுங்களாலே
நான்றமாயனுமைக்கேட்டு வணம்பெரியதருமராயர்
பாதத்திலேவிழுந்து பணிந்துமுறையமிட்டார்
உம்மையன்றிவேறுதெய்வம் ஒருவரெனக்கில்லையையா
உமையைச்சதமென்று உயிர்கொண்டலைகிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
நீரேதுணையல்லாமல் வேறேதுணையுமில்லை
அடியாரைக்காக்கிறது ஆண்டவரேயுன்பெருமை
காக்கிறேனென்றுசொல்லி கங்கணங்கட்டினீரே
இரட்சிக்கவேணுமென்று எம்பெருமானாய்ப்பிறந்தீர்
இன்னமென்னவினைவருமோ யானறியேனாண்டவனே
ஏதேதுசெய்வானோ இராசன்துரியோதனன்
அத்தனைக்குங்வந்திருந்து அடியாரைவாருமென்றார்
என்றல்லேயைபெருமாய் இறங்கியடிபணிந்தார்
மெத்தமனமகிழ்ந்தார் மேகவண்ணவெம்பெருமாள்
சித்தமகிழ்ந்தார் தேகமெல்லாந்தான்குளிர்ந்தார்
நல்லதுபஞ்சவரே நாசர்களைநீக்கரும்
இக்கானகத்தைவிட்டு இன்னமொருவனத்தில்
மற்றுமொருவனத்தில் வாசங்கள்பண்ணுமென்றார்
என்னவினைவந்தாலும் என்னைநினையுமென்றார்
போய்வாரேனென்று பெருமாள்பயணமிட்டார்
ஏமன்கடாவின்மேல் எம்பெருமாள்கருடன்மேல்
வாகனத்திலேயேறி வழிபிடித்துப்போறார்கள்

எமபுரந்தான்தேடி யேமனும்வந்துவிட்டான்
காலாம்வருஷம் முடிந்ததுபஞ்சவற்கு

நான்காவது காளமகாரிஷிவனம்-முற்றிற்று.

ரு-வது, சயிந்தவமகாரிஷிவனம்.

ஐந்தாம்வருஷம் பிறந்ததுமைவருக்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
துத்திபுளிகரணை தும்பையுந்தூதுவளை
தின்றுதிரிகிறார் தேசாந்திரிபோலே
சயிந்தவரிஷிவனத்தில் தானடந்தார்பஞ்சவர்கள்
ஓரடுக்குபர்னசாலை உண்டுபண்ணுரைவர்களும்
மூன்றடுக்குபர்னசாலை முடிமன்னருண்டுபண்ணூர்
ஐந்தடுக்குபர்னசாலை ஆணழகருண்டுபண்ணூர்
ஆறடுக்குப்பர்னசாலை ஐவர்களுண்டுபண்ணூர்
ஏழடுக்குப்பர்னசாலை எழிலாகவுண்டுபண்ணூர்
பர்னசாலைமேலாக பஞ்சவர்கள்குடியிருந்தார்
ஐவர்பஞ்சப்பாண்டவர்கள் அவ்வனத்திற்றனிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாள்வாசம்பண்ணூர்
அநேகநாள்சென்றபின்பு ஆரணங்குதுரோபதையும்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கையிலே
உச்சிதங்கள்பார்த்தே உலாவிவருகையிலே
ஆகாயந்தன்னளவாய் அங்கேயொருமரந்தான்
வளர்ந்துதழைத்து மரத்திலேபழுத்திருக்கும்
ஒண்டிப்பழந்தான் உயர்ந்தகிளைமேலிருக்கும்
சூரியகாந்தியைப்போல் தோணுகுது துரோபதைக்கு
மெத்தாசைப்பட்டாளே மெல்லியிளங்கொடியாள்
கண்டாசைப்பட்டாளாங் காண்டீபன்தேவியரும்
இந்தகனியை எவர்பறித்துதான்கொடுப்பார்
தருமருடன்சொன்னால் தலைவரிதைக்கேளாரே
மதவீமருக்குரைத்தால் வயிறாரவுண்டிடுவார்
நகுலசகாதேவர் நம்மால்முடியாதென்பார்
அருச்சுனற்குத்தானுரைத்தால் அவராலேயாகுமது
மற்றொருவர்தன்னாலே மாளாதுகனிபறிக்க
அருச்சுனரைமெள்ள அழைத்துவருவோமென்று
மெல்லநடந்தாளே வேல்பொருதுங்கண்ணாளும்
கொஞ்சிநடந்தாளே கொம்பேரிடையாளும்
அருச்சுனராசரண்டை ஆணழகிவந்துநின்று
அருச்சுனரைக்கண்காட்டி அழைத்தாளேஇப்புறத்தில்
ஜாடையறிந்தவலோ தார்வேந்தனோடிவந்து



அர்ச்சுனன் துரோபதைக்காக எய்தமாங்கனி நிலத்திலிருந்து எடுக்கக்கூடாமையால் எம்பெருமாள் மனஞ்சோதித்துக்கனியைமரத்தில் ஒட்டும்படிசெய்தது.

தருமாறியாமல் தையலருமேதுசொல்வாள்
ஒருமனுவுளங்களுக்கு உத்தாரங்காருமென்றாள்
அந்தவுரைகேட்டு அருச்சுனருமேதுசொல்வார்
மனதில்நினைத்ததெல்லாம் மயிலினையேகேளுமென்றார்
சிந்தையிலெண்ணமெல்லாம் சீராகச்சொல்லுமென்றார்
கேட்டமனுவுனக்கு கிளிமொழியேதாரேனென்றார்
உரைத்தபடியுனக்கு தருவேன்காண்வுத்தமியே
அந்தமொழிகேட்டு ஆரணங்குதுரோபதையும்
கொஞ்சினவார்த்தையுடன் கோபாலன் தங்கையருந்
முத்துநகையாளும் முருகுழலாளேதுசொல்வாள்
காணாதுகண்டேனையா கண்டாசைப்பட்டேனையா
பாராதுபார்த்தேனையா பார்த்தாசைப்பட்டேனையா
தங்கத்தைக்காய்ச்சியே தரையில்கவிழ்த்ததுபோல்
பொன்னையுருக்கியல்லோ பூமியிலேவிட்டதுபோல்
சூரியனைப்போலழகாய்த் தோணுதுமாங்கனிதான்
சந்திரனைப்போலழகாய்த் தானிருக்குமாங்கனிதான்
அக்கனியையுண்பதற்கு ஆசைமெத்தத்தோணுது
மாங்கனியையுண்பதற்கு மனதுமெத்தத்தோணுது
அந்தகனிபறித்து அருச்சுனரேதாருமென்றாள்
மாங்கனிதனைப்பறித்து மன்னவரேநீர்தாரும்
என்றுவணங்கினளே இளங்கொடியாள்பாஞ்சாலி
வணங்கியெழுந்திருந்து மன்னனுக்கேதுசொல்வாள்
தனஞ்செயரேகனிபறித்துத் தாராமற்போனக்கால்
தண்ணீர்குடியேன்காண் தாகவிடாய்தீரேன்காண்
ஆறுமாதமானாலும் அன்னம்புசியேனென்று
சொல்லிப்பிணங்கினளே துரோபதைபாஞ்சாலி
ஆறுலழகுமன்னன அருச்சுனனேதுசொல்வான்
கனிக்காகநீபிணங்க லாகுமோகட்டழகி
இதற்காய்பிணங்குவரோ இட்சணமேதாரேனென்றான்
அந்தரமாயிருந்தாலும் அறுத்துநான்தாரேனென்றான்
எந்தமரத்திமேல யிருக்குதுபெண்ணரசே
பழங்களிருக்கிற பாரவனமெங்கேயென்றான்
என்றுமவர்கேட்க இளங்கொடியாளப்போது

அருச்சுனன் துரோபதைக்கு மாங்கனிபறித்துக் கொடுக்க வருகிறது.

வாருமையாவென்றுசொல்லி வணங்கியெழுந்திருந்து
அழைத்துவருகிறாள் அர்ச்சுனராஜாவை
கூட்டிவருகிறாள் கொடியெனவேயர்ச்சுனரை
கடந்தார்சிலதூரங் கனியிருக்குமவ்வனத்தே
வந்தாரிருவருமாய் மங்கைதுரோபதையும்
இதுதான்மாமென்று இளங்கொடியாள்காட்டலுற்றாள்

வீறுபுகழ்மன்னன் அர்ச்சுனராஜனை
மரத்திலிருந்திருந்த மாங்கனியைத்தான்பார்த்து
ஆசைப்போகவேணும் அந்தரமாயிருக்கிறது
இந்தக்கனிபறிக்க வராய்முடியுமென்றாள்
சொந்தமுடனாத்தி கேட்கிறமாங்கனியை
எப்படிக்கொண்டாய்பறித்து தந்திடலாய் துரோபதைக்கு
என்றுநினைத்து எழில்விசையனப்போது
வில்லெடுத்துநாரிபூட்டி வில்லிருணத்தொனித்தான்
அம்பறாத்தூணியிலே அம்புதானெடுத்து
அந்தமந்திரபாணமதை அருச்சுனனுமுச்சரித்தார்
மந்திரத்தையிட்டு வாங்கிவிட்டானக்கனிமேல்
பக்குவமாகவிட்டவே தோள்புரளவிட்டானே
வருஷத்திலொருக்கால் மாங்கனியைத்தருது
பத்தியமுனியதிலே பாணமறுக்கையிலே
அந்தக்கனிவிழுகாம் அண்டரண்டந்தானதிர
பூமியதிர்ந்ததுவாம் பூலோகங்கலங்க
ஏழுமதிர்ந்ததுவாம் கயிலாசந்தத்தளிக்க
தேவலோகமதிர்ந்து கெந்தருவலோகமெல்லாம்
ஒன்றுபெருங்காற்றாய் ஒருமிக்கநீர்வாங்கும்
பூமியதிர்ந்திடவே புஜத்தோடேபுஜமதிர
ஆதிசேடன்தானும் அதிர்ந்துமேகஞ்சுகக்க
ஆகாசமதிர அங்கப்போய்விழுந்தது
மரத்திலிருந்தகனி மண்மேலவிழுந்தது
அர்ச்சுனனுந்துரோபதையும் அக்கனியைப்பார்த்தார்கள்
பாரமலைபோலே பருவதம்போற்றோணுது
இருவராலாகாது இந்தக்கனியெடுக்க
இந்தக்கனிதனை யெடுத்துமுடியாது
அறமுறுமன்னன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
வெற்றிமதயானை வீமனையழையுமென்றான்
அப்படியேசொல்லிநின்றான் ஆனந்தவாழ்மாரி

துரோபதை வீமனையழைக்க வீமன்வருகிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
அன்னமதுபோலே ஆரணங்குவந்தமல்லோ
வெற்றிமதயானை வீமாருகில்வந்து
அருச்சுனராஜருமை அழைத்தோடிவாருமென்றார்
சீக்கிரம்வாருமென்று தேன்மொழியுந்தெண்டனிட்டாள்
வெற்றிமதயானை வீமாருகில்வந்து
அப்படியேசொல்லிநின்றா ஆனந்தவாழ்மாரி

இருந்தவிடத்தைவிட்டு எழுந்துநடந்தானே
இருவருமாகவே ஏகிநடந்துவந்து
கனியிருக்குமவ்வனத்தே கடுகியேவந்தார்கள்
தருமரறியாமல் அழைத்துவந்தாள்தையலரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
அசைக்கியேபார்த்தானே அசையவில்லைஅக்கனிதான்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
நகுலசகாதேவ ராசாவையழையுமென்றான்
ஆரணங்குதுரோபதையும் அப்படியேநல்லதென்று

துரோபதை நகுலசகாதேவர்களை யழைக்க அவர்கள் வருகிறது.

கொஞ்சியேவந்தாளே கொம்பேரிடையாளும்
நகுலசகாதேவ ராசாக்கள்முன்னேவந்து
அருச்சனரும்வீமரும் அழைக்கிறாருங்களைத்தான்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்
நகுலசகாதேவ ராசாக்கள்தான்கேட்டு
அப்படியேநல்லதென்று ஆனந்தமாயெழுந்தார்
மூவர்களுமொன்றாக மூடிவந்தார்கானகத்தே
மாங்கனிதானிருக்கும் வனத்தில்வந்துசேர்ந்தார்கள்
நகுலசகாதேவ ராசாக்கள்வந்தாரென்று
எல்லவருமொன்றாகி எடுப்போங்கனியையென்று
ஐந்துபேருங்கூடி அக்கனியைத்தானெடுத்தார்
என்னபலங்கொண்டு இழுத்துவலித்தாலும்
எந்தவிதத்திலேயும் எடுபடலை அக்கனிதான்
சிந்தைகலங்கினார்கள் திடுக்கிட்டுமெய்மறந்தார்
மெத்தபயமாச்சே வேந்தர்கள்நால்வருக்கும்
தோராவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
அழகானதருமருக்கு அறிக்கையிடும்பெண்ணேயென்றார்
ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்று

மாங்கனியினால் ஐந்துபேருந்திகில்பட்டுத் துரோபதை தருமரையழைக்க தருமர்வருகிறது.

துள்ளியெழுந்தாளே துரோபதைநாயகியும்
ஓடிநடந்தல்லவோ ஒருநொடியில்வந்தாளே
தருமரெதிரில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
வாள்விசையருச்சுனரும் மாங்கனியைத்தானறுத்தார்
எடுத்தாலெடுபடலை யென்றுவரச்சொன்னார்காண்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்
தக்கபுகழுடைய தருமராதுகேட்டு
இது-என்ன அதிசயங்களென்றேயெழுந்திருந்தார்
தருமருந்துரோபதையும் இருவரும்வந்தார்கள்

மாமரத்தருகே வந்தார் மகாராசர் தருமலிங்கம்
உற்றுற்றுப்பார்த்தாரே யோசனைபண்ணுகிறார்
தம்பிமார்எல்லாரையும் தருமராவரழைத்து
காயாம்பூமன்னவனார் தருமராங்கேதுசொல்வார்
ஆருண்டமாங்கனியோ அறியேனே தம்பியரே
யாருண்டமாங்கனியோ யேதுமறியேனே
எந்தெந்தத்தவர்கள் எடுத்துபுசிக்கிறதோ
சத்தரிஷியவர்கள் சந்யாசியுண்கிறதோ
மேலுலகத்தருவர் சாலவுண்கிறதோ
கைமோசம்வந்ததென்று கலங்கியே தருமராயர்

மாங்கனியினாலே மோசம்வந்ததென்று தருமர் எம்பெருமானை
நினைத்து தோத்திரம்பண்ணுகிறது.

சக்கபுகழுடைய தருமராவர்பயந்து
சிந்தைதகலங்கியவர் திக்கிட்டுமெய்மறந்து
உள்ளங்குலைந்தாமல்லோ உடம்புவிடவிடத்து
மன்னர்மனஞ்சலித்து மனதிலேயெண்ணுகிறார்
ஆரைநினைக்கிறார் அளவற்றசிந்தையிலே
யாரைநினைக்கிறார் எண்ணமற்றசிந்தையிலே
மாயன்பெருமானை மனதில்நினைத்தாரே
அண்டமுழுதளந்த ஆதிமூலமெங்கேவர
ஏழுலகையாண்டசுவாமி எம்பெருமானிங்கேவாரார்
மல்லரைக்கொன்றுகுறைத்த மாயவரிங்கேவர
தாடகையழித்த தயாளகுணமிங்கேவர
ஆலிலைசயனத்தீர் ஆண்டவரேவாருமையா
எல்லையளந்தவரே யெம்பெருமானிங்கேவர
ஏழைவருந்துகிறேன் எழுந்தருளிவாருமையா
இப்படியாக இவர்வருந்தும் வேளையிலே

தருமர் இங்கேயிப்படி வருந்துவதை எம்பெருமாளறிந்து
தான் தருமரண்டைவருகிறது.

பஞ்சவர்கள்வருந்துவதை பாரளந்தார்தாமறிந்து
ஐவருக்குமங்கேதான் அனர்த்தம்வருகுதென்று
சயிந்தவரிஷியாலே சாபம்வருகுதென்று
ஆயரவரறிந்து அங்கனமேதானெழுந்து
ஐவரையுங்காக்கவென்று அப்பொழுதேவாராரும்
பட்டமாக்கருடனேறி மாயவனார்வாராரே
வனமாய்வனந்தாண்டி வாராரே தருமரண்டை
காடுசெடிதாண்டி கரிமலைதான்தாண்டி
ஆறுகுளந்தாண்டி அதிகவனந்தாண்டி
கல்லுமலைமுள்ளும் செடியும்வனந்தாண்டி
[illegible] தான்கண்டார்மாயனும்

பஞ்சவர்கள் தானிருக்கும் பாளையத்தில்வந்தார்
மாயவரைக்காணுகையில் எம்பெரியதருமராயர்
லுக்குபெருமாளைவே ஆயரைத்தெண்டனிட்டார்
முக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து கமல்கரித்து தெண்டனிட்டார்
தெண்டனிட்டபஞ்சவர்கள் திரும்பியெழுந்திருந்து
சிங்காதனங்களிட்டார் ஸ்ரீராமர்வீற்றிருக்க
இட்டதோராசனத்தில் எம்பெருமாள்வீற்றிருந்தார்
பஞ்சவரைத்தான்பார்த்து பாரளந்தாரேதுசொல்வார்
ஏதுவகையாக என்னையழைத்தீர்கள்
அழைத்ததொருகாரியந்தனை அடைவுடனேசொல்லுமென
உங்கள்-மனதிலிருக்கிற மருமத்தைச்சொல்லுமென

தருமர்மாங்கனியின்வரலாறுசொல்லுதல்.

மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
சாயம்புமன்னவனாம் தருமரவரேதுசொல்வார்
ஆகாததம்பிமார சடருடன்பிறந்தேன்
பொல்லாததம்பியுட னல்லற்படப்பிறந்தேன்
எந்தன்விதிவசத்தை என்னவென்றுசொல்வேன்காண்
ஆருண்ணுமாங்கனியோ அறியேனேமாயவரே
ஏவருண்ணுமாங்கனியோ வேதமறியேனே
ஆகாததம்பிமார்கள் அறுத்துவிட்டாரென்னசெய்வேன்
எம்பெருமாள் தனையழைத்தா லெல்லாந்தெரியுமென்று
வந்தீரேமாயவரே வணக்கள்செல்லுமென்றார்

எம்பெருமாள் மாங்கனியின் வரலாறுகேட்ட பஞ்சவர்களை பயங்காட்டி மனஞ்சோதிக்கிறது.

தருமருரைகேட்டு சாமியவரேது சொல்வார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுசொல்வார்
கைமோசம்வந்ததே கட்டமாமென்னசெய்வோம்
தபசுபெரியவர்காண் சமீக்கவரிஷியாரும்
வரதத்திற்பெரியவர்காண் மாதேவர்க்கொப்பிடலாம்
போகத்திற்பெரியவர்காண் வற்றசக்கியாசியர்காண்
நிருது நாருசுவமாட்டும் போசத்திலேயிருப்பார்
அவ்வருஷம்சென்றபின்பு அறுத்திடுவார்மாங்கனியை
அறுத்துப்புசித்திடுவார் அந்தமகாமுனியும்
அந்தமகாரிஷியும இந்தவனத்தோரு
வருஷந்தானாச்சே மாங்கனியறுத்தீரே
வந்துமவர்பார்த்து மாங்கனியெங்கேயென்றார்
கோபித்தகண்சிவந்து கொலைநினைப்பாரே
கொல்லநினைப்பாரே குடிகேடுவந்திடுமே
கல்லாகமண்ணாகச் சபித்தசபிப்பாரே
முள்ளாகமண்ணாக முன்னேசபிப்பாரே

நின்றான் பிழைத்திருந்தேன் இறந்துவிடநாளாச்சே
சென்றநான் பிழைத்திருந்து செத்துவிடநாளாச்சே
திரிபண்செய்தவனுஞ்சனக்கு சிவன் தப்பிபிழைத்தீரே
பாபாவிசெய்ததற்கு மாளாமலிருந்தீர்கள்
இத்தவனத்திலே இறந்துவிடக்காலமோதான்
சயிந்தவரிஷியாலே சாவுவரநாளாச்சே
இதற்கோவென்னையழைத்தீர் என்றாரேமாயவனுர்

எம்பெருமான் கனிபின்வரலாறுசொல்லி கன்றுமேலேன்றும்
ஆகாதென்றுசொல்ல தருமர்புலம்புகிறது.

இப்படியாகவேதான் செப்பதிருமாலும்
இவ்வார்த்தைகேட்டாரோ எழிலான தர்மலிங்கம்
புகில்வண்ணாமுன்றுலே முறையிடத்தொடங்கினர்
ஆகாததம்பிமார் அசடருடன்பிறந்தேன்
பொல்லாததுஷ்டருடன் பிறந்ததொருதன்மையினால்
என் - அங்கக்குலையுதே ஆண்டவசேவென்னசெய்வேன்
என்னையறியாம லிக்கனியைத்தானறுத்தார்
அறிந்தேதேயாமானால் அறுக்கவொட்டேனிக்கனியை
பார்த்தேனேயாமானால் பறிக்கவொட்டேன்மாங்கனியை
தெரியாதார்செய்தகுற்றந் தேவர்மனம்பொறுத்து
உன் - உள்ளங்கைநெல்லிப்பழம் வுருகுலைந்துபோகாமல்
என் - பெட்டியின் பூஷணங்கள் பெருமைகுலையாமல்
உன் - தோளில்செபமாலை தொண்டழிந்துபோகாமல்
உன் - கையில்செபமாலை கணந்துலைந்துபோகாமல்
கார்க்கக்கடனுனக்கு கரியமாலெம்பெருமாள்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
என்று தருமரங்கே நின்றுபுலம்பக்கேட்டு
மாயனபெருமானும் மறுவார்த்தையேதுசொல்வார்
என்னைவெறுக்காதே எனமேலேசலியாதே
உத்தமரேவுங்களாலே மெத்தபொழுதாச்சே
ராச்செல்வருணும் என்றார்பெருமானும்
தக்கபுகழுடைய தருமரவரேதுசொல்வார்
பரிதாபங்கள்பட்டப் பார்த்துமேபோவதற்கு
மனமும்வருகிறதோ மாயவரேயுந்தனுக்கு
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்மாயவரும்
புகழ்வேந்தர்வார்த்தைக்குப் பொருந்தவேணுமிக்கனிதான்
ஐவருடவார்த்தையினால் அம்மரத்திலொட்டவேணும்
அல்லாதேயாமானால் ஆராலுமுடியாது
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
அடியேனுலாவந்தது ஆண்டவரேசொல்லுமையா

எம்பெருமாள் ஐவருடைய எண்ணமும் துரோபதை எண்ணமும் அறிந்து மாங்கனி மரத்தில் பொருந்தினது.

தருமருரைகேட்டு சாமிமனமகிழ்ந்து
மாயன்பெருமாளும் வார்த்தையரேதுசொல்வார்
ஐவர்மனதறிய ஆண்டவரேதுசொல்வார்
தக்கபுகழ்பெரிய தருமரேநீர்கேளும்
உன்-மனதிலேதானிருக்கு மர்மத்தைச்சொன்னீரானல்
வஞ்சனைகளெண்ணுந்த மனக்கவடுவையாதே
உண்டானபடியாக வுரைத்தீரேயாமாகில்
அற்றுவிழுந்தகனி அம்மரத்திலொட்டுமென்றார்
மண்மேல்விழுந்தகனி மரத்தின்மேலேறுமென்றார்
அல்லாதேயாமானல் அக்கனிபொருந்தாது
இல்லாதேயாமானல் இறந்துமடிவீர்கள்
சொல்லாதேயாமானல் சுருக்காய்மடிந்திடுவீர்
பெருமாளவர்சொல்லப் பேர்பெரியதருமலிங்கம்
மாயருரைகேட்டு மகாராசரேதுசொல்வார்
மனதிலிருக்கின்ற மர்மத்தையேதுசொல்வார்
தன்மனதிலுள்ளபடி தார்வேந்தரேதுசொல்வார்
பெரியதந்தைபெற்றெடுத்த பிள்ளைதிரியோதிரன்
தம்பிமார்தன்னுடனே தானுஞ்சுகமானல்
ராச்சியம்நலமாகி நாமும்சுகமானல்
நாடெங்கும்வாழ்ந்திருந்தால் கேடொன்றுமில்லையென்று
பெரியோருரைப்படிக்குப் பூமிசுமக்காதோ
என்றுநினைவொழிய இனியொன்றுநானறியேன்
அப்போதுமாங்கனியும் ஆகாசமேயெழும்பி
அறுந்துவிழுந்தகனி அந்தரத்திலெழும்புகுது
இருநூறுயோசனைகள் எழும்பியேநின்றுதங்கே

மாயனுக்கு தருமர் மனோபாவஞ்சொல்ல மாங்கனி இருநூறுயோசனை தூரமெழும்ப பெருமாள் வீமனைக்கேட்கிறது.

எம்பெருமாள்மாயவரும் ஏதுசொல்வாரப்போது
மதவீமனையழைத்து மாயவனேதுசொல்வார்
உன்மனதிலுள்ளபடி யுரையுமென்றார்மாயவரும்
வெற்றிமதயானை வீமனவனேதுசொல்வான்
திரியோதிரராசன் சேனைபரிகலங்கள்
குருடன்மகனுராங் குடிகெடுத்தராசர்களை
நாலால்கடுந்திரளார் நூற்றொருவர்ராசர்களை
கௌரவர்சேனைதனைக் கண்டதுண்டமாக்கியல்லோ
ஆனைதிரைகளை அழகுள்ளசேனைகளை

சாமத்துரோகி சகுனியவனையுமே
கொன்றுஅதமாக்கி கொம்பனையாள் துரோபதையும்
கொற்றார்குழலியரைக் கூந்தல்முடிக்கவைப்பேன்
துகிலையுரிந்தவொரு துற்சாதனுதிரமெல்லாம்
வாரிகுடித்தாலே வயிறெரிவுதீருமையா
அள்ளிக்குடித்தாலே அங்கந்தரிக்குமையா
பார்பெரியஅண்ணருக்குப் பட்டந்தரித்தாலே
அப்போதுஎன்மனது ஆயாசந்தீருமையா
வெற்றிமதயானை வீமனுரைக்கையிலே
என்றபொழுதே எழும்புதுமாங்கனிதான்
சாற்றும்நானூறு யோசனைநின்றிடுமாம்

மாயவனுக்குவீமன் மனோபாவஞ்சொல்ல மாங்கனி
நானூறுயோசனை தூரம் எழும்பப்பெருமாள்
அருச்சுனனைக் கேட்கிறது.

அப்போதுஎம்பெருமாள் அங்கெனவேயேதுசெய்தார்
அருச்சுனரைப்பார்த்து ஆணழகர்கேட்கலுற்றார்
வாள்விசயாவுந்தனிட மனதில்நினைத்ததெல்லாம்
ஒன்றுமொளியாமல் உரையுமென்றார்மாயவனார்
என்றுமவருரைக்க எழில்விஜயனர்ச்சுனனும்
மாயனுரைகேட்டு வாள்விஜயனேதுசொல்வான்
கர்னன்சகுனியுமே காங்கேயருனவரை
கொல்லுகிறேனென்றுசொல்லிக் கொடியசபதமிட்டேன்
சங்கமரைக்கொல்லுகையில் சமர்பூமிக்ஷேத்திரத்தில்
அனைவரையுங்கொன்றுமே அண்ணருக்குப்பட்டங்கட்டி
அண்ணருக்குப்பட்டங்கட்டி அடிபணிந்துநிற்கவென்று
எண்ணியிருக்கிறேன் இனியொன்றுமில்லையென்றார்
அறுநூறுயோசனையில் நின்றது அக்கினிதான்

மாயவனுக்கு அர்ச்சுனன் மனோபாவஞ்சொல்ல மாங்கனி
அறுநூறுயோசனை தூரம் எழும்ப பெருமாள்
நகுலனைக்கேட்கிறது.

அப்போதுஎம்பெருமாள் அங்கெனவேஏதுசெய்தார்
நகுலனைத்தானழைத்து நாரணருமேதுசொல்வார்
காமமுடியானே நகுலனேஎன்றழைத்து
மனதில்நினைத்தவொரு மர்மத்தைச்சொல்லுமென்றார்
மாயருரைகேட்டு மன்னவனும்ப்போது
நாமமுடியான் நகுலனுமேதுசொல்வான்
திரியோதிரன்படைகள் சேனைகளைக்கொன்றழித்து
ஆனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
மாரளவுரத்தங்கள் வழியவிட்டுமண்மேலே
அதமாக்கிசேனைகளை அண்ணருக்குப்பட்டங்கட்டி

என்-கண்ணாலேபார்ப்பதற்கு கருத்தில்நினைத்தேனையா
என்றுமவனுமுரைத்து இருந்தான்நகுலனுமே
அந்தவுரைகேட்டு அழகானமாங்கனியும்
அந்தரத்தில்நின்றகனி அப்புறத்தில்போகுது
எண்ணூறுயோசனையில் நின்றது அக்கனிதான்

பெருமானுக்கு நகுலன் மறுபாவஞ்சொல்ல மாங்
கனி எண்ணூறுயோசனை தூரமெழும்பப்
பெருமான் சகாதேவனைக்கேட்டது.

எம்பெருமான்மாயவரு மேதுசெய்தாரப்போது
சகாதேவராசனை சாமிபார்கேட்கலுற்றார்
இளையசகாதேவர் என்னமெல்லாஞ்சொல்லுமென்றார்
தாமமுடியான் சகாதேவனேதுசொல்வான்
திரியோதிரன்படையை சேனைபரிதளத்தை
உன்பாதம்சிரசிலவைத்து உக்கிரமாசண்டைசெய்து
அண்ணனுக்குப்பட்டங்கட்டி அவனிதனையாளவென்று
எண்ணியிருக்கிறேனே இதுவேநினைவொழிய
மற்றொன்றுமில்லையென்று மாயர்பதம்பணிந்தான்
இவ்வாறுதானுரைத்து இருந்தான்சகாதேவன்
அப்போதுமாங்கனியும் அனேகதூரமெழும்பி
தொளாயிரம்யோசனை தூரம்நின்றதக்கனிதான்

எப்பெருமானுக்குச் சகாதேவன் மறுபாவஞ்சொல்ல
மாங்கனி தொளாயிரம்யோசனை தூரத்தில்நிற்க
எம்பெருமான் துரோபதையைக்கேட்கிறது.

ஆதிநாராயணரும் அங்கெனவேளதுசெய்தார்
மாயன்பெருமானும் வார்த்தைகளேதுசொல்வார்
பாஞ்சாலனைபெற்றபெண்ணே பத்தினிதுரோபதையே
நெருப்பிற்பிறந்தவளே நீலப்பசுங்கிளியே
ஐவருக்குத்தேவியரே அழியாதபத்தினியே
மனதில்நினைத்ததெல்லாம் மங்கையரேசொல்லுமென்றார்
நெஞ்சிலேநினைத்ததெல்லாம் நேராகச்சொல்லுமென்றார்
அப்போதுதுரோபதையும் ஆரணங்குமேதுசொல்வாள்
தூரத்திலம்புலியாள் தூசிபடாபத்தினியாள்
வானத்திலம்புலியாள் மாசுபடாபத்தினியாள்
என்னவென்றுசொல்லலுற்றாள் நீலப்பசுங்கிளியாள்
திரியோதிரன்பாளயத்தை செருக்களங்கள்கொன்றழித்து
ஐவர்களிட்டதொரு அருஞ்சபதஞ்சென்றபின்பு
வெற்றிமதயானை வீமருடகையாலே
பாம்புக்கொடிவேந்தன் பட்டபிறகாக
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்பட்டபின்பு
நாமக்கொடியோனும் நாசமடைந்தாலே
அவன்-மல்லாக்கவிழுந்தவுடன் மார்மேலேநானிருந்து

சோர்காப்பாலை கயாக்கி மார்பெலும்பைசிப்பாக்கி
மார்பிலுருதிரமெல்லாம் வாரித்தலைகடலி
கடலின்னலைகைப்போலே கலங்கிட்டுகூந்தலுக்கு
தேய்புசிக்கக்கோலெடுத்து சீவியபிராற்றி
துவண்டுடலைப்பின்னிபல்லோ கொண்டைக்கயிறுகட்டி
வாளின்றிச்செடுத்து யிருகித்தலைமயிர்முடிப்பேன்
என்-விரித்தமயிர்முடிக்க வேணநாள்சென்றிடுமோ
அக்கள்முடிப்பேனே குறைகளெல்லாந்தீர்வேனே
சாமியவராலே தலைமுடிப்பேனே
என்றுரைத்திருந்தேன் இனியொன்றுநானறியேன்
இந்தவிதஞ்சொல்லி யிருந்தாளேபாஞ்சாலி

துரோபதை மனுபாவஞ்சொன்னது சரியல்லாமல்
தொலாயிரம் யோசனைதூரம்போன மாங்கனி
பூமியில்விழ பெருமாள் துரோபதையைக்
கேட்கத் துரோபதைசொல்லல்.

துரோபதைசொல்லலுமே தூரயிருந்தகனி
அந்தரத்தில்நின்றகனி அவனியதில்விழுந்தது
ஆகாயம்போனகனி அற்றுவிழுந்தது
கண்டார்கரியமாலுங் கடுகெனவேயேதுசொல்வார்
மனதில்கபடுவைத்து வஞ்சனைகள்சொன்னதினால்
அந்தரத்தில்நின்றகனி அவனியிலேவிழுந்துதென்றார்
வந்ததொளித்தாயோ எந்தனுக்குச்சொல்லுமென்றார்
ஒன்றுமொளியாமல் உத்தமியேசொல்லுமென்றார்

துரோபதை மறுபடியும் பெருமாளுக்கு உண்மையைச்
சொல்ல மாங்கனிமரத்தில் பொருந்தினது.

அப்போதுரோபதையும் ஆரணங்கேதுசொல்வாள்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இன்னமொருபாவம் இனியொன்றுநானறியேன்
மற்றுமொருபாவம் வஞ்சனைகளொன்றறியேன்
அண்ணாகரியமாலே அடியேனொருவார்த்தை
பார்த்தனைமாலையிட்டப் பாஞ்சாலனெனைப்பெற்றான்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
அடிக்கிறகாற்றதனில் அலைத்துரும்புதானுமுண்டு
காவிலெழுமண்டலற்கு கண்டங்கருப்புமுண்டு
நீர்த்தசுழலுமுண்டு நிலமதனிற்பூச்சுமுண்டு
தண்ணீர்க்கலையுமுண்டு சந்திரற்குமாசுமுண்டு
சந்திரற்குமாசுமுண்டு சற்றேகருப்புமுண்டு

குண்டுமணிக்காணும் கொஞ்சங்கருப்புமுண்டு
எனக்கு-மையேகருப்பொழிய மற்றேகருப்புமில்லை
பொட்டேகருப்பொழிய பின்னேகருப்புமில்லை
அக்கினியிற்பெண்பிறந்தேன் ஐவரைமாலையிட
நெருப்பிலேபெண்பிறந்தேன் அருச்சுனனைமாலையிட
என்-கூடப்பிறந்தது கோதண்டமானவில்லு
பத்தரையில்நான்வளர்ந்தேன் பார்த்தனேவேணுமென்று
அடுக்களையில்நான்வளர்ந்தே னர்ச்சுனனேவேணுமென்று
வளர்ந்துசமைந்தேனே மாலையிடும்நாளானேன்
போதவளர்ந்தேனே பிள்ளைபெரும்நாளாச்சு
இப்படியாக யிருக்கிறவேளையிலே
எழிலான அர்ச்சுனற்கு என்னைக்கொடுக்கவென்று
என்தகப்பன்பாஞ்சாலன் எண்ணியிருக்கையிலே
அரக்குமாமாளிகையில் ஐவர்மடிந்தாரென்று
மாண்டார்களென்றுசொல்லி மண்டலத்தில்போச்சு
செத்தார்களென்றுசொல்லி ஜெகமெல்லாம்போச்சு
அப்போதுஎன்தகப்பன ஆயாசப்பட்டுருகி
அருச்சுனற்கென்றபெண்ணை ஆர்க்குநான்கொடுப்பேனென
அருச்சுனனைப்போலாக ஆண்பிள்ளையில்லையென்று
வில்லைவளைப்போர்கள் மேதினியிலில்லையென்று
ஏலப்பசுங்கிளியை எப்படிகாப்போமென்று
எண்ணாதுமெண்ணியே இருந்துவிசாரமிட்டார்
இப்படியாக யிருக்கின்றகாலத்தில்
வந்தாரே அந்தவேளை மகாவியாசபகவானும்
என தகப்பன்பாஞ்சாலன் எழுந்திருந்துஓடிவந்து
கண்டவுடனேயல்லோ கடுகவெழுந்திருந்து
வந்தவியாசரை வணங்கியேதெண்டனிட்டு
இரும்இருமென்றுசொல்லி இட்டார்சிம்மாதனங்கள்
இட்டசிம்மாதனத்தில் ஏறியவர்வீற்றிருந்தார்
என்தகப்பனைப்பார்த்து என்னவென்றாருன்சேதமம்
அப்போதுஎன்தகப்பன் ஆயாசமாயுரைப்பார்
இந்தவிசேஷமெல்லாம் எடுத்துமவற்குரைத்து
அருச்சுனற்கென்றுநான் அனலிற்பிறந்ததுவும்
அரக்குமாமாளிகையி லைவரிறந்ததுவும்
இத்தனையுஞ்சொல்லி இருந்தாரேஎன்தகப்பன்
அப்போவியாசரும் அரசனுடைவார்த்தையெல்லாம்
செவிகொடுத்துக்கேட்டுமல்லோ சீக்கிரமாஏதுசொல்வார்
உத்தமியாள்தன்னுடனே ஒன்றாய்ப்பிறந்தவில்லு
கூடப்பிறந்ததொரு கோதண்டமானவில்லு
எடுத்துநிறுத்துமென்று எல்லாருந்தானறிய
பெருவில்வளைத்தவற்குப் பெண்ணைத்தருவேனென்று

ஐம்பத்தாறுதேசமுள்ள அரசர்கள் தானறிய
அரசர்கள் தானறிய அறையும்பறையோசை
எப்போதறிந்திடலாம் ஐவருடசேதி
என்றுமவருணாத்து ஏகிடந்தாரே
அந்தவுரைகேட்டு ஆனந்தமாயெழுந்து
உடப்பிறந்தொரு கோதண்டமானவில்லு
அத்துவளைத்தவற்கு மாலையிட்டுத்தருவேனென்று
வில்லைவளைத்தவற்கு மெல்லியைத்தருவேனென்று
ஐம்பத்தாறுதேசத்து வரசர்கள்மாலைதந்தார்
பெண்ணைத்தருவேனென்று பிடித்தார்கள்சின்னத்தொனி
சின்னத்தொனியையல்லோ தேசமெல்லாம்ஊதிவைத்தார்
பாஞ்சாலன்சீமையெல்லாம் பந்தலலங்கரித்தார்
எங்குமலங்கரித்தார் இராசாக்கள்வந்திருக்க
பாஞ்சாலன்சொன்னதொரு பரிசானவார்த்தையினால்
ஐம்பத்தாறுதேசத்துள்ள ராஜரெல்லாம்வந்திருக்க
நாலுபுரத்திலுள்ள ராஜரெல்லாம்வந்தார்கள்
முத்துமுடிதரித்த முடிமன்னரானவரும்
பச்சைமுடிதரித்த பட்டணத்துராசர்களும்
வச்சிரமுடிதரித்த மண்டலத்துராசர்களும்
காசிநாடாண்டதொரு கர்னமகாவீரியரும்
நாலுதிக்கிலுண்டான ராஜரெல்லாம்வந்தார்கள்
அப்பெரியபந்தலிலே அர்ச்சுனரும்நீருமாய்
அன்றொருபார்ப்பானாய் அங்குநீங்கள்வந்தீர்கள்
பாஞ்சாலன்தானறியான் பாரானந்தாரானவரை
ஆருமறியாமல் அவரெடுத்தமார்க்கமெல்லாம்
உங்கள்வடிவுதன்னை ஒருவரறியாமல்
அந்தச்சமயத்தில் அடைவுடனேயென்தகப்பன்
வந்திருந்தராசர்களை வளையுமென்றார்வில்லதுவை
அப்பெரியராசர்களுமே இவ்வில்வளைக்கறியார்
காண்டபந்தனையெடுப்பார் கலங்கியேவைத்திடுவார்
ஆராலும்முடியாது அப்பெரியவில்வளைக்க
காசிநாடாண்ட கர்னரெழுந்திருந்து
வில்லைவளைத்துமல்லோ வில்நாரிபூட்டுகையில்
எண்ணுதுமெண்ணினேன் இவனேபுருஷனென்று
வடிவுசிலையுடையான் மாலையிடவேணுமென்று
எண்ணினேனென்மனதில் இனியொன்றுநானறியேன்
வில்லைவளைக்காமல்கர்னன் வில்தெரித்துப்போய்விழுந்தான்
அன்றுமொருப்பார்ப்பானாய் அருச்சுனர்வில்வளைத்தார்
நீர்பார்த்துமெய்தார் நித்திலங்குடமடியார்
பார்ப்பான்கழுத்திலே பணிமாலைபோடுமென்றார்

குஷ்டரோகியானவர்க்கு குடிக்கதனைந்செய்தேனோ
என்றன்மேலாடைதன்னை எடுத்தெறிந்துவிட்டேன்
சர்ப்பங்கழுத்திலே சைமாலையிட்டால
பார்ப்பானக்கழுத்திலே பணிமாலையிருந்தது
அப்பாவஞ்செய்ததலைால் ஆயமரமேவருனதில்லை
அருச்சுனற்குமாலையிட்டு ஐவருக்குந்தேவியானேன்
பார்த்தருக்குமாலையிட்டு பஞ்சவற்குந்தேவியானேன்
மற்றொருபாவங்கள் மாயவரேசெய்தறியேன்

எம்பெருமானுக்குத் துரோபதை தன்கலியானைச்
சங்கதி சரியாய்ச்சொல்ல மாங்கனிமரத்திற்
பொருந்தினது.

தோராவடி வழுகி துரோபதையாள்சொல்லுகையில்
என்றபொழுதிலே எழும்புதுமாங்கனிதான்
பொட்டெனவேதாவிரைழும்பி பொருந்துதேமாங்கனிதான்
தருமர்மனங்குளிர்ந்து சந்தோஷமாகவே
பஞ்சவர்களைந்துபேரும் பார்த்துமகிழ்ந்தார்கள்

எம்பெருமான் பஞ்சவர்க்குப்புத்திசொல்லி தான்
அவர்கையில செலவுபெற்று துவாரகைக்
குப் போகுதல்.

அவர்மகிழ்ந்தபின்பு அரிராமரேதுசொல்வார்
பஞ்சவரைத்தானழைத்து பாரனந்தாரேதுசொல்வார்
வனந்தனிலே இருந்துசிலகாலம்
மற்றெருந்துவக்காதும் காண்னோதேயுமென்றார்
பத்திரமாக விருங்கோனென்றார் பஞ்சவரை
போகச்செலவுதாருமென்றழைத்தார்புண்ணியரும்
பஞ்சவாகளைவரும் பாஞ்சாலி துரோபதையும்
ஐவருக்குந்துரோபதையும் ஆண்டவனைத்தெண்டனிட்டு
போய்வாருமென்றுசொன்னார் புகழ்வேந்தரைவர்களும்
விடைபெற்றெழுந்தாரே வைத்தபெருமானும்
பட்டமாக்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆற்றுங்கரைதாண்டி அதிகவனந்தாண்டி
கல்லுன்றுகாடுந்த செடியுமவனந்தாண்டி
துவாரகாபுரிக்கு வாயுவேகமாய்ப்போனபின்பு
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மனமாய பஞ்சபாண்டவரும் மயிலனையாள் துரோபதையும்
அந்தவனந்தனிலே அநேககால் வாசம்பண்ணார்
இப்படியாக விருக்கின்றார் பஞ்சவர்கள்

ஐந்தாவது சரித்திரவனவாசம் முற்றிற்று.



துரியோதனன் சித்திரசேனனுடன் சண்டைசெய்து தேர்சக்க
ரத்தில கட்டுப்பட்டது.

௯-வது, காமதேனுபர்வதம்.

ஆறாம்வருஷம் பிறந்தது ஐவருக்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோறார்கள்
கூடை தலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலினைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
நன்னிவைத்தசீமாடு வனவாசம்போறார்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோறார்கள்
காமதேனுபர்வதத்தை கடுகியேதானடந்தார்
காமதேனுவனந்தனிலே கடுகவந்துசேர்ந்தார்கள்
ஐந்தடுக்குபர்ணசாலை அழகாகவுண்டுபண்ணுர்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணுர்
அந்தவனந்தனிலே ஐவர்குடியிருந்தார்
அனேகநெடுநாளாய் அவ்வனத்திலேயிருந்தார்
இப்படியாகயிவரிருக்கும்வேளையிலே

திரியோதிரன் ஆலோசனை.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்தானும்
வணங்காமுடிவேந்தன் மாபாவியென்னசெய்தான்
சபைகள்நிறைந்திருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
காளமகாரிஷியாரை கருதிதவம்பண்ணி
ஐவரையுங்கொல்லுமென்று அனுப்பினான்வனந்தனிலே
கொல்லுகிறேனென்றுசொல்லி கொப்பெனவேபோனாரே
ஐவர்-செத்ததுவும்பிழைத்ததுவுஞ் சேதிதெரியவில்லை
ஆரடாதூதுவரே ஆயிரம்பேர்வாருமென்றார்
அப்படியேதூதுவர்கள் அனைவோரும்வந்தார்கள்
திரியோதிரனைவந்து தெண்டனிட்டுயேதுசொல்வார்
எங்களையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றார்
அப்போதிரியோதிரன் அவர்களுக்கேதுசொல்வான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
எந்தவனத்தில் இருக்கிறாரென்றறியேன்
ஐவருமைக்காணாமல் ஆராய்ந்துபார்த்துவாங்கள்
என்றுமேசொன்னானே எரிநாகக்கொண்டவனும்

துரியோதிரன் தூதுவர்கள் பஞ்சவரைக்காணவருகிறது.

மாநாகன்சொன்னதெல்லாம் மல்லர்கள்தான்கேட்டு
வாறார்கள்தூதுவர்கள் மகாராசன்சொற்படிக்கி
அத்திபுரந்தாண்டி அவசரமாய்வாறார்கள்
குருக்ஷேத்திரபூமிவிட்டு குருபூமிதேசம்விட்டு
காடுஞ்செடிகடந்து கடுகவேவாறார்கள்
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
சூரியன்வனந்தனிலே தூதர்தேடிபார்த்தார்கள்
அங்கேயுங்காணாமல் அப்பாலேதேடிவாறார்

காமரிஷிவனத்தில் நடந்தேதந்தேடிவாரூர்
அங்கேயுங்காணுதே அப்புறந்தேடிவாரூர்
முருக்கமகரிஷிவனத்தில் முடுகியேதேடிவாரூர்
அங்கேயுந்தேடியே அப்பாலேபோகலுற்றூர்
காளமகரிஷிவனத்தில் கடுகியேதேடிவந்தார்
அங்கேயுங்காணுமல் அப்போதேபோகலுற்றூர்
சயிந்தவரிஷிவனத்தில் சடுதியேதேடிவந்தார்
அங்கேயுங்காணுமல் அப்புறந்தேடிவாரார்
காமதேனுபர்வதத்திற் கண்டார்கள்பஞ்சவரை
ஐவரையுங்கண்டவுடன் அங்கேபயந்தெளிந்தார்
பஞ்சவர்களைவரையும் பார்த்துதிரும்பினூர்கள்
காவலர்களைவரையுங் கண்டுதிரும்பினூர்கள்

துரியோதிரனனுப்பியதூதுவர்கள் காமதேனு வனத்தில் பஞ்சவரைக்கண்டு துரியோதனற்குச் சொல்லல்.

கண்டல்லோ தூதுவர்கள் கடுகிவழிநடந்தார்
ஆறுஞ்சுனை தாண்டி அதிகவனந்தாண்டி
காடுவனங்களுமே கரியமலைதாண்டி
ஆனந்தமாகவே அத்திபுரத்தில்வந்தார்
துரியோதிரனிருக்கும் சிங்காதனத்தருகே
மகாராசன்முன்னே வந்துபணிந்தார்கள்
வந்துபணிந்துமல்லோ மன்னருக்கேதுரைப்பார்
துரியோதிராசனுக்கு சேதிகளைச்சொல்லலுற்றூர்
ஐவரைத்தேடியே ஆரணியம்போனோமே
மாண்டார்களென்றே வனத்திலேகண்டோமே
காமதேனுபர்வதத்திற்கண்டுவந்தோம்பஞ்சவரை
அந்தவனத்தில் ஐவரிருக்கிறூர்கள்
பார்த்துபறந்துவந்தோம் பஞ்சவர்களைவரையும்
கண்டுபறந்துவந்தோம் காவலர்களைவரையும்
என்றுமொழிந்தார்கள் ஏகிவந்ததூதுவர்கள்
துள்ளியனல்கொதித்து சொல்லுவானோர்வார்த்தை

துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குப்போகச் சகுனியுடன் ஆலோசனைபண்ணுவது.

என்றவுரைகேட்டு எரிநாகங்கொண்டவனும்
சபைகள்நிறைந்திருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
ஐவர்வனவாசம்போய் ஐந்தாறுவருஷமுண்டு
வல்லித்தனதாண்மைகளை மெத்தமறந்திருப்பார்
ஆனைகுதிரைசேனையும் அண்டவொண்ணுப்படையுமில்லை
அக்ரோணிசேனைகூட்டி ஐவர்மேல்படைஎடுத்தால்
ஐவரைக்கொன்றிடலாம் அதம்பண்ணிப்போட்டிடலாம்

இதுவேசமயங்காண் இராசரைக்கொல்லுதற்கு.
அம்மான்சகுனியேநீ ஆலோசனைசொல்லுமென்றான்

சகுனிதுரியோதனைப் பஞ்சவர்களுடன் சண்டைக்குப் போகச்சொல்லுகிறது.

அப்போசகுனியும் அங்கேயெடுத்துரைப்பான்
கொல்லைக்குப்பல்லிபவன் குடிக்குசனியம்பான்
இதுசமயமிதுசமயம் இவன்குடியைக்கெடுக்கவென்று
மருமகனுக்காக வார்த்தைகளைதுசொல்வான்
மெய்வார்த்தைசொன்னீர்காண் விஷநாகங்கொண்டவரே
ஐவர்பிழைத்துயினி ஆரணியம்விட்டுவந்தால்
தப்பிப்பிழைத்துவந்தால் தர்மர்பஞ்சபாண்டவர்கள்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுகேட்பாரே
இப்போபடையெடுத்து இராசரைக்கொன்றிடலாம்
நல்லசமயங்காண் நமக்குக்கிடைத்ததென்று
தென்னமுடிவேந்தன் துரியோதிரப்பெருமான்
மாமனுரைகேட்டு மகாராசரேதுரைப்பார்

துரியோதிரன் சண்டைக்குப்போகச் சேனைகளைத் திட்டப்படுத்துகிறது.

ஆர்காணும்ராசர்களே அருகிலிருக்கும்மந்திரிகளே
ஐக்குருக்களுமே ஆயிரஞ்சேவகரும்
பலபேரானுவரும் பத்துலட்சஞ்சேவகரும்
நாலானசேனைகளும் நடப்பார்கள்தாதியரும்
அத்தண்டசேனைகளும் அடங்கலும்பயணமென்றார்

துரியோதிரன் பஞ்சவர்களுடன் சண்டை பண்ணவருகிறது.

அப்போதுரியோதிரன் அவனுடையசேனைகளும்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றான்
இன்றுவெளிகூடாரம் இபனுடனேபோடுமென்றார்
நாட்டுமென்றார்சண்டாவை நகருவடியுமென்றார்
அங்கேநட்டான்சண்டாவை அடியுமென்றார்பேரிகையை
அடிபடுதாயபேரி அண்டங்கிடுகிடென்ன
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகாடிபடுது
ரணக்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
ஆனையின்மேல்பேரிகையும் அசுவத்தின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஒருசோடிமுரசுகளும்
தாளமொலிமத்தளமுந் தவில்முரசுவீராணம்
பதினெட்டுவாத்தியமும் பலதிசையுந்தான்முழங்க
அண்டரண்டந்தானதிர அடிபடுதுமேளவகை
முக்காதத்தூரமட்டும் முரசுமுழங்கிவர
நாற்காதத்தூரமட்டும் காகளமுழங்கிவர

நந்தாதாயமடிம் அநுபவித்துப்பெரிசையும்
ஆனையின்மேல்கசபத்து குதிரையின்மேல்டங்காவும்
காணறுக்கெடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
வெட்பநுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
மறுகனுக்கெடுத்தார்கள் வர்ணவெள்ளைகூடாரம்
பணிசனுக்கெடுத்தார்கள் பட்டுநல்லகூடாரம்
சாத்றுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்
குதிரையொருகோடி கொக்கரித்துவருகுதங்கே
யானையுஞ்சேனைகளும் அண்டவொண்ணாதானுவமும்
அமரதரும்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
துத்துவங்கனரும் இளநாட்டுச்சோனகரும்
வெதியரும்மாதியரும் வில்வேந்தாசர்களும்
தொழுவர்மலையாளர் சோனகரும்வொட்டியரும்
பட்டாவுஞ்சூரிபமும் பாரியவில்சமுதாடு
கேரிசமும்பெரியசத்தி கொராணபாங்குகளும்
அதிருமிருப்புலக்கை ஆயுதவரிசையுடன்
கட்டிகத்திவேலாயுதம் எடுத்தார்கள்சூலாயுதம்
அத்தண்டாசனுவமும் அல்லவரும்பயணமென்றார்
அம்பிராணரும்அசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாச்சாரி கீர்த்திபெற்றகர்னனுமே
சாமத்துரோகி சகுனியவன்கூட
மாமாசகுனியும் மைத்துனன்தேத்தரசன்
தங்கைமணவாளன் தறுதலைப்பொட்டிமகன்
ஆக்காள்மணவாளன் அறுதலியாள்பெற்றபிள்ளை
காந்தாரிபிள்ளைகளும் கவுரவர்சேனைகளும்
குருடன்பெற்றபிள்ளைகளும் கோடியுபாசாகளும்
துவரைக்கொல்லவென்று அனைகம்பேர்பயணமானார்
செந்தூளெழும்புகுது தெய்வலோகங்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
கொடிகள்பறக்குது குவலயமெட்டுகுது
முடிகள்திருகுது மூன்றுலோகந்தத்தளிக்க
அச்சங்கிறுகிறென்ன ஆனைநெடுந்தோசைய
வண்டிக்கிரிச்சிகளும் மதயானைக்கோஷ்டமுடன்
குதிரைகளைகனைப்புக் கோடிமன்னர்சத்தமிட
சக்கதயினைச்சலது சமுத்திரக்கோஷ்டமுடன்
சென்றுமஞ்ஜனங்கள் தொகை சொல்லிமுடியாது
பாண்டவரைவென்றால் மட்டுமிதங்களில்லை
பஞ்சவரைக்கொல்லவென்று பாதகனும்வாராளோ
துவரைக்கொல்லவென்று அரும்பாவிவாரானே
அந்தித்துறக்கரான்டி அப்புறம்வருகையிலே

துரியோதிரன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குவருகிறபோது
துரோணரைச் சாஸ்திரம்பார்க்கச் சொன்னது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரப்பாவி
துரோணரைப்பார்த்துச் சொல்லுவான் திரியோதிரன்
பஞ்சவரைக்கொல்லவென்று பாரவனம்போறோமே
வாருந்துரோணரே வருநிமித்தம்பாருமென்றான்
ஐவரைக்கொல்லவென்று ஆரணியம்போறோமே
சகுனத்தைப்பாருமென்றான் தாமமுடியானும்

துரியன்சொற்படி துரோணர் சகுனம்பார்க்கிறது.

என்னசகுனங்கள் இனிநிமித்தந்தோணுது
தென்னமுடிவேந்தன் திரியோதிரன்சொற்படி.
அரசனுரைப்படிக்கு ஆச்சாரியானவரும்
தாமமுடியானும் சகுனங்கள்பார்க்கையிலே
என்னசகுனங்கள் எதிராகக்காணுது
பொல்லாச்சகுனம் பொருந்துதுமன்னனுக்கு
வாயசமிடமாச்சு வலியன்வலமாச்சு
நரையாணிடமாச்சு நரிகள்குறுக்காச்சு
பாம்புகுறுக்காச்சு பார்ப்பானெதிரானான்
சாரைகுறுக்காச்சு சந்திரன்மேல்பல்லிசொல்லும்
வேடரெதிர்வருவார் வில்லியரெதிரானார்.
வெட்டிப்பிடியுமென்று கோட்டானுமோலமிடும்
பட்டப்பகலிலே பகலாந்தைசீறுது
நெருப்பெடுத்துகூன்கிழவி நின்றிழவுதான்கொடுத்தாள்

துரோணாசாரியார் திரியோதிரனுக்குச் சகுனங்கள்
நல்லதல்லவென்றுசொல்ல துரியன் அவர்
சொல்லைத் தடுத்துவருகிறது.

துரியோதிரனுக்குத் துரோணரவருரைப்பார்
அப்பாதிரியோதிரா அரசர்சிகாமணியே
எந்தனுடவார்த்தைதன்னை பிராசாவேநீர்கேளும்
ஆகாச்சகுனங்கள் ஆகுதுயிப்பொழுது
பொல்லாச்சகுனங்கள் பொருந்துதேயென்னசெய்வோம்
இன்றொருநாள்போக்கி இனியொருநாள்வரலாம்
சண்டைக்குப்போகவேண்டாம் வாருமென்றழைக்கையிலே
தென்னமுடிவேந்தன் திரியோதிரராசன்
அவ்வார்த்தைதான்கேட்டு அரசமன்னனேதுசொல்வான்
சகுனத்தால்பழுதுமுண்டோ சதிரானராசர்களே
பொல்லாச்சகுனமென்று போகாமல்நிற்பார்களோ
ஐவருமல்லாமல் அடப்பக்காரரையுமில்லையே
பஞ்சவருமல்லாமல் பலவகையோரோருரில்
இந்தசகுனத்தில ஏதொருகுற்றமில்லவா

நடையுங்கடையுமென்று நடைபேரியடியுமென்றார்
வருகுதுபாளையங்கள் மண்ணுவின்னுங்கொள்ளாமல்
தெக்குளெழும்புழுதி சூரியனைக்கப்புகுது
வடக்குளெழும்புழுதி கதிரோனைக்கப்புகுது
காடுசெடிதாண்டி கரியமலைதான் தாண்டி
ஆறுங்கரை தாண்டி அதிகவனந்தாண்டி
ஒருகாரைக்கிருகாரை உயர்ந்தகொம்பிலேயிருக்கும்
உருகாரைக்கிரைதேடுங் கதலிவனந்தாண்டி
செக்கேப்புலிகரடி சீறும்வனந்தாண்டி
எல்லையதுதாம் முல்லைவனந்தாண்டி
சூரியன்வனந்தனிலே துரைகளெல்லாஞ்சேர்ந்தார்கள்
அங்குகட்டான்சண்டாளை அடியுமென்றார்பேரிகையை
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வாரார்கள் துரைகளெல்லாம்
ராமரிஷிவனத்தில் நடந்தார் துரைகளெல்லாம்
சண்டாளைகொட்டுமென்றான் சல்லரியடியுமென்றான்
அடித்தார்கள்பேரிகையை அடிவானதிடிபோல
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வருகுதுபாளையங்கள்
காளமகாரிஷிவனத்தில் கடுகவந்துசேர்ந்தார்கள்
ரணபேரியடியுமென்றான் வல்லசின்னமூதுமென்றான்
அரசன்தன்சொற்படியே அறைந்தார்கள்பேரிகையை
ஊதினார்சின்னத்தொனி உலகேழுந்தானதிர
அன்றுமுகாமங்கிருந்து அடுத்ததொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே மன்னர்பயணமிட்டார்
காமதேனுபர்வதத்திற் கடுகிவருகையிலே
ஐவரைக்கொல்லவென்று அரும்பாவிவருகையிலே

துரியோதனன் ஐவரைக் கொல்லவருகிறதை
எம்பெருமானறிந்து வந்தவர்க்கெல்லாந்
தாகமுண்டாக்கினது.

ஐவருக்குவந்தவிதி ஆயருந்தாமறிந்து
கைம்மோசம்வந்ததே காவலர்கள்பஞ்சவர்க்கு
மோசங்கள்வந்து முடிந்ததுபஞ்சவர்க்கு
பாவிகெடுத்தானே பஞ்சவரைக்கொல்லவென்று
தோஷிகெடுத்தானே தொண்டர்களைக்கொல்லவர்க்கு
சத்துருப்பகையாளி ஏற்பட்டான்பஞ்சவர்க்கு
சந்நிதத்திலுமே இறக்கவகைபண்ணுகிறான்
அசதியாயிருந்தால் ஐவரிறந்திடுவார்
மதியுடனிருந்தால் மாண்டிடுவார்பஞ்சவர்கள்
செல்வத்திருமக்கள் சேர்ந்துபோகுதே

உள்ளங்கைநெல்லிப்பழம் உருகுலைந்துபோகுதே
தோளிற்செபமாலை தொண்டழிந்துபோகுதே,
கையில்செபமாலை கனங்குலைந்துபோகுதே
என்னவுபாயமது செய்கிறாரெம்பெருமாள்
வருகிறராசருக்கும் மாநாகம்கொண்டவற்கும்
தண்ணீர்கவனங்கள் தாகவிடாயுண்டுபண்ணார்
அத்தண்டராசருக்கும் அடிநாக்குலருகுது
நாவுவரட்டுகுது நடுநாக்குலருகுது
அவ்வனத்தில்தீர்த்தங்கள் அள்ளியுண்ணக்கிடையாது
மாயர்பெருமாளும் மலைராமரீதுசெய்தார்
தேவேந்திரனுடைய சுரபியென்னுங்காமதேனு
அப்பசுக்கள் தீர்த்தமுண்ணும் அக்குளமொன்றொழிய.
தீர்த்தங்களில்லாமற் செய்துவிட்டாரப்போது
அத்தெண்டஜனங்களும் அனேகம்விடாயாச்சு
தண்ணீர்வளையாகி தவிக்குதுபாளையங்கள்
காதையடைத்துக் களைத்தார் துரைகளெல்லாம்
தூதுவரைத்தானழைத்து திரியோதிரனுரைப்பான்
இந்தவனத்திலே எங்கும்கதியிலையோ
எங்குங்குளமிலையோ யிரங்கியேதீர்த்தமுண்ண
தேடியேவாருமென்று செப்பியனுப்பினான்,
அப்படியேநல்லதென்று அந்தஜனங்களெல்லாம்
தேடிப்புறப்பட்டார் திரியோதிரன்தூதுவர்கள்
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துபார்த்தார்கள்
காமதேனுதன்குளத்தைக் கண்டார்கள் தீர்த்தமுண்ண
ஓட்டம்நடையுமாய் ஓடிவந்தார் தூதுவர்கள்
திரியோதிரனுற்குச் சேதியுரைத்தார்கள்
அகலமுள்ளதாயிருக்கும் அலங்காரப்பொய்கைகண்டோம்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்

திரியோதிரன் காமதேனுகுளத்தில் தண்ணீர்
குடிக்க சேனையுந்தானும் வருகிறது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்கேட்டு
நல்லதுவாருமென்று நடந்தார்கள்சேனையெல்லாம்
வருகிறவேளையிலே வானுலகயிடையரெல்லாம்

தெய்வலோகத்து இடையர் காமதேனுபசுக்களுக்கு
அந்தக்குளத்தில் தண்ணீர்காட்டவருகிறது.

அந்தச்சமயத்திலே அந்நாட்டுயிடையரெல்லாம்
வானுலகயிடையரெல்லாம் மாடுகளைத்தானெழுப்பி
காட்டிலேமேய்கின்ற காமதேனு அத்தனையும்
மேய்த்துத்துரத்தியே மிரட்டிக்குளத்தில்விட்டார்
அத்திலேநீர்குடித்து குளமெல்லாஞ்சேறாக்கி

தண்ணீர் கலங்கியே தரையில்மண் மேல்கிளம்பும்
ஜோக்கள் கலங்கியல்லோ குளத்தில் மேல்மண் கிளம்பும்

பசுக்கள் குளங்கலக்கினதை தூதர்சொல்லத் திரியோதிரன் கேட்டுக்கோபித்து இடையர்களைக்கொன்று பசுக்களைமடக்கச் சொல்லுகிறது.

அந்தசமயத்திலே அரவக்கொடியோன் தூதர்
தூதுவர்கள் தான்பார்த்து சொல்லுவாராசருக்கு
துரையோராசாவே ஆரோ தெரியாது
ஆயிரம்இடையர்கள் ஆவுகளைக்கொண்டுவந்து
விட்டுமே அக்குளத்தை யிதக்கச்சேராக்கிவிட்டார்
தண்ணீர்குடிக்கவேதான் வுதவாதுயென்றார்கள்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்ராசனுமே
ஆயிரம்யிடையரையும் அங்கேவெட்டிவிட்டு
அந்தண்டபசுவையெல்லாம் அத்திபுரமோட்டுமென்றான்
ராசனுரைகேட்டு நடந்தாரேதூதுவர்கள்
மாடுகள்தன்னையும் மடக்கித்திருப்பினார்கள்
சண்டைபண்ணவந்தவரைச் சதைத்து அங்கேபோட்டார்

காமதேனுபசுக்களை மேய்க்கவந்த இடையர்களைத் துரியோதிரன் தூதுவர்கள் கொன்றவர்கள் போக மற்றஇடையர்கள்போய் தேவேந்திரனுடன்சொல்லுகிறது.

தப்பிப்பிழைத்தவர்கள் தான்விழுந்தோடலுற்றார்
தேவேந்திரன்முன்னே தெண்டனிட்டாரிடையர்கள்
வந்துபணிந்தவர்கள் வார்த்தைகளைச்சொல்வார்
காமதேனுபர்வதத்திற் காலைகளைமேய்த்திருந்தோம்
காட்டிலேயேத்தோட்டி கடிகுளத்தில்விட்டோம்
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளமன்னன்
சேனைபரிவாரத் திரமுடன்கூட்டிவந்தான்
மாடுகளைமடக்கிக்கொண்டான் வல்லுயிரைவாங்கிவிட்டான்
அநேகவரையுங்கொன்று ஓடியார்கள் தப்பிவந்தோம்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வாரிந்திரனும்
உருட்டினான்கண்ணை உருவினான்பெரும்புலிபோல்
கண்கள் சிவக்குதே காந்தாளமாகுதே
மீசைதுடிக்குதே மின்கோபமாகுதே
அவ்வலரிக்கண்கள் ரெண்டும் செவ்வலரிபூக்கிறதே

நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்புத்தணலாய்விடுது
என்றுமில்லாக்கோபம் பிறந்ததுயிந்திரற்கு

தேவேந்திரன் தன்மகனைச் சண்டைக்குப்போகச்
சொல்ல சித்திராங்கதன் மாதலியைத்தேர்
கொண்டுவரச் சொன்னது.

என்மகனேசித்திராங்கா இயலானரத்தினமே
மாட்டைமடக்கின மன்னவராசாவை
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டிவாராய்
ஆனைசேனைபரிவாரம் அடங்கலுங்கொன்றழித்து
பிடித்தபிடியோடே கொண்டுவாராய்பொட்டெனவே
கைப்பிடியாய்க்கொண்டு கண்ணெதிரேவந்தாலில்லை
இல்லாதேயாமானால் எதிர்த்துவந்தாலில்லாதே
உத்தாரம்பண்ணுமே உம்பர்பிரானிந்திரரும்
தேவேந்திரன்மகனார் சித்திராங்கதராசன்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிகமாய்ச்சிந்தித்து
மாதலியைத்தானழைத்து மச்சாதமெங்கேயென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரங்கொண்டுவா
என்றவுரைகேட்டு எழுந்தானேமாதலியும்
ஆறுவண்டி நூறுசட்டம் அதற்கேற்றகுத்துக்காலும்
குத்துக்கால்சொப்பனிட்டு கொடுங்கைத்திரைவளைத்து
கொடுங்கைத்திரைவளைத்துக் கும்பக்கலசம்வைத்து
கும்பகலசத்தின்மேற் குடைகளைக்கட்டினான்
அங்கெனவேதேர்சீலை அலங்காரம்பண்ணினானே
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்சொப்பனிட்டான்
வாசியைக்குளிப்பாட்டி வாயிற்கடிவாளமிட்டான்
காலுசால்வண்டயமும் நடுக்கழுத்திற்கொலுசுகளும்
முன்னாலேசுட்டிகளும் பின்னாலேகுச்சுகளும்
பக்கத்தில்அங்குவடி பதியவைத்தான்சனங்களை
முதுகிலேசீனிகளும் முன்னேகடிவாளம்
சந்திரபிறைசூரியபிறை தரித்தான்குதிரைக்கு
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்தெண்டனிட்டான்

திரியன்மேல் சித்ரசேனன் சண்டைக்குப்போகிறது.

கடுகயெழுந்தானே கட்டழகன்சித்ரசேனன்
நீண்டிடுங்கால்களுக்கு நெறிஞ்சிப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தூதிப்பூச்சல்லடமாம்
பில்லைசமுதாடு பிருவெடுத்தலொட்டியாணம்
கட்டியரைதனிலே கருங்கச்சைசங்குவிட்டு
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
முத்திலாருமாலை முகத்தழகாகட்டினானே

சிங்காரவில்லெடுத்து சிறுகாரிபூட்டினான்
அம்புறாத்தூணியை அணிந்துகொண்டான்தன்முதுகில்
தேரைச்சுற்றிதெண்டனிட்டு சிவ்வெனவேயேறினானே
ஏறினபோதே யிபலானசாரதிதான்
துரகதம்வார்கைபிடித்துத் துரிதமுடன்சாரிசெய்ய
வருகுதுபஞ்சரதம் வானுலகந்தானதிர
தேர்தனிலேசங்குநாதம் சித்ரசேனன்பண்ணினானே
சங்குநாதம்பண்ணினானே தான்திரும்பசுரபியெல்லாம்

துரியோதிரன்சேனைகளைக் காமதேனு அதம்பண்ணினது.

அந்தச்சமயத்தில் அறிந்ததுகாமதேனு
சங்குதொனிகேட்டுத் தான்வருதுகாமதேனு
குதித்துக்குமாளமிட்டு வருகுதுகாமதேனு
வந்துவிழுந்தது வனம்பெரியபாளையத்தில்
குத்துதுகொம்பாலே குளம்பால்மிதிக்கிறது

துரியோதிரனும் அவனுடையசேனைகளும் சித்ரசேனனும்
சண்டைபண்ணுகிறது.

அத்தண்டசேனைகளும் அதம்பண்ணுகாமதேனு
மாண்டஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசனங்களென்றால் செப்பமுடிபோகாது
அந்தசமயத்தில் வந்துவிட்டான்சித்ரசேனன்
வில்வளைத்துநாரிபூட்டி விட்டான்சரபாணம்
கைகண்டபாணமெல்லாங் கடுகெனவேவிட்டுவிட்டான்
கூச்சலெழும்புகுது கொப்பெனவேபாளையத்தில்
கண்டான் துரியோதிரன் கட்டழகனேதுசொல்வான்
எவனோதெரியாது இங்குவாரான்சண்டைபண்ண
இத்தண்டதுரைகளெல்லாம் எல்லோருமுஸ்தீப்பாய்
கோபமாய்க்கிருபாச்சாரி கோடானபாணம்விட்டார்
ஆயுதங்கள் தாமெடுத்து அமாதுசெய்யுமென்றான்
எண்ணான்குஆயுதத்தை எடுத்துஅரையிற்கட்டி
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகாடித்தார்
ரணங்கள்ரணங்களென்று ரணபேரிதானடித்தார்
கொட்டினார்சண்டை எழும்புதுசமரப்போ
வில்லித்தைநாரிபூட்டி விட்டாரிவர்கணையை
ஒருவர்க்கொருவர் ஒழிவில்லாப்பாணம்விட்டார்
அம்புவரும்வேகமதை ஆர்த்தமுடியாது
பாணம்வரும்விதங்கள் பார்த்துமுடியாது
ஒருகோடிபாணங்கள் ஒருமித்துவிட்டுவிட்டார்
சூரியன்விடும்பாணம் சொல்லிமுடியாது
கர்னன்விடும்பாணமும் கணக்குமிதங்களில்லை
துரோணர்விடும்பாணம் சொல்லிமுடியாது

வீஷ்டுமாசாரியரும் வேணபாணங்கள்விட்டார்
அசுவத்தாமாவும் அநேகநெடும்பாணம்விட்டார்
சகுனிசயிந்தவனும் சரமேற்சரம்பொழிந்தார்
அவரவர்கள்விடும்பாணம் அபரிமிதமில்லை
ஒருவர்க்கொருவர் ஒருகோடிபாணம்விட்டார்
வாயுவாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும்
சந்திரஅஸ்திரமும் இந்திரஅஸ்திரமும்
சங்கஞ்சங்கம்போலே சரங்கள்பொழிந்தார்கள்
கண்டானேசித்திரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வித்தைநாரிபூட்டி விட்டான்நெடும்பாணம்
தன்மேல்விடும்பாணம் தாங்காமலேவிலக்க
பின்னையுங்கோடிசரம் பிரளயமாய்விட்டுவிட்டான்
அத்தனைபேர்விட்டசர மத்தனையுங்கொள்ளைகொண்டான்
அங்கராசர்தேருடைந்து அவரவர்கள்வில்பறித்து
ஆனையின்மேலிருந்ததுரை அலறியேமண்ணைக்கவ்வ
ஒட்டையின்மேலிருந்ததுரை ஓலமிட்டுக்கீழேவிழ
தென்னங்குலைபோலே திருகினான்வேணதலை
கருப்பங்கருணையைப்போல் கண்டித்தான்வேணதலை
ஆலைக்கரும்புபோலே அறுத்திட்டான்வேணதலை
பேய்க்காலெறும்புபோல பிசைந்தெடுத்தான்பாளயத்தை
பனைநுங்குபோலாகப் பருத்தவிழிபிதுங்க
கண்டச்சதையறிந்து கழுகுக்கிரைபோடுகிறான்
ஈரல்சரியுது இறச்சிவெளியாகுது
குடல்கள்சரியுது குறிப்பாகஅப்பொழுது
ரொப்பைவிலாவெலும்பு நெறநெறென்றுகால்முறியும்
பட்டஜெனங்களென்றால் செப்பமுடியாது
செத்தஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
சித்ரசேனன்சண்டையிலே ஜெனங்களுமாளுகுது
அபயமபயமென்று அலையுதுபாளயங்கள்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்குதுபாளயங்கள்
ரத்தாறுவோடுது ராணமுண்டங்கொக்கரிக்க
இவ்விதப்பாளயங்கள் [illegible] கூடமாச்சுது
துரியோ[illegible] தேரிழந்துநின்றுவிட்டான்

சித்திரசேனன் துரியோதிரனைக்கட்டி இழுத்துக்கொண்டு
போகிறபோது துரியோதிரன்முறையிடுவது.

அங்கந்துளையச்சே அடித்தானேசித்ரசேனன்
அந்தரவீதியிலே அவனைப்பிடித்துக்கட்டி
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டினான்
தேர்குத்துக்காலோடே துரியனைப்பிடித்துக்கட்டி
ஊதினான்சங்குநாதம் உம்பர்பிரான்றன்மகனும்

சேர்பின்னிடுபடையே நிச்செடுத்தூராசரெல்லாம்
ஒருவருடனொருவர் சொல்லாமலோடலுற்றார்
திரியிலைக்கட்டிக்கொண்டு தெய்வலோகம்போறாராம்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
என்றுமென்னுகிறான் எவ்வளிப்புலம்புகிறான்
ஆரோதெரியாது ஆகாசங்கொண்டுபோறான்
எவனோதெரியாது எமலோகங்கொண்டுபோறான்
ஐவர்பஞ்சபாண்டவரை அனர்த்தம்பண்ணவந்தேனே
என்னையொருவன் இழுத்துப்போறானென்னசெய்வேன்
கூடவந்தராசாக்கள் கோடானகோடியுண்டு
கட்டில்லாராசாக்கள் வந்தார்கள்வீரியர்கள்
அத்தண்டராசாக்கள் அல்லவருங்கைவிட்டார்
கட்டியிழுத்துக் கைலாசங்கொண்டுபோறார்
ஆர்வந்துகாப்பார்கள் ஆபத்துவேளையிலே
எவர்வந்துகாப்பார்கள் என்சிவன்பிழைக்கயிப்போ
தருமரைத்தானினைத்தால் தயவுவந்துகாத்திடுவார்
இந்தவனத்திலே யிருக்கிறபேருர்கள்
கூவிப்புலம்பினால் குரல்கேட்குந்தருமருக்கு
தம்பியரைத்தானனுப்பி தயவுவைத்துக்காத்திடுவார
ஐவருமப்போது அன்புவைத்துகாத்தாலே
ஐவரைக்கொல்லுதற்கு ஆலோசனைதேடினோம்
தம்பிப்பிழைத்தோமானால் தருமரைக்கொண்டிடுவேமே
என்றவன்யோசனையாய் என்னசொல்லிப்புலம்புகிறான்
கூவிப்புலம்புகிறான் கொற்றவன்றுரியோதனன்
அண்ணாவே அண்ணாவே அழகானதருமலிங்கம்
ஐவர்பஞ்சபாண்டவரே அண்ணாவேநீர்கேளும்
ஐவரைப்பார்க்கவே அதிகப்பிரியமுமாய்
பார்க்கும்படியாக வந்தேன்காண்பஞ்சவரே
காணும்படியாக வந்தேன்காண்காவலரே
எவனோதெரியாது இழுத்துப்போறான் அந்தரமாய்
ஆரோதெரியாது அழைத்துப்போறானகரமாய்
கூடப்பிறக்கலையோ கூட்டிப்பாலுண்கிலையோ
தாயாரும்வேறானால் தகப்பனொருவனல்லவோ
மனதாமிரக்கலையோ மகாராஜர்தருமலிங்கம்
தம்பிதுணையன்பாலே தயவில்லையோஉந்தனுக்கு
அநியாயமாய்க்கொண்டுபோறான் ஆரோதெரியாது
என்-ஆவியைக்காத்தாலே அனேககோடிபுண்ணியங்காண்
காயாம்பூமேனியனே தயவில்லையோஎன்மேலே
என்றுபுலம்பியே இடிபோலகூச்சலிட்டான்
கூவுங்குரல்கேட்டுக்கொப்பெனவேதருமருக்கு
உற்றுக்கேட்டாராய் உரைத்தன்வார்த்தையை

திரியோதிரன்முறையிடுவதைத் தருமர்கேட்டு அருச்சுனனைப்போய் திரியோதிரன் அழைத்துவரச்சொன்னது.

தருமர்மனங்கொள்ளாமல் தம்பியரைத்தானழைத்து
ஆனாலழகுமன்னா அருச்சுனாநீர்கேளும்
பெரியதகப்பன்பெற்ற பேரானஅண்ணன்தம்பி
திரியோதிரனம்மைத் தேடியேபார்க்கவந்தான்
ஆரோவொருவன் ஆகாசங்கொண்டுபோறான்
எவனோதெரியாது இழுத்துப்போறான்அந்தரமாய்
பார்த்துமிருந்தோமானால் பாதகமெத்தவரும்
மெத்தவருந்துகிறான் வில்வேந்தனிப்போது
நம்மைவருந்துகிறான் ரட்சிப்பாயென்றுசொல்லி
ஆபத்துவேளையிலே ஆதரித்தால்புண்ணியங்காண்
கடுகவிடுத்துக் கையோடேகூட்டிவாராய்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்வாள்விஜயன்
ஊரோடிருந்தநம்மை உாகதன்தானழைத்து
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
எத்தனைவஞ்சனைகள் இடறுகள்செய்தான்காண்
காடுபறித்தானே ராச்சியத்தைகொள்ளையிட்டான்
ஐவரையும்விலங்கிலிட்டு அரையிலடைத்தானே
அரமனைப்பெண்களையும் அம்பறமேற்றிவைத்தான்
அண்ணன்பெருந்தேவி யாடையுரியவைத்தான்
பாரவனவாசம் பரதேசமோட்டினான்
இந்தப்பிரதேசம் இனித்திரியுமென்றானே
சாமத்துரோகனுக்கு தயவுநினைப்பாரோ
தென்னமுடிவேந்தன் திரியோதிரராசன்
எத்தனைநாளிருந்தாலும் இடரல்லோதேடுகிறான்
கொல்லநினைக்கிறான் கொடும்பாவிதிரியோதிரன்
இன்றேயொழிந்து எமலோகஞ்சேரட்டும்
செத்தாற்பழுதில்லை சீரானஅண்ணாவே
என்றவுரைகேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
அவரவர்செய்தவினை அவரேயனுபவிப்பார்
நன்மையைச்செய்தவர்கள் ராச்சியத்தையாண்டிடுவார்
பொல்லாங்குசெய்தவர்கள் போவார்பெருநரகில்
நன்மையைச்செய்தவர்க்கு நட்சேத்திரங்காணும்
தீமையைச்செய்தவர்க்கு தெரியாதிருளாகும்
வஞ்சனைகள்வேண்டாமே மாயன்துணையாவார்
இககணமேநீயேகி யிட்டுவந்துசேருமென்றார்
என்வார்த்தைதள்ளாதே என்னுடனே தம்பியரே

அருச்சுனன் திரியனையழைக்கப்போவது.

என்றவரைக்கேட்டு எழுந்தானருச்சுனனும்
நீண்டுமின்கால்களுக்கு செரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்திநிற்குங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தாக்கினைக்குங்கால்களுக்கு அதநிப்பூச்சல்லடமாம்
சல்லடங்களிட்டுமல்லோ தட்டுவரிந்துகட்டி
சந்திரகாந்திகட்டிகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
கட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
சத்திசொருகியல்லோ கடுகவெழுந்தானே
செங்கணிவில்லெடுத்து தேர்விஜயன்பயணமானான்
பாரமேன அர்ச்சுனனும் வழிப்பட்டான் அங்கெனவே
நடந்தானே அர்ச்சுனனும் நாழிகைக்குகாதவழி

அருச்சுனனும் சித்திரசேனனும் சண்டைபண்ணுதல்.

அப்போதருச்சுனனும் அதிவேகமாகவல்லோ
அக்கினிபாணத்தை அதிவிரைவாய்தானெடுத்து
பரிவில்லினைதொடுத்து மார்புளவாக்கினான்
அக்கினிபாணமது அதிவேகமாய்தடுக்கும்
கண்டானே சித்ரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
சீறியெழும்பியே சீக்கிரமாய்வந்தெதிர்த்தான்
சண்டைசண்டையென்று சமர்பேரிமுழங்குது
ஒருவர்க்கொருவர் யுத்தங்களாகுது
ஒருவர்விடுஞ்சரங்கள் ஒருவர்விலக்குவாரும்
இருவர்சமானமாக யிசைந்துமேசண்டைபண்ணார்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டார்
சூரியனைத்தான்மறைக்கும் சூரர்விடும்பாணமெல்லாம்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணார்கள்
அருச்சுனன்சண்டைகளை அண்டர்பிரான்மகனறிந்து

அருச்சுனனும் சித்ரசேனனும் சமாதானமாகி
திரியோகிரானை தருமரண்டை
அழைத்துப்போகிறது.

என்னீரிரும்வல்லபிரான் என்றுமனதிலெண்ணி
இவன் யாரோதெரியாது ஆண்மையுள்ளசேவகர்காண்
வம்மிசத்தைநாமறிந்து மறுத்தல்லோசண்டைசெய்வோம்
என்றல்லோசித்ரசேனன் ஏதுசொல்வானருச்சுனனை
ஆடாதம்பிநீ ஆண்மையுள்ளசேவகனே
எவனடாதம்பிநீ எதிர்த்துசண்டைசெய்யவந்தாய்
ஊரேதுப்பேரேது உன்தகப்பன்யாரேது
எனக்குடையபுத்திரனே எனக்கரியச்சொல்லுமென்றார்
இவ்வார்த்தைக்கேட்டியே ஏதுசொல்வானருச்சுனனும்

யுத்தகளந்தன்னிலே வுரவின் முறைமேகேட்பாரோ
படுகளத்திலொப்பாரி கேட்பாரோபாருலகில்
ஆண்பிள்ளையாமானால் அமரதுசெய்யுமென்றார்
உன்தகப்பன்தன்பெயரும் ஊர்பெயருஞ்சொன்னாலே
நானுரைப்பேன்பிற்பாடு நவிலென்றான்போர்விஜயன்
தேவேந்திரன்மகனும் சித்திரசேனன்தான்கேட்டு
உத்தரவுதான்கேட்டு உச்சாகங்கொண்டவனும்
தேவர்க்கதிபதிதான் தேவேந்திரனென்தகப்பன்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
அண்ணனென்றறியாமல் அமரதுசெய்தேனே
தமையனென்றறியாமல் சண்டைகள்செய்தேனே
வில்லைத்தரையில்வைத்து விஜயனுமோடிவந்தான்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்து மூவொருக்கால்தெண்டனிட்டான்
அண்ணாவேசரணமென்று அடிபணிந்தானர்ச்சுனனும்
தேவேந்திரன்மகனும் சித்ரசேனனேதுசொல்வான்
ஆர்விட்டுப்பிள்ளைநீ அறியவுரையுமென்றார்
என்னையறியாயோ எமனுடைய அண்ணாவே
என தாயார்குந்தியம்மாள் என்தகப்பன்தேவேந்திரன்
என்தகப்பன்தேவேந்திரன் என்பேருருச்சுனன்காண்
என்றவுரைகேட்டு ஏதுசொல்வான்சித்ரசேனன்
என்-தந்தைக்குநீபிறந்த தன்மையினால்தம்பியரே
நான்விட்டபாணத்தால் நம்பியேநீர்பிழைத்தீர்
அல்லாதேயாமானால் அமரில்மடிந்திடுவீர்
தப்பிப்பிழைத்தீரே சாமியுடபுண்ணியத்தால்
என்றிவர்களோர்மனதா யிருவருறவாடி
ஒருவர்க்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்
எழில்விஜயனப்போது ஏதுசொல்வானண்ணனுக்கு
தென்னமுடிவேந்தன் திரியோதிரராசன்
என்னசெய்தானென்றுநீ இட்டுப்போரீரண்ணாவே
அவன்செய்தகுற்றமெல்லாம் அண்ணாவேநீர்சொல்லுமெனை
இவ்வார்த்தைதான்கேட்டு என்னசொல்வான்சித்ரசேனன்
காட்டிலேமேய்ந்ததொரு காமதேனுஅத்தனையும்
பாற்பசுக்கள்தன்னையிந்தப் பாவிமடக்கிக்கொண்டான்
ஆயிரமிடையரையும் அநீதமாய்கொன்றுவிட்டான்*
அவ்வார்த்தைதான்கேட்டு அனுப்பினாரென்தகப்பன்
கைப்பிடியாய்கொண்டுவர கட்டளையுமிட்டார்கள்
அவர்சொன்னபடியினாலே அமரதுசெய்தேன்காண்
இவனுடையசேனைகளை எல்லாம்நான்கொன்றழித்து
விரைவாகக்கைபிடியாய் விண்ணுலகங்கொண்டுபோறேன்
என்றவுரைகேட்டு என்னசொல்வானருச்சுனனும்

ஆனாற்சொன்னேனே அடியேனொருவார்த்தை
காயாம்புமேனியரும் தருமரவரெங்களண்ணர்
என்னைவிடுவித்து இட்டுவாவென்றுசொன்னர்
என்னையனுப்பினர் இயலானதருமலிங்கம்
அழைத்துவரச்சொன்னரே அண்ணருமிப்பொழுதே
உன்முகத்தில்நான்விழிக்கேன் என்றுமேதர்மலிங்கம்
கூட்டியனுப்பினர் குதிப்பாகனந்தனையும்
என்மேல்தயவுவைத்து இவனையனுப்புமென்றான்
தேவேந்திரன்மகனார் சித்ரசேனனேதுசொல்வான்
மாடுமடக்கியே வல்லுயிரைக்கொன்றவனை
கைப்பிடியாய்க்கொண்டுவர கடுகியனுப்பினர்
ஆகையாற்கொண்டுபோறே னருச்சுனாஎன்னசெய்வேன்
ஆனாற்சொன்னேனே அடியேனொருவார்த்தை
அருச்சுனன்வந்து அழைத்துபோனானென்றுசொல்லும்
ஐவரென்றுசொன்னாலே அதிகமனமகிழ்வார்
அல்லாதேயாமானல் அழைத்துமேபோனாலே
என்வார்த்தைதள்ளிநீர் இட்டுக்கொண்டுபோனாலே
அண்ணனேநாளைக்கு அமராபுரம்வருவேன்
தேவேந்திரபுரத்தைச் சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுகளைமாடுகளை அழகானஊருகளை
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும் அமரனைத்தெருவுகளும்
அத்தனையுங்கொள்ளையிட்டு அதம்பண்ணிபோட்டிடுவேன்
என்வார்த்தைதான்கேட்டு இவனைவிடுவிடென்றான்
சித்ரசேனன்கேட்டுச் சிந்தைமகிழ்ந்தவரும்
சந்தோஷம்பட்டவரும் சர்ப்பக்கொடியோனை
கட்டவிழ்த்துவிட்டுவிடுங் காணென்றான்சித்ரசேனன்

சித்ரசேனன் தேவேந்திரனைக்காண்கிறது.

போய்வாரேனென்றல்லோ புரப்பட்டான்தேரேறி
அமராபதிதேடி அடைவுடனே தானடந்தான்
தேவேந்திரனுக்கு சித்ரசேனன்தெண்டனிட்டான்
அருச்சுனன்தன்னுடைய அதிசயச்சேதிகளும்
அரவக்கொடிவேந்தன் அகப்பட்டசேதிகளும்
இவ்விருவர்சேதிகளும் இயலாகத்தான்கேட்டு
தகப்பனுடனுரைக்கச் சந்தோஷமாகினர்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
திரியோதிரனைத் தேர்விஜயன்கூட்டிவாரான்
அண்ணாருக்காக அழைத்துவந்துவிட்டாராம்
அண்ணர்தருமருக்கு அடிபணிந்தான்திரியோதிரன்
சரணம்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
ஏமன்மகன்தருமராயன் எடுத்தணைத்தான்திரியனையும்

எங்கிருந்துவந்தீரப்பா எனக்கறியச்சொல்லுமென்றார்
அத்துவானகானகத்தில் ஆரணியம்வந்ததென்ன
அந்தரமாகவே ஆர்காணுங்கொண்டுசென்றார்

திரியோதிரன் கருமருக்கு வாலாறுகூறுதல்.

திரியோதிராசன் சொல்லதுகேட்கிறான்
ஆசையாய்பாசமதாய் அண்ணரைப்பார்க்கவந்தேன்
எத்தனைநாள்காடுறைவீர் இட்டுப்போகவேணுமென்று
அஸ்தினாபுரத்துக் கழைத்துக்கொண்டுபோமவாமென்று
எண்ணாதுமெண்ணினான் இக்காடுதேடிவந்தேன்
என்னை ஆரோதெரியாது அந்தரமாய்க்கட்டிப்போனான்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்தானுமங்கே அமர்செய்துவிட்டுவந்தான்
எத்தனைநாள்காடுறைந்தீர் இயலானராசாவே
பாரவனவாசம் பரதேசந்திரிவானேன்
வேடரைப்போலாக வில்லியரைப்போலாக
பரதேசந்திரிவானேன் பட்டணத்தில்வாங்களென்றான்
அஸ்தினாபுரத்தை ஆண்டிடுவீர்வாங்களென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
ஆறுவருஷமாச்சு ஆரணியம்வந்துநாங்கள்
இன்னஞ்சிலகாலம் இப்படியேநான்திரிந்து
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
வந்தபிறகாக மனதுவைத்தேன்மேலே
சொன்னபடிசீமை தரைத்தனந்தாருமென்றார்

வீமன்கனிபறித்துவர திரியோதிரன்புசித்து தருமரிடம் செலவுபெற்று அஸ்தினாபுரம்செல்லுகிறது.

வெற்றிமதயானை வீமாமதகரியே
அண்ணர்களோயாகி அதிகபசியானோர்
காடெல்லாந்தான்திரிந்து கனிபறித்துவாருமென்றார்
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
அறுநெல்லிசிறுநெல்லி அழகானதமர்த்தையுடன்
காட்டுவிளாம்பழமும் கருநெல்லிப்பழங்களுடன்
வேரில்பழுத்திருக்கும் வெடித்தபலாப்பழமும்
மலைத்தேனசுனைத்தேனும் மாங்கனியுந்தேங்காயும்
மட்டில்லாப்பழம்பறித்து மதவீமன்கொண்டுவந்தான்
தேக்கிலைதான்பறித்து திறல்வீமன்கொண்டுவந்தான்
பறித்தகனியெல்ல பசியாரவுண்ணுமென்று
கைக்குச்சலங்கொடுத்து கட்டமுகநீருண்ணுமென்று
ஆசனந்தான்போட்டு அமுதுபுசியுமென்று
விஷநாகங்கொண்டவனும் வேந்தனுந்தான்புசித்தான்
எண்ணாதுமெண்ணுகிறான் எரிநாகங்கொண்டவனும்
இப்படிக்கொத்த இயலானபஞ்சவர்கள்

சர்ப்பமாக்குச்சாவார்கள் இக்கனியைத்தின்றவர்கள்
அஸ்தினாபுரத்திற்போய் ஆலோசனைபண்ணவேண்டும்
காப்பயும்பஞ்சவரை இக்காட்டிற்கொல்லவேணும்
என்றுமனதிலெண்ணி இருந்தகனிபுசித்தான்
பசியாறவுண்டானே பாதகன்றுரியோதனன்
கைசுத்திக்கொண்டானே காதகன்றுரியோதனனும்
சாயம்புமன்னவனார் தருமர்பெருமானும்
மின்னுஞ்சிலகனியை பெருமூட்டையாகக்கட்டி
அப்பா துரியோதனா அழகானவிக்கனியை
அரண்மனைக்குக்கொண்டுபோம் அனைவருந்தான்புசிக்க
எடுத்துப்போமென்றுசொல்லி சந்தோஷமாய்க்கனியை
வாங்கியேயக்கனியை மன்னவனுந்தோளிலிட்டான்
போயவேபோய்வாரேனென் றடிபணிந்துதெண்டனிட்டார்
சாயம்புமன்னவனார் தர்மலிங்கமேதுசொல்வார்
காண்டீப அர்ச்சுனனே கடுகியெழுந்திருந்து
அண்ணன்றுரியன்றன் னக்கனியின்மூட்டைகொண்டு
காடுகடக்கவும் கைமூட்டைநீதாங்கி
அண்ணனைவழிகூட்டி அனுப்பிவா தம்பியென்றார்
தருமருரைகேட்டு தார்விசையன்றானெழுந்து
கனிமூட்டைதோளில்வைத்து கடுகியேபின்னடந்தான்
துரியோதனன்பின்னே நடந்தானேதேர்விசையன்
காடுஞ்செடியுங் கடியவனாந்திரமும்
ஆறுஞ்சுனையும் அவ்வனமுந்தான்கடந்து
காடுகடந்தபின்பு கைமூட்டைவாங்கிக்கொண்டு
தென்னமுடிவேந்தன் துரியோதனனேதுசொல்வான்
நாகிலுமர்ச்சுனனே தொல்லுலகில்வாராதே
கடக்கிலுமர்ச்சுனனேசக்காகினியில்வாராதே
நாடுமெறிந்தகாலால் நாடுமிதியாதே
அதைக்கண்டபோதயிலே அறுத்தெறிவேனுன்றலையை
தருமர்பெருமையினால் தணித்துவிட்டேன்கோபத்தை
என்றுதுரியன்சொல்லி இசைந்துவழிநடந்தான்
அண்ணாருக்காக அருச்சுனன்வந்தழுதான்
அப்போதுரியோதனன் அதிவிரைவாக
காடுசெடியுங் கரியமலைகடந்து
அஸ்தினாபுரத்துக்கு ஆனைமுகன்போயடுத்தான்
சிங்காதனமீதிற் சென்றுமே துரியோதனன்
ஆசாரிஐவரையும் அனந்தமகாராசரையும்
மாமன்சகுனியும் மைத்துனன்சயிந்தனையும்
அத்தண்டபேரையும் அழைத்தான்றுரியோதனன்
கொண்டுவந்தகாய்கனியைக் கொப்பெனவேமுன்னேவைத்தான்
இக்கனியையுண்ணுமவரெப்படிகாண்மாண்டிடுவார்

தேவேந்திரன்மகனர் சித்திரசேனனெனைப்பிடித்தார்
தேரிலேலேக்கட்டி தெய்வலோகங்கொண்டுசென்றார்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அர்ச்சுனன்வந்து அமாதுசெய்தான்காண்
என்னைவிடுவித்து இட்டுவந்தானண்ணாண்டை
ஐவரையுங்கண்டேனே அநேகமானவார்த்தைகளை
உசிதமாகவேதா னேற்றுமையாய்வார்த்தைசொன்னேன்
இந்தகனிதான்புசிக்கும் எழிலானபஞ்சவர்கள்
என்றிவர்கள் தான்பேசி யிருந்தார்சிலவார்த்தை
எப்படிக்குமாண்டிடுவார் இயலானபஞ்சவர்கள்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
ஆறும்வருஷம் முடிந்தது ஐவருக்கு

ஆறாவது காமதேனுபர்தம்-முற்றிற்று.

எ-வது, கெந்தர்வபர்வதம்.

ஏழாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோறார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோவிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணிவைத்தசீயாடு வனவாசம்போறார்கள்
காமதேனுபர்வதத்தைக் கடந்துவழிகூடி
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோறார்கள்
கெந்தர்வபர்வதத்தில் வந்தாரேபஞ்சவர்கள்
ஐந்தடுக்குப்பர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குபர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே
அங்கேபெருமாளும் அலைகங்கைஸ்நானம்பண்ணி
ஈரமுலர்த்தி இழைசேர்ந்தபட்டுடுத்தி
சாம்பவமூர்த்திபூசைகளும் சகலமுந்தான்முடித்து
ஆசனமிட்டுமல்லோ அரிராமர்பூசைபண்ணார்
அரிபூசைகுருபூசை அனைத்துங்கடன்முடித்து
கைதனிலேதீர்த்தமள்ளிக் கதிரோனைப்பூசித்து
எளிக்குங்கதிரோனை எம்பெருமாள்தோத்தரித்து
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
சிவஞானமாகவே ஸ்ரீகிருஷ்ணன்தானிருந்தார்

எம்பெருமாள் செபம்பண்ணும்வேளையில் கெந்தருவன்
தம்பலம்உமிழ பெருமாள்கோபிக்கிறது.

ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மாயனென்னும்கெந்தருவன் வாரானேதேரேறி
தேரேறிவருகையிலே தின்றுஉமிழ்ந்தானே
வால்மிளகுஏலரிசி வாசமுள்ளஜாதிபத்திரி



பெருமாள் சக்கரத்துக்குப்பயந்து கெந்தருவன் அருச்சுனனிடத்தில் அபயமடைதல் பெருமாள் திரியோதிரனுடன் கலந்து அர்சுனனிடம் போர்செய்தல்

வெத்திலையும்பாக்குகளு மென்றாவுமிழ்ந்தேதனே
மாட்வனார்கைதனிலே வந்துவிழுந்தது
துப்பியதம்பலமும் துழாய்மலுவின்கையில்விழ
கண்டிரந்துபார்த்தாரே கைதனிலேதம்பலத்தை
சுற்றியங்கேபார்த்தாரே தேடிணைகில்லையேவெருருவர்
ஆகாயவீதியிலே அவனுமோதெரியாது
கைதனிலேதம்பலத்தைக் காரியுமிழ்ந்தானே
செபதபஞ்செய்கையிலே செய்ததிவன்கெருவமென்ன
கண்கள்சிவந்தாராம் காந்தாளமானாராம்
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரியாச்சுது
நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்புக்தணலாச்சு
கோவைப்பழம்போலக் கூர்விழிகள்சிவக்கும்
பாவற்பழம்போலத் பத்தினியேகண்சிவக்கும்
சக்கரத்தைதானெடுத்து சாமிபெருமாளும்
கொல்லநினைவுகொண்டார் கோபாலரெம்பெருமாள்
மந்திரதூபமிட்டு வலதுகையில்தானெடுத்தார்
தம்பலம்வுமிழ்ந்தவன்றன் தலையைநீவாங்கிவா
அரைக்ஷணப்போதையிலே அறுத்துவாயவன்றலையை
ஆரார்வந்தெதிர்த்தாலும் அமரர்வந்தெதிர்த்தாலும்
பிர்மதேவன்வந்தாலும் பிரிபங்கள்சொன்னாலும்
தேவபிரான்வந்தாலுந் தெண்டனிட்டுக்கொண்டாலும்
கர்த்தரேவந்து கையமர்த்திக்கொண்டாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்தடுத்தாலும்
ஆரார்தடுத்தாலும் ஆரவாரம்பண்ணாலும்
அரைநாழிக்குள்ளாக அறுத்துமவன தலையை
இக்கணமேசென்றுநீ இருதுண்டப்போட்டிடுவாய்

மாயன் கெந்தருவன்மேல்கோபித்து சக்கரத்தை
அனுப்புகிறது.

சக்கரத்தை தூபமிட்டு சாமியவர்விட்டுவிட்டார்
வருகுதுசக்கரந்தான் வானுலகந்தானதிர
இயலபாய்வழிதனிலே எதிர்பட்டார்நாரதரும்
நாரதமாமுனிதான் நமஸ்கரித்தார்சக்கரத்தை
இத்தனைகோபத்துடன் எங்குநீர்போறீர்காண்
அரிராமர்சக்கரந்தான் அம்முனிக்குயேதுசொல்லும்

நாரதர் சக்கரத்தை நீர்போகிறகாரியம் என்ன
என்றுவினவ சக்கரம் சொல்லுதல்.

ஸ்ரீராமரெம்பெருமாள் செபதபஞ்செய்கையிலே
வாசங்கள் தானின்று வலதுகையில்துப்பினதே
ஆகையால்சாமியவர் அப்போதுகோபமானார்
என்னையனுப்பினார் இவன் தலையறுக்கவந்தேன்
கெந்தருவன்றன்றலையை முந்தி அறுக்கவந்தேன்

அவ்வார்த்தையைக்கேட்டு அந்தமுனிபோய்நடந்தார்
கெந்தருவன் தன்னருகே வந்தாரே நாரதரும்
ஆடா கெந்தருவா ஆரவர்பேரிலே
அம்பலமுமிழ்ந்ததினால் சாமியவர்கோபமுடன்
சக்கரம் அனுப்பிஉந்தன் தலையைத்தரிக்கவென்று
வருகுதுசக்கரந்தான் மாளவிதியாச்சே
ஆதிசிவனருகே அபயமிட்டுப்போனக்கால்
பரமசிவன்பார்த்துப் பட்சம்வைத்தாராமானால்
ஆதிசிவன் தன்னாலே ஆகுமவனைக்காக்க
அல்லாதேபோமானால் அறுத்துவிடும்உன்தலையை
தப்பிப்பிழையுமென்று தவமுனிசொல்லுகையில்
அவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தவனும்

கெந்தருவன் சக்கரத்துக்கஞ்சி மும்மூர்த்திகளண்டைபோய்
முறையிட்டுத்தீராமையால் அருச்சுனனண்டைபோகிறது.

வாயுவேகமாகவே வழிபிடித்தான்கெந்தருவன்
சக்கரம்வந்திடவே தான்புலம்பிஓடுகிறான்
ஆதிசிவனருகில் அபயமிட்டுஓடுகிறான்
ஆராவபாணர்க்கே ஐயா உனக்கபயம்
சங்கரநான்சரணம் சதாசிவா உனக்கபயம்
சாந்தலிங்காநான்சரணம் தாணுவே உனக்கபயம்
வெள்ளிவிடபமேறும்வித்தகாநான்சரணம்
மாபூதனைச்சரித்த மகாதேவா உனக்கபயம்
முக்கண்படைத்தவரே முதல்வரே உனக்கபயம்
திரிபுரமெரித்தவெங்கள் தேவா உனக்கபயம்
காமனைக்கண்ணாலெரித்த கடவுளேநான்சரணம்
எமனையுதைத்தவரே ஈசா உமக்கபயம்
கங்கையணிந்தோனே கடுக்கைதரித்தோனே
திங்களைத்தன்சிரசில் தரித்தசிவனாரே
அபயமபயமையா ஆதிசிவனாரே உனக்கபயம்
அபயக்குரல்கேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
ஆரடாகெந்திருவா அபயமிட்டவாறேது
ஆருக்குபகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தவயணங்கள் வார்த்தையுரையுமென்றார்
ஆண்டவனே எஞ்சாமி அடியேனொருவிண்ணப்பம்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
காயாரக்காய்த்தொரு கமுகினதுபாக்கை
வாயாரத்தின்றுதான் மண்மேலேதுப்பினேன்
தாமரைப்பொய்கையிலே சாமிபெருமானும்
அனகாரைத்தான்பார்த்து செபதபஞ்செய்தாராம்
நானுமிழ்ந்த தம்பலம் சாமர்மேல்விழுந்திடவே

கோபாலசுவாமியவர் கோபம்பெரிதாகி
சக்கரத்தையனுப்பினர் தலையைத்தரிக்கவென்று
என்னைக்-கொல்லவருகிறது இயலானசக்கரந்தான்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
என்னை நீகாத்தருளும் ஈசாவெனப்பணிந்தேன்
கார்க்கடனுனக்கு கார்வண்ணன்மைத்துனனே
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்வரருமேதுசொல்வார்
நான்வேறுவிஷ்ணுவேறோ நானிலத்திற்கெந்தருவா
ஆயருக்குப்பகையாகி அருகேவரலாமோ
உன்னைநான்காத்தாக்கால் உலகளந்தாரென்னசொல்வார்
கார்வண்ணரெந்தனுக்கு கடிகிப்பகையாவார்
காக்கமுடியாது கடக்கவேபோய்விடுங்காண்
பிரமன்தேவன்தன்னருகே போனீரேயாமானுல்
அவராலேயாகுங்காண் ஆதரிக்கவல்லபிரான்
என்றுஉரைத்தாராம் எண்டோளரப்போது
அழுதுபுலம்பியே அப்புரம்போய்புகுந்தான்
பிரமலோகந்தான்புகுந்து பிரமாஅருகில்வந்தான்
அபயமபயமையா ஆதரிக்குங்கர்த்தாவே
என்னையேயாதரியும் என்றல்லோதெண்டனிட்டான்
ஆயுளைப்பார்த்தெழுதும் அரிபிரமரேதுசொல்வார்
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
ஆண்டவனேஐயாவே அயனேரேநீர்கேளும்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
அடைக்காயும்வெற்றிலையும் ஐயாநான்மென்றுதின்று
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
மாயவனுர்கைத்தலத்தில் வந்துவிழுந்ததாம்
மாயன்வெகுமோபமாகி வரவிட்டார்சக்கரத்தை
என்னையேகொல்லுதற்கு இயலாயனுப்பினர்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
எந்தனையாதரியும் என்றல்லோஅடிபணிந்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வான்நான்முகனும்
நான்வேறுவிஷ்ணுவேறோ நானிலத்திற்கந்தருவா
மாயருக்குப்பகையாகி வந்தாயோபாதகனே
உன்னையேஆதரித்தால் உலகளந்தாரெந்தனுக்கும்
பொல்லாப்புநேர்ந்துவிடும் பெரும்பாவியெந்தனுக்கு
உன்னையேஆதரிக்க உதவாதுஎந்தனுக்கு
எமபுரமேகிநீ ஏமனுடனுரைத்தால்
எந்தவிதமாகிலும் ஏமனுன்னைசார்த்திடுவான்
சடுதிநடவுமென்று கைவிட்டார்பிரமதேவன்
அழுதுபுலம்பியே அதிவிரைவாய்தான்செல்லான்

மௌனருகில்வந்து இனைத்துப்புலம்புகிறான்
காலனைக்கண்டு கடுகவேயேதுசெய்தான்
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
அப்போதுகெந்தருவன் அவருக்கெடுத்துரைப்பான்
அந்தமார்க்கத்திலே அழகுரதமேறிவந்தான்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததாம் மாயருடைகைத்தலத்தில்
ஆகையால்கோபித்து அனுப்பினார்சக்கரத்தை
என்னைக்கழுத்தறுக்க எகிறிவருகுதென்றான்
என்னையுமாதரிப்பு மென்றானேகெந்தருவன்
சொல்லுங்கேட்டுமவன் கடுகவேயெடுத்துரைப்பான்
மாயருக்குப்பகையானால் மன்னவனைபார்க்கலாமோ
மாயருடையூழியத்தை மன்னவனேசெய்திடுவேன்
உன்னையேகார்த்தாலே உளகளந்தார்கோபமுற்றால்
எதிர்த்துப்புறப்பட்டால் எதிர்நிற்கப்போறேனோ
காக்கமுடியாது கட்டழகாகெந்தருவா
அமராபுரியாளும் அழகானதெய்வபிரான்
தேவேந்திரருகில் சென்றுநீர்போவீரானால்
காக்கவும்வல்லபிரான் கடுகிநீபோருமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமவன் அழுதுபுலம்பிவாறான்
தெய்வலோகந்தன்னிலே தேவேந்திரருகே
அபயமிட்டு அடிபணிந்தான் ஆனதொருகெந்தருவன்
ஆராதம்பிநீ அறியவுரையுமென்றான்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவார்த்தை
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
வெற்றிலையும்பாக்கும் வால்மிளகுஜாதிபத்திரி
ஜாதிக்காயேலரிசி சன்னலவங்கமுடன்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
வந்துவிழுந்ததாம் மாயவனார்கைதனிலே
ஆகையினாலெம்பெருமாள் அடியேன்மேல்கோபமாகி
சக்கரத்தையனுப்பியென்தன் தலையைத்தரியுமென
வருகுதுசக்கரந்தான் வல்லுயிரைவாங்கவென்று
கொல்லவருது கொப்பெனவேசக்கரந்தான்
ஆதரித்தென்னைரட்சி அனேகங்கோடிமோட்சமுண்டு
என்றவுரைகேட்டு ஏதுசொல்வாரிந்திரரும்
மாயருக்குப்பகையாகி வந்தவனைஆதரித்தால்
எதிர்த்தாரேயாமானால் எதிர்நிற்கப்போறேனோ
மாயனுக்குச்சரியானோர் வையகத்திலாருமில்லை
உன்னைப்போயாதரிக்க உலகத்திலாருமில்லை
தருமருடதம்பியவன் தார்விஜயனருச்சுனன்தான்

அருச்சுனனுன்னை ஆதரிக்கவேமுடியும்
அபயக்குரல்கேட்டு ஆதரிப்பான்வாள்விஜயன்
ஆதிசிவனான அரனாரும்வந்தாலும்
எழுதும்பிரமாவும் எம்பெருமாள்வந்தாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்வந்தாலும்
ஆர்வந்தெதிர்த்தாலும் ஆரவாரம்பண்ணுமலும்
அருச்சுனராசனவன் அன்னவோரைவென்றிடுவான்
வாள்விஜயனருச்சுனனும் வல்லாமையுள்ளவன்காண்
அருச்சுனனைநீகோறி அபயமிட்டுபோனீரானால்
ஆதரிப்பான்வாள்விசய னதிவிரைவில்போய்ச்சேரும்
என்றவுரைகேட்டு எழுந்தானேகெந்தருவன்
அழுதுபுலம்பியே அருச்சுனனைத்தேடிவாரான்
தெய்வலோகந்தாண்டி தேர்விஜயனைத்தேடி
அழுதகண்ணுஞ்சிந்தையுமாள் அலறியேயோடிவாரான்
அபயமபயமென்று அருச்சுனன்முன்னேவந்தான்

அருச்சுனன்கெந்தருவனுக்கு அபயங்கொடுத்தது.

அபயக்குரல்கேட்டு அருச்சுனனேதுரைப்பான்
ஆரடாகெந்தருவா அழும்புலப்புவானே
ஆரெதிர்த்துவந்தாலும் அமராதுசெய்திடுவேன்
அந்தரவேதைகள் ஐபண்பிடாரிகளும்
ஆகாயவாணிகளென்னுந்துபாதானறிய
காக்கிறேனஞ்சாதே என்றல்லோகைகொடுத்தான்
அருச்சுனன்கைகொடுத்து அஞ்சாதேயென்றுசொல்ல
சற்றேபயந்தெளிந்து சமாச்சாரஞ்சொல்லலுற்றான்
அருச்சுனராசனவன் அப்போதுயேதுசொல்வான்
ஆருக்குபகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
எவரெதிர்த்தாருன்னோடே இங்கழுதுநீவந்தாய்
வந்தகருமமென்ன வாய்திறந்துசொல்லுமென்றான்
அஞ்சிப்பயந்தவனும் அருச்சுனனோடுரைப்பான்
ஆகாயவீதியிலே அழுகுரதமேறிவந்தான்
வாசங்கள்தின்றுநான் மண்மேலேதுப்பினேன்
நானுமிந்தகம்பலந்தான் ராமர்கையில்விழுந்ததாம்
ஆகையால்மாயவரும் அப்போவெகுகோபமுடன்
என்னையேகொல்லவென்று எடுத்துவிட்டார்சக்கரத்தை
சக்கரம்வருகுதுகாண் தலையைத்தரிக்கவென்று
ஆதிசிவனருகில் அபயமிட்டுபோனேனையா
தன்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
அயன்பிர்மாதேவனிடம் அபயமிட்டுப்போனேனையா
ஆதரிப்பாரென்றுநான் அபயமிட்டுப்போய்ச்சேர்ந்தேன்
என்னாலேயாகாது என்றல்லோதள்ளிவிட்டார்
எமதர்மராசனண்டை எதிர்கொண்டபயமிட்டேன்

தன்னுடையாகாது என்றல்லோ தள்ளிவிட்டார்
தேவேந்திரனிடத்தில் சென்றுஅபயமிட்டேன்
சாத்தியமோவென்றுதான் கடுகியபயமிட்டேன்
என்னாலாகாது என்றல்லோ தள்ளிவிட்டார்
அழகில்மிகுந்தவரே அருச்சுனரேயும்மைநாடி
தேடியேஅபயமிட்டு தெய்வலோகம்விட்டுவந்தேன்
ஆதரித்தீராமானால் அனைவர்க்குங்கீர்த்தியுண்டு
இவ்வார்த்தைதான்கேட்டு எழில்விஜயனருச்சுனனும்
என்னசெய்வதுமென்னுகிறானெண்ணிமனங்குன்னுகிறான்
மாயனுக்குப்பகையாகி வந்தவனைக்காத்தாலே
மாயனுக்குமெந்தனுக்கும் அடுத்தபகையாமே
என்னசெய்யப்போறோமென்று ஏங்கிவிசாரமிட்டார்
இவர்சகாயரல்லோ ஆயர்பெருமானும்
தம்பியேயென்றவரை ரட்சிக்கவேணுமல்லால்
காக்கிறோமென்றுசொல்லி கையைவிடலாகாது
ஆயர்பெருமானுக்கு அன்பாகவார்த்தைசொல்லி
எந்தவிதத்திலேயும் இவனுயிரைக்காக்கவேணும்
அல்லவென்றுகோபமிட்டால் அமரதுசெய்திடுவோம்
என்றுநினைந்தவனும் என்னசொல்வான்வாள்விசையன்
திங்களும்சூரியனும் தெற்குவடக்கானாலும்
அழகானதாமரையும் அடியோடேபூத்தாலும்
தப்பிப்பிழைத்துஎன்னை நரகத்திற்போட்டாலும்
நாவாலேசொன்னசொல் நான்தவறப்போறதில்லை
எந்தவிதத்திலேயும் இடாசற்றிசாத்திடுவேன்
என்றல்லோவாதரித்தான் இயலானவாள்விசயன்

அருச்சுனன் கெந்தருவனுக்குபயந்தீர்க்க பெருமானுக்குகோபம்வந்து சக்கரத்தை யனுப்புகிறது.

வருகிறசக்கரந்தான் மண்ணுவிண்ணுங்கொள்ளாமற்
கண்கள்பொறிபறக்க கடுகிவருகிறதே
அருச்சுனராசரண்டை அருகேவந்துதெண்டனிட
என்னருகேகாரியமேன் எங்குவந்தீர்சக்கரமே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றான்
சாமியனுப்பினவந்த சக்கரமேதுசொல்லும்
மாயனுக்குப்பகையான மாபாவிகெந்தருவன்
அருச்சுனரேயுன்னிடத்தில் வந்தானரும்பாவி
அவனைகழுத்தறுக்க அனுப்பினார்மாயவனார்
ஆசையாயனுப்பினான் அருச்சுனரேயவன்தலையை
அறுத்தெரிந்துயான்போறேன் அவனையனுப்புமென
தனஞ்செயனுமப்போது சக்கரத்துக்கேதுசொல்வான்

பாரளந்தாரானவர்க்குப் பகையானுனென்றறியேன்
அபயமபயமென்று ஞதரித்தேனவனை
காக்கிறேனுமென்றுசொல்லி கையைவிடலாகாது
ஆகையால்சக்கரமே ஆயருக்குசேதிசொல்லும்
கோடிசரணம்நான் குப்பிட்டேனென்றுசொல்லும்
ஆயிரந்தெண்டனிட்டு அடிபணிந்தேனென்றுசொல்லும்
சக்கரத்தாழ்வாரும் தார்விசையற்கேதுசொல்லும்
ஆனால்போய்வாரேனென்று அப்போதிரும்பிவந்து
மாயரைக்கண்டு வணங்கிநமஸ்கரித்து
ஆதிசிவனருகில் அபயமிட்டுவோடுகையில்
ஆதரிக்கமாட்டோமென்று அவரும்விலக்கிவிட்டார்
அருச்சுனனார்தன்னருகில் போனனபயமிட்டு
வணங்கிநமஸ்கரித்து மாயவாவார்த்தைசொன்னேன்
உனக்குபகையான உண்மையெல்லாநானுரைத்தேன்
எத்தனைசொன்னாலும் இரங்காமலருச்சுனனும்
ஆண்டவரேயுன்னருகே அனுப்பினான்சொல்லுமென்று
இவ்வார்த்தைகேட்கனுமே எம்பெருவாள்கோபமாகி
ஆங்காரக்கோபமுடன் அரிராமரென்னசொல்வார்
ஐவரைக்காப்பதற்கு ஆண்டவனாய்நாமிருந்து
இத்தனைநாள்காத்தேன் இயலானபஞ்சவரை
எனக்குபகையாளி தனக்குபகையல்லோ
ஆதரிக்கஞாயமுண்டோ அறியானுயென்சமர்த்தை
மறுக்காலொருதரம்நீ வாள்விசையனருகிற்சென்று
நானுரைத்தவார்த்தையெல்லாம் நல்விசையனருகிற்சென்று
மாயவற்கவேண்டாத மாபாவியானவனை
விட்டுவிட்டாலல்லாது வேணபகையாகுமென்று
குருகுலவம்மிசத்தார் கூட்டோடொழியுமென்று
கொலைநினைப்பார்காண் குடிகேடுவருகுதென்று
சொல்லிமெய்வாருமென்று சொன்னாரேமாயவனார்
அப்போதுசக்கரத் தாழ்வாருந்தானடந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
அருச்சுனராசரண்டை அருகேவந்துதெண்டனிட்டு
மாயவனார்சொன்னதொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
காண்டீபனருச்சனற்குக் கரியமால்சேதிசொல்லும்
உண்டானவார்த்தையெல்லாம் ஒளியாமலேயுரைத்தான்
காண்டீபனருச்சனற்குக் கரியமால்சேதிசொல்லும்
ஏதரிவான்கெந்தருவான் ஏழையானுன்னடியேன்
வாள்விசையனர்ச்சுனன்மேல் வன்பகையுந்தனுக்கேன்
ஏதுகுற்றமானாலும் எனக்காய்மனம்பொறுத்து
ஆயிரந்தெண்டன் அடிபணிந்தேனென்றுசொல்லும்
காக்கிறேனென்றுசொல்லி கைவிடஞாயமில்லை

தழுக்கிப்பிழிந்துனன்னை நரகத்திற்போட்டாலும்
கைவிடான்விசையனென்று கண்ணருக்குநீயுரையும்
வெற்றியுள்ளகாலமட்டும் யுனைமறவானருச்சுனரும்
வணங்கினேனென்றுரையும் மாயருக்குநீர்தாமும்
அனேகங்கோடிநமஸ்காரம் அருச்சுனன்செய்தானென்று
தாமோதரன்றனக்கு சக்கரமேபோய்ச்சொல்லும்
சக்கரமேபோய்ச்சொல்லுஞ் சரணஞ்சரணமென்று
சொல்லித்தொழுதானே சுவாமிபெருமாளை
சக்கரத்தாழ்வாருக்குந் தனஞ்செயன்விடைகொடுக்க
சக்கரத்தாழ்வாருந் தானுமங்கேபோய்நடந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
அருஞ்சுனை தாண்டி அதிகவனந்தாண்டி
மாயருகில்வந்து வணங்கியேதெண்டனிட்டு
வாள்விசையன்சொன்னதொரு வார்த்தைகள்தானுரைக்க
ஆயரவர்கேட்டு ஆங்காரக்கோபமதாய்
துவர்பஞ்சபாண்டவர்க்கு அனர்த்தம்பிறந்ததென்ன

சக்கரம் அருச்சுனன் மனமறிந்து பெருமானுக்குச்சொ
ல்ல பெருமாள்கோபித்துச்சாத்தகியை
யனுப்புகிறது.

சொல்லினைப்பாரே குடிகேடுவந்திடுமே
வேண்டாங்காண்வாள்விசையா வீண்பகைதேடாதேயென
அருச்சுனற்குச்சொல்லிநீ அதிவிசையிலோடியந்த
கெந்தருவன் தன்தலையை அந்தட்சணமறுத்து
இருசுதனைப்போனதயிலே உத்திரவுகொண்டுவாரும்
என்றவுரைகேட்டு எழுந்துநடந்தாரும்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
அருச்சுனன்தானிருக்கும் ஆரணியம்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனரைக்கண்டு அடிபணிந்துதெண்டனிட்டான்
மாயனுரைத்ததொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
ஒன்றுமொழியாமல் வுரைத்தானேசாத்தகிதான்
அதிராமர்சேதியெல்லாம் அருச்சுனன்தான்கேட்டு
எத்தனைவார்த்தைநா னிரக்கமாய்ச்சொன்னாலும்
இரங்காமல்மாயவரும் எதிர்க்கவுந்நாயமுண்டோ
ஆயன்பெருமானும் அரியாரோஎன்சமர்த்தை
பெண்டுகள்பேச்சுகளோ பேசுகிறாரெம்பெருமாள்
ஒக்கவலுமையுண்டானால் கடுகிவரச்சொல்லும்
தலையிலேநாமிருந்து மொருகிறதுநாயமுண்டோ
மைதானவெளியிலே வரச்சொல்லுமசண்டைபண்ண
காக்கிறேனென்றவனை கைவிடப்போறேனோ
மாயவருட னுகமயேஸ்வரனே வந்தாலும்
பெருமானுடனுகப் பிரமதேவர்வந்தாலும்

எவரெவரெதிர்த்தாலும் யிளைப்பேனென்றுபாராதே
போவென்றுசொன்னானே போர்விஜயன்கோபமதாய்
சாத்தகியாழ்வாரும் தானடந்தார்பொட்டெனவே
ஆயாருகில்வந்து அடிபணிந்துதெண்டனிட்டான்
அருச்சுனன்சமர்த்துகளும் அடிபணிந்துதெண்டனிட்டார்
சண்டைக்குமுன்னீயாய் தான்வரச்சொன்னதுவும்
அவ்வார்த்தைசொல்லுகையில் ஆயருங்கோபமுற்று
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரியாகுதுபார்

அருச்சுனன்மேல் பெருமாள்கோபமாகி சண்டைக்குப்
போக திரியோதிரனை வரவழைக்கிறது.

கோபம்பெரிதாச்சு கோபாலநாதருக்கு
சாத்தகியைத்தானழைத்து சாமியாரேதுசொல்வார்
திரியோதிரனுக்குச் சேதியுரையுமென்றார்
மாயவருக்குப்பகையானார் மன்னர்பஞ்சபாண்டவர்கள்
ஐவரைக்கொல்லவென்று ஆயர்பயணமிட்டார்
உன்னுடையசேனைகளும் யுத்தமானராசர்களும்
சேனைத்துணையாகச் செப்பிவரச்சொன்னார்
வாருங்களென்று வரவழையுந்திரியனைத்தான்
இப்போசமசம் இதோபயணநாங்களென்று
நாகக்கொடிவேந்தன் ராசாவையழையுமென்றார்
சாத்தகியாழ்வாரும் சரணமிட்டுப்போய்நடந்தார்
அஸ்தினபுரத்துக்கு அடைவுடன்போய்ச்சேர்ந்து
திரியோதிரனுக்குச் சேதிகள்சொல்லலுற்றார்
ஐவரைக்கொல்லுகைக்கு ஆயர்மனதாகி
அழைத்துவரசொன்னார்காண் அரவக்கொடியோனே
வருவீரோவென்றுசொல்லி வாய்மொழிகேட்கலுற்றார்
சாத்தகிசொல்லலுமே சர்ப்பக்கொடியோனும்
திரியோதிரன்கேட்டு சிந்தைமனங்குளிர்ந்து
ஐவரைக்கொல்லுகைக்கு அதிசமனதாகி
நல்லசமயம் நமக்குகிடைத்ததென்று

திரியோதிரன் பெருமாளிடம் வருகிறது.

அங்கேநட்டான்சண்டாவை அடியுமென்றான்பேரிகையை
இன்றுவெளிகூடாரம் இப்போதுபோடுமென்றான்
கானலுக்குஎடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
வெயிலுக்குஎடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
யானையின்மேல்டங்காவும் குதிரையின்மேல்டோராவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைசெய்திடவே
யானையும்சேனையுடன் அரசமன்னர்பயணமிட்டார்
திரியோதிரன்தம்பியர்கள் தொண்ணூற்றொன்பதுபேர்
கருணன்சகுனியும் காந்தாரிபிள்ளைகளும்
துரோணாசுவத்தாமன் சொற்பெரியர்களும்

கிருபன் கிருபாசாரி கீர்த்தியுள்ள மன்னர்களும்
பீஷ்மபான்சகுனனும் பேர்மிகுந்தமந்திரியும்
மற்றுள்ள ராசர்களும் மந்திரிபாணமானோர்
அமரதருஞ்சமரரும் அதிரதரானவரும்
சல்லியர்தேனுக்கர்களும் கன்னடியானவரும்
சமுத்திவக்கணரும் இளநாட்டுச்சோனகரும்
பண்ணூன்கு ஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
நாலுபக்கத்திலுள்ள ராசாக்கள்சேனையுடன்
கார்மேகம்போலே கறுத்தானைகூட்டம்வரும்
மேகத்தின்மின்னலைப்போல் வெள்ளானைக்கூட்டம்வரும்
வானத்தின்மின்னலைப்போல் மணித்தேரசைந்துவர
செவ்வானம்போலே சிவந்தபுரவிகளும்
அச்சுகிருஷிசென்ன யானைநெடுந்தேரசைய
வண்டிக்கிருஷிசென்ன மதயானைகோஷ்டமிட
குதிரைகனைக்குமங்கே கொக்கரிக்கும்பாளையங்கள்
செந்தூளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
சண்டைசண்டையெனறுசொல்லி சண்டைநகரடிபடுது
சங்குகள்ரணங்களென்று ரணபேரிதான்முழங்க
தேவர்களசைந்துவரச் சிகரக்கொடிபறக்க
மாயவனூர்பட்டணமே வாரார்களெல்லோரும்
அங்கேகட்டாரன்சண்டாளை அங்கிறங்கப்பாளையங்கள்
திரியோதிராசன் ஸ்ரீகிருஷ்ணனருகில்வந்து
மாயவரைக்கண்டு வணங்கித்தெண்டனிட்டான்
எழுலகமாண்டசாமி எம்பெருமானேதுசொல்வார்
பாகங்கொண்ட மகாராசாநீர்கேளும்
காலையில்தானெழுந்து துனிவாய்முகங்கழுவி
தினகரனைத்தோத்திரித்து செய்தேன்ஜெபதபங்கள்
ஆசையவீற்றிருக்க அருமபாவிசெந்தருவன்
வாசங்கள்தின்றுமெந்தன் வலதுகையில்தானும்முந்தான்
அவனைக்கழுத்தறுக்க அனுப்பினேன்சக்கரத்தை
அப்பூபமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனராஜனவன் ஆதரித்துக்கொண்டானும்
ஆகையாலருச்சுனனை அதமாகவேணுமென்றான்
உதைனுக்குச்சொல்லி உதகத்தைவாருமென்றேன்
என்வார்த்தைதள்ளாமல் என்மேல்தயவாகிவந்தீர்

ஐவரைக்கொல்ல திரியோதிரனும் அவன்சேனைகளும் எம்பெருமாளும் அவர்சேனைகளும் சண்டைக்குவருகிறது.

ஐவரைக்கொல்லுவதற்கு அனைவோரும்போவோமென்று
பாணப்பட்டணமென்று பயணப்பரியடியுமென்று
அமரதருஞ்சமரரும் அதிரதரானவரும்

கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கனரும் இளநாட்டுச்சோனகரும்
அத்தண்டராஜனும் அல்லைநம்பனென்றார்
துரோணரசுவத்தாமர் சொல்லியவீரர்களும்
கிருபன்கிருபாசாரி கீர்த்திபெற்றகர்ணனும்
எண்ணான்குஆயுதங்கள் எடுத்தணிந்திட்டனர்கள்
ஏறினார்தேர்மேலே எடுத்த [illegible] கொடிகுடையை
தோணியும்மாணியும் சேனைத்தி [illegible]
வார்ஜெனங்களெல்லா மட்டும் [illegible]
காடுஞ்செடிதாண்டி கரியமலைதானதாண்டி
வனமாய்வனங்கடந்து வருகுதுபாளையங்கள்
தினகரன்வனத்தினிலே சேர்ந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிமன்னர்வந்தார்கள்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காளம்காரிஷிவனத்தில் கடுகிவந்தாரனேகம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காமதேனுபர்வதத்தில் கடுகிவந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
கெந்தர்வபர்வதமே கிட்டிவந்தார்கள்
ஒற்றனொருவனை ஓடிப்போய்சொல்லுமென்றான்
திரியோதிரனபடையும் ஸ்ரீகிருஷ்ணன்சேனைகளும்
வருகிறதென்றுசொல்லி வாள்விஜயனுக்குமாயும்
என்றுசொல்லியருச்சுனற்கு அனுப்பினான்தூதுவனை

அருச்சுனற்கு எம்பெருமாள் சண்டைக்குவருகிறே
னென்று தூதனிடம்சொல்லியனுப்புதல்.

ஓடினான்தூதுவனும் ஒருநொடியிற்போய்சேர்ந்தார்
அருச்சுனராஜருக்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மாயனும்வரகதனும் வருகிறார்சண்டைபண்ண
எச்சரிக்கையாகவே இருமென்றுபெம்பெருமாள்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தானருச்சுனனும்
தருமருகில்வந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
அண்ணன்தருமருக்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆகாயவீதியிலே அழகானசெந்தருவன்
மச்சுரதமேறி வருகிறவேளையிலே
வாசங்கள்நின்று மண்மேலேதாப்பிதனும்
அவனுமிழ்ந்ததப்பலங்கள் அரிராமர்கையில்விழ
மாயன்பெருமானும் மகாகோபந்தானாகி
சக்கரத்தைவிட்டார்காண் தலையறுக்கவென்று
அபயமபயமென்று அலறிப்புலம்பினான்
அபயக்குரல்கேட்டு அர்ச்சுனனும்

அரிக்கீசகனின்றுசொல்லி அமர்செய்யவாராராம்
[illegible]வென்று அரிராமர்வாராராம்
[illegible]டவராரிராசுன்னுமே
நீமவர்த்தன்னைத்தான்கேட்டு ஏதுரைப்பார் தருமருமே
போருக்குதுரையோடுடன் போவாமே தம்பியென
வெற்றிமதயானை வீமனவனே தான்சொல்வான்
அச்சமேதேதம்பியரே அதுமாக்கிப்போட்டிடுவேன்
துரியோதனன்படையும் ஸ்ரீராமர்சேனைகளும்
எல்லோரையுங்கொன்று எமலோகஞ்சேர்த்திடுவேன்

வீமனும் அர்ச்சுனனும் சண்டைக்குப்புறப்படுகிறது.

என்றுமதவீமன் எழுந்தானே கோபமுடன்
தருமரையுந்துரோபதையுந் தம்பிமாரிருவரையும்
அப்பயிட்டெக்கருவன் அவனையுந்தானழைத்து
உச்சிமலைதனிலே உள்ளகுகையிருக்கும்
அந்தக்குகையிலே அனைவரும்போயிருங்கள்
வந்தவிரோதியெல்லாம் மண்ணுக்கிரையிடுவேன்
சாம்பெருமாள்சேனைகளை எமலோகஞ்சேர்த்திடுவேன்
எச்சரிக்கைபாகவே இருமென்றானப்பொழுது
அப்படியே தருமரவர் அதிவிரைவாய்த்தானெழுந்து
உச்சிமலைதனிலே ஒருகுகையிற்போயிருந்தார்
வீமார்ச்சுனரும் விரைவாகத்தானெழுந்து
நீண்டபெருங்கால்களுக்கு நெறிஞ்சிப்பூச்சல்லடமாம்
குந்திரிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தூத்திப்பூச்சல்லடமாம்
சல்லடக்கனிட்டுமல்லோ தட்டிவரிந்துகட்டி
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூச்சங்குவிட்டு
அம்புவில்லுந்தானெடுத்து ஆயுதப்பட்டார்கள்
வடக்குமுனையிலே மதவீமனவந்துநின்றான்
தெற்குமுனையிலே தேர்விஜயனவந்துநின்றான்
வந்துதுபரியங்கள் மண்ணும்விண்ணுங்கொள்ளாமல்
ஆனைகுதிரைரதம் அளவில்லாச்சேனைகளும்
வருகிறஜனங்களைத்தான் மாயவனார்தானழைத்து
துரியோதனனை சேரவழைத்து
உன்னுடையசேனைகளை உகமையுள்ளராசர்களை
சமர்துசெய்யவந்த சமர்த்துள்ளமன்னர்களை
ஆனைகுதிரைகளும் அரசமன்னருள்ளவரும்
பாணணியுந்தேரணியும் மற்றுமுள்ளாருவரும்
உன்னுடையபாளையத்தை ஒன்றாகவேகூட்டி
வடக்குமுகத்திலே மதவீமன்றன்மேலே
சண்டைபோய்ச்செய்யுமென்று தான்சொன்னார் துரியனுக்கு

தெற்குமுகத்திலே தேர்விஜயன் தன்னருகே
என்னுடையசேனைக ளெல்லோரும்போயெதிர்த்து
அருச்சுனன் தன்னுடனே அமராடுசெய்திடுவோம்
என்றுஅனுப்பினவத்தார் இயலானமாயவரும்
தவளச்சங்கூதினார் சண்டைக்குவாரேனென்று
ஊதினார்சின்னம் உளாகளந்தார்பாளையத்தில்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
செந்தாளெழும்புகுது தினகரனைக்கப்புகுது
கருந்தாளெழும்புகுது கதிரோனைக்கப்புகுது
வந்துயெதிர்த்தார்கள் வூள்விஜயன்தன்னுடனே
அந்தசமயத்தில் அரவக்கொடியோனும்
தன்னுடையசேனையுடன் தான்வடக்குதிசையதனில்
வந்துஎதிர்த்தானே மதவீமன்தன்னுடனே
எண்ணொணாச்சேனையுடன் எக்கரித்துதான்வளைத்தார்
சிங்கநாதந்தானூதி சேனைகளுங்கொக்கரித்தார்
கண்டான்மதவீமன் கண்கொள்ளாச்சேனைகளை
எல்லவரைக்கொல்லவென்று எழுந்தானேமதகரியான்
கோபம்வருகுது கொற்றவனார்வீமனுக்கு
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுது
கண்ணையுருட்டிக் கதம்பினான்சேனைகளை
எட்டினான்கல்மலையை எகிறவிட்டான்பாளையத்தில்
மலைகளைத்தான்பிடுங்கி மதவீமன்வீசுகிறான்
குன்றுகள்பேர்த்தெடுத்துக் கொப்பெனசாடுகிறான்
ஆனைகுதிரைகளும் அலரிக்கலங்கிடுமாம்
அச்சுகளுந்தானவிழ்த்து அனேகரதம்விழுமாம்
வண்டிமுறிந்துசில மச்சுத்தேர்தானொடியும்
ஜெனங்கள்மடியுது செப்புரவிஓடுகுது
கண்டங்கண்டமாகுது கடுஞ்சேனையத்தனையும்
அம்மாடியென்றுசொல்லி அலையுதுபாளையங்கள்
செத்தஜனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
ரத்தாறுஓடுகுது ரணங்கள்மிகக்கொப்பளிக்க
ஐயாசிவனேயென்று அலையுதுபாளையங்கள்
பார்த்துமுடியாது பாவியுடஜனங்கள்
சொல்லமுடியாது துரியோதிரன்பாளையங்கள்
இந்தவிதமாக எழில்வீமன்கொல்லுகிறான்
இப்படியாக இவன்சண்டைபண்ணுகையில்
ஆளுலகுமன்னன் அருச்சுனன்தன்னுடனே
வந்துஎதிர்த்தாரே மாயர்பெருமானும்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைச்சுணதொனித்தான்
மார்புளதாமெடுத்து தோள்புளவாங்கிவிட்டான்

சாணாக்குருரிங்கள் பார்க்கமுடியாது
சொர்ணமழைபோலே சொரிகிறார் பாணமது
சந்தரன்மாரிபோலே சரமேல்சரம்பொழிந்தான்
அருச்சுனன்பின்னிடையான் அகோரசரம்பொழிந்தார்
ஆகாசத்தன்னளவாய் அம்பாலேபந்தலிட்டு
சூரியனைத்தான்மறைத்தான் சூராதிசூரனவன்
வில்பிடிக்கசைந்தலத்தில் மெத்தசிவப்பேறும்
வெள்ளைத்தனில்திமிராமல் மாரிச்சரம்பொழிந்தார்
வாயுவிலஸ்திரமும் வருணாஸ்திரமும்விட்டார்.
பின்னையுமஸ்திரங்கள் பிரளயமாய்த்தான்விடுத்தார்
நாலுகடிகைமட்டும் நல்லசண்டைபண்ணுர்கள்
ஒருவர்க்கொருவர் உகந்துபின்வாங்காமல்
சண்டையமர்க்களத்தில் தாங்கிப்பொருதலுற்றார்
விலக்குவாரில்லை மிகுந்தசமாதனை
மாயனெம்பெருமாட்கு வருகுதுமெத்தகோபம்
என்றுமில்லாக்கோபம் எழும்புதுமாயவற்கு
விட்டதொருபாணமெல்லா மட்டறுத்தான்வாள்விஜயன்
அருச்சுனனைக்கொல்ல அரிராமர்கோபமதாய்
சக்கரத்தைதானெடுத்தார் சாமிபெருமாளும்
கொலைவிணைவுகொண்டார் கோபாலரர்ச்சுனரை
மந்திரதாபமிட்டு மாயவனுரேதுசொல்வார்
அருச்சுனன் தன்சிரசை அரைநொடியில்வாங்குமென்றார்
சுழற்றியெடுத்தாரே சுவாமியுஞ்சக்கரத்தை
கண்டானேவாள்விசையன் காந்தாளமாயெழும்பி
தானுமெடுத்தானே தன்னுடையசக்கரத்தை
சக்கரத்தைமந்திரித்து சாமியைக்கொல்லவென்று
எடுத்தானேசக்கரத்தை இமையோர்கள்தானறிய
சக்கரத்தைமந்திரித்து தான்விடவகையறியான்
வாவென்றழைக்க வகையறியானருச்சுனனும்

சாமிபெருமாள் சக்கரமெடுக்கத் தனஞ்சயன் பதில்சக்கர
* மெடுக்க இருவரும் சமாதானமாகிறது.

கண்டார்பெருமானும் கணமோசம்வந்ததென்று
நாமல்லோகற்பித்தோம் நல்விஜயனருச்சுனற்கு
சக்கரத்தைவிட்டாக்கால் தானழைக்கவகையறியான்
சக்கரம்வந்துதானால் தலையையறுத்துவிடும்
மோசம்வருகுதென்று முகில்வண்ணரேதுசொல்வார்
தன்னுடையசக்கரத்தை சாமியார்தேரில்வைத்தார்
தேரைவிட்டிறங்கினர் ஸ்ரீராமர்பொட்டெனவே
கண்டானேயருச்சுனனும் கடுகியிறங்கினான்
தேரைவிட்டுதானிறங்கி ஸ்ரீராமர்க்கெதிரானான்
ஒருவர்க்கொருவர் உரவாடிக்கொண்டார்கள்

எம்பெருமானும் அருச்சுனனும் சமாதானமானதைக் கிரீடிதிரன் கண்டு பொறுமைப்பட்டுச் சொல்லாமல் இருக்கிறது.

கண்டான் கிரீடியோதிரன் கரியமால்மோசமதை
தனஞ்சயனைப்பாயணுமே கழுவிவிளையாடியதை
எனமறைநூல்பரண் எண்ணுனும் அரிகரகல்கொண்டையும்
மாயன்வெகுதாமே வஞ்சனைகள் செய்தாமே
பொல்லாதினை வலிகொண்டு பெருமானையழைத்துவந்தார்
கமலையேயலைச்சல்லவென்று காமனையழைத்துவந்தார்
அரியாமலைவகுவிட்டோம் அமாதுசெய்யொவென்று
மாயவினைகட்டி வருவதீதியல்லை
இவர்சகாயமென அவனியதிற்கேட்டிருந்தோம்
அதிகதுமிருக்குதாம் அநீதமாயமானவந்தோம்
யுத்தம்பண்ணவகுதில் அறவாடிப்போனுமே
கொல்லுகிறேனென்றுவந்து கூடியுறவாடினார்கள்
இனியிருக்குதாயமல்ல என்றுபயப்பிடிக்கான்
ஆனையுஞ்சேனையும் அண்டகொண்டுபானையும்
தப்பியிருக்க தனம்பிரியசேனைகளே
கூட்டிநடந்தானே கொதுப்போல்வீரரும்
காடுஞ்செடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுநதிகளைகடந்து அநேகமலைதான்கடந்து
அதிகர்பட்டணந்தனை அடுத்தான்கிரீடனுமே
அந்தச்சமயத்தில் அப்பெருமாளுச்சனனும்
ஒருவர்க்கொருவர் உறவாடிப்போய்கடந்தார்
மெல்லியரிழைச்சிவ ஒருவருமாய்
தருமருக்குப்போயுதய தம்பிமார் இருவருமாய்
கமிசெபெருத்திருந்து காவலைவிட்டுதொழுதார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்மாயவனை
முக்காலவலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
பெருமான்மனமகிழ்ந்து பிரியமுடன் சேவாத்தி
அலலவனைசகையமாகி அதிராமவீற்றிருந்தார்
தருமருடனே சாமியடுத்தசொல்வார்
காலைக்கடன்முடித்து கைப்பக்கிசெபதபங்கள்
செய்துகொண்டிருக்கையிலே தேவேந்திரன் சதாபாய்
ஆயிரம்பொருகேத்திருவன் அதிசகெருவமதாய்
போகிறவனைச் கண்டு புளிச்சென்று தும்பலத்தை
தப்பிறவச்சக்கரத்தை தவிர்த்தவனென்றுஅறுப
கிரீடியபயமெலக் கொக்கருவிக்கொடைவா
காலக்குப்பனைபால இந்திரனைப்பார்த்தே
ஆகரிகருக்காயமுதலைதேடி அருள்செய்குசக்கரமிமன்
சான்றோனைப் பொருதிருசாகும் கைதுடன் கோவைவா
துக்கமுற்றுவெகிய சருகாயம்தெசால்வார்

[illegible]செய்தபிறகு ஆண்டவனே மனம்பொறுத்து
பெரியபாதகஞ்செய்தபிறகு தேவர்மனம்பொறுத்து
[illegible] போதுமென்றுகேட்கத்தான்
உங்களையுங்[illegible] [illegible]வந்திருந்தோம்
[illegible] [illegible]த்தஞ்சமென்பேன்
[illegible] இனியாரைத்தஞ்சமென்பேன்
உங்களை[illegible] உயிர்கொண்டுலாவுகிறோம்
[illegible] இயலான தருமராசர்
[illegible] [illegible]துசொல்வார்
அருச்சுனனைத்தான்பார்த்து அபிராயமேதுசொல்வார்
[illegible] தெய்வேந்திரன்மகனே
[illegible] [illegible]பிரான்
[illegible] [illegible]
[illegible] சொல்லிவிட்டார்
[illegible] [illegible]நாமறியோம்
[illegible]பிரான் [illegible]மில்லை
[illegible] தர்மபஞ்சபாண்டவரே
[illegible] இனியவனமபோயிருங்கள்
[illegible] [illegible]திரிங்கள்
[illegible] பெருமாளெழுந்திருந்தார்

[illegible]பெருமாள்விடைபெற்று தனனிருப்பிடச்செல்லுகிறது.

துவரைவாழ்பதியே *ஸ்ரீராமர்போய்நடந்தார்
காடுஞ்செடியும் கரியமலைதான் தாண்டி
மாயவனார்போனபின்பு வாள்விஜயனை துசொல்வான்
வாராய்தெக்கருவா வார்த்தை [illegible] தெரிந்தும்
உன்-ஆபத்துதீர்த்து ஆண்மையுள்ளதெக்கருவா
[illegible] [illegible]
[illegible] விடைகொடுத்தார் [illegible]விஜயனே துசொல்வார்
அப்போது தெக்கருவன் அருச்சுனற்கு தெண்டனிட்டார்
தான்செய்தபாவத்தை இராஜனை தீர்த்துவிட்டார்

தெக்கருவன் அருச்சுனனிடையில் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம்போய்ச் சேருகிறது.

அபர்க்கைதான் தீர்த்து ஆதரித்தீர்வர்ள் விஜயா
உனக்கு[illegible] தருவேன உயிர்க்கேத்தா[illegible]வே
பாராசாரிபெண்புரவி பஞ்சவர்ணக்குப்புரவி
உத்தமா[illegible] உயர்புரவியென்றான்
ஆறுமுகமன்னன் அருச்சுனனே துசொல்வான்
வனவாச[illegible] வந்ததிறகாக
அப்போது [illegible]மென்று அப்புரவிதானனுப்பும்
[illegible] [illegible]
[illegible]



வீமன் பரிசு தமைக் கொண்டுபோகச்செல்லல்.

போய்வாருமென் றுசொல்லிப் புண்ணியருங்கூறினர்
நாயினென் றும்கெந்தருவன் வணங்கியேதெண்டனிட்டு
போகச்சாணுமென்று போய்நடந்தான்கெந்தருவன்
ஏழாம்வருஷம் முடிந்ததுபஞ்சவர்க்கு
இந்தக்கதைதன்னில் இடறுகளுண்டானல்
தக்கினிலுள்ளவர்கள் சரியாகவிக்கதைதனை
இகழ்ச்சியாயுள்ளதெல்லாம் புகழ்ச்சியாய்த்தான்திருத்தி
அகத்தினிற்றான்பொருந்தி அன்பாகத்தான்படித்தால்
சுகத்துடன் தான்வாழ்ந்து சுவர்க்கபதிசேர்வார்கள்
இந்தப்படியாக யெப்போதும்வாழ்ந்திடுவார்
வாழ்த்தினைடகொடுத்தார் மாயவனாப்போது
வாழிவாழியென் றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனர்

ஏழாவது கெந்தர்வபர்வதம்-முற்றிற்று.

அ-வது, குருபாரிஷிவனம்.

எட்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோவிலைவைத்தமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிலைவைத்தமோடு வனவாசம்போறார்கள்
குருபாரிஷிவனத்தில் குடித்தனமாய்ப்போறூர்கள்
அந்தவனத்திலே ஐவர்குடித்தனமாய்
ஐந்தடுக்குப்பர்ணசாலை அழகாகஉண்டுபண்ணர்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகஉண்டுபண்ணர்
பர்ணசாலைமேலாகப் பஞ்சவர்கள்வீற்றிருந்தார்
அந்தவனத்திலே அநேகநாட்செனறபின்பு

துரோபதை வனசாரிவந்து பாரிசாதபுட்பம் கேட்கிறது.

தோராவடிவழகி துரோபதைநாயகியும்
ஒருநாளையொருநாளில் ஒண்டியாய்துரோபதையாள்
அந்தவனத்தி னதிசயத்தைபார்த்துவர
வரத்திற்பெரியவராம் மகாரிஷியானவராம்
யோகத்திற்பெரியவராம் உத்தகுருபாரிஷியும்
சாபத்திலும்பெரியவராம் தவத்தில்மிகுந்தவராம்
அவர்-பூசைபண்ணும்தீர்த்தம் பொய்கைபோலோடுகுது
தடுஞ்சலத்திலே ஓதுங்கிவரும்பூமலரும்
பாரிசாதபூமலரும் பரிமளமாய்வீசுகுது
ஆற்றிலடித்துக்கொண்டு அலைந்துவருகுது
கண்டாளே துரோபதையாள் கடிகிமனதுகொண்டாள்
மெத்தாசைபட்டாளே வேல்பெருந்துங்கண்ணாளும்
என்னுதுமென்னுகிறு ளெண்ணிதுரோபதையும்
ஆரோடேசொன்னாலே ஆகுமிந்தக்காரியங்கள்
எவரோடேசொன்னாலே எடுத்தளிப்பாரிம்மலரை

வெற்றிமதயானை வீமருடன்சொல்லுமானால்
பரித்துத்தருவார்கள் பரிமளத்தைத்தயாபிப
கன்றுடக்காமே இளங்கொடிதுரோபதையும்
பரவசமேலாகப் பாஞ்சாலிதானுரைக்க

துரோபதை வீமனைப்புட்பங்கேட்கிறது.

வெற்றிமதயானை வீமனைத்தான்பார்த்து
ஏலப்பசங்கிளியாள் இளங்கொடிபாஞ்சாலிசொல்வாள்
ஆண்டவனேனுபாயே அடியேனுருவின் ஐப்பா
மறுதலைப்பிடைக்காய கண்டாவசைபட்டுவந்தேன்
பாரதுபார்த்துவந்தேன் பார்த்தாவசைபட்டேனையா
என்மனதுக்கேற்றபடி எனக்குவிடைதாரும்
வெற்றிமதயானை வீமவீரதுசொல்வார்
பாஞ்சாலன்பெற்றபெண்ணே பச்சைப்பசங்கிளியே
எதனைத்துவகதாய் எனக்கறியச்சொல்லுமென்றார்
கோராவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
அகிலாண்டகோடீ ஆறொன்றுசான்றது
பரிமளத்தோடிருக்குது பார்த்துவந்தேன்பாரிசாதம்

வீமன்பாரிசாதபுட்பம் கொண்டுவரப்போகிறது.

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
இங்கேயிருபெண்ணே என்றேயெழுந்திருந்து
சீண்டுமேக்கால்களுக்கு கெரிஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டிபிடிக்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
குந்திபிடிக்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தாதகிப்பூச்சல்லடமாம்
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூக்கச்சையிட்டு
செண்டாயுதமெடுத்து சிலீமன்வாராரே
ஆற்றங்கரைபோலாம் அந்தவீமன்வாராரே
பூமாத்தைதேயவே பொருமேனீமனவன்
போசனைக்குபோசனை உயரமுள்ளபூமரம்
இதுவென்னதிரமாம் இட்சணமேகொண்டுவாரேன்
எழுசற்றுவெளிகளாம் இருபக்கமாமலையும்
யாமலைச்சனிலே வல்லனுமார்காவலதாம்
பூவனத்திற்போகவென்று போனதைவீமனவன்
வாசற்படியிலே வல்லனுமார்படுத்திருக்கார்
கண்டானுமாரும் சரிவீமனைப்பார்த்து

வீமனுக்கும் அனுமாருக்குஞ் சண்டையாகிப் பின்பு சமாதானப்படுத்தல்.

ஆடமாட்சதனே அஞ்சாமற்போகவந்தாய்
இந்தவனத்திலே எதுக்குப்போறாயென்றான்
போகவிடேனென்று போறானைப்போகு

வெற்றிமதயானை வீமனுந்தான்கேட்டு
கோபம்வருகுது கோலாகலவீமனுக்கு
தானுமிருந்தாந்து தடைபிடித்தென்றுசொல்லி
கைவிரண்டுமீட்டியே கட்டமுகன்வீமனதான்
கோடைவிடிபோலே குத்தினான்நடுமுதுகில்
அந்த அமைசத்தம் அந்தவனத்திலேகிடன்ன
அந்தவனத்திருக்க அநேகமிருகமெல்லாம்
மறுகாலொருவனத்தே மருண்டோடுதேமிருகம்
அனுமாருடேரோகங்கள் அயர்ந்துகொடுத்ததுகாண்
கோபம்வருகுது கோபாலதூதுவர்க்கு
தன்னையடித்தவனை இட்சணமேகொன்றிடுவேன்
என்றுசொல்லிதானெழுந்து நின்றானேநல்லனுமான்
அடித்தானேவீமனை அடிவானத்திடிபோலே
கோடைவிடிபோலே குத்தினான்மார்கலங்க
அந்தஅடிபட்டவுடன் அங்கேகளைத்தானும்
மண்மேல்விழுந்தானும் மல்லாந்தபாவனையாய்
விழிகள்பிதுங்கியே விழுந்தானேமூர்ச்சையதாய்
மாண்டவன்போலே மண்மேல்விழுந்தானே
அனேகநெடுநேரம் ஆனபிறகாக
மூர்ச்சைதெளிந்து முடிமன்னன்தானெழுந்தான்
கண்டானேநல்லனுமான் கடுகியவனேதுரைப்பான்
என்னுடையசன்னதியிலே எவரும்பிழைத்ததில்லை
இவன்-ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
அடித்தஅடிபோட்ட அவனியில்விழுந்தவன்காண்
தவறியெழுந்தவன்காண் தப்பிப்பிழைத்தானே
என்றுமனதிலெண்ணி இயலனுமானேதுரைப்பான்
ஆரடாராட்சதரோ ஆங்காரமுள்ளவனே
ஆரென்றிருந்தீர்காண் அரிராமதூதனல்லோ
லங்கையழித்தவன்நான் ராவணனைவென்றவன்காண்
அஞ்சனாதேவிபெற்ற அனுமந்தன்நானல்லவோ
என்னோடெதிர்த்தவனும் இனிபிழைக்கப்போறீரோ
என்றதுரைகேட்டு இயலானவீமனவன்
உற்றதுகேட்டு மெத்தபயந்தவனும்
அண்ணனென்றறியாமல் அமராதுசெய்தோமே
என்று-பச்சைத்தழையுருவி பாதத்திற்றான்போட்டு
முக்காலவலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டான்
நாற்காலவலம்வந்து அடிவணங்கித்தெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
கண்டந்தநல்லனுமார் கடுகியேயுரைப்பார்
ஆரடாதம்பிநீ அறியவுரையுமென்றான்
உன்-ஊரேதுபேரேது உன்னுடையபேரென்ன

ஆருடையபுத்திரன்காண் அறியவுரைபுயென்றான்
வெற்றிமதயானை வீமனவனே துசொல்வான்
என்றகப்பன்வாயுராஜா என்தாயார்குந்தியம்மாள்
மந்தாரக்குந்தியம்மாள் பெற்றெடுத்தமகாராஜன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலமணிகளிலொருவன்டீ
தருமராஜர்தம்பி நாக்குடையவீமனென்பேர்
இவ்வார்த்தைதான்கேட்டு எதுசொல்வான்வல்லனுமான்
உத்தமனேநாமிருவர் ஒக்கப்பிறந்ததினால்
என்னுடையசண்டைக்கி எவரும்பிழைத்ததில்லை
தம்பியென்றதாலையினால் தப்பிப்பிழைத்தீரே
மானாமல்நீபிழைத்தாய் மதலீமனுனையினால்
என்று-ஒருவர்க்கொருவர் உறவாடித்தானபேசி
ஏதுவகையாக யிங்குவந்தாய்தம்பியரே
வந்தகருமமதை வாய்திறந்துசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமவீரே துசொல்வார்
இந்தவனமதனில் வந்தோம்வனவாசம்
பாஞ்சாலன்பெற்றமகள் பஞ்சவர்னகற்கிளியாள்
பாரிசாதபூமலரை பார்த்தாசைபட்டாளாம்
காணாதபூமலரைக் கண்டாசைபட்டாளாம்
பாரிசாதபூமலரைப் பறிக்கவென்றிங்குவந்தேன்
வேண்டிவந்தபூமலரை வேண்டுவேந்தாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அனுமந்தனே துசொல்வான்
குருபாரிவனத்தில் கோடியுண்டுகாவலர்கள்
எழுலட்சங்கிங்கிலியர் இவ்வனத்திற்காவலுண்டு
இந்தனகாவலிலே எப்படிக்குப்போய்வருவாய்
அந்தரிஷிபறித்தால் ஆக்கினைசெய்திடுவார்
தொல்லைதீனப்பாரே குடிகேடுவந்திடுமே
ஆருமறியாமல் அவருடையபுட்பவனம்
என்னசெய்வேன்தம்பியரே எப்படிபோய்வருவாய்
உன்னை-வால்முனையில்கட்டி நான் வனத்திலேவிட்டிடுவேன்
ஆருமறியாமல் அம்மலரைநீபறித்து
வாலையசக்கிவிட்டால் எடுத்துநான்வந்திடுவேன்

வீமன் அனுமான்வாலின்வழியாகச்சென்று ராட்சதனை
வெல்லாக் கொல்லுகிறது.

என்று-வாலிலேகட்டினான் மதகரியான்வீமனைத்தான்
வாலைக்கிளப்பி வனத்திலேபோகவிட்டான்
இந்தவனப்புதுமை எல்லாமறியவென்று
வாலைபவிழ்த்தானே மதகரியானப்பொழுது
அசக்கிவிட்டானென்றுசொல்லி அனுமாருமவாக்கினார்
வீமனைக்காணாமல் அனுமந்தன்தானிருந்தான்
ஆயாசப்பட்டு அனுமந்தன்தானிருந்தான்

வெற்றிமதயானை வீமனவனே துசொல்வான்
அந்தவனத்திலே அதிசயம்பார்க்கவென்று
சுற்றிவருகிறான் சுந்தரமாவவ்வனத்தே
மல்லிகைமுல்லை மலரோடுசெண்பகமும்
பாரிசாதப்புஷ்பமரம் பரிமளப்வீசுகுது
வீசுகின்றபுட்பமரம் வேருடனேபிடுங்கி
பறித்துப்புரண்டானே பரிமளத்தைதானறிந்து
அந்தவனமெல்லாம் அதம்பண்ணனப்போது

பூமரங்களை வீமன் அதம்பண்ண காவலர்கள்வந்து சண்டை பண்ண இறந்தவர்போக மற்றவரிஷியாருக்குச்சொல்லல்.

அந்தவனத்திலே அநேகம்பேர்ராட்சதரும்
எல்லவருந்தான்வந்து எட்டினார்வீமனண்டை
வந்துவளைந்தார்கள் மதகரியான்வீமனண்டை
எட்டினார்சண்டை எழும்புதுசமருமப்போ
ஒருவர்க்கொருவர் யுத்தங்களாகுது
வெற்றிமதயானை வீமன்வெகுண்டெழுந்து
அடிப்பான்கெதையாலே அநேகம்பேர்கீழ்விழ
அனந்தம்பேர்ராட்சதரை அதமாக்கிகொன்றானே
இந்தவிதமாக எண்கோடிராட்சதர்கள்
கொன்றுவதைத்தானே கோடானகோடிகளை
கொன்றவர்தான்போக நின்றவொருராட்சதர்கள்
குருபாரிஷியருகே கொப்பெனவேயோடிவந்தார்
அபயமபயமென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
ஏதுக்கபயமிட்டீர் என்னகருமமென்றார்
ஆரோஒருராட்சதன் ஆங்காரமுள்ளவன்காண்
சிங்காரமாவனத்தைச் சீரழித்தான்பாவியவன்
மரங்களைத்தான்பிடுங்கி வனமெல்லாமதமாக்கி
ஏழுலட்சம்ராட்சதரை இருதுண்டாய்ப்போட்டுவிட்டான்
இவ்வார்த்தைகேட்டு எரிக்குங்கதிரவன்போல்
காயுங்கதிரவன்போல் கண்சிவந்தார்குருபாரிஷியும்
கோபம்வருகிறது கொடுங்காலருத்திரன்போல்
என்னுடையபூவனத்தில் எவரும்வருவதில்லை
தேவர்முனிவர் தீண்டொணாபூவனத்தை
ஆரடாதுவரே ஆயிரம்பேர்போங்களென்றார்
கைப்பிடியாய்த்தான்பிடித்துக் கடுகெனவேகொண்டுவாங்கள்
என்றசத்தங்கேட்டு எழுந்தார்களாயிரம்பேர்
வாய்வேகமாகவே வனத்திலேபோயிறங்கி
ஆரடாராட்சதரே ஆங்காரகோபமுடன்
வனத்தையதமாக்கி வந்தவனைக்கொன்றவனை
எங்களுடஐயரும்மை இட்டுவரச்சொன்னாரே
குலத்திற்பெரியவர்காண் குருபாமகாரிஷியும்

உன்னிடமிருந்து வரச்சொன்னார்காண் ஐயா [illegible]
கதிரெனவேயருளென்றார் கைபற்றித் திருந்தார்
[illegible]
ஆயிரக்குதுவை அதையுவத [illegible]
அக்கண்டபோதயும் அவனொருவனி [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
தானுகவந்து [illegible]
[illegible] துருவாசமுனிவரும்
பாரவனத்திற்கும் பக்கமாகவருகே

புலவன் தலை வழித்தவனை சபிப்பதற்காக துருவாச
முனிவருகிறதை எம்பெருமானறிந்து அவ
னையும் சமாதானப்படுத்தல்.

வருகிறவேளையிலே மாயவனுவந்தார்
காவலர்கள் பஞ்சவர்க்கும் [illegible]
யோசனைகள் வந்து [illegible]
போலவாதகாலம் [illegible] பஞ்சவர்க்கு
ஆதாதகாலம் [illegible]
உள்ளங்கைநெல்லிக்கனி [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
சரணமடைந்தார்கள் [illegible]
[illegible] ஸ்ரீமா [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

காவலிருக்கையிலே நல்லதம்பியெங்கேயென்றார்
வெற்றிமதயானை வீமராஜனெங்கேயென்றார்
அருமைத்தம்பியென்றார் தம்பியரைக்காணேனென்றார்
பிதாரவாடுஅழுதே துரோபதையாளேதுசொல்வாள்
பாரிசாதப்பூவை பார்த்தாசைபட்டேனையா
பிரியமாய்வேண்டுமென்று பிணங்கினேன் வீமரண்டை
பறித்துத்தாரேனென்று போய்விட்டார்வீமராஜன்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வைபோகசம்பத்துகாண் கபடமில்லாதருமராயர்
ஐவர்பஞ்சபாண்டவரே அனர்த்தம்வரநாளாச்சே
கிருபாரிஷிவனத்திற் கொப்பெனவேபோய்ப்புகுந்தான்
மரத்தைப்பிடுங்கியவன் வனநாசமாக்கிவிட்டான்
மூலட்சம்ராட்சதரை இருதுண்டாய்போட்டுவிட்டான்
அந்தவனத்தை அதமாக்கினபடியால்
கொல்லவருகிறார் கொப்பெனவேமாமுனியும்
தவத்திற்பெரியவர்காண் சகலகலைவல்லவர்காண்
வரத்திற்பெரியவர்காண் வல்லகிருபாமுனியும்
அதிகசாபந்தானிடுவார் ஐவரைக்கொன்றிடுவார்
என்னசெய்யப்போறேனென்று எம்பெருமாள்கூறுகையில்
அந்நிபயத்துமல்லோ ஆண்டவற்கேதுசொல்வார்
இத்தனைநாள்காத்தீரே இன்றுகைவிட்டீரே
அரக்குமாமாளிகையில் ஐவரைக்காத்தீரே
அம்பலவாசலிலே அபிமானங்காத்தீரே
ஆபத்தைத்தீர்க்கவந்த ஆண்டவருநீரலவோ
உம்மைவிட்டேயெமக்கு உற்றதுணையாரு
காக்கக்கடனுமக்கு என்றவர்கைதொழுதார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
கிருபாரிஷியுடனே பேசிக்கொண்டுதானிருப்பேன்
அப்போதுநீவிரும் அந்தவழிவந்திடுங்கள்
தருமரேயும்மைநான் தாழ்ந்துவணங்குகிறேன்
உங்கைவணங்கினதும் உபசாரவார்த்தைசொல்லும்
ஆரென்றுகேட்பாரே அந்தக்கிருபாமுனியும்
உம்பியும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுவுரைத்தாலே எழுந்துவணங்கிடுவார்
வணங்கிமகிழ்விப்பார் வாழ்த்தியெடுத்தணைப்பீர்
வெற்றிமதயானை வீமனெதிர்வந்தாலும்
அடிபணிந்துகொண்டவிட்டு அரைவணங்கிநிற்பேன்
அந்தரிஷிபாரும் ஆரென்றுதான்கேட்பார்
உன்னிலும்வல்லபிரான் வுண்மையுள்ளமாமுனியும்
என்றுசொல்லிநிற்பீரே இவ்விதமாய்செய்யாவிட்டால்
அந்தக்கிருபாமுனியும் அனைத்தும்பண்ணிப்போட்டிடுவார்

ஆகையால்நான்போறேன் ஐயரேயின்வாரும்
என்றுஎழுந்தாராம் இயலானமாயவரும்
வாரார்பெருமாளும் வனத்தூடுதான்கடந்து
குருபாமுனியெதிரே கொப்பெனவேவருகையிலே
மாயவனைக்காணுகையில் வணங்கினார்குருபாமுனி
ஒருவர்க்கொருவர் உறவாடிபேசினார்கள்
மாயன்பெருமாளே வனத்திலேயெங்குவந்தீர்
இந்தவனந்தனிலே யேதுவகையாகவந்தீர்
வந்தவகையதனை வாய்திறந்துசொல்லுமென
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வனசாரியாகவே வந்தேன்குருபாமுனியே
வந்தயிடத்திலிந்த வனத்திலுமைக்கண்டேன்காண்
இன்னேரவேளையிலே எங்குவந்தீர்சொல்லுமென
ஆரோதெரியாது ஆங்காரமுள்ளவன்காண்
வனத்திலேபோய்புகுந்து மாங்கனிதான்பிடுங்கி
ஏழுலட்சம்தூதுவரை எல்லவரைக்கொன்றிடுவான்
பொல்லாதபாவியைக் கொல்லவென்றுபோறேன்காண்
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரோதுசொல்வார்
உம்முடையவனத்திலே ஒருவர்வரப்போகதில்லை
தெய்வலோகத்தாரும் தீண்டாதபூவனத்தே
அமரர்சித்தர்முனிவராலும் ஆகாதவனமழிக்க
ஐயரேஉன்றன்வனத்தை அதமாக்கும்பாலகனை
இட்சணமேசொல்லுகிறேன் இட்டுவரச்சொல்லுமென்றார்
இருவருமாகவே ஏகமாய்க்கொல்லவென்று
ஆடாதூதுவனை அழைத்துவாராட்சதனை
என்றுஅவர்பேசகையில் இயலானதருமரவர்
நகுலனைத்தானனுப்பி நல்வழியற்கேதுரைப்பார்
அண்ணரும்தம்பியரும் ஆதிநாராயணரும்
குருபாரிஷியருகே கூடிபேசியேயிருப்பார்
கொல்லவென்றால்தூதுவரைக் கூட்டிவரச்சொல்வார்கள்
அப்போதுதூதுவர்களழைத்தும்மைத்தான்வருவார்
வந்தவுடனும்மை வணங்கிநமஸ்கரிப்பார்
அப்போதுநீரன்று ஆசிர்வதிப்பீரென
சொல்லிவரச்சொன்னார்காண் துரிதமுடனேயென்று
தருமரிவையுரைக்கத் தார்வேந்தர்நகுலனுமே
வாயுவேகமாகவே வந்துவிட்டான்வீமனண்டை
அண்ணாமதவீமா அண்ணருக்கிருவரும்
இப்படிக்குச்சொல்லச் சொன்னார்களென்னையென்று
வீமனுக்குச்சொல்லிவந்து விட்டான்நகுலனுமே

அருகேவரப்பார்த்து அஸ்ரீராமர் தானெழுந்து
அடிபணிந்துதெண்டனிட்டு அவரைவணங்கிநிற்க
பார்த்தார்குருபாரிஷி பயந்தவரேதுசொல்வார்
எந்தவூர்எங்கநாடு இவர்பேச்சைசொல்லுமென்றார்
சௌபாக்கியத்திலும் செய்திடுமோர்நிஷ்டையிலும்
அதிசயமுடையவர்காண் அழகானதருமரிஷி
அதிவிலாசம் ஆரணியிடந்தனிலே
உன்னுடையபேர்விளங்க ஒருமணியடிபடுது
முனிவரிவர்பேரிலே மூன்றுமணியடிபடுது
அந்தத்தானங்களிலே அதிகமுடையவர்காண்
யோகத்திற்பெரியவர்காண் உன்னிலும்வல்லபிரான்
ஏதெடுத்துப்பார்த்தாலே பெரிந்துவிடும்லோகமெல்லாம்
பொய்வசனஞ்சொல்லாதார் புகழானதருமரிஷி
தருமரிஷிபாதா தழுவிபணிந்துகொண்டு
சிங்காதனத்தில் சீராகவீற்றிருந்தார்
தங்கபுகழுடைய தருமரிஷியேதுசொல்வார்
சாமிபெருமானே சன்யாசியானவரே
இருவருமாகவே இங்குவந்தவாறேது
என்றுதான்சொல்லுகையில் ஏதுசொல்வார்குருபாரிஷி
தருமரிஷியாரே சாமியேநீர்கேளும்
என்னுடையதோட்டத்தில் எவரொருவர்வந்ததில்லை
அந்தரலோகத்து அமரர்கள்வந்ததில்லை
ஆரோ ஒருராட்சதன் அகங்காரமுள்ளவன்காண்
வந்துபுகுந்து வனத்தைப்பாழாக்கினான்
ஏழுலகமராட்சதரை இருதுண்டாய்போட்டுவிட்டான்
ஆகையாலிங்குவந்தேன் அவனையதமாக்கவென்று
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமரிஷி
உம்முடையதோட்டத்தை அழிப்பாரொருவரில்லை
இங்கேயழையுங்கள் இக்ஷணமேசெயித்திடுவேன்
என்றவர்சொல்லுகையில் இட்டுவந்தார்வீமனை
இக்கணமேதானெழுந்து ஸ்ரீராமர்மாயவரும்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்வீமருக்கு
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
கண்டார்குருபாரிஷி கடுகியேயதுசொல்வார்
அவர்யாரென்றுதெண்டமிட்டீர் ஆயன்பெருமானே
அதுவும்கேளுமையா அரியரிஷியாரே
அதிவிலாசம ஆரணியிடந்தனிலே
உம்முடையபேராலே ஒருமணியடிபடுது
தருமரிஷிபேராலே மூன்றுமணியடிபடுது
அக்கிரிஷிபேராலே ஐந்துமணியடிபடுது

யோகத்திற்பெரியவர்தான் உத்தமரிஷியாரும்
ஆதிசேஷனிலும் அதிகமுடையவர்கள்
நினமுன்னூறுகோடியிலே திரிவர்க்கனுக்கெல்லாம்
அவரிருக்குமிடங்களிலே அன்னக்களஞ்சியங்கள்
ஆரோவெவரோ அறியாமல்கொள்ளாரென்று
இன்றுஅவர்பிக்ஷைகால எல்லவரைக்கொண்டுவிடுவார்
என்றுசொன்னபோதே எழுந்தார் தருமரிஷி
தருமரிஷிபெருந்திருந்து சாஷ்டாங்கந்தெண்டனிட்டார்
குருபாதமீதுந்து ஒப்பெனவேதெண்டனிட்டார்
அடியார்கள்செய்ததெல்லாம் ஐவர்மனம்பொறுத்து
தெரியாமற்செய்ததெல்லாம் தேவர்மனம்பொறுத்து
வனத்தைதயிர்த்ததொரு மகிமையைச்சொல்லுமென்றார்
ஆசனம்போட்டார்கள் அவரதுகொலுவிருந்தார்
அப்போதுரிஷியர்கள் அவர்களுக்கேதுசொல்வார்
குருபாரிஷிபெருமை குணமாதந்திரம்சொன்னார்கள்
அத்திரியோ சொல்லுகையில் அதிசயப்பட்டிருந்து
பார்க்கப்பிரியமாக பாருலகில்நான்தரித்தேன்
அந்தவனத்திலே அனந்தகோடிரிஷிகளை
எத்தனைக்கொலை மறுக்காமல் ஆகினவர்
ஆகிசைதரிசனம் அவ்வருக்கொல்லைவந்தார்
ஆச்சரியமாகத்தினுலே அவ்வளவரைக்கொண்டுவிட்டேன்
இதுவேசருமமென்றுல் இடம்ஞானவியரிஷி
குருமுனியவருக்கொப்பெனவேதெண்டனிட்டு
அடியார்கள்செய்ததெல்லாம் ஐயர்மனம்பொறுத்து
பாக்கியஞ்செய்ததினுல் பாதங்கண்டைத்தருவான்
சருதிசயஞ்செய்தாலும் கனவுகிடைதுரும்
பார்த்தடியாரே பாவத்துவைத்தவிட்டேன்
வாராததேவர்கள் வந்தபடியல்லோ
எனதுடையாத்திமா என்னருமைதாண்ணேயா
பாலடிசிலுண்டு பழவர்க்கந்தாளபுசித்து
போசனஞ்செய்துநீங்கள் போவீர்கள்வாங்கவென்று.
குருபாரிஷியாருக் கொப்பெனவேதெண்டனிட்டு
பட்டுதப்பைபோட்டு பாயிலேவீற்றிருந்தார்
மாயவருந்தருமரிஷி மதம்பெரியராமரிஷி
தாமெல்லாரவரோடே தமுக்கொலுவிருந்தார்
குருபாரிஷியாருக் கொப்பெனவேதாமெழுந்து
நாலாதினுசாக சமைத்துச் சொல்லுவாரோவார்த்தை
ஆயிரங்கல அரிசி அடிசில்சமையுமென்றார்
காயுங்கனியுங் கறிச்சமையுமென்றார்
நல்லபொரிக்கறியும் சாதக்கன்போசனமும்
அடிசில்சமைத்து [illegible] தெண்டனிட்டார்

குருபாமுனிவிட்டு கொப்பெனவேதானெழுந்து
[illegible]ன்று கைக்குக்கலக்கொடுத்தார்
[illegible] படைத்தார்கள் [illegible]
[illegible]திட்ட [illegible] புரிந்தார்கள்
[illegible]ப்புன்னியமாம் [illegible]ங்க [illegible]மென்றார்
அந்தண்டப்பரும் அருமைகொடுத்தார்கள்
[illegible]ப்பட்டப்பரும் [illegible]க்கொண்டார்
அந்தண்டப்பரும் ஆசிகளுஞ்செய்துகொண்டார்

பஞ்சவாகளுக்குப்பெரும் பெருமாளுமவர்களிடஞ்
சொல்லுகிறது.

போய்வாரேனென்று போதகடந்தார்கள்
[illegible] பஞ்சவர் [illegible] சேர்ந்தார்கள்
[illegible] பாண்டவராம் [illegible] சொல்வார்
[illegible] வினைசெய்தகாரியத்தை
காயிருக்கபடியாலே நாடியுமைகாக்கவந்தோம்
[illegible] அனைவருமான் [illegible]
[illegible] ஆடல்செய்கிறேன்
ஆகாதகாரியங்கள் அழும்புகள்செய்யலாமோ
இந்தவனத்தைவிட்டு [illegible]த்தவனம்
அந்தவனத்தில் ஐவரும்போயிருங்கள்
[illegible] அவ்வனத்தில்போயிருங்கள்
போய்வாரேனென்றுசொல்லி போனாரெம்பெருமான்
எட்டாவதுகை [illegible] பஞ்சவர்க்கு

எட்டாவது குருபாமுனிவனம்-முற்றிற்று.

௯-வது, ரோமரிஷிவனம்.

அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
[illegible] கானகத்தில்
[illegible] மேலேவைத்தார்
[illegible]
[illegible] தாமுடனேவந்தார்கள்
[illegible] அழகாகவுண்டென்றார்
[illegible] வாழிவாகவுண்டென்றார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியா [illegible]
[illegible] தருமராசர்

ஐவரிடத்துக்கு ரோமரிஷிவர தருமர் தனதுதுன்பத்
தை அவரிடத்திற்சொல்ல அவா அதற்குவழி
மானஞ் சொல்லுகிறது.

[illegible] அடிபணிந்தார்தருமராசர்
[illegible] தங்குவதீர்
[illegible] சொல்லுமென்றார்



ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஜோகினியுருவெடுத்து அர்ச்சுனனைத் தடுத்தல்.

வந்தவயணமதை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போது தருமலிங்கம் ஆண்டவருக்கேசுகமெ[illegible]வார்
குருகுலவம்மிசத்தில் குந்திமைந்தரைந்துபேர்கள்
தருமன்நான்வீமனவன் தம்பிதனஞ்செயனும்
நகுலர்சகாதேவ ராஜாக்களைவரையா
தருமாபுரமென்னுந் தாரணியையாண்டிருந்தோம்
பங்குப்பகையாளி பாதிகொள் தாயாதி
செம்மப்பகையாளி சேனகாள் தாயாதி
பெரியதந்தைபிள்ளை போனதிரியோதனன்
இவரையுங்கொல்லவென்று ஆலோசனைதேடி
இருந்துண்ணவாருமென்று விருந்தோலைதானனுப்ப
மெய்யானவோலையென்று விரைவாகப்போனோமையா
வாரவழிதனிலே வைத்தானே தண்ணீர்ப்பந்தல்
வசநாபிதண்ணீர்ப்பந்தல் வைத்தானேபாவியவன்
கொல்லநினைத்தானே கொடும்பாவியெங்களைத்தான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனையும் செய்தான்பெரும்பாவி
வருகிறவழிதனிலே வசிகளைநாட்டினான்
உருக்கூசிசெப்பூசி ஒருகோடிநாட்டினான்
எழுகூசியநேகமொடு இருப்பூசிதான்புதைத்தான்
கொடுமுள்ளுகத்திகளுங் குறுக்கேபுதைத்துவைத்தான்
மாண்டுமடிவாரென்று வசிகளைநாட்டினான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
பொய்க்குழியைவெட்டியே போட்டுவைத்தான்சிம்மாசனம்
ஆழக்குழியிலே யாட்களையுள்நிறுத்தி
ஆயுதத்தோடுடனே ஆள்நிறுத்திவைத்தானே
கொல்லநினைத்தானே குருடன்மகன்சத்ராதி
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
எண்ணெயிட்டுக்கொள்ளுமென்று எங்களுக்குச்சொல்லியவன்
ஏழுலட்சம்மல்லர்களை எங்களிடந்தானனுப்பி
எண்ணெயிடச்சொல்லி எங்களு[illegible]ன்றான்
அதற்கும்பிழைத்தோமே [illegible]த்தால்
பின்னையொருயோசனை செய்[illegible]ரும்பாவி
அரைப்புகின்னணங்கைகொ[illegible]டைசமைவியென்றான்
பாரவசிநாட்டி வைத்தானே[illegible]
பாரவசிகளைப் பர்வதம்போல்நாட்டினானே
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
உண்ணுகிறசாதத்தில் ஒருகால்மருந்தையிட்டான்

குடிக்கிற தண்ணீரில் கொலைக்காரன்நஞ்சையிட்டான்
தப்பிப்பிழைத்தோமே சாமியுடபுண்ணியத்தால்
பின்னுமொருயோசனை செய்தான்பெரும்பாவி
சோழிவிளையாடி சொக்கட்டான்சூதாடி
நாடுபறித்து ராச்சியத்தைக்கொள்ளைகொண்டான்
சீமைதுரைத்தனமுந் தேசத்தைக்கொள்ளைகொண்டான்
ஐவரையுங்கெலித்து ஆஸ்தானமுங்கெலித்து
காற்றுநுழையாத கல்லறைக்கிடங்கில்வைத்தான்
ஐவருடதேவியரை அம்பலத்திற்கொண்டுவந்து
தமையனுடபெண்சாதி தாமென்றறியாமல்
மூலையிலிருந்தபெண்ணை முற்றத்திலிழுத்துவைத்தான்
அம்பலமேற்றியவன் அவமானத்தாழ்வுபண்ணான்
வாடியென்றும்போடியென்றும் வம்புசிலபேசினான்
அரசர்சபைநடுவே அம்பலத்துரைகள்முன்னே
சொல்லாதுசொல்லியே துகிலுமுரிக்கானே
பாரவனவாசம் பரதேசம்போனபின்பு
பன்னிரண்டுவருஷம் பாரவனத்திருந்து
அக்யாதவாசமல்லோ ஆனியுமொருவருஷம்
வேஷம்விட்டுவேஷமாற்றி வீற்றிருங்களென்றுசொன்னான்
பதின்மூன்றுவருஷத்திற்சென்று பட்டணத்தில்வந்தாக்கால்
பங்குள்ளபிரகாரம் பாதிநாடுதாரேனென்றான்
ஆகையாலாண்டவரே ஆனியும்வந்துவிட்டோம்
வருஷமொன்றும்பிறக்க வந்தோம்வனந்தனிலே
உங்கள்வனத்திலே ஒருவருஷம்வனவாசம்
உம்மைவருந்தினேன் உண்மையுள்ளரிஷியாரே
இந்தவனத்திலே இருக்கச்சிலவருஷம்
என்றல்லோதருமாவர் இரங்கித்தண்டனிட்டார்
தவத்திற்பெரியவர்காண் சன்யாசியானவரும்
உற்றுற்றுக்கேட்டாரே உரோமரிஷியாரும்
ஆயாசப்பட்டுமவர் அறவேமனஞ்சலித்து
இத்தனைவஞ்சனைகள் இடறுசெய்கபாவியவன்
கொல்லநினைத்தானே கொடும்பாவிதுரியோதனன்
நாடுகொடுப்பதில்லை ராச்சியந்தருவதில்லை
சீமைகொடுப்பதில்லை சிங்காதனந்தருவதில்லை
ஐவர்தனிலேயொருவன் அரன்பதியேபோனீரானால்
ஆதிசிவன்கையில் அஸ்திரம்பெறுபெற்றால்
மாற்றானைக்கொன்றிடலாம் வையகத்தையாண்டிடலாம்
அல்லாதேயானால் அரசாட்சிக்கிட்டாது
என்றவர்சொல்லுகையில் ஏதுசொல்வார்தருமராயர்
ஐவரிலேயொருவர் அவ்விதியையடையவென்றால்
ஆயர்சொல்லல்லாது ஆருமொருக்காலும்

மாயன்சொல்லல்லாது மற்றொன்றுமாகாது
அவ்வார்த்தைதனைக்கேட்டு அரியரிஷியேதுசொல்வார்
மாயன்பெருமானை வரவழையுமிங்கேயென்றார்

தருமர் எம்பெருமானைநினைத்து தோத்திரம் பண்ணுகிறது.

சாயம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
அடியவர்க்குதவுபவரே ஆண்டவரேவாருமென்றார்
ஏழுலகையாண்டவரே எம்பெருமாள்வாருமென்றார்
மச்சவடிவுகொண்டு மறுகடலிற்பள்ளிகொண்டாய்
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆண்டவரேவாருமென்றார்
தருமர்வருந்துகையில் சாமியவரறிந்து

தருமர் தோத்திரம்பண்ணினதைப் பெருமாளறிந்து தருமரிடம்வருதல்.

ஏழுலகையாண்டவரும் எம்பெருமாள்வாறுராம்
வட்டமாய்க்குடையேறி மாயவருமவந்துவிட்டார்
ஆயனாரங்கே வருகையிலை ஐவருந்தாமெழுந்து
முக்கால்வலமாய்வந்து முடிவணங்கிகண்டனிட்டார்
கோடி தாம்பலமெடுத்து சிங்காதனம்போட்டார்கள்
சிங்காதனம்போட்டார்கள் ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
என்னையழைத்தது ஏதுகருமமென்றார்
பணியிலிருக்கிற பரமுரையுமென்றார்
சாயம்புமன்னவனார் தருமரவரேதுசொல்வார்
மற்றொருவருமில்லையையா மாயவரேநீர்கேளும்
இக்கவனத்திலே யிருக்கிறோமரிஷி
மாமுனிவரைத்தரிசித்து வணங்கியடிபணிந்தோம்
அதுசொன்னதைக்கேட்டார் அரிதானமாமுனியும்
வந்தகருமத்தை வார்த்தையெல்லாம்தானுரைத்தான்
அத்தனையுங்கேட்டு ஆயாசப்பட்டனர்காண்
துரியோதனன்றன்னைச் செயிக்கவேவேணுமென்றார்
ஐவரிலேயொருவரையும் அரன்பதிக்கேபோகவென்றார்
பஞ்சவரிலொருவரையும் பரமபதிபோங்களென்றார்
ஆதிசிவனிடத்து அஸ்திரம்பெற்றுவந்தால்
பாண்டவர்வென்றிடலாம் வையகத்தையாண்டிடலாம்
போங்களெனவுரைத்தார் புனிதமகாமுனியும்
ஆமையாதம்மை அழையுமென்றாரந்தரிஷி
மைந்தர்கிங்கிருந்தினில்லை அந்தீர்மாயவரே
இனிநடக்குங்காரியங்கள் எம்பெருமாள்சொல்லுமென
ஆயன்பெருமாளும் அவ்தருமர்க்கேதுசொல்வார்
வாருமையாபிரமரே வையமாளத்தோதனரே
ஐவருடவார்த்தை அதிகாரமெத்தனைக்கேள்

பஞ்சவர்கள் சன்றாருக்கும் பட்டவிருக்கிறார்காண்
ஆவராயுமிருமே அழைத்தாத்தெரியுமென்றார்
வேதவியாசரை வேண்டியழையுமென்றார்

ஐவரும் வியாசபகவானைவிளித்துவணங்க
வியாசர் வருதல்.

ஐவர்பஞ்சபாண்டவர்கள் அக்கணமேதான்வணங்கி
வேண்டிநமஸ்கரித்து வியாசரைக்கைதொழுது
வாருமென்றுதான்விளிக்க வந்தார்வியாசரிஷி
சடையுஞ்சடையமுடன் சங்கிரமனைப்போல்வாரார்
ஐவரிருக்குமந்த அடவியில்வந்தாரே
எழுந்தைவருடனேறு எதிர்வந்தார்வியாசருக்கு
ஐவரெழுந்திருந்து அடிபணிந்தாரிருவருக்கும்
ஆவருமவியாசருமே ஆசிர்வதம்பண்ணிக்கொண்டார்
ஆசனத்துமேலாக அவர்சேர்ந்துமிருந்தார்
வேதவியாசருமே வேந்தனைப்பார்த்துரைப்பார்
என்னகருமமாக என்னையழைத்தீர்கள்
மனதிலிருக்கின்ற மர்மத்தைச்சொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தைதனைச்சொல்வார்
பாமன்பதங்கோசி பாரதஞ்செய்யவென்று
பாசுபதம்பேறுபெற்று பாரதத்தைவெல்லவென்று
ஆரைநாம்போகச்சொல்வோம் அரன்பாதங்காணுதற்கு
தருமரைப்போகவிட்டால் சாபதந்தானறியார்
வெற்றிமதயானை வீமனாலாகாது
நகுலசகாதேவ ராஜாவாலாகாது
அருச்சுனரைப்போகவிட்டால் அரனாரைக்காணவல்லார்
பரமசிவனருகில பாசுபதம்பெறுபெற்று
வேணவரம்வாங்க விஜயனவர்வல்லவர்காண்
என்றவர்யோசனையாய் எழில்விஜயனைப்பார்த்து
பார்த்திபா அருச்சுனனே பரமன்பதிசேர்ந்து
ஆதிசிவன்பதிக்கு அருச்சுனாபோதிரே
கைலாசபதியிலே கர்த்தாவைக்கண்டு
அதிகவரம்பெறுபெற்று அருச்சுனரேவாருமென
காண்டீபாருச்சுனருக்கு காரியமேதுசொல்வார்
அடியேனையனுப்பிவைத்தால் அவசியம்போய்வாரேன்
அப்போபெருமாளும் அருளானதேதுசொல்வார்
கைலாசம்போகையிலே கட்டழகாசொல்வேன்காண
எழும்வழிதனிலே இருப்பார்கள்வேசைபெண்கள்
மின்னற்கொடியாரம்பையும் மேனகைதிலோத்தமையும்
அழகிலேபிறந்தபெண்கள் அநேகம்பேர்தானிருப்பார்
கண்டாலவர்கள்பேசி கதிகேட்டுமோகங்கொள்வார்
பார்த்தாசைப்பட்டாலே பார்த்திபாவிரதந்தவறும்

[illegible]ங் நடைபவரைக் காவலிதாரும்
ஆ[illegible]மாறும் அருச்சுனுக்கு
[illegible]வழியிலே பெண்கள் நடந்தாலும்
[illegible]கையென்று தள்ளிவிட்டுப்போனாலும்
[illegible]தாளைப் பட்டைக்கால் பரமசிவன் பாதம்
[illegible]கைக்காலம் இருந்து தவம்பண்ணுனும்
[illegible]தவஞ்செய்திலும் பரமசிவன் காட்சிதந்தார்
[illegible]திருந்தால் பரமசிவன் வந்தருள்வார்
[illegible]பெண்ணும் அதிராத்திரிவேளையிலும்
[illegible] சிவனைநினைந்து
[illegible]தடையில்லை மூட்டி தவஞ்செய்தாலே
[illegible] சேவைதருவார்
[illegible]பத்துமுக்கோடி முனிவரெல்லாங்கூத்தாட
[illegible] விஸ்வகடம்புரிய
[illegible] பரமசிவன் வந்திடுவார்
[illegible] கொடுப்பார் பரமசிவன்
அப்படிக்குப் போகவுன்னை வருமோ வாள்விஜயா
[illegible]வார்த்தைகேட்டு வாள்விஜயனேதுசொல்வான்
ஆதிசிவனே நான் அறைநாழிமறந்திருக்கேன்
[illegible]பெண்களொன்மே லாசைபிக்கொண்டாலும்
[illegible]வழிமறைத்து வார்த்தைகள்பேசினாலும்
[illegible]பேன் தங்கையென்பேன் தாயுமென்பேன்
[illegible]த்தாளைக் கண்டுதான் [illegible]வரம்வாங்கிவாரேன்
போகச்சொல்வாருரும் போய்வாரேன் சுவாமியென்றான்
அதுவுமேயல்லாம [illegible]வனேயந்தனுக்கு
போகும்வழிதனிலே புதுமைநடந்தாலும்
பெண்ணேர்பதிமேலே செய்யுந்தவசழிக்க
மறுபேக்குந்திவன்ருரும் வஞ்சனைகள்செய்தாலும்
[illegible]துணிவந்தாலும் எந்தனுக்குத்துணைவாரும்
மகாதேவரைக்கண்டு வாங்கிவாரேன்வாங்கவென்றான்
அப்போது பூபவரும் அவ்வார்த்தைக்கேதுசொல்வார்
போகும்வழிதனிலே பொற்கொடியாளேலகன்னி
ஆதிசிவனைநோக்கி அருந்தபசுசெய்தவள்காண்
அம்பலமான்போல அழகில்பிருந்தவள்காண்
அருச்சுனனேவுனையனைய அதிகவரம்பெற்றவள்காண்
உன்னைகல்யாணம்பண்ண உகந்துயிருக்கிறுள்காண்
அவள்-வந்துவழிமறிப்பாள் வாள்விஜயமன்னவரே
மாதரைக்கண்டுநீ வார்த்தையொன்றுஞ்சொல்லாதே
தாயென்றும்தங்கையென்று தார்வேந்தாசொல்லாதே
வரும்போது பெண்ணேயுனை மாலையிட்டுக்கொள்வேனென்று

காயாம்புமேனியனே கண்டங்கருப்பழகா
தக்கதுசொல்லிப்போம் சாமியுடபதிக்கு
அதிகவரம்பேருபெற்று அருச்சுனரேவரும்போது
ஏலகன்னிமாதரசை இளங்கொடியைமாலையிட்டு
வரும்போதுமாலையிட்டு வந்துவிடும்அர்ச்சுனரே
மற்றொருவினைவந்தால் வந்துநான்காத்திடுவேன்
போய்வாருமென்றுசொல்லி பெருமாள்விடைதந்தார்

அருச்சுனன் சிவனைக்காணப்போவதற்குச் சோடித்தல்.

சூலபாணிரூபம்போற் சோடித்தானர்ச்சுனனும்
எந்தெந்தமுஸ்தீபு இளவிஜயன்தான்தரிப்பான்
ஐந்துசடைகொஞ்ச அழகுசடைமார்புரள
முத்துசடையங்கே குலுங்கஅருச்சுனற்கு
உள்ளமெல்லாம்லிங்கம் உடம்பெல்லாம்வெண்ணீறு
ஆவியெல்லாம்லிங்கம் அங்கமெல்லாம்வெண்ணீறு
காவிகாம்பரமும் கட்டினான்அரைதனிலே
அன்றுரித்தமான்தோலும் அழகானபுலித்தோலும்
காதிலேகுண்டலமும் கையிற்கமண்டலமும்
ஏகவேஷ்டிதானணிந்தான் இயலானஅருச்சுனனும்
பிரமமுடித்தாழ்வடங்கள் பெரியருத்ராட்சமணி
பஞ்சமணித்தாழ்வடமாம் பலவிதமாலைகளாம்
நாகமணிக்கங்கணமாம் லாடமிகச்சங்கிலியாம்
வேலாயுதம்சூலாயுதம் வெண்புலித்தோலசனமாம்
அரையைசுற்றிகிண்கிணியாம் அழகுமயில்தாவடமாம்
குருயோகபுத்தகமாம் கரையோடுமண்டலமாம்
சங்குசெயதண்டிகை தானணிந்தாருச்சுனனும்
கணுக்கால்சிலம்புகளாம் காலில்மிதியடியாம்
அஷ்டாபரணமெல்லாம் அருச்சுனன்தான்தரித்தான்
வியாசரும்மாயவரும் மிக்கவரமொன்றுதந்தார்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
ஐவர்களுந்தனக்கு யதிகவரந்தந்தோமென்றார்
போய்வாருமருச்சுனரே பொன்னுலகந்தானதேடி

அருச்சுனன் ஈஸ்வரரைக் காணப்போகிறது.

அந்தச்சமயத்தில் அருச்சுனன்தானெழுந்து
எல்லாரையும்பணிந்து எழுந்தானருச்சுனனும்
போய்வாரேனென்றுசொல்லி போனானருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அங்குவியாசருமே
எல்லாரையும்வாழ்த்தி யிருவருமேபோய்விட்டார்
மாயன்பெருமாளும் வாழ்த்தருடன்மேலேறி
ஐவரைவாழ்த்தியே ஆசிரமம்போய்விட்டார்
வில்லேந்தனருச்சுனனும் விரைவாய்வனந்தாண்டி

கட்டுசெடிதாண்டி கடுகியேவாரானே
அடவியிலன் காணலென்று அதிதுரிதமாகவாரான்
இவளெவளென்றுசொல்லி சீக்கிரமாய்வாரானே

எம்பெருமான் பெண்வேஷமாய் வருகிறது.

அருச்சுனன்நினைவறிய அரிராமரேதுசொல்வார்
மோகக்கன்னிபெண்போல முடிமன்னர்வடிவுகொண்டார்
மின்னஞ்சிறியபெண்ணாய் ஸ்ரீராமர்வடிவுகொண்டார்
மின்னலொளிபோலே மேகவண்ணர்வடிவுகொண்டார்
அல்லார்தலைமயிரும் ஐந்துமுழம்ஆறுமுகம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துநான்குமுழம்
வாசாய்பழுத்திலும் கருத்தகருப்பழகும்
நச்சம்பழத்திலும் இருண்டகருப்பழகும்
வாரிக்குழல்முடித்து வான்சவுரியுட்சொருகி
கொண்டைக்கிருப்பியிட்டு கொலுமுகத்துத்தொங்கலிட்டு
கம்மல்சிமிக்கிகளும் காதிலேயிட்டாளாம்
கழுத்திலணிந்தாளாம் கனகமணித்தாழ்வடமும்
நல்லதொருபொன்காறை நடுக்கழுத்திலேதரித்தாள்
ஒற்றைச்சரங்களாம் ஒருபுறமாம்பொன்சரிகை
இரட்டைச்சரங்களாம் இராஜாங்கப்பொன்தாலி
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
அரைக்கிசைந்தஒட்டியாணம் ஆடைமேற்றரித்தாளாம்
காலுக்குத்தண்டைகளாம் கனத்தகொலுசுகளாம்
காலாழிபீலிகளும் கல்லணையும்பில்லணையும்
அழகுபணிகளெல்லாம் அலங்காரம்பண்ணினார்
சப்பமுஞ்சந்தனமும் கஸ்தூரிமணங்கள்வர
அன்னம்போலநடந்து ஆண்டவர்வாராமேயா
அருச்சுனன்போனதொரு அடவியிலேவந்துவிட்டார்
அருச்சுனனைத்தான்பார்த்து ஆண்டவனுமேதுசொல்வார்
ஐயாபெரியவரே அறிவுள்ளசங்கமரே
தீரப்படித்தவரே தெளிவுள்ளசங்கமரே
புத்தியாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
எங்கிருந்துபோரீர்காண் இயலானசங்கமரே
கோடிசரணமையா கும்பிட்டேன்சுவாமியென்றார்
உன்னழகும்பாவனையும் உலகத்தில்கண்டறியேன்
உம்மைக்கண்டபோதையோ வருகுதேதேகமெல்லாம்
காமவிகாரத்தாற் கலைதாங்கிப்போறேனையா
மோகவிகாரத்தால் மூர்ச்சைபட்டுப்போறேனையா
காமக்கலையைத்தான் கலிதீர்க்கலாகாதோ
மோகவிகாரத்தை மூர்ச்சையாய்த்தீருமையா
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகுதையா
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதையா

அரைநாழியென்னுடனே அணைந்திருந்துபோகொணாதோ
ஒருநாழியென்னுடனே வுளமகிழ்ந்துபோகொணாதோ
மார்பைப்பார்தோளைப்பார் மண்ணஸ்தனத்தைப்பார்
என்னழகும்பாவனையும் ஏறெடுத்துப்பாருமையா
என்னைப்போல்பெண்களுமக் கெங்கேகிடைப்பார்கள்
தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கலியுகத்திற்கிடையாது
மார்போடேமார்பணைந்து மகாவிடாய்தீருமையா
தோளோடேதோளணைந்து சுகத்தைமெள்ளத்தாருமையா
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சிவிளையாடுமையா
குங்குமமெத்தையிலே கூடிவிளையாடுமையா
வாருமையாசங்கமரே என்றுவழிமறித்தாள்

அருச்சுனன் மோகினியைப்பார்த்துச் சொல்லுகிறது.

ஏறெடுத்துப்பார்த்தானே எழிலாயருச்சுனனும்
எண்ணதுமெண்ணுகிறான் இயல்விசயனப்போது
மாயவனார்சொன்னதொரு வார்த்தையெல்லாமெய்யாச்சு
என்றல்லாவாள்விசயன் ஏதுரைப்பான்கன்னியற்கு
ஆதிகைலாசம் அரன்பதியேபோறேனம்மா
கர்த்தாவைக்காணவென்று கைலாசம்போறேனம்மா
வம்புகளைச்சொல்லாதே வழிகளைமறுக்காதே
பெற்றுவளர்த்ததொரு பேர்பெரியதாயல்லோ
கூடப்பிறந்தவள்நீ கூட்டுப்பாலுண்டவள்காண்
தங்கைதமக்கைநீ தாயாரும்நீயல்லவோ
தூரநில்லும்ஆச்சியரே தோதகங்கள்பண்ணாதே
இடையநில்லுமாச்சியரே என்னருகேவாராதே
என்றுநடந்தானே ஏறெடுத்துப்பாராமல்
மற்றுமந்தக்கன்னியரும் வார்த்தைகளேதுசொல்வாள்
சேரவென்றுவந்தேனே செல்லுமென்றுசொல்லலாமோ
பெண்சாதியென்றுவந்தால் பெற்றதாயென்னலாமோ
ஆத்தாளென்றெண்ணலாமோ அடுத்தமுறைவந்தாலே
தாயென்றாற்றாம்போமோ தனிமுறைவந்தாக்கால்
ஆண்டிக்குமுறையில்லை அரிவாளுக்குறையுமில்லை
எருதுக்குபேச்சுமில்லை இடையனுக்குமுறையுமில்லை
அரைநாழிபோகத்திலே அமர்ந்திருந்தால்போதுமையா
மார்போடேமார்பணைந்து மருவிமுத்தந்தாருமென்றாள்
தின்னப்பழமிருக்க சேனதூரம்போவானேன்
கானலிலும்வெய்யிலிலும் காட்டுவழிபோவானேன்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கதாதியுண்டு
சோழிசதுரங்கம் சொக்கட்டா[illegible]
தின்னநல்லபாக்குமுண்டு செ[illegible]முண்டு
வாருமையாசங்கமரே மனைக்குநாம்போயிருப்போம்

நாணுகலந்துபெண்ணை தள்ளிவிட்டுப்போகலாமோ
போனார்பலனுமில்லை பித்தனைக்காண்றிபது
விளையாடிப்போனாலே வித்தகரைக்கண்டிடலாம்
தனமிரண்டைக்காட்டியே தான்மறித்தாள்மோககன்னி
இவளுரைடையவார்த்தைதனை இளவிஜயன்தான்கேட்டு
கோபம்வருகுது சொல்லமனந்துணிந்தான்
வில்லெடுத்துகைப்பிடித்து வில்நாரிபூட்டிவிட்டு
அம்புறாத்தூணியிலே அலகம்பைத்தானெடுத்து
தொல்லினைத்தானே கோதைமறந்தாளே

அருச்சுனன்பாணமெடுக்க பெண்மறைந்து
பெருமாள் வருதல்.

கோபாலகிருஷ்ணரவர் கொப்பெனமாயவனார்
கண்டானேவாள்விஜயன் கர்த்தனுடமாயையென்று
இளவிஜயனர்ச்சுனனு மினியவனம்போகையிலே
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
வட்டமாங்கருடனேறி வாராரேயந்தவழி
கண்டானேயருச்சுனனுங் கடுகியவன்தெண்டனிட்டு
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
இன்னேரமெங்கிருந்தீர் இயலானவாள்விஜயா
காலோயந்தயருச்சுனனுங் கடுகியேஏதுசொல்வான்
மாயவரேசொன்னதுநீர் வனத்திலேமெய்யாச்சு
ஆரோஒருதெய்வகன்னி அநேகநேரமெனைமறித்தாள்
வந்துவழிமறித்து வார்த்தைகளாடினாலே
சொல்லாதுஞ்சொல்லியே தோதகங்கள்பண்ணினாளே
என்றுசொல்லியருச்சுனனும் ஏறெடுத்துப்பார்த்தானே
கன்னியிளமையுமே கழுத்திலேகருமணியும்
கண்டானேவாள்விஜயன் கடுகநகைத்தானே
அனைத்துமறிந்தீரே ஆயன்பெருமாளே
வேமையக்குலைக்க மறந்தீரோமாயவரே
பணியையவிழ்க்க மறந்தீரோமாயவரே
பொட்டைடஞ்சலிக்க மறந்தீரோமாயவரே
ஆபரணந்தான்கழட்ட மறந்தீரோஅச்சுதரே
என்னகோலம்வந்தாலும் ஏற்குமையாவுந்தனுக்கு
அப்போதுமாயவரும் அருளாளரேதுசொல்வார்
ஆயன்பெருமாளும் அங்கனவேயேதுசொல்வார்
வைத்தானுந்தனிட மனவுறுமையென்னசொல்வேன்
அருச்சுனனுந்தனிட ஆண்மையுமென்னசொல்வேன்
வாள்விஜயனுந்தனிட மனதறிந்தேவந்தான்காண்
கத்தானைக்காணவல்லாய் கடிகிவரம்வாங்கவல்லாய்
பரமனைக்காணவல்லாய் பாசுபதம்வாங்கவல்லாய்
சர்வனைக்காணவல்லாய் இனியவரம்வாங்கவல்லாய்

போய்வாருமென்றுசொல்லி பெருமாளனுப்பினார்
ஆனாலழகுமன்னன் அருச்சுனராசதுரை
விடைபெற்றுக்கொண்டானே வேந்தனருச்சுனனும்
அருச்சுனன்போனபின்பு அரிராமரேதுசெய்தார்
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமான்
காடுசெடிதாண்டி தாண்டி கரியமலைதான்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
சில்லென்றுபூத்ததொரு செடியும்வனந்தாண்டி
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போய்ச்சேர்ந்தார்

ஒன்பதாவது ரோமரிஷிவனம்-முற்றிற்று.

௰-வது, பேரண்டவனம்.

பத்தாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போனார்கள்
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
பேரண்டவனத்திலேதான் பிரியமாய்பஞ்சவர்கள்
வந்தார்குடித்தனமாய் வனத்திலேவாசமாண்ணை
ஐந்தடுக்குப்பர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
ஏழடுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
பூதகாதகனைத்தேடி போறானேவாள்விஜயன்
ஆகாவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
ஓம்சிவாவென்றுசொல்லி ஒலித்தானேசெயகண்டிகை
ஒருவன்அரனேயென்ன உலகம்அரனேயென்னும்
ஒருவன்சிவனேயென்ன உலகம்சிவனேயென்னும்
இருண்டவனத்திலே இருக்கிறபேரண்டன்
அனேகதூரம்போயிருந்தானாகாரந்தேடிவர

பேரண்டச்சி அருச்சுனன்மேல் மோகித்தல்.

பேரண்டராட்சதன்றன் பெண்சாதியானவளும்
தன்னந்தனியவளாய்த் தானிருந்தாள்மண்டபத்தில்
ஆகாவென்றசத்தம் ஆரணங்குதான்கேட்டு
கொத்தளம்போல்மூக்கழகும் மத்தளம்போல்புட்டங்களும்
ஊணமூஞ்சிக்குரங்குதலை ஓணான்முதுகழகாம்
செம்பட்டமயிரழகாம் சிங்காரப்பல்லழகாம்
பனைமரம்போற்பல்லழகாம் பருவதற்போற்கண்ணழகாம்
கழுத்தைசுத்திகண்டமாலை இடுப்பைசுத்திஅரைக்கள்



அருச்சுனன்மீது காதல்கொண்ட அரக்கியின் கணவனைக்கொ ன்று தெய்வப்பெண்கள் வேண்டுகோளால் மீண்டும் அவனை எழுப் புதல்.

துடையைச்சுத்திஒட்டுப்புண் தோளைசுத்திபெருஞ்சிறங்கு
நின்றுளையாமாகில் நிலத்தில்விழுமிரண்டுஸ்தனம்
இன்னமுஞ்சொல்லுகிறேன் இரண்டுஸ்தனத்தழகை
கப்பலின்மேல்வாரதொரு கொப்பரைத்தேங்காய்போல்
தோணிமேல்வாரதொரு சொரக்காய்போல்தானிருக்கும்
பல்லிலேபடர்ந்திருக்கும் பாசிபடர்தாமரைபோல்
சிழுஞ்செலநீரும் தேகமெல்லாம்நாற்றம்வரும்
காயமதிற்படிந்தழுக்கு கற்றாழைநாற்றம்வரும்
அருகேவந்துநின்றாலே அசங்கிதமாய்த்தோன்றும்
மரவுரியைத்தானுடுத்தி வாராளேபேரண்டச்சி
ஆண்டிபெரியவர்தன் அருகில்வந்தாள்ராட்சசியும்
பண்டாரம்பெரியவனைப் பார்த்தாசைபட்டாளாம்
வாயைத்திறந்துமவள் வார்த்தைகளேதுசொல்வாள்
நில்லுமையாசங்கமரே நெடுந்தூரம்போகாதே
உன்னாசைபட்டதல்லால் உலகில்வேறாசையில்லை
மார்பைப்பார்தோளைப்பார் மருவிவிளையாடலாம்வா
அரைநாழிஎன்னுடனே அமர்ந்திருந்துபோங்காணும்
வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்காத்திருந்தேன்
மன்மதபாணமது மார்புருகிப்போகுதையா
மோகவிகாரமதை மூர்ச்சையைத்தீருமையா
என்னைப்போல்பெண்ணுனக்கு எங்கேகிடைப்பார்கள்
தேடிப்புரப்பட்டாலுந் தேசத்திற்கிட்டாது
மார்போடேமார்பணைந்து மருவிவிடாய்தீருமையா
தோளோடேதோளணைந்து சுகங்கள்தெரியுமிப்போ
பஞ்சணைமெத்தையிலே கொஞ்சியிருப்போமென்றாள்
ஏரெடுத்துபாரானே என்னென்றுங்கேளானே
அரகாஅரனேயென்று ஆண்டியுந்தானடங்கான்
காமவிகாரத்துடன் கடுகியந்தராட்சசியும்
பேரண்டராட்சசியும் பின்னேதுவார்த்தைசொல்வாள்
கண்டாசைப்பட்டுவந்தேன் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏறமுகம்பார்க்கவில்லை
என்னை-பாராமல்போரீரோ பாதகனாசையாலே

பேரண்டச்சி அருச்சுனனுடன் சபதங்கூறல்.

என்புருஷன்வந்தபின்பு இட்டுன்னைவரவழைத்து
என்னெண்ணப்பிரகாரம் இருந்துமறுவிடுவேன்
என்றுசபதமிட்டு இயலானராட்சசியும்
காமவிகாரக் களையுடனேதானடந்தாள்
மோகவிகாரமெனு மூர்ச்சையுடன்போறாளே
வளையலைத்தானுடைத்து மார்பெல்லாந்தான்கிழித்தாள்
முகத்திலறைந்துகொண்டு மோதிப்புலம்புகிறாள்

பேரண்டச்சி அழுகுரல்கேட்டு பேரண்டன்வருதல்.

அழுகுரல்சத்தம் அறிந்தானேபேரண்டனும்
ஏதுக்கழுகிறாள் என்னுடையதேவியரும்
வரிநுதலியாகி வாய்விட்டழுதாளோ
என்று-ஐம்பதுயானை அவன்கையில்தானெடுத்து
எறிந்துபெரிந்தானே தேவியருகில்விழ
பின்னும்புலம்புகிறாள் பேரண்டராட்சசியும்
ஏதுக்கழுகிறாள் இளங்கொடியாளென்தேவி
இத்தனைநாளில்லாம லின்றுபுலம்புவதேன்
அறிந்துவருவோமென்று ஆங்காரமுள்ளவனும்
மெய்ப்போதிலங்குவந்து நின்றுமேபேரண்டன்
ஏதுக்கழுகிறாய்நீ என்னுடையதேவியரே

பேரண்டச்சி தன்புருஷனுடன் தன்வரலாறுகூறிச் சண்டைக்குப் போகச்சொல்ல பேரண்டன் சண்டைக்குப்போகிறது.

பேரண்டராட்சசியாள் பிரியமுடனேதுசொல்வாள்
மாலையிட்டநாள்முதலாய் மனதுகுறைவந்ததில்லை
நான்-பெண்பிறந்தபாவமது போதுமையாவெந்தனுக்கு
என்-பாவிதலையிலே பத்தெழுத்தைஎழுதிவிட்டான்
செல்வத்தலையிலே செப்போடெழுதினது
அல்லல்படவோ அமைத்துவிட்டார்பிரமதேவர்
ஐயையோபெண்பிறப்பு ஆகாதுஎன்னசெய்வேன்
நான்-புத்தியில்லாவரசியல்லோ பேரண்டராட்சதனே
வாரவழிதனிலே வைத்தீர்சமுசாரம்
என்னைத்தனியேவிட்டு இனிப்போகஞாயமுண்டோ
உன்தேவியாயிருந்தும் ஊருக்குப்பெண்டாவேனோ
சுந்தரப்பெண்ணானலவோ சொரூபமுடையவள்காண்
அழகில்மிகுந்தவளை ஆரோஒருவனவன்
பத்தினியாளென்றென்னை பாராமலிங்கொருவன்
உத்தமியாளென்றுசொல்லி உணராமலிங்கொருவன்
ஆண்டிபெரியவர்காண் அரண்மனையில்வந்தார்காண்
வந்தபெரியவரை வணங்கியேதெண்டனிட்டேன்
தன்-கஞ்சாருடுக்கைக்குத் தண்ணீர்கொண்டுவாருமென்றார்
தண்ணீரும்தான்கொடுத்தேன் சரணங்கள்தான்செய்தேன்
நெருப்பெடுத்துவாவென்றார் நெருப்பைக்கொடுத்தேனே
வெண்ணீறெடுக்கத்தா ரணிந்துகொண்டேன்நெற்றியிலே
வாடிநீபோடியென்றான் வலதுதுடையேறுமென்றான்
கையைப்பிடித்திழுத்துக் கடிகிமருவுமென்றான்
பொல்லாதுணங்கள்செய்து போய்நடந்தான்சங்கமனும்
அவனை-கைப்பிடியாகவே கடுகியேகொண்டுவாரும்

அல்லாதேயாமானால் ஆகீதமாய்மாண்டிடுவேன்
பொரண்டச்சிஅழுக பொரண்டன்தானெழுந்தான்
எழுந்தானேராட்சதனும் என்றுமில்லாக்கோபமுடன்
ஆலமரம்பிடுங்கி தோளிலேவைத்தவனும்
கோபித்துகண்சிவந்து கொப்பெனவேயோடிவந்தான்
நில்லும்நில்லும்சங்கமரே கெடுக்குறாம்போகாதே
ஆரடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமரே
என்னுடையபெண்சாதியை எந்தவிதகண்மலரினை
அழகில்மிகுந்தபெண்ணை ஆசடிபஞ்செய்ததென்ன
வழியிலேவீடுகட்டி வனத்தில்குடியிருந்தால்
பிச்சையெடுக்கிறவன் பெண்டோபிடிக்கிறவன்

பொரண்டனுக்கும் அருச்சனனுக்கும் சண்டை.

அரைநாழிக்கொள்ளையிலே அவசியங்கொன்றிடுவேன்
இட்சணப்பொழுதையிலே எமபுரஞ்சேர்த்திடுவேன்
என்றெதிரும்பினான் இயலானராட்சதனும்
ஆறுலமுதுமன்னன் அருச்சனனேதுசொல்வான்
வாடாநீராட்சதனே வார்த்தையொன்றுநீகேளாய்
ஆதிசிவன்பாதம் அன்பாதங்காலையென்று
பார்த்தபசுபன்னா பரமபதிபோகையிலே
வாரவழிதனிலே வழிமறுக்காருந்தேவி
கண்டாசைபட்டேனென்று கடுகினையத்திருமென்றான்
பொல்லாதாள்சேர்ந்தவிணைந்து போகவென்றுறுந்தேவி
நான்-வாயைத்திறக்கவில்லை வண்ணமுகம்பார்க்கவில்லை
என்னென்றுகேட்கவில்லை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
வீணானவார்த்தையிது மேல்போட்டுவாராதே
அநியாயசண்டையிது அமாறுசெய்யாதே
என்னோடெதிர்த்தாலே இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
பெண்சாதிவார்த்தையினால் பிராணனையழிக்காதே
மாளுவதுதருமமல்ல மன்னுடையபொனார்
எத்தனைசொன்னாலும் இரக்கமல்ராட்சதனும்
எதிர்த்தானமர்போர்க்கு இருண்டவனம்புகுக
கண்டானருச்சனனும் கண்கள்சிவப்பேற
கோபப்பெரிதாகி கொல்லமனந்துணிந்தான்
வில்லைத்தானெடுட்டி விக்கிலக்குவைத்தொனித்து
காதுபட்டாய்தானிழுத்துக் கைக்கணையைவாக்கினான்
பொண்டராட்சதனுடைய பிராணனைப்போக்கவென்று
அகம்பைதானெடுத்து அஸ்திரந்தப்பூட்டினான்
மந்திரவுபதேசஞ்செய்து மாபுரமயக்கினான்
மேலிட்டோராட்சதன்மேல் விழுந்ததுஅஸ்திரந்தான்
பொண்டன்பிணைப் பிடரிவிட்டுநாதானுந்தே

அருச்சுனன்பாணத்தால் பேரண்டன் தலைவிழ பேரண்டச்சி புலம்பல்.

அறுந்ததலைமேலெழுவி தாகாசமாயெழும்ப
மற்றொருபாணந்தொடுத்தான் வாள்விஜயனருச்சுனனும்
அறுந்ததலையைக்கொண்டே அவன்தேவிவாசலிலே
கொண்டுபோய்ப்போடுமென்றான் கொப்பெனவேவாள்விசயன்
எய்விப்போய்விட்டதுவே சண்டாளன்தன்தலையை
தலைமாண்டபிறபாடு அருச்சுனனுந்தானடந்தான்
அந்தசமயத்தில் அடைவானபேரண்டச்சி
தலையையவள்பார்த்து தன்புருஷன்தலையெனவே
கண்ணீரைசோரவிட்டுக் கதறிப்புலம்புகிறாள்
விழுந்தாளெழுந்தாள் மண்மேலேபுரண்டழுதாள்
மாரடித்துத்தோளடித்து மண்தூற்றியேயழுதாள்
கோவென்றுசத்தமுடன் குமிறிப்புலம்புகிறாள்
தலையேபருவதமே மண்மேலேசாய்ந்தீரோ
மேகமலைமேடே விண்ணுலகம்சேர்ந்தீரோ
நீமடியுங்காரியங்கள் நின்னடத்தையானறியேன்
வச்சிரத்தூணைநீர் மண்ணோடுருந்தீரோ
கல்லானதூணைக் கறையானரித்ததுவோ
இரும்பானதூணைநீ இற்றுவிழுந்தாயோ
எங்கேயோவானம் இடிக்குதென்றுநானிருந்தேன்
தப்பாமல்வானம் தலைமேலிடித்ததையோ
தெருவிலேகைகளைவிட்டுத் தினகரனைசாட்சியென்றாள்
சந்திரிலேகைகளைவிட்டுத் சந்திரனைசாட்சியென்றாள்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
பார்த்தமுகங்களெல்லாம் வேற்றுமுகமாகுதையோ
மலையேபருவதமே மாண்டுமடிந்தீரோ
செம்மலையேபருவதமே செத்துமடிந்தீரோ
நீமடியுங்காரியத்தின் நினையங்கள்நானறியேன்
சந்தனமிருபுஜத்தை சரியவெட்டிப்போட்டாரோ
குங்குமமிருபுஜத்தை குளிரவெட்டிப்போட்டாரோ
கொண்டைபறிகொடுத்த கோழியைப்போலானேனே
செட்டைபறிகொடுத்த செம்பருந்துபோலானேனே
அடிவானத்திடிபோலே அழுதுபுலம்புகிறாள்
பேரண்டராட்சசியாள் புரண்டுபுரண்டழுதாள்

பேரண்டச்சி அழுகிறதைக்கேட்டு தெய்வகன்னிகள் வருகிறது.

அந்தச்சமயத்தில் அழகானதெய்வகன்னி
ஏழுபேர்சத்தகன்னி இளங்கொடிமாதர்களும்
தீர்த்தங்களாடவென்று தெய்வகன்னிகள்வாறார்கள்
அழுதகுரல்கேட்டு ஆயாசப்பட்டார்கள்
ஒருவர்க்கொருவர் ஒற்றுமையாய்ப்பேசுகிறார்

ஆரோதெரியாது அழுதுபுலம்புகிறாள்
இத்தனைநாள்வரையில் இவ்வோசைகேட்டதில்லை
அழுதகுரல்கேட்டு அப்புரம்போகொணாது
அழுகிறவிடத்திலே யாவரும்போவோமென்றார்
புலம்புமிடத்திலே பொட்டெனவேவந்தார்கள்
ஆரடிமங்கையரே அழுதுபுலம்புவதேன்
பேரண்டராட்சசியும் பிரண்டழுதுசொல்லலுற்றாள்
ஆரைக்கழுத்தி அரைக்கழுத்தியானேனே
கோரைக்கழுத்தி குறைக்கழுத்தியானேனே
மஞ்சளிழந்தேன் மணமிழந்தேன் பூவிழந்தேன்
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கநாளாச்சே
ஏதென்றுநானுரைப்பேன் என்னுடைய அக்கமாரே
ஆரோவொருபண்டாரம் அரன்பதிக்குப்போறான்காண்
வாடியென்றும்போடியென்றும் வம்பாகப்பேசினானே
சொல்லாதுசொல்லியே சேர்ந்து அலையவந்தான்
புருஷனுடனுரைத்தேன் போய்க்கேட்டார்சங்கமனை
என்-கணவனைக்கொன்றுவிட்டு கடுகியேபோறார்காண்
மங்கிலியப்பிச்சை வாங்கிக்கொடுத்துப்போங்களம்மா
என்றவுரைகேட்டு இயலானகன்னியர்கள்
ஆயாசப்பட்டுமல்லோ அதிசமனஞ்சலித்து

தெய்வகன்னியர் அர்ச்சுனனைக்கண்டு இரக்கஞ்சொல்லல்.

சங்கமரைத்தேடியே நடந்தார்கள்தையலர்கள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
நில்லும்நில்லும்சங்கமரே நெடுந்தூரம்போகாதே
போறவழிதனிலே பொல்லாங்குசெய்யலாமோ
சிவவதைகள்பண்ணி சிவன்பதியேபோகலாமோ
ஆதிசிவன்வாழும் அரன்பதிக்குப்போனாலும்
கோரும்வரத்தைக் கொடுப்பாரோபரமசிவன்
ஏனையாசங்கமரே இப்படிக்குசெய்யலாமோ
ஆகாதகாரியங்கள் அழிவுதேடிப்போகலாமோ
என்றுமறித்தார்கள் இளங்கொடிமார்கன்னியர்கள்
ஆனாலழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
சிவனார்பதிக்குநான் தெரிசிக்கப்போறேனென்ன
அவள்-வந்துவழிமறித்து வார்த்தைகள்பேசினாளே
சொல்லாதுஞ்சொல்லியே சேர்ந்து அலையுமென்றாள்
அவள்புருஷன்வந்தென்னை அநீதமாய்க்கொல்லவந்தான்
எத்தனைசொன்னாலும் இரக்கமற்றுக்கொல்லவந்தான்
ஆயுதத்தினாலே அறுத்தேனவன்தலையை
என்மேலேகுற்றமுண்டா ஏனோதடுக்கிறீர்

இருவர்விசேஷமெல்லாம் எதிராகக்கேட்டிடுவோம்
வாருமையாவென்றுசொல்லி வரவழைத்தார்சங்கமரை
பெண்டாட்சியர்கள் பிரண்டுமழுமிடத்தே
அருச்சுனராசாவை அழைத்துவந்துவிட்டார்கள்
தெய்வலோகக்கன்னியர்கள் தேன்மொழியாரேதுசொல்வார்
இருவருடவார்த்தைகளை யெல்லாமிவர்கேட்டு
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
பெண்ணின்பிழையைப் பொருத்தருளும்புண்ணியரே
அடியார்கள்செய்தபிழை ஆண்டவாநீர்பொருத்து
மங்கிலியப்பிச்சைதந்து மகாதேவர்பதிபோனால்
ஆதிசிவனார் அதிகவரமருள்வார்
எங்களைப்பற்றியே இவனையெழுப்பிவிடும்
என்றுவணங்கியே இறங்கியேதெண்டனிட்டார்
அருச்சுனராசாவும் அதிகமனமகிழ்ந்து

தெய்வகன்னியர் அருச்சுனனைக்கேட்க அருச்சுனன்மகிழ்ந்து
தேவேந்திரனுக்கு ஓலையெழுதி அனுப்புதல்.

சேமக்குருத்தோலை சிக்கெனவேதான்வாரி
வாரியவோலையிலே வக்கணைகள்வைத்தெழுதி
என்னவென்றுவோலை எழுதுகிறானர்ச்சுனனும்
அமராபதியாளும் அங்கபிரானென்தகப்பா
தெய்வலோகமாளும் தேவேந்திரனென்தகப்பா
மந்தாரக்குந்திபெற்ற வாள்விஜயனர்ச்சுனனும்
ஆதிசிவன்பாதம் அடியேனுங்காணவென்று
வாரவழிதனிலே வதைத்தெறிந்தேன்பேரண்டனை
அமராறுசெய்தேன்காண் அறுத்தேனவன்தலையை
பேரண்டன்றன்னுயிரை பிரம்மலோகத்திருந்தாலும்
இங்கேயிருந்து எமலோகம்போனாலும்
அவனுடைய்தன்னுயிரை அனுப்பிவையுமென்தகப்பா
எந்தனைப்பற்றியே இட்சணமனுப்பிவையும்
அல்லாதேயுமானால் அமராபுரம்வருவேன்
தேவேந்திரன்பதியை சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுகொள்ளைமாடுகொள்ளை அழகானவீடுகொள்ளை
ஐயாவுன்பட்டணத்தை அனைத்துமேகொள்ளைகொள்வேன்
என்றுமெழுதினான் இயலானவோலையிலே
ஓலைச்சுருள்மடித்து உகந்துசெந்திரிக்கையிட்டு
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தார்
அந்தச்சுருளோலைதனை அம்புவாயில்தான்கொடுத்து
ஐந்துமணியசக்தி அங்கேநீபாயுமென்று
மந்திரதூபமிட்டு வாங்கிவிட்டானஸ்திரத்தை
மார்புரளத்தானெடுத்து தோள்புரளவாங்கிவிட்டான்

வருகுதுஅஸ்திரந்தான் வானுலகந்தான்தேடி
தேவேந்திரனுடைய தேசமணிக்கம்பத்தில்
வாள்விஜயனாஸ்திரந்தான் மணியசைந்தாடிற்று
மணிக்கூண்டருகேவந்து வாங்கினானஸ்திரத்தை

அருச்சுனன் ஓலையைத்தேவேந்திரன்பார்த்து எமனிடம்சென்று கொண்டபேரண்டன் உயிரைவாங்கி அனுப்புதல்.

செந்திரிக்கைஓலைச்சுருள் தேவேந்திரன்விரித்து
எழுதியவாசகத்தை இந்திரனுந்தான்படித்தான்
அதிலிருக்குமிலட்சணத்தை யாவுமறிந்துகொண்டான்
திக்கெனவேதானெழுந்து தேவேந்திரன்வருவான்
எமபுரந்தேடியே எமனருகிற்போய்ச்சேர்ந்தான்
கண்டானேஎமனும் கடுகவெழுந்திருந்து
எதிர்கொண்டழைத்து இட்டுவந்தானமாளிகையில்
ஏதுசருமமாய் இங்குவந்தீரசாவே
அத்திமரம்பூத்ததுபோல் அதிசயமாய்த்தோனுதுகாண்
என்றபொழுதேயவ ரேதுசொல்வாரிந்திரரும்
எல்லாருயிர்வாங்கும் எமதர்மராசாகேளும்
பொல்லாதபாவியவன் புகலும்பேரண்டனுயிர்
இங்குவந்ததுண்டானால் எந்தனுக்காய்தயவுபண்ணும்
என்றுவுபசாரனை இரக்கமாய்த்தானுரைத்தார்
செக்கிலேபோட்டு திருப்புகிறான்னேரம்
எண்ணையும்புண்ணாக்கா யேற்படுத்தும்போதையிலே
பேரண்டன் தன்னுயிரை பொட்டெனவேதான்கொடுத்தார்
மாபாதகனுயிரை மைச்சிமிளிலேயடக்கி
அம்புவாய்தனிலடக்கி அனுப்பினாரிந்திரரும்
வாய்வேகமாகவே வந்ததுஅர்ச்சுனர்முன்

அருச்சுனன் பேரண்டனுக்கு உயிரளித்தல்.

மைச்சிமிளைத்தான்திறந்து வல்லுயிரைமாற்றினான்
வெண்ணீறுதான்போட்டு வேறுபட்டதலையெடுத்து
அறுத்ததலைமுண்டத்தை அணைத்துத்தண்ணீர்தெளித்தான்
தட்டியெழுப்பினான் தன்னுடையபொற்பிரம்பால்
தூக்கியெழுந்தவன்போல் திடுக்கிட்டெழுந்திருந்தான்
ஆடாபண்டாரம் அறிவுகெட்டசங்கமனே
என்றெழுந்தானே இயலானபேரண்டனும்
எழுபேர்கன்னியர்கள் இளங்கொடிமாரேதுசொல்வார்
ஆங்காரராட்சசனே ஐயனைச்சரணம்பண்ணும்
அபசாரமுன்மேலே அநந்தக்குற்றம்வந்திருக்க
உந்தனுயிர்தான்கொடுத்த உம்பர்பிரானுக்குமடா
சாஷ்டாங்கமாக சரணம்பண்ணுமையருக்கு
என்றுசொன்னபோதையிலே இரங்கியேதெண்டனிட்டான்
சரணஞ்சரணமென்று சரணமிட்டான்பேரண்டனும்

இறந்திட்டவனை எழுப்பிவிட்டோராண்டவனே
உலகைக்காப்போரன் இயலானசங்கமரே
அந்தவேளையிலே அழைத்தால்வருகின்றேன்
பக்தனுக்குதவியாக ஒத்தாசைபண்ணுகிறேன்
என்றுபசரித்தான் இயலானராட்சதனும்
அவனையுங்கையமர்த்தி அருச்சுனனும்போய்நடந்தான்
அரகரா அரனேயென்று அரன்மேலேதியானமானான்
சிவசிவாசிவனேயென்ன சிவன்மேலேதியானமானான்
ஒருவன் அரனேயென்ன உலகம் அரனேயென்னும்
எடுத்தானேசெயகண்டிகை தொனித்தானேசங்குதன்னை
ஏலக்கன்னிதன்வசத்தில் எழில்விசயன்போகலுற்றான்

ஏலக்கன்னி அருச்சுனனைப்பார்த்து அழைத்தல்.

அரகராவென்றசத்தம் அறிந்தாளேஏலக்கன்னி
ஆரடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
வாரவரார்காணும் மயிலனையேபாருமென்றாள்
திக்கெனவேதானெழுந்து தெருவீதிவந்தார்கள்
வருகிறசங்கமனை மாதர்கள்தானறிந்து
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
என்தாயேஏலக்கன்னி எவரோதெரியாது
ஆதிசிவன்போலே அழகுபடைத்தவர்காண்
ஒருக்காலும்வந்ததில்லை உச்சிதமாய்வாரார்காண்
என்றசத்தந்தான்கேட்டு எழுந்தாளேஏலக்கன்னி
தன்னடைப்பக்கையிலே தார்குழலாள்தானடந்தாள்
அருச்சுனனைக்கண்டு அதிசயமானாள்
கண்டாசைப்பட்டாளே கட்டழகியேலக்கன்னி
பார்த்தாசைப்பட்டாளே பசுங்கிளியாளேலக்கன்னி
வடிவழகுமேனியையும் வாள்விஜயன்சீரழகும்
உற்றுற்றுப்பார்த்தாளவள் உள்ளமுருகுகிறாள்
காமவிகாரத்தாலே கட்டழகியேதுசொல்வாள்
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
இப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தவசுபண்ணி புத்திமெத்தக்கற்றவரே
வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்காத்திருந்தேன்
எப்போவருவீரென்று இந்தவனங்காத்திருந்தேன்
உன்றனாசைப்பட்டிருந்தேன் உலகில்வேறாசையில்லை
காமவிகாரத்தாலே களைபட்டுப்போறேனையா
மன்மதனெய்தகணை மார்புருகிப்போகுதையா
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதையா
அதிகவிகாரங்கொண்டேன் ஐயாபெரியவரே
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகம்நீர்பாரும்
மண்ணிலுமழகுடையாள் எங்குங்கிடையாது

தேடக்கிடையாது தேசத்திற்கிட்டாது
காணக்கிடையாது கருதினாற்கிட்டாது
மார்போடேமார்பணைத்து மோகவிடாய்தீருமையா
தோளோடேதோளணைத்து சகத்தைமெள்ளத்தெளியுமைய
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
பொன்னும்பொருளுமுண்டு பொக்கிஷங்கள்மெத்தவுண்டு
ஆடவென்றால்ஊஞ்சலுண்டு அமர்ந்திருக்கமேடையுண்டு
பத்தியுலாவுதற்குப் பர்ணசாலைமெத்தவுண்டு
மருவிவிளையாடி மன்மதரோவீற்றிருப்போம்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டாள்
ஏறெடுத்துப்பாரானும் இளவிஜயனருச்சனனும்
ஏலக்கன்னிமாது அவள் இளங்கொடியாளேதுசொல்வாள்
ஏன்காணும்அர்ச்சனரே எந்தன்முகம்பார்க்கொணாதோ
முத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லொணாதோ
வாயைத்திறந்தாலே வச்சிரமுதிர்ந்திடுமோ
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கேனோ
தாளைத்திறந்தாலே தங்கமுதிர்ந்திடுமோ
தங்கமுதிர்ந்தாலே தடவியெடுக்கேனோ
என்னுடன்பேசினால் ஏதுகுறைவுமுண்டோ
கல்லுங்கரையுமே கட்டைதளிர்த்திடுமே
இரும்புகரையுமே இரக்கம்போயுன்மனது
மார்பைப்பார்தோளைப்பார் வண்ணமுகத்தைப்பார்
மார்போடேமார்பணைத்தால் மகாவிடாய்தீர்த்திருப்பேன்
முகத்தோடேமுகமணைத்தால் மூர்ச்சைதெளிந்திருப்பேன்
தோளோடேதோளணைத்து சகங்களைத்தீருமையா
வாருமென்றுசொல்லி மறித்தாளேஏலக்கன்னி
வாயைத்திறவானும் வண்ணமுகம்பாரானும்
என்னென்றுகேளானும் ஏறுமுகம்பாரானும்
சிவனைமறவாமல் சிவன்மேலேதியானமானான்
அரனைமறவாமல் அரன்மேலேதியானமானான்

ஏலக்கன்னி அருச்சனனைக்கோடுகிழித்து ஆணையிட்டுச்சிறுத்தல்.

ஏலக்கன்னிமாது இளங்கொடியாள்கோபமானாள்
ஏழுகோடுகிழித்து இங்கேபேசிலுமென்றாள்
உன்-குருவின்மேலாணைகாணுங் கோடுவிட்டுப்போகாதே
ஐவர்மேலாணைகண்டாய் அடிவிட்டுப்போகாதே
தம்பிதமயன்மார் தாய்மேலேஆணையிட்டாள்
ஆணையிட்டேலக்கன்னி அரண்மனைக்குப்போய்ச்சேர்ந்தாள்
மாளிகைவாசலுக்குள் மண்டபத்தில்வீற்றிருந்தாள்
அவள்-வருவதற்குள்ளாக வாள்விசயனேதுசெய்தான்
என்னுதமெண்ணியே ஏதேதுதானினைப்பான்
ஆலோசித்தானே அவற்றமைதியிலே

உனைநினைத்தாயே வண்ணமற்றசிந்தையிலே
யாரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்
பார்த்தாலெல்லாம் வேற்றுமுகமாகுதையா
ஆரைநினைத்தாலே இந்தவேளைகாத்திடுவார்
...க்கைகாப்பதற்கு ஆராலேயாகுமென்றார்

கோட்டிலிருந்தும் அர்ச்சுனன் காளியைத்துதித்தல்.

...கன்னியரை அருச்சுனன் தானினைந்து
...யம்மா சுந்தரிநாக்கையமே
...டாரியம்மா சங்கரிபகவல்லி
...டாரியம்மா வழக்காடுந்தர்க்கையமே
...வேளையிலே ஆதரிக்கவேணுமம்மா

அருச்சுனன் காளிசைநினைக்க காளிவந்து வரலாறுவினவல்.

என்றுநினைத்தானே இயலானகாளியம்மை
...வன்தான்வருந்த மாகாளிதான்வருவாள்
...யொருகையில் டமாரமொருகையில்
...மொருகையில் வளைதடியொருகையில்
...ருக்கைபிடித்து ஆயுதமாகவந்தாள்
...டவியிலேயெனைநினைத்தாய்
...து உன்னுடையவண்மையென்ன
...கட்டையிலே யிறங்கிச்சரணமிட்டான்
...ட்டாயே யாதவஞ்செய்யநான்
பாண்டுமகாராஜன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
ஐவர் பஞ்சபாண்டவரில் அருச்சுனராஜனென்பேர்
...த்துனன் வாள்விஜயனென்பேரு
...கலாசம் ...யேபோறேனம்மா
...நோக்கியே யாதவஞ்செய்யநான்
போரவழிதனிலே பொற்கொடியாளேலகன்னி
...ம்பசன்றுமென்று கடிகியெனைமறித்தாள்
...கிறித்துஎன்னைக் குறுக்கேதடுத்தாளே
ஆனைவிட்டெயெனைமறித்து அரண்மனைக்குப்போய்விட்டாள்
...படியும்வருமேவென்று மாளிகைக்குப்போய்விட்டாள்
...மென்றாயே அபயமிட்டுனையழைத்தேன்
...தான்கேட்டு ஏதுசொல்வாள்ஈஸ்பரியும்

காளியம்மன் அருச்சுனனை ஆனைவிடுவித்தனுப்புதல்.

...தேவியென்மகனே ஆனைவிட்டேன்தோஷமில்லை
...ல்லை முத்திரையைநீகழற்றி
...முத்திரையை நிலந்தனிலேவைத்துவிடும்
...முத்திரையை உனக்கேதயவுசெய்வேன்

என்றுசொல்லக்காளியம்மாள் ஈய்ந்துவிட்டான்வாள்விசயன்
தரித்திருந்தமுத்திரையைத் தயாரின்கைகொடுத்தான்

காளி அருச்சுனன்போல்நிற்பதை ஏலக்கன்னிகண்டு தான் அலங்காரம்பண்ணிக்கொள்ளல்.

வாள்விசயன்போனபின்பு மாகாளியென்னசெய்தாள்
அருச்சுனனைப்போலாக அங்கேவடிவுகொண்டாள்
காவிகாசாம்பரமும் கட்டியரைதனிலே
ஐந்துசடைகொஞ்ச அழகுசடைமார்புரள
வாள்விசயன்போல மறைப்பிலேநின்றாளாம்
இப்படிக்குகாளி யிருக்கின்றவேளையிலே
ஏலக்கன்னிமாது இளங்கொடியாளேதுசெய்தாள்
மஞ்சள்குளித்தாள் மையெழுதிப்பொட்டுமிட்டாள்
வாரிமுடித்தாளாம் வான்சவுரியுட்சொருகி
கொண்டைக்கழகாக கொண்டைமயிர்தான்முடித்தாள்
சந்திரபிறைசூரியபிறை தலையிலணிந்தாளாம்
ஆண்மயிலும்பெண்மயிலும் அழகாகத்தான்முடித்தாள்
முத்தாலேசுட்டியும் முன்னாலேதொங்கவிட்டாள்
காதுக்குபொன்னோலை கைக்குவளையலிட்டாள்
செண்பகப்பூநாசியிலே சேர்ந்தணிந்தாள்மூக்குத்தி
தோள்வந்திகைவந்தி தொடுத்தாள்ரவிக்கைதனை
கண்டசரமாம் கால்பதக்கமோதிரமும்
கொத்துசரப்பளியாம் கொத்துமுத்துதாழ்வடமும்
முத்துசரப்பளியாம் மோகனமாலைகளாம்
சன்னல்பின்னல்தாழ்வடமாம் தாயித்துப்பேரொளியும்
கடகஞ்சரிபவளங் கைநிறையபொன்வளையல்
தண்டைகொலுசுடனே சலங்கையும்பாடகமும்
காலாழிபீலி கல்லணையாம்புல்லணையாம்
அரைக்கிசைந்தவொட்டியாணம் அலங்காரம்பண்ணாளாம்
பொன்னிழைத்தபட்டாடை பூவாடைதான்தரித்தாள்
சாந்துசவ்வாதுடனே சந்தணமபூசினாள்
மருவும்மருக்கொழுந்தும் மல்லிகைபூமுடித்தாள்
வாசனைபரிமளிக்க வாராளேஏலக்கன்னி
ஆரடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
எடுத்துவாகனதண்டி இட்சணமேபோகவேணும்
தாதிமாரோடிவந்து தண்டிகைகொண்டுவந்தார்
ஏறினாள்தண்டிகைமேல் எடுத்தார்நெடுங்குடையை
சங்கமர்தானிருக்கும் தாவுதேடிவாறாளாம்
பல்லக்கைவிட்டிறங்கிப் பாதஞ்சரணமென்றாள்
ஆணையிட்டேன்தோஷமில்லை ஆண்டவனேபாருமென்றாள்
ஏறினார்பல்லக்கில் இயலானசங்கமரும்
ஏலகன்னிதானும் ஏறினாள்பல்லக்கில்

மாளிகைவாசலிலே வந்துயிறங்கினாளாம்
பட்டுரத்னபாய்போட்டு பண்டாரம்வீற்றிரென்றார்
ஆசனத்தின்மேலே அமர்ந்தாளே ஏலகன்னி

ஏலக்கன்னி அருச்சுனருக்கு விருந்திடச் சமையல்பண்ணல்.

இளங்கொடிமாதனை ஏலக்கன்னிதானழைத்து
அடிசில்சமையுமென்றாள் அரண்மனையிலெல்லவர்க்கும்
சர்க்கரைப்பாலபோசனங்கள் சமையுங்கள்மாதர்களே
பஞ்சணைமெத்தையும் பள்ளியறைசோடியுங்கள்
இவ்வார்த்தைசொல்ல எழுந்தார்கள்தோழியர்கள்
சித்தமுறையெங்களது சித்தினித்தாதியர்கள்
இத்தமுறையெங்களது என்றுயெழுந்தார்கள்
அடுப்புமெழுகுவார் அட்சதைக்காப்பிடுவார்
வெங்கலப்பானையிலே வெண்ணீருலைசாய்ப்பார்
பால்சம்பாவரிசி பதின்கலந்தான்களைந்து
கொதிப்பாற்றியேயிரக்கிக் கொப்பெனவேதான்சமைத்தார்
வாழைக்காய்கொய்வார் வழுதலங்காய்காம்பரிவார்
சழுப்பலாக்காயை இளமுள்ளுபோக்கிடுவார்
கொத்தவரைக்காயதனைக் கூட்டியறிந்திடுவார்
செம்பொனவரைக்காய் சேரஅறிந்திடுவார்
பாவற்காய்தானறிவார் பரங்கிக்காய்தானறிவார்
இளசுரைக்காய் இளந்தமர்த்தைதானறிவார்
தேங்காய்திரிகிடுவார் மாங்காயறிந்திடுவார்
பாம்புப்புடலங்காய் பாதரிப்பீர்க்கங்காய்
பிஞ்சுமுருங்கக்காய் பேரானகொத்தவரை
வெண்டைக்காய்வண்டைக்காய் சுத்தமுள்ளமுள்ளாங்கி
வெள்ளிக்கிழங்குகருணும் வாழைத்தண்டுகீரையுடன்
சிறுகிழங்குசிறுவள்ளி சிறப்பானசேமத்தண்டு
கருணைகாருக்கருணை காருதஅள்வள்ளியும்
அரைக்கீரைசிறுகீரை அகத்திமுருங்கக்கீரையுடன்
முன்னைமுசட்டை மூக்குறட்டைகீரையுடன்
காரைபிரண்டையும் கடறகீரையுள்ளதுவும்
பிடுங்கினரிளங்கீரை பேரானகொத்தமல்லி
கடலையுநெத்துபச்சை காராமணிபருப்பும்
அவரைத்தொவரையொடு அநேகஞ்சிறுபருப்பு
கொள்ளுடனேயெள்ளுகளுங் கோதுமையுங்கலந்து
பத்துவகைதப்பளமும் பாங்கானகூட்டமது
பத்துவகைப்பச்சடியும் பாங்கானகீரையுடன்
ஆயிரத்தெட்டுவகை அரிக்கரிபொரிக்கரியும்
ஐந்நூறுவகைக்குழம்பும் அடைவுடன்தான்சமைத்து
காரமும்உப்புங் கலந்தஅறுசுவையும்
புத்துருக்குநெய்த்துளியைப் போதவேதான்வார்த்து

வடகப்பொடிபோட்டு மணிச்சீரகம்போட்டு
சீரகமும்வெந்தயமும் சீராகத்தான்போட்டு
கறிவேப்பிலையும் கறிக்குதிட்டமாய்ப்போட்டு
சையுஞ்சையுமென்று தனித்தனியேதான்மணக்க
மணங்கள்கமகமென்ன மாதற்குப்புறையேற
தாளித்திறக்கினார் தார்குழலார்சையாலே
செம்பொன்பிரியணைமேல் சேரஅடுக்கினார்
ஊரியகாய்சேர்ந்த உகமைகளைச்சொல்லுறேன்கேள்
இஞ்சியெலுமிச்சை இயலானதமர்த்தையும்
நாரத்தைகிச்சிலியும் நல்லகடுக்காயுடனே
மூங்கில்குருத்தாகளும் முற்றாவள்ளிக்கிழங்கு
அத்திக்காய்மாவுலிங்கம் அழகானதூதுவளை
வில்வக்காய்சுக்கங்காய் விளாம்பிஞ்சுபச்சடியாம்
சுண்டக்காய்களாக்காயும் சுருக்கானமுள்கருணை
மாங்காய்முதலான மற்றுமுள்ளஊறுகாயும்
வத்தல்வகைசேர்ந்த வகைமானங்கேளுங்கள்
ஆதண்டங்காயும் அரிதானசுக்கங்காயும்
பாவற்காய்கோவற்காய்ப் பச்சைவிளாங்காயும்
சுக்கங்காய்தூதுவளை சுருக்கானபாவற்காயும்
அறுசுவைவர்க்கமுடன் அறுபதுஊறுகாயும்
பழவகைகள்தான்சேர்த்த பலவகையைத்தானேகேளும்
மாம்பழம்வாழைப்பழம் மலையின்பலாப்பழமும்
செவ்வாழைகறிவாழை திரண்டகொட்டைவாழையும்
மாதளைக்கிச்சிலியும் மாவொட்டுமாம்பழமும்
அன்னாசிஅருநெல்லி அழகுகொய்யாப்பழமும்
தமர்த்தம்பழங்களும் தலைவிரித்தமாதளையும்
மற்றுமுண்டானபழ வகையெல்லாம்சேர்த்தார்கள்

ஏலக்கன்னிக்கு தாதிகள்பள்ளியறைசோடித்தல்.

அதிலேயொருதாதி ஆரணங்குதானெழுந்து
பள்ளியறைதான்திறந்து பைங்கிளியாள்சுத்திபண்ணி
சாந்தால்தரைமெழுகி சந்தணத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரகவர்பூசி
கண்மூன்றுடைய சனவயிரக்கட்டிலிட்டு
மெத்தைமடித்திட்டு மேலேயணைகோலி
காம்பரிந்தமல்லிகையைக் கட்டிலின்மேலேசொரிந்து
கண்ணாடிசல்லிகட்டி கவுரிமான்சுங்குவிட்டு
மாவிலைத்தோரணமும் மல்லிகைமாலைகட்டி
எங்குமலங்கரித்து ஏந்திழைமாரோடிவந்து
ஏலக்கன்னிமுன்னாலே இளங்கொடிமார்கொண்டணிட
அடிசில்சமைத்ததென்று ஆரணங்குகொண்டணிட
கெண்டியில்தீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைக்க

ஏலக்கன்னிசங்கமரும் எழுந்தாரிருவருமாய்
கைகூப்பிக்கொண்டு கழிகியேவந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
இட்டாரேபோஜனங்கள் இவருக்கழகாக
பச்சென்றபழவகையும் பச்சடியும்பாலித்தார்
பொறித்தகறிவகையும் பொன்போல்சிறுபருப்பும்
காரானின்நெய்வார்த்து கடிசிப்பொசியுமென்றார்
இயிட்டிழுழிப்பளவில் செகமாதாகாளியம்மா
வைத்தபதார்த்தமெல்லாம் மாயையாயுண்டுவிட்டாள்
மற்றுமொருக்காலே வட்டித்தார்போசனங்கள்
ஆயிரம்பேருக்கு சமைத்தஅடிசிலெல்லாம்
ஒருவிரருவருக்கு அன்புடனேவட்டியென்றாள்
எங்களவுதாழ்கையில் காளியம்மைவுண்டுவிட்டாள்
இன்னஞ்சோறில்லையோ என்பசியாறுகைக்கு
வயிறுபசியாற்றாமல் மாலையிட்டுக்கொள்வேனோ
மேதினியிலெப்படிக்கு விவாகமதுசெய்வேன்காண்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏலக்கன்னியேதுசொல்வாள்
ஏறியோவுன்வயிறு இயலானசங்கமரே
மட்டேவாருதோவுன் வயிறுகுஞ்சங்கமரே
கெட்டுப்பின்னையில்லாமல் பிழைசதீரோவூர்திரிந்து
இன்றையதினத்திலே போசனமிட்டாச்சு
நாளையதினத்திலே நன்றாய்பொசித்திடுவீர்
வாருமெனறுசொல்லியே வருந்தியேநீர்கொடுத்தாள்
வாய்பூசிகைபூசி மாளிகைக்குப்போய்நடந்தார்
பள்ளியறைமெட்டையிலே பஞ்சணையில்வந்தார்கள்
சங்கமருமனமகிழ்ந்து தம்புருதான்தொனித்தாள்
இன்னாரவாத்தியங்கள் கோஷ்டமுடன்தான்படித்தாள்
கதாரகேட்டுமே காளியம்மைதானமகிழ்ந்து

ஏலக்கன்னி காமவிகாரத்தால் அருச்சுனனென்று அணையப்போக
காளி நான் அருச்சுனனல்லவென்றுசொல்லல்.

காமம்பொறுக்காமல் கடுகியேயேலக்கன்னி
மார்பில்விழுந்து மருவியணையவந்தாள்
காளியென்றுதானறிந்து கைவிட்டாளேலக்கன்னி
என்னைக்கெடுத்தீரோ என்பாவங்கொண்டீரோ
ஆணையிட்டுவந்தேனே அடிமைக்குநாயமுண்டோ
அருச்சுனராசனை அங்கெனவேபோய்மறுத்தாள்
சங்கமரே போகாதே
ஆணையிட்டுவந்தேனே அடிமைக்குநாயமுண்டோ
என்னைக்கல்யாணஞ்செய்து கடுகடுவுமென்றாள்
ஆறுமுதுமன்னன் அருச்சுனனேதுசொல்வான்

ஆதிகயிலாசம் அரன்பதிக்குப்போறேனென்
சிவனார்தன்கையாலே சேனவரம்பெற்று
வரும்போதுயேலக்கன்னி மாலையிட்டுக்கொள்ளுகிறேன்
என்னைமாக்காதே யேலக்கன்னிநாயகமே
போகச்சிலவுதாராய் போய்வாரேன்பெண்மயிலே
என்றதுகேட்டுமே எதுசொல்வான்வாள்விஜயன்
ஆணையிட்டுத்தந்தானே ஆரணங்கைவிவாகஞ்செய்ய
மாதர்செலவுதர வாள்விசயன்போய்நடந்தான்
அந்தவனங்கடந்து அப்புறம்போகலுற்றான்

பத்தாவது. போண்டவனம்-முற்றிற்று.

௧௧-வது, சபாமிருகவனம்.

அந்தவனத்தைவிட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தசிமாடு கூடைதலைமேலேவைத்தார்
மண்ணிவைத்தசிமாடு வனமேகுடிபுகுந்து
காடுகடந்து கரியமலைதான் தாண்டி
சபாமிருகந்தானிருக்கும் தனிவனத்திற்போனார்கள்
ஐந்தடுக்குபர்னசாலை அழகாகவுண்டுபண்ணார்
எழுடுக்குபர்னசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அங்கேகுடித்தனமாய் ஐவர்வந்துதானிருந்தார்
இப்படியாகச் சிலகாலிருக்கையிலே
சபாமிருகவனந்தனிலே தவஞ்செயனுமப்போது
வெள்ளானைவனந்தனிலே வில்விசயன்வாரானும்
உலகமதிர்ந்திடவே உந்தவனும்வாரானும்
ஒருவனரனேயென்றால் உலகமரனேயென்னும்
ஒருவன்சிவனேயென்றால் உலகஞ்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அடித்தானேசெயகண்டிகை
சிவசிவாவென்றுசொல்லி தொனித்தானேசங்குதனை
சங்குதொனிகேட்டு சபாமிருகந்தானெழுந்து
வால்கிளப்பிகுமாளமிட்டு வருகுதுவெள்ளானை
தன்னிழலையேபார்த்து தானேறிதக்கானை
கொம்பினால்மலையையதா குத்திகிளப்பிவிடும்
அருச்சுனரைக்கொல்லவென்று ஆனைவருகையிலே

அருச்சுனன் யானையைக் கொல்லுகிறது.

கண்டானேவாள்விஜயன் கண்கொள்ளாக்கோபமுடன்
வில்வளைத்துநாணிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அர்த்தசந்திரபாணமெடுத் தஸ்திரத்தையுச்சரித்தான்
மதயானையைக்கொல்லவென்று மார்புளவாங்கிவிட்டான்
அருச்சுனன்விட்டதொரு அர்த்தசந்திரபாணமது



சிவபெருமானுடைய நந்தவனங்காத்திருந்த பிராமணன் பார்
வதியின் நந்தவனக்காவற்பெண்ணை இச்சித்ததினுலுண்டான சாப
ம் விமோசனமானது.

மதயானை தன்னையே வகுத்துயிருபிளவாய்
கீறிட்டுவிழுந்ததே வில்விசையன் தன்கையால்

அருச்சுனன்கையினால் விழுந்தயானை ஒருபிராமணனாகவந்தது.

ஆனைமடிந்திடவே அதிலொருபிராமணன் தான்
பஞ்சாங்கப்பிராமணனாய் பார்ப்பான்வெளியானான்
கண்டானேயருச்சுனனும் கடிகிப்பிராமணனை
வாரும்பிராமணரே மதயானை முழுங்கிற்றே
ஆனாற்கேள்சங்கமரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
தெய்வலோகந்தனிலே சிவனுடையபூங்காவனம்
ஐயர்பூங்காவனத்தில் அதிகாரமென்னுதுகாண்
அம்மைபூங்காவனத்தில் அதிகாரமென்னுதுகாண்
அம்மைபூங்காவனத்தார்கள் ஐயர்வனம்போகொணாது
ஐயர்வனத்தார்கள் அம்மைவனம்போகொணாது
ஒற்றையொருநாளில் உச்சிதத்தைப்பார்ப்போமென்று
அம்மைவனங்களிலே அதிகாலைபோகையிலே
ஆயிரம்பெண்களிலே அதிலேயொருதாதி
கண்ணுக்கினியபெண்ணை கண்டாசைப்பட்டேனே
பார்த்தாசைப்பட்டேனே பைங்கிளியைக்கைப்பிடித்தேன்
என்னைத்திமிரிவிட்டு ஈஸ்வரியாள்பக்கஞ்சென்றாள்
ஈஸ்பரியாள்தன்னுடனே இச்சேதியுரைத்தாள்காண்
அம்மையதுகேட்டு ஆதிசிவன்பக்கஞ்சென்றார்
உமையவளதுகேட்டு உம்பர்பிரான்பக்கல்வந்து
ஐயாதுதன்வனத்தில் அதிகாரஞ்செய்கிறவன்
எந்தன்வனக்கன்னியரை இவன்பிடிக்கஞாயமுண்டோ
என்றுமிகச்சொல்லுகையில் ஈஸ்வரனார்தான்கேட்டு
என்னைவரவழைத்து ஈந்தார்பெருஞ்சாபம்
என்னுடையசாபமது எப்போதொலையுமென்றேன்
ஆதிகைலாசம் அருச்சுனன்வருகிறான்
அருச்சுனனைக்கொல்லவே ஆங்காரமாய்ப்போகையில்
அருச்சுனன்கோபமுற்று அம்பாலேகொன்றிடுவான்
என்றதும்போல்நீரும என்சாபம்போக்கிவிட்டீர்
வாருமென்றிருவருமாய் வனத்திலேபோனார்கள்
போகபிராமணனும் புதுமையொன்றுசொல்லலுற்றான்

அருச்சுனனுக்கு பிராமணன் குயவன் வரலாறுகூறல்.

ஆனாற்கேள்சங்கமரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்
செப்புமொழிதவறான் திருநீலகண்டரவர்
கோடுகடவாதார் குயவனைகுபத்தியரும்
இப்படியாக இவருக்குமவ்வனையிலே
மகாராசன்வாசலிலே மங்களகாரியந்தான்
கோவுக்குமுட்டிகொண்டுவாவென்றுரைத்தார்.

அட்டாளைப்பெண்டுடன் அனேகமுட்டிசொப்பனிட்டு
பொன்பேழைவைத்துமே போட்டான்பெருஞ்சூனை
...சட்டசிறுமுட்டிதட்டி
மகாராசன்வாசலிலே வைத்தானேகொண்டுவந்து
மகாராசன் தானதைப்பார்த்து மகிழ்ச்சியாய்குயவருக்கு
சொர்ணமணிமுத்தும் துகிலாடையுமெடுத்து
வில்லாபுருஷனைத்தந்த நீலகண்டனுக்கருளி
போய்வாருமென்றுமே போகச்சொல்லவருள
வெகுமானம்பெற்றுமவன் வீதிவருகையிலே
அந்திகாலமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
காற்றுமழையுங் கவிழ்ந்துவருகிறது
தெய்வதாசிவீதி தெருத்திண்ணைவோரத்தில்
வந்துமிறங்கினான் வான்மழைபோகளவும்
அந்தச்சமையத்திலவ்வீட்டுதாசியவள்
போசனமுண்டுமே பொற்கலத்தைதான்கழுவி
சன்னல்கதவையவள் தான்திறந்துஊற்றினாள்
மண்ணுடையான் தன்மேலே வந்துவிழுந்தது
அப்போசிவசங்கரனே சலந்தெளித்தாரென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாசியவள்
அஞ்சிப்பயந்துமே ஆரென்றுகேட்கலுற்றாள்
மண்ணுடையான்நானதானும் வந்தேனிதுவழியாய்
வான்மழைக்குமாதரசே வந்துஒதுங்கினேன்
ஆரோதெரியாது அள்ளிஜலந்தெளித்தார்
என்றதுகேட்டுமே ஏலப்பசுங்கிளியாள்
மெத்தப்பயந்துமவள் வீட்டினுள்கொண்டுசென்று
அபிஷேகமாட்டிவைத்தாள் ஆனந்தமாரனுக்கு
சமுலர்த்தி இ[illegible]ர்த்தபட்டுடுத்தி
ஆபரணமிட்டு அலங்காரம்பண்ணினாள்
போஜனமிட்டுமவள் புட்பமுந்தான்கொடுத்தாள்
சந்தனமும்தாம்பூலம் தான்கொடுத்தாள்தையலரும்
அன்றையராத்திரி அங்கிருந்துகுயவனவன்
மற்றநாட்காலையில் வந்தானேவாழ்மனைக்கு

குயவன்மனையாளுக்கும் குயவனுக்கும் தர்க்கம்.

குயவனுடமேனி கொம்பனையாள்கண்டாளாம்
கண்டுபுருஷனைக் கண்ணீலாத்தானுதிர்த்தாள்
கோவென்றசத்தமுடன் குமுறியழுதாளாம்
ஆரோடேபோகய் அமர்ந்திருந்தீர்மன்னவரே
...விட்டுப்போவதற்கே என்னமனம்வருமோ
தேசியர்கள்வீட்டிலே விளையாடிவந்தீரோ
...துடனேபேச்சேனோ உன்முகத்தைப்பாரேனே

பெற்றதகப்பனைப்போல் பிரியமுடன்பார்த்திருப்பேன்
குருக்களுடைமையை கொள்ளைகொண்டுபோனவர்கள்
தாயில்லாப்பிள்ளைகளை தலையிலடித்தவர்கள்
சிசுவதைபண்ணவர்கள் ஸ்திரீவதைபண்ணவர்கள்
பெரும்பாவிசேருகிற பெருநரகில்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டாள் இளங்கொடியாள்தமயந்தி
இவ்வார்த்தைகேட்டுமவன் எரிபறந்தநீலகண்டன்
கண்கள்சிவந்துமே காந்தாளப்பட்டானும்
மெய்யானவார்த்தைதனை விளம்பினேன்மெல்லியற்கு
பொல்லாதவார்த்தையினால் புலம்புகிறாளேதுசெய்வேன்
என்றுமனஞ்சலித்து ஏதுசொல்வான்நீலகண்டன்
இன்றுமுதலாக இனிகெடுநாள்வரைக்கும்
உன்னுடனேபேசினால் உனக்குத்தகப்பனென்றான்
அவ்வார்த்தைதன்னிலனேகபாவஞ்சொல்லுகிறேன்
அபயமென்றுவந்தவனை அனியாயம்பண்ணும்பாவி
பெரும்பாவிசேருகிற பெருநரகம்சேர்ந்திடுவேன்
என்றுசபதமிட்டான் இயலானநீலகண்டன்
அப்படியாக அனேககாலந்தானிருந்தார்

ஆதிசிவனும் பார்வதியும் பண்டாரவேஷமாகவந்து இருவரையும் ஒருமைப்படுத்தி மோட்சமீதல்.

ஆதிசிவனுக்கும் ஆதிபரமேஸ்வரிக்கும்
பொருத்துமுடியவில்லை பொல்லாச்சபதமிது
இருவரையும்பேசிவைக்க ஈஸ்வரனார்வந்தாராம்
மெத்தப்பெரியவராய் மேல்நாட்டுச்சங்கமராய்
ஆண்டிப்பெரியவராய் ஆண்டவன்வடிவெடுத்தார்
அம்மையுமையவளும் ஆண்டிச்சிவடிவெடுத்தார்
விநாயகன்வீரபத்திரன் வேல்பொருதுங்கந்தனுமே
அன்றுரித்தமானதோலும் அழகானபுலித்தோலும்
அன்றுபுலித்தோலும் கைலாயமான்தோலும்
சடையுஞ்சடைமுடியும் தம்பிரானைப்போலாக
நீலகண்டனுக்காக நினைத்தார்திருவோடு
கதிரோனைப்பத்திரமாய் கடுகெனவேகைபிடித்து
வாரார்பரமசிவன் வனமாய்வனங்கடந்து
காடுசெடியுங் கரியமலைதான்கடந்து
நீலகண்டன்வாசலுக்கு நிமலரும்வந்துவிட்டார்
ஆரடாபத்தாநீ அறிவுள்ளபுண்ணியனே
என்பிள்ளைபெண்சாதி யிங்கிவர்களெல்லோரும்
பசியோடேநாங்கள்வந்தோம் பசியாற்றிநீரனுப்பும்
பிள்ளைபசியாற்றில் புண்ணியங்கள்வேணதுண்டு
குழந்தைபசியாற்றில் குமாரனைப்பெற்றிடுவாய்
[illegible] உடையபெண்சாதி

வாழ்ந்துசுகமாயிர் மகாதேவர்புண்ணியத்தால்
என்றவ்வோசங்கமரும் ஏய்ந்துவிட்டார்வெண்ணீறு
வாங்கியணிந்துகொண்டு வணங்கியேதெண்டனிட்டான்
அய்யா சங்கமரே நான்செய்தபாக்கியத்தால்
வந்தீர்களிப்போநான் வாழ்ந்துசுகமானேன்
பத்துநாழிகைப்பொழுதில் பசியாகநீங்கள்வந்தால்
போசனமுண்பீர்காண் போய்வாருஞ்சங்கமரே
என்றதுகேட்டுமவ ரேதுசொல்வார்சங்கமரும்

சங்கமர் நீலகண்டன் மனஞ்சோதித்தல்.

நான்-போசனம்பண்ணுகிற பொன்னைதிருவோடு
இங்கேவைத்துநான்போறேன் எடுத்துமறவாமல்வையும்
ஊர்திரிந்துநான்வாறேன் உன்வசத்திருக்கட்டென்றார்
என்-பாட்டனார்நாளையிலே பண்ணினதிருவோடு
பாத்திரம்போய்விட்டால் பழிவந்துசேருமென்றார்
என்றதுகேட்டு ஏதுசொல்வான்நீலகண்டன்
ஆகட்டுங்கள்சங்கமரே ஐயாபெரியவரே
தன்னுடையதேவியுடன் இவ்வார்த்தைநீயுரைத்து
சாதங்கறிவகைகள் சமைக்கவேசொல்லுமையா
பாவற்பயிர்பந்தலின்மேல் பாத்திரத்தைவைத்துவையும்
ஆரண்மனைக்குள் நுழைந்து ஆச்சியரைத்தானழைத்து
தன்னுடையான்வார்த்தைதனை மாதருடனுரைத்தார்
பந்தலின்மேலாகப் பாத்திரங்கள்வைத்தபின்பு
பாத்திரத்தைப்பார்த்திரென்று பண்டாரந்தானடந்தார்
செப்பிநடந்தாரே திருநீலகண்டன்வாழும்
அத்தெருதான்கடந்து அடுத்ததொருவீதியெல்லாம்
ஆத்திநிழலருகில் ஆதிசிவன்வந்தமர்ந்தார்
அந்தச்சமயத்திலே ஆதித்தன்போய்மறைந்தார்
சக்கலாதேவிமகன் அரிபன்தான்மறைந்தான்
குயவனிடதேவியரும் குடிவாழ்க்கைசெய்திருந்தாள்
அனேகநெடும்போது ஆனபிறகாக
தன்னுடையான்தானெழுந்து வாசலிலேவந்துநின்று
பாவற்பந்தலைப்பார்த்தான பாத்திரத்தைக்காணோமென்று
தேவியெதிரில்வந்து திகைத்தாப்போல்நின்றுவிட்டான்
கைகாட்டிநீலகண்டன் கண்காட்டிகேட்கிறான்
ஆரணங்குமார்துகன்னி அறியேனென்றுசாடைபண்ணுனள்
மனதுசந்தோஷமாக மண்ணெடுத்துபண்ணுகிறார்
பின்னிருந்தாமெடுத்து பாத்திரம்பண்ணினான்
அடிகியுருளைபோட்டு கவிழ்த்துவைத்தான்பந்தலிலே
அப்பரும்அம்மையுமாய் ஆதிசிவன்வாறாராம்
திருநீலன்மாளிகையில் சிவசிவாவென்றுவந்தார்
கடுகியேநீலகண்டன் கைக்குச்சலங்கொடுத்தான்

கைப்பூசிக்கொண்டு கபடியேவுள் நுழைந்தார்
பாத்திரங்கொண்டுவந்தார் பண்டாரப்பார்த்துவிட்டார்
என்னுடையபாத்திரம் எங்கேயென்றார்சங்கமரும்
வைத்துநீர்போனபின்பு மாயமாய்ப்போச்சுதையா
ஆகையாலாண்டவனே அட்சணையேசெய்துவைத்தேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்சங்கமரும்
என்பாட்டனார்நாளையிலே பண்ணிவைத்தபாத்திரத்தை
யமாத்திமோசப்பண்ணி இல்லையென்றுசொல்லலாமோ
மகாராசனிடத்தில்வாரும் வழக்குசனைச்சொல்லுவோம்
மடிபிடித்துசங்கமரும் வாராரேதானிழுத்து
முடிமன்னன் தன்சபைக்கு முன்பாகவந்துநின்றார்
பசித்ததென்றுசோறுகேட்க பகலைக்குவாருமென்றான்
வச்சிரத்தாலிழைத்த மாணிக்கபாத்திரத்தை
இவர்கையில்தான்கொடுத்து இஷ்டமிடம்போயிருந்தேன்
வந்துபின்னேகேட்டாலே மாபாவிகாணோமென்றான்
ஆகையினாலேதான் அழைத்துவந்தேனுமிடத்தில்
அதிதிபரதேசி யாருமில்லையெந்தனுக்கு
ஆண்டிவுடைமையென்று அவரிடத்தில் நீர்கேட்டு
வாங்கியேதாருமென்றார் மகாராஜாராஜாவே
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வான்மகாராசன்
ஆரடாநீலகண்டா அறிவுகெட்டபாதகனே
பரதேசியுடைமையைநீ பறிக்கிறதுதருமமோடா
குயவன்குபத்தியவைக் கொப்பெனவேகட்டுமென்றார்
வெள்ளிப்பிரம்பாலே வீசியடியுமென்றார்
மாறியடியுமென்றார் வந்தகுயவனைத்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தார்தலையாரி
எருக்கமலராலே எட்டியடித்தாரே
உள்ளம்நடுங்கமேனி உதிரம்வடியுதங்கே
அப்போமகாராசரிடம் ஆண்டியவரேதுசொல்வார்
இன்னஞ்சிலராசரண்டை இட்டுப்போய்போரேனையா
கட்டவிழ்த்துவிட்டிடென்றார் கபிநீலகண்டனைத்தான்
அரண்மனையைத்தாண்டி அப்புறம்போகையிலே
ஆதிசிவனாரும் அங்கேமனமகிழ்ந்து
ஈசன்ரிஷபத்திலே ஈஸ்வரிசிங்கத்திலே
பேழைவயிற்றோனும் பெருச்சாளிவாகனத்தில்
கந்தர்மயில்மேலே கடுகியேவந்துநின்றார்
தங்களுடவாகனத்தில் சாமிகளுமேறிவந்தார்
வந்தாரெதிராக மன்றாடையான்கண்டுவிட்டான்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கந்தண்டனிட்டான்
குயவன்குபத்தியுட குறைகளைத்தீர்த்தாரும்
காட்சிகொடுத்துக் கைலாசம்போனாராம்

கண்டன்பேறுபெற்ற நிலமாகுமிவ்வனந்தான்
என்றதுகேட்டு ஏதுசொல்வானருச்சுனனும்
புண்ணியவனத்திலே போய்ஸ்நானம்பண்ணிவந்தால்
பண்டாரவந்திரமே சல்பாஞர்வாமனிப்பார்
பொய்கைதனிலே பொட்டெனவேஸ்நானஞ்செய்து
மெய்யினிலே திருநீற்றுக்காப்பணிந்து
அரைமேலைக்கு அள்ளியிட்டான் வெண்ணீறு
பஞ்சாட்சரமணிந்து பகவானைப்பூசைசெய்து
அரகரா அரனேயென்ன அடித்தானேசெயசண்டிகை
ஓம்நமசிவாயவென்று ஒலித்தானேசங்குதனே
ஒருவன்சிவனேயென்ன உலகஞ்சிவனேயென்னும்
அரகராவென்றுசொல்லி அந்தவனந்தாண்டினான்
மற்றுமொருவனத்தில் வாரூரிருவருமாய்
இந்தவனமாருடைய தென்றானிளவிசயன்

சபாபிருகவனங்கடந்து ஊர்க்குருவிவனம்வருதல்.

ஊர்க்குருவிபேருபெற்ற வனமென்றானுத்தமனும்
வாயில்லாச்சீவன மரமேறும்பட்சிகள்தான்
எந்தவிதமாய்த்தான் கல்வாரைக்கண்டதுகாண்
அந்தவிசயத்தை ஆண்டவரேசொல்லுமென்றார்

பிராமணன் அருச்சுனனுக்கு ஊர்க்குருவி வரலாறுகூறுதல்.

அப்போபிராமணரும் அருச்சுனற்கேதுசொல்வான்
ஊர்க்குருவிபட்சியதி லுண்டாணும்பெண்ணுமாக
இந்தவனமதனி லிருந்துவாழுங்காலில்
பிள்ளைகள்பெற்றிருக்கப் பெருத்தவனங்களிலே
போவார்வருவார்குஞ்சைப் போயெடுத்துக்கொள்வார்கள்
இரைதேடிவருவதற்குள் எடுத்துக்கொண்டுபோவார்கள்
கண்டிணிடமாசகுருவிவந்துபார்த்தவுடன்
அழுதுபுலம்பியே ஆயாசப்பட்டிருக்கும்
மறுகாலொருதாமும் மைந்தனுண்டாயிருக்கும்
பெண்குருவியானது புருஷனுக்கேதுசொல்லும்
என்புருஷாபெண்கணவா என்வார்த்தைநீகேளும்
நான்பெற்றபிள்ளையெல்லாம் நமனுக்கிறைகொடுத்தேன்
போவார்வருவாரெந்தன் பிள்ளையைக்கொண்டுபோனார்
இப்போதுபிள்ளைபெற்றால் எவராகிலுமெடுப்பார்
ஆசைகள்தோன்றுது ஆனாறுகாயென்னசெய்வேன்
நானேதான்பெற்றெடுப்பேன் எனக்கறியச்சொல்லுமையா
ஆற்றிலென்பெண்மயிலே ஆணங்கேயொருவார்த்தை
இந்தவனத்திலே இஞ்சகுளிகுளித்தால்
நமக்கு அந்தக்கிடையாது அன்னமேநீகேளும்
புத்திரக்கரையோரம் நாவுண்டுபிள்ளைபெற
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்லும்பெண்குருவி

அலைபெருகித்தண்ணீர்வந்தால் அடித்துக்கொண்டுபோய்விடும்
இப்போதும்பிள்ளைபெற்று ஏமாந்துபோவேனே
என்றதுகேட்டு ஏதுசொல்லும்ஆண்குருவி
இவ்விடத்திற்பிள்ளைபெற்றால் ஏதுகுற்றம்வந்தாலும்
சமுத்திராசருடன் சண்டைகள்செய்திடுவேன்
யுத்தங்கள்செய்திடுவேன் உன்பிள்ளைவாங்கிடுவேன்
என்று-தலையிலடித்துமே சத்தியங்கள்செய்திடுமாம்
சபதங்கள்பண்ணினதை சமுத்திராசன்கேட்டு
இது-எவ்வளவுஊர்க்குருவி என்னுடன்சண்டைபண்ண
சொல்லாதவார்த்தையைச் சொல்லுதுதுசிட்டினங்கள்
ஆண்மையைப்பார்ப்போமென மவ்வருணன்தானிருந்தான்
அப்போதுசிட்டினத்தில் அழகானபெண்குருவி
செத்தையைத்தான்பொருக்கி சிறுவீடுகட்டிடுமாம்
இருமுட்டையிட்டு இருந்துஅடைகாக்க
பின்னுமடைகாத்துப் பெற்றதிருகுஞ்சுகளை
கொப்பெனவேதான்பறந்து குழந்தைக்கிரைதேடும்
இப்படியாகவே யிருக்கின்றவேளையிலே
தாயுந்தகப்பனுந் தானில்லாவேளையிலே
சமுத்திராசனவன் தண்ணீர்பெருகிவந்து
குழந்தையிரண்டையும் கொப்பெனவேகொண்டேகி
பாதாளந்தன்னிலே பத்திரம்பண்ணினான்
பட்சிசமர்த்துகளைப் பார்ப்போமென்றுதானிருந்தார்
அந்தசமயத்தில் அழகானபெண்குருவி
குழந்தைக்கிரைதேடிக் கொண்டுவந்துபார்க்கையிலே
மக்களைக்காணுமல் மருகிப்புலம்புகுது
மார்பிலேயும்தோளிலேயும் வண்ணமுகத்திலேயும்
அறைந்துபுலம்புகுது ஐயோமகனேயென்று
மக்களைப்பறிகொடுத்து மண்மேலேதாங்குவேனே
மைந்தனைப்பறிகொடுத்து வயிற்றிலறைந்துசொல்லும்
பாவிசெடுத்தாயெந்தன் பாலகரைக்கொல்லவென்று
என்றும்பகையாளி னேற்பட்டானெந்தனுக்கு
புதல்வனைப்பறிகொடுத்து புலம்புதுபெண்குருவி
ஐயையோதெய்வமென்று அலையுதுபெண்குருவி
அந்தசமயத்தி லாண்குருவியேதுசொல்லும்
மனதுசலியாதே மக்களைவாங்கிதாரேன்
சமுத்திராசருடன் சண்டைமிகச்செய்து
புதல்வரைவாங்கிதாரேன் புலம்பாதேபெண்மயிலே
என்றுயெழுந்தது இபலான ஆண்குருவி
மூக்கினுறபனைகிழித்து முன்னேவாயெழுதுகுது
என்னவென்றுஓலை யெழுதுதுசிட்டினந்தான்
காக்காய்க்குருவி சமூகங்கள் பருந்துகளாம்

மாடப்புருவாம் மயிலுங்குயிலினமாம்
காடைகுருவிகளாம் கவுதாரிடேகைகளும்
அன்னமயிலாழ்வாரும் ஆனமயிலினமும்
வரிகழுகுமுகற் கோட்டானும் ஆந்தைகளும்
நீலகண்டகாழிகைக்கு ஒடியேவாங்களென்று
சமுத்திராசருடன் சண்டைபண்ணப்போகவேணும்
என்னுடையினத்தார்களெல்லோரும்வாங்களென்று
உந்தியெழுதியே வாயசத்தைத்தானழைத்து
ஓலையைக்கொடுத்து உண்மைசிலசொல்லி
தெய்வலோகத்தார்க்கும் சேதிசொல்லிவாருமென்ன
சாபுவேகமாக வருகுதுவாயசந்தான்
அவனியிலுள்ளவர்க்கும் அந்தரமுள்ளவர்க்கும்
செப்பித்திரும்புகையில் திருமாலருகிருக்கும்
பாயலைத்தெண்டனிட்டு வணங்கியேயதுசொல்லும்
தன்குலராசனுக்கும் சமுத்திராசனுக்கும்
யுத்தங்களாகிறதாம் உலகளந்தபெருமாளே
என்னையரவழைத்தார் யானும்போய்ச்சேரவேணும்
சாஷ்டாங்கதெண்டனிட்டு சாமிக்குரைத்துதப்போ
குலுங்கநகைத்துக் கொப்பெனவேவிடைகொடுத்தார்
ப்ரமருடன்வாகனம் பேடன்னதமேதாரினமும்
கந்தருடவாகனம் கானமயிலினமும்
மன்மதவாகனமும் வர்ணக்கிளியினமும்
சனியினுடவாகனம் சமர்த்தானவாயசமும்
அவரவர்தேவரண்டை அடிபணிந்துதெண்டனிட்டு
சமுத்திராசரண்டை சண்டைசெய்யப்போறோமென்றார்
அமாதுநடக்குமென்று ஆளோலையனுப்பினது
ஆகையாலாண்டவனே அடியேனும்போகவேணும்
எங்களுக்குச்செலவருளும் என்றுபணிந்தது
அத்தண்டதேவர்களும் ஆச்சரியப்பட்டார்கள்
சமுத்திராசருடன் சண்டைகளெப்படியோ
இப்புதுமைபார்ப்போமென்று இயலானதேவரெல்லாம்
நாமும்வருகிறோம் நடவுங்கள்முன்னேயென்றார்
தெய்வலோகப்பட்சி திரும்புதுபூமியிலே
தனித்தனிபட்சியெல்லாம் சமுத்திரக்கரையோரம்
தன்குலத்தாராசருக்கு சரணமிடும்பட்சியெல்லாம்
அப்போதுசிட்டினந்தான் அவைவருக்குமேதுசொல்லும்
சமுத்திரக்கரையோரம் தாவுதேடிபிள்ளைபெற்றால்
அலைபெருகிதண்ணீர்வந்து அடித்துக்கொண்டுபோனது
என்னுடையபிள்ளையினை எடுத்துக்கொண்டுபோனது
பாலுங்களையும் அவசியம்நானழைத்தேன்
வாருமென்றபோதையிலே இந்திரன்தயவுசெய்து

சமுத்திரராசனுடன் சண்டைகள் செய்திடுங்கள்
என்னுடையபிள்ளைகளை எவ்விதமும்மீட்டுத்தாருங்கள்
உசுத்தஅனேகர்க்கும் உபகாரஞ்செய்கையிலே
அத்தண்டபட்சிகட்கும் அதிகமோசமுண்டாகி
காக்காயொருவரிசை கழுகுமொருவரிசை
அன்னமொருவரிசை ஆந்தையொருவரிசை
பருந்துமொருவரிசை பச்சைக்கிளியொருவரிசை
மயிலுமொருவரிசை வல்லூறொருவரிசை
குயிலுமொருவரிசை குருவியொருவரிசை
சாடையொருவரிசை கவுதாரியொருவரிசை
புல்புல்லொருவரிசை புறாக்களொருவரிசை
உள்ளானொருவரிசை வார்க்குருவியொருவரிசை
நாரையொருவரிசை நாகணவாயொருவரிசை
கொக்குமொருவரிசை கோட்டானொருவரிசை
அந்தச்சமயத்தில் அனேகவிதபட்சியெல்லாம்
அந்தப்புறங்களிலே அவ்வகுப்பாய்ச்சேர்ந்திருந்தோம்
அப்போதுமூவர்களும் ஐராவதத்தேரோடும்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்களும்
ஆகாயமார்க்கத்தில் அந்தரமாய்நின்றுக்கொண்டு
பட்சிகள்நின்றிருக்கும் பாவனையைப்பார்த்தார்கள்
எழும்பியேஅந்தரமாய் எட்டிப்பறக்கிறது.
தானுகவேபறந்து தண்ணீரில்தானகுதித்து
இருபக்கம்றெக்கையிலே எடுத்தஜலங்கொண்டுவந்து
பாரெல்லாம்நீர்தனைப்ப பரந்துதெளிக்கிறது
அரைநாழிக்கொள்ளேயிலே அடியோடேவற்றிவிட
சமுத்திரமானதெல்லாம் தண்ணீர்வரண்டுவிட
சமுத்திரராசன் சகிக்கமுடியாமல்
தேவர்கள்தலைவனுடன் செப்பிமுறையிட்டார்
அத்தண்டபேரும் அவ்வருகையிறங்கி
சிட்டினத்தைத்தானழைத்து செப்புவார்தேவரெல்லாம்
உன்-தநயனைவாங்கித்தாரோம் சமுத்திரநீருண்டுபண்ணும்
எப்போதும்போலேநீர் ஏற்படுத்தும்சமுத்திரத்தை
என்றுசொல்லப்பட்சிகளெல்லாமொருமித்து.
மயிலையருகழைத்து வார்த்தைகளைச்சொல்லும்
கந்தருக்குச்சொன்னீரானல் கைவேலையுண்டுசெய்வார்
என்றுசொல்லமயிலினங்க ளெல்லாமொருமித்து
வேலவனர்தன்பதத்தில் விழுந்துமுறையிட்டு
ஆண்டவனேயென்சாமி அடியேனுக்குமுடியாது
தீர்த்தினத்தாலிட்சணமே நீருப்பெருகிடும்
அடியேனைப்பற்றியே அலைகடலுண்டுபண்ணும்
என்றுபணிந்து இரங்கியேதொழுதிடக்

கர்த்தர்மனமகிழ்ந்து சடிதியேவில்வளைத்து
வில்லெடுத்துநாரிபூட்டி வேலெடுத்துமந்திரித்து
அலைகடலின்கரையெல்லாம் அம்பிலொருமுத்தாக
பூமியதிலே போய்ப்பாயும்வெளிதுதான்
மண்ணினுள்ளாக்கரையெல்லாம் வழித்தொருமுத்தாக
முக்கால்வளர்ந்து முளைந்துகடல்பெருகி
சக்கொருப்பட்டானே சமுத்திராசனவன்
குருவியுடபிள்ளையை கொண்டுவந்துதந்தாராம்
ஆதிசிவனாரும் அதிகவரந்தந்தாராம்
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவரெல்லாம்
சுபமாகசெல்வந் துடனேயிருப்பீரென்று
வாழ்த்திவிடைகொடுத்து மகாதேவர்போய்நடந்தார்
ஊர்க்குருவிபெறுபெற்ற ஓங்குவனமிதுதான்
என்றதுங்கேட்டு எழில்விஜயராசாவும்
உற்றதுங்கேட்டு உள்ளமிகமகிழ்ந்தார்
அந்தச்சமயம் அருச்சுனராஜரிடம்
போகவிடைதாருமெனப் புகன்றான்பிராமணனும்
போய்வாருமென்று போகலுற்றான்போர்விஜயன்

கக-வது, ஊர்க்குருவிவனம்-முற்றிற்று.

கஉ-வது, காளபயிரவனம்.

பன்னிரண்டாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
குடைதலைமேல் குடிவாழ்க்கைகானகத்தில்
கோலிவைத்தமோடு குடைதலைமேலேவைத்தார்
அந்தவனத்தைவிட்டு அப்புறம்போனார்கள்
காளபயிரவ வனத்திலேகாவலர்கள்
அங்கேகுடிக்கனமாய் ஐவர்குடியிருந்தார்
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
காளபயிரவ கானகத்தில்வந்தமர்ந்தான்
அங்கேதவமுனிகள் அனேகம்பேரப்பொழுது
சாமியென்றுவந்தோமே தவசுகுலைந்துதையா
சிவனேயென்றுவந்தோங்காண் செய்ததவம்வீணாச்சு
என்றுமனங்கலங்கி எப்போதும்போலிருந்தார்
அந்தரிஷிகளண்டை அருச்சுனன்தவஞ்செய்தான்
அங்கிருக்கும்ரிஷிகள் அனேகம்பெரியவர்கள்
இந்தக்காலமட்டும் இருந்துதவம்பண்ணினோம்
இருந்துதவம்பண்ணி சம்பானும்வந்ததில்லை
ஆதிசிவனாரை ஆண்டவரைக்காணவில்லை
பரமசிவனாரைப் பார்க்கஅரிதாகும்

கைலாசவாசலிலே கடுகதவம்பண்ணினுலே
பரமசிவனாரும் பாக்கியந்தந்திடுவார்
சுகமாகவாழ்ந்திடுவீர் துரிதமாயேகுமென
இவ்வார்த்தைதான்கேட்டு இபலானவால்விஜயன்
எல்லோர்க்குஞ்சரணமிட்டு எழில்விஜயன்போய்நடந்தான்
கடிகிநடந்தானே கைலாசபருவதத்தில்
பொய்கையில்ஸ்நானம்பண்ணி பூஜைதவமுடித்து
காளபயிரவனைக் கருதித்தியானம்பண்ண
எழுபதடிக்கம்பம் எழில்விசயன்நாட்டினான்
எழுபதடிக்கம்பத்தின்மே லேழுயிளநீரைவைத்தான்
ஏழுயிளநீரின்மேல் ஏழுவிளாமபழத்தைவைத்தான்
ஏழுவிளாம்பழத்தின்மேல் எலுமிச்சங்கனியைவைத்தான்
எலுமிச்சங்கனியின்மேல் ஏழுகொட்டைப்பாக்குவைத்தான்
ஏழுகொட்டைபாக்குமேல் ஏழுகுண்டுமணியைவைத்தான்
ஏழுகுண்டுமணியின்மேல் ஏழுகடுகைவைத்தான்
ஏழுகடுகதன்மேல் ஏழுசெப்பூசிவைத்தான்
ஏழுசெப்பூசியின்மேல் ஏழுசெவ்வலரிவைத்தான்
ஏழுசெவ்வலரியின்மேல் ஏறினான்தேர்விஜயன்
ஒருக்காலைத்தானூன்றி ஒருக்கால்முழங்காலில்வைத்தான்
கண்ணிரண்டுமூடியே கர்த்தன்மேல்தியானமானான்
அரகரா அரனேயென்று அடித்தான்செயகண்டிகை
ஓம்நமசிவாயாவென்று ஒலித்தானேசங்குதனை
ஒருவன்சிவனேயென்றால் உலகம்சிவனேயென்னும்
அருந்தவசுபண்ணுகிறான் அருச்சுனராஜதுரை
அகோரத்தபசுபண்ணுன் ஆண்டவனைக்காணவென்று
ஆதிசிவனார்க்கு அருச்சுனன்செய்ததவம்
பொறுத்துமுடியவில்லை போர்விஜயன்செய்ததவம்
ஆதிசிவனார்க்கு அக்கினியாய்வீசுகுது
காலனைக்காலாலுதைத்த கைலாசநாதரவர்
கோபம்பெரிதாகி கொப்பெனவேயெழுதுசொல்வார்
ஆடாதுதுவனே அழையுங்கள்மாயவரை
எமன்பிரமாவை இங்கேயழையுமென்றார்
விண்ணாட்டுத்தேவனை விரைந்தோடியழையுமென்றார்
விக்கினவிநாயகனை வேலவனையழையுமென்றார்
ஓடியழைத்து ஒருநொடியில்வாருமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிவிரைவாய்ஓடிவந்தான்
வைகுந்தம்ஓடிவந்து மாயவரைத்தெண்டனிட்டு
ஆதிசிவனார் அழைத்துவரச்சொன்னாரென்றார்
அமராவதியாளும் ஆயிரங்கண்ணனுக்கு
எமலோகமாளும் எமதர்மராசனுக்கு
பிரமலோகந்தனிற் பிரமதேவனானவர்க்கும

அதிஷ்டரும்வால்மீகர் மகாதவமுடையவற்கும்
அந்தண்டதேவர்முதல் அனைவருக்குஞ்சொல்லினான்
சிவனார்வரவழைத்தார் சீக்கிரம்வாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அவரவர்பயணமானார்
வாற்கருடனேறியங்கு வந்துவிட்டார்மாயவனார்
மத்தகசமேறியங்கு வந்துவிட்டாரிந்திரனார்
எமன்கடாவின்மேலேறி ஈசாருகில்வந்தான்
அன்றுபிரமாவும் அன்னத்தின்மீதில்வந்தான்
ஆனைமயிலேறிக் கந்தரும்வந்துவிட்டார்
மூஷிகவாகனத்தில் முன்னோனும்வந்துவிட்டார்
முப்பத்துமுக்கோடி முனிவரும்வந்துவிட்டார்
ஆதிசிவனபக்கலிலே அனைவரும்வந்துவிட்டார்
வந்துபணிந்தார்கள் மகாதேவன்பக்கலிலே
அத்தியுரித்தவனார் ஆதிசிவனேதுசொல்வார்
மாயன்பெருமாளே வார்த்தையொன்றுகேட்டீரோ
ஆரோதெரியாது ஆதிகைலாசம்வந்தான்
எவனோதெரியாது இங்கேதவம்பண்ணுகிறான்
கைலாயந்தன்னிலேதான் கடிசிவராஞாயமுண்டோ
கைலைக்குஅப்பாலே கானகந்தன்னிலேதான்
கருதித்தவம்பண்ணுக்கால் காட்சிவரந்தந்திடுவோம்
இங்கேதவம்புரிய ஏற்குமோசொல்லுமென்றார்
இவன்-ஆரோதெரியாது ஆண்மையாய்வந்துவிட்டான்
என்-தலைமாட்டிலின்றுசத்தங்கள்போடுகிறான்
ஆரோதெரியாது அறிந்துவந்துசொல்லுமென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தையங்கேதுசொல்வார்
பாண்டுமகாராசனபெற்ற பஞ்சவர்களைவருண்டு
குந்திமகாதேவிபெற்ற குலமணிகளைவருண்டு
நாவிலேலட்சத்திரம நயனவிழிப்பார்வையுள்ளோன்
மீசைமுறுக்குமுகன் விழியிற்கறுப்பழகன்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லில்பாசுவினை பாதத்தில்செந்தாமரை
பஞ்சவரிலிவனொருவன் பார்த்திபனென்றார்காண்
இடதுகால்பொம்மைவிருது வலதுகால்வீரதண்டை
சவிருதுகுலவிருது சமர்த்துகள்படைத்தவன்காண்
சிவபூசைகுருபூசை சிவனபாதமறவான்காண்
எனனதவம்வேண்டி யிங்குவந்தானென்றறியேன்
என்றதுதான்கேட்டு யேதுசொல்வாரீஸ்வரரும்
தருமாதம்பியானாலும் சமர்த்துடையோனானாலும்
கைலாயந்தன்னிலே கடிசிவராஞாயமுண்டோ
இவன்-இந்தவிதமாயிருந்து எதுதவம்பண்ணுனும்
வருந்தியிருந்தாலும் வரமருளப்போறேனோ

தவசைக்கெடுத்திடுவேன் தருமர்தம்பியர்ச்சுனனை
என்றுமகாதேவர் எறிபறந்துகண்சிவந்து
வாயுராசன் தன்னையே வாவென்றழைத்தாரும்
அருச்சுனன்செய்யுமந்த அருந்தவசுகம்பமதை
தவசுநிலைகம்பமதை சமுத்திரத்திற்போடுமென்றார்
ஆரைநாழிக்கொள்ளேயிலே அசமாச்சிவாருமென்றார்
என்றதுதான்கேட்டு எழுந்தானேவாயுராசன்
ஆபனபெருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
கைமோசம்வந்ததென்றே கரியமாலப்போது
அருச்சுனராசனுக்கு அனர்த்தம்வராநாளாச்சே
காக்கவேணுமென்று கரியமாலோடிவந்தார்
மாயையாய்வந்தாரே வாள்விஜயன்முன்னாலே
காண்டீபா அர்ச்சுனரே கைமோசம்வந்ததடா
ஆதிபரமசிவன் அதிககோபங்கொண்டாரே
வாயுராசன்தன்னையிப்போ அனுப்பினார்மகாதேவர்
தவசுநிலைகம்பமதை சமுத்திரத்திற்போடவாரான்
வாயுராசனுக்கு வதுவாயிருப்பாயா
என்றதுதான்கேட்டு எழிலவிஜயனேதுசொல்வான்
உம்மையேநம்பியே உம்பர்புறம்வந்தேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமெனபேன் இனியாரைததஞ்சமென்பேன்
உள்ளங்கைநெல்லிப்பழம் உருக்குலைந்துபோகாமல்
தோளில்செபமாலை தொண்டழிந்துபோகாதே
பெட்டியிலேபூஷணம் பெருமைகுலைபாதே
காக்கக்கடனுமக்கு கரியமாலெமபெருமாள்
அண்ணருந்தம்பியரும் அனுப்பினாருனைநம்பி
ஆரைநம்பியிங்குவந்தேன் ஆதிகயிலாசம்
என்னமாயிருந்தாலும் ஈஸ்வரனுரெந்தனுக்கு
வந்தவினைமாற்றி வரமருளச்செய்யுமையா
என்றுவணங்கினான் இயலானவாள்விஜயன்
சிந்தைமனங்குளிர்ந்து ஸ்ரீராமரென்னசெய்தார்
தருமர்தம்பியருச்சுனனறன் றவசுநிலைக்கம்பமது
வாயுராஜன்வந்து வலுமையாயசக்கினாலும்
ஆதிசிவன்வந்து அசைக்கிவலித்தாலும்
தேவாதிதேவரொன்றாய்ச் சேர்ந்துவசக்கினாலும்
அருச்சுனன்தவசுநிலை அசையாமலிருக்கவென்றார்
மாயவனார்வரங்கொடுத்து வந்துவிட்டார்கைலையிலே
ஆருமறியாமல் ஆதிசிவனருகில்வந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவாயுராசன்
மண்ணும்விண்ணும்தானதிர வாரானேவாயுராசன்
தெற்கேயிருந்து திசைவடக்குமுகம்நோக்கி

இசைந்துவந்துமோதினுன் இளவிசையன் தவசடியை
அப்புறந்தூக்கிப்புறந்தான் அசையாமல்தானிருக்கும்
மறுகாலொரு கரமும் வந்து அறைந்தானும்
அசையாமல்நின்றன தவசுநிலைக்கம்பமது
தனனுலேயாகாமல் சங்கரிக்கமுடியாமல்
திரும்பினான் வாயுராசன் சிவனற்குசேதிசொல்ல
அருச்சுனனைப்பார்த்து அதிகப்பிரியமுமாய்
கண்ணிலும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
அருச்சுனனுந்தனுக்கு அஸ்திரந்தாரேனென்றான்
வாயுவினஸ்திரத்தை வாள்விசயன்கைகொடுத்தான்
வாங்கிநமஸ்கரித்து வாள்விசயனேதுசொல்வான்
எவரனுப்பவந்தீர்காண் என்தவசைநீரழிக்க
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வாயுராசன்
ஆதிசிவனழைத்து அனுப்பினார்வுந்தனிடம்
தவசுநிலைக்கம்பத்தை சமுத்திரத்தில்போடுமென்றார்
ஆசையாலிங்குவந்தேன் அசக்கினேன்கம்பமதை
என்னால்முடியவில்லை இளவிசயாவுனைசெயிக்க
ஆதிசிவன்வந்திடுவார் அதிகவரந்தந்திடுவார்
என்றுரைக்கையிலே இளவிசயனேதுசொல்வான்
உம்பர்பிரானுக்கு ஒருவார்த்தைசொல்லுமையா
என்னவென்றுசொன்ஞனெழில்விஜயனர்ச்சுனனும்
இருடையனைத்துபாசுபதம் கிரீடிக்குத்தாருமையா
வேண்டும்வரங்கள் தன்னை விமலரேதாருமையா
கேட்டவரங்கள் இருடையனைத்துந்தாருமையா
வரங்கள்தந்தாலொழிய மலையைவிட்டுப்போவதில்லை
தவசுநிலையைவிட்டுத் தனஞ்செயனும்போவதில்லை
ஆண்டவனேஐய அசட்டையாநீயிருந்தால்
மண்டைபிளப்பேனென்று வாமதேவருக்குரையும்
தலையையுடைப்பேனென்று சங்கரற்குநீயுரையும்
என்றுவிசயனெடுத்துரைத்தானப்போது
வாழ்த்திவிடைபெற்று வருகிறான்வாயுராசன்
ஆதிசிவனாற்கு அடிபணிந்துதெண்டனிட்டு
மான்மழுதரித்ததேவா மலர்ப்பாதம்சரணமையா
அருச்சுனன்தவசழிக்க ஆண்டவனேமுடியாது
உம்பர்பிரானே உம்மாலுமாகாது
காட்டிதாவிடிலோ காண்டீபத்தாலடிப்பான்
வரங்கள்கொடாவிடிலோ மண்டைபிளப்பேனென்றான்
என்றதுகேட்டு ஈஸ்பரனார்கோபமானார்
கேட்டீரோமாயவரே கெர்வத்துடன்சொன்னது
மண்டையுடைக்கவும் வரம்வாங்கும்வல்லவனே
காண்டீபத்தாலடித்து கடிவசம்வாங்குவானே

தலையையுடைப்பேனென்ற தனஞ்செயனாயிப்போதே
மண்டைதனையுடைத்து வல்லுயிரைவாங்கிடுவேன்
என்றுபரமசிவன் எதிபார்த்துதாண்டிவந்து
ஆரடாயிடிபகவான் ஆதிசிவனைவாய்வாருமென்றான்
ஏழிடியுங்கூடியொரு பேரிடியாயிடித்து
அருச்சுனன்தன்தலையை அறுபதுசுக்கலாக்கி
கொன்றுஅதமாக்கிக் கொப்பெனவேவாருமென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆங்காரயிடிபகவான்
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துநடுக்கமுற
எழுந்தானிடிபகவான் ஏழுலகந்தானதிர
அந்தச்சமயத்தில் அரிராமரோடிவந்தார்
அர்ச்சுனபார்த்திபா ஆதிசிவன்கோபமானார்
இடிபகவான்தன்னை ஈஸ்வரனனுப்பினார்
தலையையுடைக்கவென்று தான்வாரானிடிபகவான்
தப்பித்துக்கொள்ளுமென சாமியவர்போய்விட்டார்
அந்தச்சமயத்தில் ஆங்காரயிடிபகவான்
தெய்வலோகந்தானதிர தேவர்கிடுகிடென்ன
பாதாளஆதிசேடன் பயந்துகிடுகிடென்ன
கெற்பங்கிடுகிடென்ன கிளிகள்கமரிகொள்ள
அஷ்டகிரிபர்வதங்கள் அதிர்ந்துகிடுகிடென்ன
எட்டுதிசைநடுங்க ஏழுலகந்தத்தளிக்க
ஏழிடியுங்கூடியொரு பேரிடியாய்த்தானிடித்து
அருச்சுனற்குநேராக ஆகாயமீதிருந்து
உருதியாய்ப்பலருங்கூடி உச்சியிலேதானிடித்தான்
வரட்டுமிடிபகவான் என்றல்லோவாள்விசையன்
இடிபகவான்வருகையிலே எதிர்விசயனென்னசெய்தான்
ஒஞ்சரித்துதானிருந்து ஒருபக்கமிடிக்கவே
கண்முழிபிதுங்குது தண்லீருந்தானேவடிய
இளப்புந்தவிப்புமாயிருக்குதிடிமேதவருக்கு
மெச்சினேன்மருமகனே விட்டுவிடுயென்னையென்றார்
என்மகளேமின்னொளியை ஈந்திடுவேனுந்தனுக்கு
இப்போதுவுந்தனுக்கு இடியால்திரந்தாரரெனன்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
இனிமேல்கலியுகத்தில் எங்கேயிடித்தாலும்
அருச்சுனனென்றுசொன்னால் அப்பாலேநீர்போதீரோ
என்பேருசொன்னக்கா லேழுகாதம்போறீரோ
அவசியமாபோரேனென்று ஆணையிட்டானிடிபகவான்
எவரனுப்பவந்தீர்கான் எனையிடித்துக்கொல்ல
என்றதுகேட்டுமே ஏதுசொல்வானிடிபகவான்
ஆதிசிவனாரனுப்பினாருன்னிடத்தில்
ஆங்காரத்துடனேவந்து அகப்பட்டேனுன்கையில்

சத்திரியவானென் தலையை தப்பவிட்டாய்மகாராசா
உன்-புண்ணியத்தாலே பிழைத்துமேநான்போறேன்
அவன்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனேதுசொல்வான்
ஆதிசிவனுக்கு அடிபணிந்தேனென்றுசொல்லும்
ஆதவங்கள் என்னயிடர்செய்தாலும்
அர்ச்சுனன் தவத்துக்கு அழிவுவரப்போறதில்லை
எல்லாரன்கையில் எக்கவிருமானாலும்
வரம்வாங்கவல்லான் வாள்விசயனென்றுசொல்லும்
வேடபகவானுக்குறைத்து எதிரில்விசயன் தானனுப்பி
அரனைமறவானும் அரன்மேலேறியானமானான்
சிவனைமறவானும் சிவன்மேலேதியானமானான்
அந்தச்சமயத்தில் ஆதிசிவனிடத்தில்
வந்தானிடபகவான் வணங்கியேநமஸ்கரித்தான்
ஆண்டவனேஐயாவே அடியேனொருவிண்ணப்பம்
உன்வார்த்தைகேட்டுப்போய் உயிரிழக்கநாளாச்சே
எதிர்புங்கூடியொரு பேரிடியாய்த்தானிடித்தேன்
இறங்கித்தலைசாய்த்து என்னையேபிடித்துக்கொண்டான்
சத்திரியவானர்ச்சுனரும் தப்பவிட்டாரென்தலையை
வதுசெய்தாலும் இளைத்துவிடானர்ச்சுனனும்
வரம்வாங்கிப்போகவல்லான் வாள்விசயனர்ச்சுனனும்
அவனை-சித்தமதில்நினைக்கத் தேகம்நடுங்குதையா
பின்னும்பினைவுகொண்டால் பிராணன்பதைக்குதையா
என்றுசொல்லயிடபகவான் ஈசனதற்குரைப்பார்
அத்தனைக்கும்வல்லவனே ஆண்பிள்ளையர்ச்சுனனே
அவனைநாழிகொள்ளையிலே அதமாக்கிப்போடுகிறேன்
அனேகமானசெல்லுகளை ஆண்டவனுண்டுபண்ணுர்
செல்லுகளேநீங்களும்போய் சீக்கிரம்விசயனுட
சரீரமதில்நின்று சல்லடைக்கண்களாக
துளைத்துவிட்டுவாருமென்று சொன்னார்பரசுபாணி
வருகுதுசெல்லுதான் வாள்விஜசன்தன்னருகே
அந்தச்சமயத்திலே அரிராமரோடிவந்தார்
அர்ச்சுனாவாள்விசயா அனேகமோசம்வருகுதடா
ஆண்டவன்கோபமதாய் அனேகஞ்செல்லனுப்பிவைத்தார்
ஆச்சரிக்கையாகவே இருங்காணருச்சுனரே
என்றதுசொல்லியே எமபெருமாளேகிவிட்டார்
அந்தச்சமயத்திலே அனேகமானசெல்லுவர
[illegible]திரன்மைந்தனையுஞ் சூழ்ந்ததுசெல்லுகள்தான்
கண்டானேய[illegible]சுனனுங் காண்டீபந்தான்வளைத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
[illegible]னியாஸ்திரத்தை அருச்சுனனுருச்சரித்து
பார்ப்பிரளவாங்கினான் வளரவிட்டானக்கினியை

அர்ச்சுனன் தபசுநிலைக் கம்பத்தருகாக
அக்கினிவருகுது அண்டமுடியாது
செல்லுகளண்டாமல் செந்தணலாய்ப்பத்துகுது
பார்த்துபயந்து பறந்தது செல்லுகள் தான்
சங்கரன் தன்னருகே சரணமிட்டேதுசொல்லும்
ஐயாவேசஸ்பரரே ஆண்டவரே நீர்கேளும்
அர்ச்சுனன் தன்னருகே அக்கினிவளருகுது
ஆற்றமுடியாமல் ஐயாவேவந்துவிட்டோம்
ஆதிசிவன்கேட்டு அதிககோபமுண்டாகி
அத்தனைக்கும்வல்லவனே அருச்சுனராசனுந்தான்
என்றுபரமசிவன் எரிபறந்துகோபமுடன்
வருணபகவானை வாருமென்றுதானழைத்து
யானையுடகால்பெருமன யானைமழைபெய்யுமெனக்
கட்டளையிட்டு கடிகிப்போமென்றார்
ஆதிசிவன்வார்த்தை அவ்வருணன் தவறாமல்
சமுத்திரத்தின்நீரையுண்டு தான்வருதுமேகங்களும்
கார்மேகமேழும் கருத்துயெழும்பியது
ஆனைக்கால்போலவே அவ்வருணன்மழைபொழிய
அந்தச்சமயத்தில் ஆபருமோடிவந்தார்
அருச்சுனவாள்விசையா ஆண்டவனார்கோபமதாய்
வருணபகவானை மழைபொழிய அனுப்பினார்
எச்சரிக்கையாக யிருமென்றுதானடந்தார்
அந்தச்சமயத்தில் ஆங்காரவருணராசன்
மேகமெழும்பி மின்னல்வருகையிலே
கண்டானேவாள்விசயன் கனமோசம்வருகுதென்று
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
சங்கரமாரிபோலே சரமேற்சரம்பொழிந்தான்
அம்பினால்மூடுபந்தல் அருச்சுனன்போட்டுவிட்டான்
வான்மழைபொழியாமல் வான்சரத்தால்பந்தலிட்டான்
வருணபகவானும் வந்துமழைபொழிந்தான
வெள்ளமாய்த்தான்பெருக வெணமழைபொழிந்தான்
அருச்சுனன்வளர்த்தின அக்கினிக்குச்சேதமில்லை
வருணபகவானும் மனதுமிகக்குளிர்ந்து
சந்தோஷப்பட்டானும் தார்விஜயனர்ச்சுனன்மேல்
என்னிலும்வல்லபிரான் என்றுமனமகிழ்ந்து
வருணாஸ்திரத்தை வாள்விஜயன்கைக்கொடுத்தான்
வாங்கியேவாள்விசயன் வருணனுக்கேதுசொல்வான்
ஆரனுப்பிநீர்வந்தீர் அமரதுசெய்யவென்று
என்றதுகேட்டு ஏதுசொல்வான்வருணராசன்
ஆதிசிவனார் அனுப்பினார்வந்தேனென்றான்
எழில்விசயாவுனை ஜெயிக்கவென்னால்முடியாது

சகுனர்தன்றனக்கு இவ்வார்த்தைசொல்லப்போறேன்
ஆனால்வருணனே நீர் அரனுக்கெடுத்துரையும்
கோடிசரணமும் கும்பிட்டேனென்றுசொல்லும்
அக்கிரமஞ்செய்வதேனோ அர்ச்சனன்மேல்கோபமேனோ
சடுதியவன்றனக்கு காட்சிதரச்சொல்லுமையா
போய்வாருமென்று பொட்டெனவேசரணமிட்டான்
வாய்வேகமாகவே வருணராசன்வந்துவிட்டான்
ஆதிசிவனுக்கு அடிவணங்கித்தெண்டனிட்டான்
அர்ச்சுனன்தனைஜெயிக்க ஆராலுமுடியாது
உம்பர்பிரானே உன்னால்முடியாது
அத்தனைக்கும்வல்லபிரா னுகையாலிங்குவந்தான்
கோதினைவார்த்தைநீர் கொடுத்தனுப்புமீஸ்வரரே
என்றதுகேட்டு ஈஸ்வரனார்கோபமானார்
வான்விசயன்தன்னுடைய மனமுடுக்கழிக்கிறேன்பார்
கழுகுகளுங்கூளிகளுங் கடுகியேயுண்டுபண்ணார்
அர்ச்சுனன்வங்கிஷத்தை அடங்கலுமுண்டுபண்ணார்
கல்விப்பிடுங்கியே கடுகியேகொல்லுமென்றார்
இமையோர்பிரானும் இன்னமேதுண்டுபண்ணார்
கருவண்டுசெவ்வண்டு கணக்கில்லாதுண்டுபண்ணார்
கொட்டுகின்றகுளவியை கோடியவருண்டுபண்ணார்
சுரேந்திரன்மகனுடலைத் துளையாய்துளையுமென்றார்
அரைக்ஷணநாழிகையில் அர்ச்சுனனைகொல்லுமென
மகாதேவர்சிலவருள வருகுதுசேனைகள்தான்
குளவிகளுங்கூளிகளும் கூட்டமாய்வருகுதங்கே
சனமோசம்வருகுதென்று கரியமால்தானிருந்து
அர்ச்சுனராஜன்னிடை அதிரமேரோடிவந்தார்
காண்டீபா அர்ச்சுனரே கழுகுகள்வருகுதடா
குளவிகழுகுகளும் கூளிகளும்வண்டுகளும்
அனேகம்வருகுது அங்கத்துளைப்படுத்த
எச்சரிக்கையாகவே இருங்காணுமர்ச்சுனரே
என்றதுகேட்டு இந்திரன்மகனேதுரைப்பான்
அ[illegible]யனுமேலாரும் ஐயாபெருமானே
உன்வலிமையாலே உம்பர்புரம்வந்தேன்
[illegible]த்திலேயும் ஈடேறப்பாருமையா

வணங்கிச்சரணம்பண்ணுஞன் மாயன்பெருமாளை
தரணியளந்தவரும் சந்தோஷப்பட்டாரும்
கழுகுகளும்கூளிகளும் கவ்விசதைகொண்டாலும்
அருச்சுனன்தேகத்துக்கு அழிவில்லாதேயிருக்க
என்றுமவரளித்து எம்பெருமாளும்போய்நடந்தார்
வந்துபிடுங்கிற்று வாள்விஜயன்தேகமெல்லாம்
சல்லடைக்கண்போல சமனுய்த்துளைப்படுத்தும்
எப்போதும்போலே ஏற்படுந்திரேகமெல்லாம்
கைகள்நகம்பேர்ந்து கடித்தபல்லுங்கூர்மழுங்கி
மூக்குகள்தானொடிந்து முண்டங்களாயோடுகுது
ஆதிசிவனருகில் அடிபணிந்துதெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கழுகுகள்முறையமிடும்
எங்களாலானமட்டும் எழில்விசயன்தேகமதை
சல்லடைக்கண்கள்போற சதையைத்துளைத்திட்டோம்
சதையைத்துளைத்திட்டோம் சதையைப்பிடுங்கிட்டோம்
கும்பல்கும்பலாகவேதான் குவித்தோமேமாங்கிஷத்தை
குவித்தாரரைநாழிக்குள் கூடிவிடுந்தேகமதாய்
துளைத்தாரரைநாழிகைக்குள் தோன்றுமுடல்முன்போல
பின்னுஞ்சதைகவ்விப் பிடுங்கியெறிந்திடுவோம்
அர்ச்சுனன்தேகமதை அழித்தோமழியவில்லை
கடித்தபல்லுங்கூர்மழுங்கி கைகள்நகம்பேர்ந்துதையா
எங்களால்முடியாது இளவிசயனைசெயிக்க
ஆராலுமுடியாது அர்ச்சுனரைசெயிக்க
கோறினவரத்தை கொடுத்துவிடும்ஆண்டவரே
அவ்வார்த்தைகேட்டு ஆதிசிவனேதுசொல்வார்
எத்தனைநாள்தவசிருந்தால் ஏனென்றுகேட்பேனே
என்றுபரமசிவன் இருந்தார்சிம்மாசனத்தில
கற்பூரமண்டபத்தில் கர்த்தர்கொலுவிருந்தார்
மாயன்பெருமாளு மறுபடியுமோடிவந்தார்
அர்ச்சுனபார்த்திபா ஆதிசிவன்மோசஞ்செய்வார்
கற்பூரக்கொடிமுடியில் கர்த்தர்கொலுவிருந்தார்
கற்பூரக்கொடிமுடியைக் கனலாற்கொளுத்திவிட்டால்
கலகத்தைச்செய்துவிட்டால் காட்சிதனைத்தந்திடுவார்
என்றதுசொல்லி எம்பெருமாள்போய்நடந்தார்
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசெய்வான்

வில்லைத்தானரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
அக்கினிபாணமதை அருச்சுனனுச்சரித்து
மந்திரத்தையுச்சரித்து மண்டபத்தைகொளுத்துமென்று
மார்புரளவாங்கியே தோள்புரளவிட்டுவிட்டான்
அந்தபாணம் மகாதேவர்மண்டபத்தில்
கற்பூரமண்டபத்தைக் கடுகிக்கொளுத்திடவே
மண்டபந்தானெறிய மகாதேவர்பார்த்துவிட்டார்
பார்த்தீரோமாயவரே பார்த்திபன்தன்வலுமை
என்-வீட்டைக்கொளுத்தியே வேணவரம்வாங்கவர்தான்
இப்படிச்செய்தவர்களெவர்களையுநானறியேன்
சதுர்யுகமட்டும் தவசுகள்பண்ணினான்
அருச்சுனன்தன் தமக்கு அரியவரம்தருவதில்லை
கற்பூரமண்டபத்தைக் கடுகியேவிட்டெழுந்து
சாம்பிராணிமண்டபத்தில் சாமிவந்துகொலுவிருந்தார்
சாம்பிராணிமண்டபத்தை தணலாய்கொளுத்துமென்றார்
சொல்லிநடந்தாரே சுவாமிபெருமாளும்
மறுகாலருச்சுனனும் வரிவில்வளைத்துக்கொண்டு
அக்கினியாஸ்திரத்தை அருச்சுனன்முடுக்கிவிட்டான்
சாம்பிராணிமண்டபத்தைத் தணலாயுருக்கிடுது
கண்டார்மகாதேவர் கடுகியங்கேதுசொல்வார்
என்-வீட்டைக்கொளுத்தியே வேணவரம்வாங்கவந்தான்
இந்தஆண்மையுள்ளவனை எங்குமேநானறியேன்
வெண்ணீறுமண்டபத்தில் விமலரும்போய்நடந்தார்
மாயன்பெருமாளும் மாயமாயோடிவந்து
அருச்சுனன்பார்த்தீபா அதிகமோசம்வந்துதடா
விபூதிமண்டபத்தில் வேந்தரும்வந்தமர்ந்தார்
அப்பெரியமண்டபத்தை அதமாக்கிப்போடுமென்றார்
அவ்வார்த்தைதசொல்லி அரிராமர்போய்நடந்தார்
வில்லைத்தானரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தான்
வருணபகவான் வரமளித்தஅஸ்திரத்தை
மந்திரதாபமிட்டு வாங்கினான்மார்புரள
வந்துவிழுந்தது மயேஸ்வரனார்மண்டபத்தில்
வானமழைபோலாக வந்துபொழிந்திடுமாம்
வெண்ணீறுமண்டபமும் மெத்தக்கரைந்திடவே
கண்டார்மகாதேவர் கண்கொள்ளாக்கோபமுடன்

ஆயன்பெருமாளே அருச்சுனன் ஆண்மைதனை
கண்டீரோமாயவரே காண்டீபன் ஆண்மைதனை
எத்தனைமண்டபத்தை இடித்துத்தகர்த்துவிட்டான்
இப்படிப்பட்டவர்க்கு எப்படி வரமருள
இங்கிருந்தோமானால் இப்படிக்குப்பண்ணுகிறான்
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போகவென்று
எழுந்தார்மகாதேவர் எல்லோருங்கூடவர
அந்தசமயத்திலே அரிராமரோடிவந்து
அர்ச்சுனைபார்த்தீபா அதிகமோசம்வந்தது.
பாதாளமண்டபத்தில் பரமசிவன்போனார்
போய்விட்டாராமானால் பிற்பாடுகாணொணாது
காணக்கிடையாது கர்த்தருடசேர்வை
போகாமலேதடுத்தால் பெருமானைக்கண்டிடலாம்
என்றதுசொல்லி எம்பெருமாள்போய்நடந்தார்
மாயவனார்போனபின்பு வாள்விஜயனேதுசொல்வான்
காண்டீபன்வில்வளைத்து கணையெடுத்துச்சரித்தான்.
கடிகிமறித்துவிடும் என்றுகணைதொடுத்தான்
வந்துவளைந்தது வாள்விசயன்விட்டபாணம்
முக்கண்ணுடையவரை முன்னேதடுத்ததுகாண்
கண்டார்பரமசிவன் கண்கொள்ளாக்கோபமுடன்
கண்டீரோதேவர்களே காண்டீபன் ஆண்மைகளை
இப்படிப்பட்டவற்கு எப்படிவரங்கொடுப்பேன்
என்றதுகேட்டு ஏதுசொல்வார்தேவரெல்லாம்
தருமர்தம்பியர்ச்சுனர்க்கு சமர்த்துகள்மெத்தவுண்டு
இவருடனெதிர்த்தவர்கள் எவரும்பிழைப்பதில்லை
காட்கிதந்தாலல்லாது கனமோசம்வந்துவிடும்
என்றதுகேட்டு ஏதுசொல்வாரீஸ்வரரும்
அர்ச்சுனன்சமர்த்துகளை ஆண்மைகளைக்காணுகிறேன்
தவசுநிலைக்கம்பத்தை தரையோடழுத்துகிறேன்.
என்றுபரமசிவன் எமனைத்தானழைத்து
எமதர்மராசரேநீர் ஏனம்போல்வடிவெடுத்து
அர்ச்சுனன்தன்னருகில் அபயமிட்டுஓடுமென்றார்
கடுகியனுப்பினார் கடவுளுமவனையங்கே
எமதர்மராசன் ஏனம்போல்வடிவெடுத்தான்

பன்றிவடிவெடுத்து பார்த்திபன் அருகில்வந்தான்
அபயமபயமென்று அழுதுபுலம்பிவாரான்
அபயமென்றசத்தம் அருச்சுனன்கேட்டுவிட்டான்
அபயக்குரல்கேட்டால் ஆதரிக்கவேணுமென்று
அலகம்பு அஸ்திரத்தை அருச்சுனன்விட்டுவிட்டான்
காட்டுப்பன்றிதன்னையுந்நீ கம்பத்தில்கட்டுமென்றான்
மந்திராயுமிட்டு வாங்கினனருச்சுனனும்
வந்ததுஅஸ்திரந்தான் வளைந்துமேகட்டுகுது
கம்பத்துடனேதான் கட்டியேபோட்டுது
கட்டுண்டான்காலன் காண்டீபன்தன்சரத்தால்
அந்தச்சமயத்தில் ஆதிசிவனெழுந்தார்
மெத்தப்பெரியவராய் வேடன்வடிவெடுத்தார்
பிரமதேவன்தானும் பெரியஒருவேடரானார்
விக்கினவிநாயகனார் வேடர்வடிவெடுத்தார்
சூர்குலம்வேரறுத்த சுப்பிரமணியர்வேடரானார்
அமராபதியாரும் அங்கபிரான்வேடரானார்
அடியனந்தமாயவரும் அங்கேஒருவேடரானார்
அர்ச்சுனனைவெல்லவென்று அனைவரும்வேடரானார்
ஈஸ்வரியைநானழைத்து இப்போசமயமென்றார்
வாரார்வடிவெடுத்து வாள்விஜயன்தன்னருகே
காற்செருப்புக்தோல்குல்லாவும் கையில்துப்பாக்கிகளும்
மான்வலையுஞ்சில்லாக்கோல் மருந்துகேப்குண்டுகளும்
ரெட்டைகுண்டுதுப்பாக்கி ரேகிசமும்தோளில்வைத்து
சின்னவேடன்பெரியவேடன் சிவனார்கிழவேடரானார்
பொன்னாற்றடிக்கடித்துப் புறப்பட்டார்வேடரெல்லாம்
மற்றுமுள்ளதேவதைகள் வயிரவனார்வடிவெடுத்தார்
கருநாயுஞ்செந்நாயும் கணக்கில்லாநாய்கள்வர
காட்டைவளைத்தார்கள் கருநாயைசுத்திவிட்டார்
அம்புவில்லாயுதமும் ஆண்டவனார்கைப்பிடித்து
வாரார்கள்வேடரெல்லாம் வளைத்துதுரத்தியல்லோ
அந்தண்டவேடுவரும் அர்ச்சுனனருகில்வந்து
ஆர்காணுஞ்சங்கமரே அறிவைப்படைத்தவரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமெத்தகற்றவரே
திரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே

ஏழைகண்டாய்வேடுவனான் எட்டுநாள்காத்திருந்தேன்
காத்திருந்திவ்வேலைமதை கணையாலேயெய்துவிட்டேன்
காயம்பட்டுயேனம் கடுகியேவந்துதிங்கே
ஏனம்வந்தசாடையிது இப்போதடிபிடித்து
அடிபிடித்துவந்தோம்நாம் ஆனதொருசங்கமரே
கம்பத்துடனேநீர் கட்டிவைத்தகாரியமேன்
பசியோடிருக்கிறோம் பன்றிதனைவிட்டுவிடும்
பிள்ளைகளுங்குட்டிகளும் பெரும்பசியாய்ப்புலம்புகிறோம்
கட்டவிழ்த்துவிட்டுவிடும் கடுகப்புசித்திடுவோம்
என்றுசொல்லிக்கொண்டு ஈஸ்பரனார்தான்வரவே
காண்டீபனருச்சுனனுங் கடுகியேதுசொல்வான்
சிவத்தியானமாகவே சிலைவிசயனேதுசொல்வான்
ஆரடாவேடுவனே அப்புறதகேபோய்விடுங்காண்
அபயக்குரல்கேட்டால் ஆதரிப்பேனல்லாமல்
இனிமேல்விடுவேனென்று என்றாதேவுன்மனதில்
பன்றியைத்தின்றாலே பசியாறிப்போவாயோ
குழந்தைகட்குமுந்தனுக்குங் குலத்தார்க்கும்போதுமோகாண்
தன்னைப்போல்சீவன்களை தான்கொல்லைஎன்னுவரோ
சிவனாரைநோக்கியே செய்கிறேன்தவசுநிலை
எதிரிட்டுக்கொள்ளாதே இடையுங்கள்வேடுவரே
அரகராஅரனேயென்று அடித்தானேசெயகண்டிகை
சம்போசிவனேயென்று தொனித்தானேசங்குதனை
ஆதிசிவனும் அருச்சுனற்குஏதுசொல்வார்
எத்தனைசொன்னாலும் இரங்கலையோவுன்மனது
தருமம்நினைத்தாக்கால் சாமிவந்துதுணையாவார்
வயிறுபசிதீர்த்தாக்கால் மகாதேவர்துணையாவார்
உன்-தாயார்தகப்பனுக்குந் தமயற்குந்தம்பியற்கும்
ஒருகோடிமோட்சமுண்டு உச்சாகஞ்செய்யுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனரேதுசொல்வார்
ஒருகாலுரைத்தேனே மறுகாலுரைப்பேனோ
தபசுநிலைவேளையிலே சத்தங்கள்போடாதே
சந்திரர்கள்சூரியர்கள் தவறிநிலைதப்பினாலும்
காலம்பிரண்டு கலியுகம்வந்தாலும்
நறுக்கிபிழிந்துஎன்னை நரகத்திற்போட்டாலும்
வாயாரச்சொன்னசொல்லுமறந்துவிடப்போறதில்லை

ஆகரிப்பேனல்லாமல் அலையவிடப்போறதில்லே
மறுவார்த்தைபேசாதே வல்லுயிரைவாங்கிடுவேன்
எதிரேவரவேண்டாம் இடையனில்லும்வேடுவரே
அரகரா அரனேயென்றான் அரன்மேலேதியானமானான்
அப்போதுபரமசிவன் அருச்சுனற்குயேதுசொல்வார்
நான்-ஏழைஎன்றோசங்கமரே என்னைமிரட்டுகிறாய்
என்னைத்துரத்திவிட்டேன் பன்றியைத்தின்னவென்றோ
என்னைமிரட்டுகிறாய் இவ்வார்த்தைகானறிவேன்
நான்போவேனென்று எண்ணாதேயுன்மனதில்
ஆறுபோர்வேடுவர்கள் அருங்கிளியாள்வேடுவச்சி
உத்தமரேநீயொருவன் உகந்துமேகூடியல்லோ
பன்றிதனைச்சுட்டு பங்கிட்டுக்கொள்ளுவோம்வா
பங்குபோட்டுத்தின்று பசியாறிக்கொள்ளுமென்று
என்றதுகேட்டு யேதுசொல்வார்சங்கமரும
ஜாதிக்குத்தக்கபுத்தி தானிருக்கும்வேடருக்கு
என்றுசொல்லவேடரு மேதுசொல்வாரப்போது
ஆண்டிபயலுக்கு அறிவுகிடையாது
பசிக்குதெனவேண்டி பன்றிமேலம்புதொட்டேன்
தப்பித்துஓடிவாக் கம்பத்திற்கட்டலாமோ
கீழேயிறங்கிவாடா கேடுகெட்டசங்கமனே
என்சமர்த்தும்உன்சமர்த்தும் இப்போதெரியுமடா
சண்டைக்குவாடாநீ சமர்த்துள்ளசங்கமனே
என்றவுடனகம்பம்விட்டு இறங்கினான்வாள்விசயன்
வாள்விசயன்றன்முதுகில் மச்சரேகைபார்க்கவென்று
பரமசிவனும்வந்து பார்த்தனுடன்சண்டைபண்ணார்
ஆண்டவனென்றறியாமல் அடித்தான்காண்டீவிலாலே
பரமருங்கீழ்விழுந்து பார்த்தனைஎடுத்துக்கொண்டார்
பார்வதியாள்பார்த்தாளே பார்த்தனிடமச்சரேகை
பார்த்தீபனென்று பார்வதியாள்பேர்கொடுத்தாள்
பாசுபதாஸ்திரம் பரமருந்தான்கொடுத்தார்
அநேகவரம்பெற்று அர்ச்சுனனுந்தான்வாரான்
அண்ணனிடம்வந்து ஆசையுடனுரைத்தான்
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
ஐவர்பஞ்சபாண்டவரே ஆரணியம்விட்டுநீங்கள்
அக்கியாதவாசம் அருந்தபசுசெல்லுமென்று

இச்சையுடனுரைத்து எம்பெருமாள்பயணமானார்
வட்டமாங்கருடனேறி மாயவரும்போகலுற்றார்
துவாரகாபுரிநோக்கி சுவாமியவர்போகலுற்றார்
அப்பால்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலைவா
பரமருடதன் தயவால் பன்னிரண்டுவருஷஞ்சென்று
வனவாசமேதிரிந்து வாறார்கள்பஞ்சவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்விட்டலவோ
நாடேவருகிறார் ராமருடதன்தயவால்
இந்தக்கதையிலே எழுத்துப்பிழையிருந்தால்
தப்புப்பிழைதிருத்தி தயவுபண்ணிரட்சிக்கவும்
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரூன்றி
பால்போல்ருசிக்கப் பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
ஓங்கியேநால்வேத முயர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனார்

விருத்தம்.

இப்பெருங்கதையை யுரைத்தவர்படித்தோ
ரெழுதினோர்பொருள்விரித் துரைத்தோர்
செப்பருமன்பாற் கேட்டுளோரிதன்பேர்
செப்பினோர் தீமையிற்றீர்ந்தே
எப்பெருஞ்சிறப்பு மைந்தரும்வாழ்வு
மிசைந்ததீர்க் காயுசுமுளராய்
ஒப்பருங்கதியி னிலைபெறவிளங்கி
யும்பரும்புகழ வாழ்குவரே.

பஞ்சபாண்டவர் வனவாசம்

முற்றிற்று.

70 ஆயிரம் நோட்டுகள்!

இருந்து எடுத்தனர்!!

படி வாசனை திரவியங்கள் தூவப் பட்டிருந்தன.

நல்ல நோட்டுகள்

1 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நோட்டுகளும் இந்திய சர்க்காரின் நோட்டுகள். நல்லநோட்டுகள் அதிகாரிகள் நோட்டுகளை கைப்பற்றி நோட்டை வைத்திருந்த வீட்டுக்காரர் ஹத்தீப்முகமதுவை விசாரணை செய்தார்கள்.

வரி வருமான

ஹத்தீபமுகமது சொந்த வீடு வைத்து இருந்தாலும் தற்சமயம் வியாபாரம் எதுவும் இல்லையாம். இவருக்கு மனைவியும், 3 பெண், 2 ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

இவரது மருமகன்கள் கொழும்பில் இருக்கிறார்களாம். ஹத்தீப்முகமது கொழும்பில் இருந்து 1957-ம் ஆண்டு காயல்பட்டினத்திற்கு வந்தாராம். இவர் இதுவரை வருமானவரியே கட்டாதவராம்.

இவரிடம் எப்படி இவ்வளவு பணம் வந்தது! பணத்தை புதைத்து வைத்தது ஏன்?

சிவகாசி கையாடல் வழக்கு

கம்பெனி மானேஜர் ஜெயில் தப்பினார்

சிவகாசி, ஜூலை. 4—

சிவகாசி திருத்தங்கல் எண்ணெய் மில் மானேஜர் தங்கப்பநாடார் என்பவர் தனக்கு சம்பளபாக்கி இருப்பதாக அந்த மில் கணக்குகளை எடுத்துக் கொண்டு போய் விட்டாரென்று நடந்த கிரிமினல் வழக்கில் அவருக்கு சாத்தூர் மாஜிஸ்திரேட்டு ஒரு வருஷ ஜெயில் தண்டனை விதித்தார். அதன்மீது அவர் ராமநாதபுரம் செஷன் ஜட்ஜ் முன் அப்பீல் செய்ததில் அக்குற்றம் அவர் மீது ருசுவாகவில்லை என்று நீதிபதிஅவரை விடுதலை செய்தார். அவருக்கு மதுரை அட்வகேட் ஆர். கல்யாணசுந்தரமய்யர் ஆஜரானார்.

...மதுரை டி.மு. கோர்ட்டு